# காலப்ரகாசிகை



| | | | |
|---|---|---|---|
| | சூரி செ | சுக் | புதன் |
| சந் ராகு | இராசி | | சனி |
| | | | கே |
| | குரு | | ல |

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 353

# காலப்ரகாசிகை

## (தமிழாக்கம்)

பதிப்பாசிரியர் :

**தேதியூர். எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.**

*முன்னாள் மேநிலை ஸம்ஸ்க்ருத பண்டிட்,*

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும் ஆய்வுமையம்**

***தஞ்சாவூர்.***

2009

விலை : ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : காலப்ரகாசிகை |
| பதிப்பாசிரியர் | : தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 353 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : ஆறாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2009 |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 268 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : ஜோதிடம் |
| விலை | : ரூ. 100-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும் பன்மொழி நூற்களஞ்சியமாகவும் பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் சுவடிகள் இருக்குமிடங்களைத் தமிழ் ஆலயமாகக் கண்டார்கள். இந்நூலகத்தில் சற்றேறக்குறைய 50,000 பன்மொழிச் சுவடிகள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்தைத் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பயன்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் உள்ளவர்களும் முன்னிலும் கூடுதலான அளவிலும் தற்பொழுது இந்நூலகத்தைப் பார்வையிட்டும் பயன்படுத்தியும் வரும் மேம்பாடு நிகழ்ந்து வருகின்றது.

இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் அரிய சுவடிகளைப் பதிப்பித்து, அச்சு நூலாக்கி மக்கட்குப் பயன்படச் செய்தலேயாகும். இதுவரையில் 521 புத்தகங்கள் சமஸ்கிருதம், தமிழ், மராத்தி, தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிகளில் சமயம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், நாட்டியம், இசை, மருத்துவம், சோதிடம், மந்திர சாத்திரம், சிற்ப சாத்திரம் முதலிய பொருண்மைகளில் வெளியிடப் பட்டுள்ளன.

**காலப்ரகாசிகை** எனும் இந்த நூலைத் தொகுத்த நரசிம்மசூரி எனும் அறிஞர் வாஸிஷ்டம், காலதீபம், காலாதர்சம், பத்ததி, நாரதீயம், ஆத்ரேயம், வாசஸ்பத்யம்

முதலான நூல்களை நன்கு ஆய்ந்து தொகுக்கப்பட்டுள்ளதாக அவரே கூறியுள்ளார். எனவே, இந்த நூல் ஒரு தொகுப்பு நூலேயாகும். இந்நூலின் பதிப்பாசிரியர் இந்நூலகத்தில் சம்ஸ்கிருதத் துறைப் பண்டிதராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். இந்நூலில் கல்வியைத் தொடக்கம் செய்தல், விதை விதைத்தல், பயணம் செய்ய சிறந்த நாட்கள், வீடு கட்டுதல், புதுமனை புகுதல், திருமணப் பொருத்தங்கள், குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுதல், ஆடைகள் வாங்குதல், வாகனங்கள் வாங்கல், புதிதாக ஆலயம் அமைத்து ஆண்டவனைப் பிரதிஷ்டை செய்தல், நோய் தீர சிகிச்சை அளிக்கும் காலம், கடன் தீர்தலுக்குரிய விதிமுறைகள் போன்ற பல அரிய செய்திகள், பல சுவடிகளுடன் ஒப்பீடு செய்து கூறப்பட்டுள்ளன.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், பதிப்பாசிரியர் திரு. தேதியூர். எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைச் செம்மையுற பதிப்பிக்கக் காரணமாக விளங்கிய சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை கணினியில் அச்சிட்ட கணினி பிரிவினருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**எம். எஸ். சண்முகம்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
*24-4-2009*

# முன்னுரை

आरोग्यं प्रददातु नो दिनकरश्चन्द्रो यशो निर्मलं
भूतिं भूमिसुतः सुधांशुतनयः प्रज्ञां गुरुर्गौरवम् ।
काव्यः कोमलवाग्विलासमतुलं मन्दो मुदं सर्वदा
राहुर्बाहुबलं विरोधशमनं केतुः कुलस्योन्नतिम् ।।

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களைப் (மனிதன் வாழ்வில் பெறவிரும்புவை) பெறுவதற்கான வழிவகைகளைப் போதிக்கும் இந்து மத நூல்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ளவை வேதங்களாகும். அவற்றிற்கு சிக்ஷா, வியாகரணம், ச்சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்ப்பம் ஆகிய ஆறும் அங்கங்களாகும். அவற்றுள் ஜ்யோதிஷம் எனும் அங்கம் மிகவும் ஆழம் மிகுந்த கரைகாணவியால கடல் போன்றது.

வேதங்களும் அவற்றின் பொருள்கூறும் பாஷ்ய நூல்களும் வேதங்களின் வழிவந்த ஏனைய நூல்கள் யாவுமே ஸம்ஸ்கிருத மொழியில் அமைந்துள்ளவை என்பதாலும், ஸம்ஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றவர்கள் மிகவும் அருகிவிட்டதாலும், அந்நூல்களிலும் அவற்றின் உட்பொருளைக் காண்பிப்பதாலேயே **தர்சனம்** என வழங்கப் பெறும் மீமாம்ஸா, யோகம், ஸாங்க்யம், நியாயம், வைசேஷிகம், வேதாந்தம் ஆகிய ஆறு தர்சனங்களின் ஆயிரக்கணக்கான நூல்களில் கூறப்பட்டுள்ள சிறந்த தத்துவங்களையும் உலகோர் அறியும் நிலை அமையவில்லை. அந்நூல்களில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை ஸ்தூலமாக பொதுப்படையாகக்கூட அறியவியலாமல் அந்நூல்களுக்கான சமுதாய ஆதரவு குறையலாயிற்று. இதே நிலை நீடித்தால் வருங்கால சமுதாயம் வேதங்களையும் அவற்றின் தொடர்புள்ள, அவற்றின் வழிவந்த நூல்களில் கூறப்பட்ட தத்வங்களையும் அறிந்துணரும் வாய்ப்பினை இழக்கவே நேரிடும்.

வேதங்களில் கூறப்பட்டுள்ள பலவகை யாகங்கள் விதிமுறை - காலநிலை தவறாமல் செய்யப்பட்ட காலமும் இருந்தது. இக்காலத்திலும் அவ்வேள்விகளையும் அவற்றின் தொடர்புள்ள அறவழிபாடுகளையும் ஆங்காங்கு ஒருசில மகனீயர்கள் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். இந்த யாகங்களையும் அவற்றின் தொடர்புள்ள வைதிக கர்மாக்களையும் குறிப்பிட்ட காலத்தில் செய்தாகவேண்டி இருப்பதாலேயே ஜ்யோதிஷ சாஸ்திரம் வேதங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக வேதங்களின் அங்கமாகவே ஆயிற்று.

ஜ்யோதிஷ சாஸ்திரம் ஸூர்யன் அதனுடன் தொடர்புள்ள சந்திரன் முதலான கோள்களின் அடிப்படையில் அமைந்ததாகும். அது வைதிக கர்மாக்களுடன் மட்டுமின்றி, மனித வர்கத்தின் பிறப்பு முதல் மறைவு வரையிலான எல்லா நிலைகளுடனும் தொடர்புடையதாகவுள்ளது.

இன்று வேதங்களின் பிற அங்கமான வியாகரணம் ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள சொல்-வாக்ய பிரயோகங் களுடன் தொடர்பு கொண்டுள்ளதால் ஸம்ஸ்கிருத வித்வான் களிடையே போற்றப்பெறுகிறது. பிற அங்கங்களுள் ஜ்யோதிஷம் மட்டுமே சமூகத்தில் அதிக அளவு வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதற்குக் காரணம் இந்த சாஸ்திர நூல்களின் கருத்துக்கள் முக்கியமாக ஆங்கிலத்தில் விரிவாகக் கூறப்பட்டுப் பல நூல்களின் வடிவங்களைப் பெற்றதேயாகும்.

ஜீவராசிகள் யாவுமே ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி- வளர்ந்து-மறை(மடிந்துவிடு)கின்றன. இது இயற்கையின் நியதி. இந்த நிகழ்ச்சிகளுக்குச் சான்றுகள் தேவையில்லை. இந்த உற்பத்தி, வளர்ச்சி (பரிணாமம்), முதிர்ச்சி, மறைவு இவை யாவுமே கால புருஷனின் கட்டுப்பாட்டில் உள்ளவை. இவ்வுண்மையினை ஜோதிஷ நூல்களும் கூறத்தவறவில்லை.

காலபுருஷனின் சக்தி அளவிடமுடியாதது. சூரியனின் சக்தியும், பிற கோள்களின் இடைவிடாச் சுழற்சியும் அவற்றின் அளப்பரிய சக்தியுமே காலபுருஷனின் பிரதான ஆயுதமாகும்.

பிறக்கும்பொழுதும், இறக்கும்பொழுதும் மனிதன் எதையும் கொண்டுவருவதில்லை, எடுத்துச் செல்வதுமில்லை. அவனவன் தன் வாழ்நாட்களில் செய்த நல்வினை, தீவினைப் பயன்களான புண்யம் - பாபம் இவற்றை மட்டுமே எடுத்துச் செல்கிறான். அவற்றின் பயனாக மறுபடி பிறக்கிறான். பிறப்பும்-இறப்பும் ஒரு வட்டத்தின் சுழற்சியாகவே அமைகிறது.

ஒருவன் இப்பூமியில் பிறக்கும் சமயத்தில் அமைகிற அமைந்துள்ள கிரஹங்களின் நிலைகள் அவன் நல்லவனா, தீயவனா, அறிஞனா, மூடனா, நீண்ட ஆயுள் உள்ளவனா அல்லது அற்பாயுளா, நோயுற்றவனா, ஞானியா என்பது போன்றவற்றையும் அறிவிப்பதாகவே அமைகின்றன.

காலப்பிரகாசிகை என்னும் இந்நூலில் கூறப்பட்டு உள்ளவை யாவும் மனித வாழ்க்கையுடன் தொடர்பு உடையவையாகும். மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் - பருவத்திலும் மேற்கொள்ளப்படவேண்டிய - செய்யவேண்டிய சடங்குகள் பற்றியவையாகும்.

கர்ம பலனை அனுசரித்தே பிறக்கும் வளர்ச்சியடையும்- மரிக்கும் மனிதனுக்கு இந்நூலில் கூறப்பட்டுள்ள பலவகை கர்மாக்களால் என்ன லாபம் - பயன் என்று வினவலாம். அதற்கான விடையைக் காண்போம்.

ஒருவனுடைய ஜனனகால கிரஹநிலைப்படி (ஜாதகப்படி) ஜன்ம - சந்திர லக்னத்திற்கு 4-ம் இடம் (பாவம்) கல்வி பற்றியது. 4-ம் இடத்தில் சனி, ராகு, கேது முதலான

பாப கிரஹங்கள் இருப்பதாகவும், வித்யாகாரகனான புதன் துஸ்ஸாதனத்தில் பாபிகளுடன் சேர்ந்தும், ஞானகாரகனான குரு பாபிகள் சம்பந்தப்பட்டும், பலவீன நிலையில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஜாதகத்தில் உள்ள இந்த கிரஹநிலை பூர்வஜன்மப் பயனாக அமைந்ததே. இதன் பயனாக இந்த ஜாதகனுக்குக் கல்வியில் நாட்டமில்லாமல் இருக்கலாம். பயிற்சியின்பொழுது தடைகள் ஏற்பட்டு கல்வி பயில இயலாமல் போகலாம் அல்லவா? இந்த மாதிரியான நிலையில் இந்த நூலில் கூறப்பட்டுள்ளவாறு நன்னாளில் நல்ல நேரத்தில் கல்விப் பயிற்சிக்கு இடமளிக்காத இடையூறுகள் விளைவிக்கும் கிரஹங்கள் தீமையை அளிக்காமல் நன்மையே தரும். வித்யா-ஞானகாரகர்களுடன் சேர்ந்த, அவர்களைப் பார்க்கின்ற பாப கிரஹங்களும்கூட தீமையை வலியுறுத்தாமல் ஜாதகன் கல்விப் பயிற்சிபெற உதவும் என்பதால், கல்விப் பயிற்சிக்கான சுபதினத்தில் திதியில், நக்ஷத்திரத்தில், நேரத்தில் (லக்னத்தில்) இந்த காலப்பிரகாசிகை எனும் நூலில் கூறப்பட்டவாறு கல்வியைத் தொடக்கம் செய்வது நல்லது என்பதால் அவசியமாகிறது. வயல்களில் விதை விதைக்கும் விஷயத்திலும் வீடுகள் கட்டும் விஷயத்திலும், இந்த நூலில் கூறப்பட்டுள்ள நல்ல காலத்தில், நேரத்தில், இடத்தில் செய்வது நல்ல பயன்களையே அளிக்கும்.

திருமணப் பொருத்தம் என்று எடுத்துக்கொண்டால் ஒரு மணப்பெண்ணின் நக்ஷத்திரத்திற்கு ஒரு குறிப்பிட்ட மணமகனின் நக்ஷத்திரமுடன் பொருத்தமுள்ளதா என்பது போன்ற விஷயங்களைப் பற்றியும் இந்த நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

காலப்பிரகாசிகை எனும் இந்த நூல் ஸ்ரீந்ருஸிம்ஹஸூரி எனும் ஆசிரியரால் எழுதப்பட்டதல்ல. ஆசிரியரே இந்நூலின் ஆரம்பத்தில் கூறியவாறு,

'प्राचीनानि विधानानि सम्यग्वीक्ष्य समन्ततः
सङ्क्षिप्य तेषु सारांशं वक्ष्ये कालप्रकाशिकाम्' ।।

ग्रन्थाननेकान्संवीक्ष्य तत्रस्था लिखिता मया ।
वासिष्ट कालदीपं च कासदर्शं च पद्धतिम् ।।

नारदीयं तथात्रेयं वाचस्पत्यं तथैव च ।
अन्यान्यपि विधानानि समालोक्य समन्ततः ।।
तेषु सारांशमुद्धृत्य कृता 'कालप्रकाशिका' ।।

பண்டைய ஆசார அனுஷ்டான நடைமுறைகளை நன்கு ஆய்ந்தறிந்து அவற்றின் சாரமாகவுள்ள பகுதிகளைச் சுருக்கிக் காலப்பிரகாசிகை எனும் நூலை இயற்றுகிறேன்.

பல நூல்களை நன்கு ஆராய்ந்து அவற்றிலுள்ள கருத்துக்கள் இங்கு உரிய இடங்களில் அமைத்துக் கூறப்பட்டுள்ளன.

காலப்பிரகாசிகை எனும் இந்த நூலைத் தொகுக்கும் விஷயமாக என்னால் வாஸிஷ்டம், காலதீபம், காலதர்சம், பத்ததி, நாரதீயம், ஆத்ரேயம், வாசஸ்பத்யம் முதலான நூல்கள் நன்கு ஆராயப்பட்டன. அவற்றில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஸாரமான கருத்துக்களை எடுத்து இந்தக் காலப்பிரகாசிகை எனும் நூல் இயற்ற (அமைக்க)ப்பட்டது. இந்த நூல் ஒரு தொகுப்பு நூலேயாகும்.

ஒருவன் இப்புவியில் பிறந்தவுடன் அவன் தொடர்பான கர்மாக்களும் ஆரம்பமாகிவிடுகின்றன. எனவே, ஜனனமானவுடன் ஜாதகர்மா என்னும் சடங்கு மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்த நூல் ஆரம்பமாகிறது.

இதன் தொடர்பாக, பிறந்த ஒரு சிசுவின் ஜனனகால கிரஹநிலை கொண்டு, அக்குழந்தையின் ஆயுள்விருத்தி உண்டா. அற்பாயுள் உள்ளதா, தந்தை, தாய், மாமன் உடன் பிறந்தவன் இவர்கலுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகளா யாவை? இந்தக் குழந்தைக்கு நோய் இல்லாதிருக்குமா, அகங்கங்களில் (கண், காது, கை, கால்களில்) குறை இல்லாதிருக்கும்? தெளிவான பேச்சு உரிய காலத்தில் பேசக் கூடுமா? ஊமையாக இருப்பானா என்பது போன்ற செய்திகளும் கூறப்படுகின்றன. தவிரவும் ஜனனமான குழந்தையின் திதி, வார, நக்ஷத்திர பலன்க்ள், கிரஹங்கள் உச்சமாகவோ, நீசமாகவோ, அஸ்தமனம் அடைந்தோ இருக்கும்பொழுது ஜனித்த குழந்தையின் நிலை சுபயோகங்களில் ஜனிக்கும் (பிறக்கும்) குழந்தைகளின் லக்ஷணம் முதலான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

பிறக்கும் குழந்தை பெண்ணாகில் அதன் ஜனன கால கிரஹ நிலைப்படிக்கான பலன்களை **ஸ்த்ரீ ஜாதகம்** என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஆபரணம் அணிவித்தல், பெயர் சூட்டுதல், தொட்டிலில் இடுவது, குழந்தை தாமாகத் தவழ்ந்து வீட்டின் உட்புறமிருந்து வாயில் நிலைப்படியைக் கடந்து வெளியில்வரும் நாளில் செய்யப்படவேண்டிய சில சடங்குகள், காது குத்துதல், முதல் உணவு ஊட்டுதல், முடி இறக்குதல், அக்ஷர ஆரம்பம் (எழுத்தறிவு புகட்டுதல்) முதலான குழந்தைப் பருவத்தில் மேற்கொள்ளப்படவேண்டியவை பற்றிக் கூறப்படுகின்றன.

குறிப்பிட்ட நன்னாளில், நல்ல நேரத்தில் மேற்கொள்ளப்படும், செய்யப்படும் சடங்குகள் நற்பயன்களை அளிக்கவே செய்யும் என்பதனை முன்னோர்கள் சமுதாயத்தின் நலன்கருதி எழுதிவைத்துச் சென்றுள்ளனர்.

இதுமட்டுமின்றி விவசாயம் தொடங்குவதற்கான நன்னாள் பற்றியும், வீடுகள் கட்டுவதற்கான திசைகள், இடங்கள், வீடு கட்டுவதற்கு உபயோகிக்கப்பட வேண்டிய பொருள்கள் புதியவனாக இருத்தல் வேண்டுமேயன்றி பழைய வீடுகளிலிருந்து கட்டப்பட்டு, இடிக்கப்பட்ட வீட்டின் மரம், பிற சாமான்களைக்கொண்டும், இடிவிழுந்த மரங்களைக் கொண்டும் வீடு கட்டலாகாது என்றும், மனையாள் கருவுற்றிருக்கும் சமயத்தில் வீடு கட்டுவது சரியல்ல என்றும், வீட்டின் இன்ன பகுதிகள் இந்த திசை அமைப்பில் இருத்தல் வேண்டும் எனவும் இவ்வாறு பயனுள்ள பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

ஸம்ஸ்கிருத மொழியிலுள்ள இந்நூல் ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1917-ல் வெளியிடப்பட்டது. அதன் பின்னர், மூல நூலின்றி தமிழில் மட்டும் காலப்ரகாசிகை எனும் பெயருடன் ஒரு நூல் வெளிவந்தது. அதுவும் தற்பொழுது கிடைப்பதில்லை. 45 அத்யாயங்களைக்கொண்ட இந்த நூல் முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவே விரும்பினாலும் பல காரணங்களால் அந்த நூலின் சில பகுதிகளை விடுவித்து மிக அவசியமான பகுதிகளை மட்டும் வெளியிடலாயிற்று. பிழைகள் அதிகமுள்ள இடங்களில் இந்த நூலகத்தின் எண். 11024 உள்ள ஓலைச்சுவடியும், கிரந்த லிபியில் இருந்த மிகப்பழமையான நூலும் ஒப்பிடப்பட்டன.

மொழிபெயர்ப்பில் பிழைகள் ஏற்படாமலிருக்க அதிக கவனம் மேற்கொள்ளப்பட்டதெனினும் மனித இயல்பிற்கேற்ப பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். இதனை சமநோக்குடன் கண்ணுறும் வித்வான்கள் பிழைகள் இருக்கும் இடங்களைக் குறிப்பிட்டு எழுதினால் மொழிபெயர்த்துப் பதிப்பித்தவன் எனும் முறையில் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

குடும்பத் தொடர்புள்ள செய்திகளே அதிகமுள்ள இந்த நூல் ஒவ்வொரு குடும்பத்திலும் கட்டாயம் இருக்கவேண்டிய ஒன்றாகும். எனவே, வாசக அன்பர்களிடையே இந்நூலுக்கு வரவேற்பு இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்குப் பணித்த தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் (பொறுப்பு) அவர்களுமான திரு. E. வேங்கடாசலம், இ. ஆ. ப., அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு உதவிய நூலக நிருவாக அதிகாரி திரு. P. இளங்கோராஜன், B. Sc. B. Tech., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், M. A., M. L. I. S. அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை இருபகுதிகளாகப் (ஸம்ஸ்கிருத - தமிழ் Section) பிரித்து அச்சிட்டுக் கொடுத்த லக்மீ பிரிண்டர்ஸ் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**S.** *கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,*
மேனிலை ஸம்ஸ்கிருத பண்டிட்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# नक्षत्रनिघण्टुः

| | |
|---|---|
| अश्विनी | - அச்வி, தஸ்ரம், துரங்கம, ஆத்யம், துரங்க, துரக, அச்வம், வாஜீ, ஹயம், ஹரி. |
| भरणी | - யமம், யாம்யம், அந்தகம், ம்ருதப. |
| कृत्तिका | - பஹுளம், ஆக்நேயம், ஷண்ணக்ஷத்ரம், ஹுதாசனம், ஷட்தாரகம், பாவகம், அநலம், ஜ்வலனம் |
| रोहिणी | - பங்கஜ, காய, சகட, வனஜ, விதி, ப்ராஜாபத்ய, ப்ரஜேச, ப்ரஜேசர்க்ஷம், வைதாத்ரம், பங்கஜாஸனம். |
| मृगशिरः | - விது, ஸௌம்யம், நிசாநாத, நிசாகர. |
| आर्द्रा | - (திருவாதிரை), ரௌத்ர, ஹர, சார்வ, சாங்கர, சர்வ. |
| पुनर्वसु | - ஆதித்ய, அஷ்டதிக், அதிதி. |
| पुष्यं | - புஷ்ய, ஆங்கிரஸ, திஷ்ய, வாசஸ்பத்ய, ப்ருஹஸ்பதி. |
| आश्लेषा | - (ஆயில்யம்) ஆச்லேஷ, உரக, ரஜ்ஜு, ஸர்ப்ப, அஹி, பணீ. |
| मखा(घा) | - பைத்ருக, பித்ருப, மிருதி, மாரண. |
| पूर्वफल्गुनी | - (பூரம்), பகணம், பூர்வபல்குனீ, பூர்வபம், தேவஸுந்தரீ, அர்யமா. |
| उत्तरफल्गुनी | - (உத்தரம்), உத்தரபல்குனீ, அஷ்டௌபகம். |
| हस्ता | - ஸவிதா, ஸாவித்ர, அர்க, ஸூர்ய, திவாகர. |
| चित्रा | - த்வாஷ்ட்ரு, தைவத்யம், த்வஷ்டா, ஸுரவர்தகி. |

स्वाती - ஸமீரணம், வாயு, ச்வஸந, அநில, மாருத.

विशाखा - சூர்ப்ப, ஐந்த்ராக்னீ, இந்த்ராக்னீ, த்விதை, வத்யம்.

अनुराधा - அனுஷம், மைத்ர, அநுராதா, மித்ர, தால.

ज्येष्ठा - ஜ்யேஷ்டா (கேட்டை) இந்த்ர, புருஹூத, சதமக.

मूल - நிசாசர, நைர்ருத, பிசிதாசன.

पूर्वाषाढा - (பூராடம்), ஜல, பாதஸ், உதகம், ஆப்ய,

उत्तराषाढा - (உத்திராடம்), விச்வேச, விச்வ, உத்தராஷாடா.

अभिजित् - அபிஜித்

श्रवण - (திருவோணம்), வைச்ரவண, ஸ்ரீச, ஸ்ரீகாந்த, முரஜித், ஹரி.

श्रविष्ठा - அவிட்டம், சிரவிஷ்டா, தனிஷ்டா, வஸுவாஸம்.

शतभिषक् - சததாரா, சதபிஷக், ப்ரசேதா, வருண, அம்புப.

पूर्वाप्रोष्टपदा (पूर्वभाद्रपदा) - அஜைகபாத், அஹிர்புத்ந்யம், பாத்ர, பாத்ரபத.

उत्तरप्रोष्टपदा - (உத்திரட்டாதி), உத்தரப்ரோஷ்டபதா, அஹிர்புத்னி.

रेवती - உபாந்த்யம், பௌஷ்ணம், அந்த்யம், பூஷா

# பொருளடக்கம்


பக்க எண்.

**முதல் அத்யாயம்** **1 - 6**

*காலப்ரகாசிகை நூலைத் தொகுத்த ஆசிரியரின் சுயவிமர்சனம் - திதி, வாரம் முதலான ஐந்து அங்கங்களை அறிவதின் அவசியம் - நூலின் பொருள் - நல்லன செய்வதற்கான காலம் தோஷமற்றதாகக் கிடைப்பது அரிதாயினும் தோஷங்கள் குறைந்த - குணங்கள் மிகுந்த காலம் அறிந்து செய்யவேண்டும் - என்பனவற்றைக்கூறி இந்நூலைத் தொகுக்கத் தம்மால் ஆராயப்பட்ட நூல்கள் பற்றியும் விளக்குதல்.*

**இரண்டாவது அத்யாயம்** **6 - 42**

*பிறந்த குழந்தைக்கான ஜாதகர்மம், பிறந்த குழந்தையைத் தந்தை காணவேண்டியமுறை - அவசியம் பற்றியும் - அணிந்த துணியுடன் தலை ஸ்நானம் செய்தல் - பசு, பூமி முதலான தானம் செய்தல் - பிறகு பிறந்த குழந்தையின் காலம் அறிந்து ஜோதிடம் அறிந்தவராகில் தாமேயோ அல்லது ஜோதிடரிடம் சென்றோ ஜாதக பலன் அறிதல்வேண்டும் எனக்கூறி கிரஹங்களின் பல்வேறு நிலை பற்றிய பலன்கள் பற்றியும் - ஸ்த்ரீ ஜாதகம் பற்றியும்.*

**மூன்றாவது அத்யாயம்** **42 - 47**

*பிறந்த குழந்தைக்கு ரக்ஷை (பாதுகாப்பு) செய்தல் பிறந்த குழந்தைக்கு ஆபரணம் அணிவித்தல், பெயர் சூட்டுதல் (நாமகரணம்), தொட்டிலில் இடுதல், பால் புகட்டுதல், (உபநிஷ்க்ராமணம்) வீட்டிலிருந்து வெளியில் கொண்டுபோதல் முதலானது பற்றி.*

**நான்காவது அத்யாயம்** 47 - 50

காது குத்துதல், உணவு ஊட்டுதல் (அன்னப்ராசனம்) முதலாம் ஆண்டு நிறைவுபற்றி

**ஐந்தாவது அத்யாயம்** 51 - 56

சௌளம் (முதல் முடி இறக்குதல் பற்றி)

**ஆறாவது அத்யாயம்** 57 - 58

அக்ஷர ஆரம்பம் (எழுத்தறிவு புகட்டுதல்)

**ஏழாவது அத்யாயம்** 59 - 74

உபநயனம் பற்றி

**எட்டாவது அத்யாயம்** 74 - 79

வித்யாரம்பம் - ஸாரஸ்வத யோகம், வித்யாயோகம் - பற்றி

**ஒன்பதாவது அத்யாயம்** 80 - 84

உபாகர்மா - முதலாவது உபாகர்மா

**பத்தாவது அத்யாயம்** 85 - 89

மந்த்ர ஸ்வீகாரம் (உபதேசம் பெறுதல்) ஸித்தாதி கோஷ்டமும் - பயனும் பற்றி

**பதினோராவது அத்யாயம்** 89 - 91

வேதாரம்பம் பற்றி

**பன்னிரண்டாவது அத்யாயம்** 92 - 93

ஸமாவர்த்தனம் (திருமணத்திற்கு முன்பு செய்யவேண்டிய விரதம் பற்றி)

**பதிமூன்றாவது அத்யாயம்** 93 - 111

விவாஹ தசவிதப் பொருத்தங்கள் (பத்துவித திருமணப் பொருத்தங்கள்) [தினப்பொருத்தம் , கணம், மாஹேந்திரம், ஸ்த்ரீதீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதைப் பொருத்தம்] பொருத்தங்களின் பலன்கள் - கோத்ர சம்பந்தமான திருமண விஷயமான பிரச்னம் பற்றி.

**பதிநான்காவது அத்யாயம்** 111 - 122

பாணிக்ரஹணம் - கன்யாதான காலம், விவாஹ கால யோகங்கள் மாஹேந்திராதி யோகங்கள், திருமண காலத்தில் விலக்கத்தக்க காலங்கள் பற்றி.

**பதினைந்தாவது அத்யாயம்** 122 - 125

ருது பலன்கள்

**பதினாறாவது அத்யாயம்** 125 - 126

**பதினேழாவது அத்யாயம்** 126 - 129

பும்ஸவனம் - ஸீமந்தம்

**பதினெட்டாவது அத்யாயம்** 129 - 131

பிரஸவ அறை அமைத்தல்

**பத்தொன்பதாவது அத்யாயம்** 131 - 134

விவசாய வேலை ஆரம்பித்தல் - உழவு தொடங்குதல் - ஏர் பிடிக்க உரிய நேரம்

**இருபதாவது அத்யாயம்** 134 - 144

விவசாயம் தொடர்பாக - விதை விதைத்தல் - கிழங்கு - மலர்கள் பயிரிடுவதற்கான காலம் - முதல் அறுவடைக்காலம் - சில உயர்வான நக்ஷத்திரங்களும், யோகங்களும் பற்றி

**இருபத்தோராவது அத்யாயம்** **144 - 150**

தானியங்களை சேமிக்கும் காலம் - தங்கம், நவரத்னம் வாங்குவதற்கான காலம் - வெள்ளி, நவரத்னங்கள் முதலானவற்றைச் சேமிக்கும் காலம் - வாசனைத் திரவியங்கள் சேமிக்க - நூலகம் அமைக்க - ரிகார்டுகள் தயாரிக்க - வெள்ளி சேமிக்க - பூமி - பசு - எருமைகள் வாங்கிச் சேர்க்க - ஆடுகள் வாங்க - வாங்க நல்லதும், கொடுக்க தீமையுமான காலம் - வாங்கவும், விற்கவும் உகந்தவை.

**இருபத்திரண்டாவது அத்யாயம்** **150 - 151**

புதிய உணவு உண்ணுதல் பற்றி

**இருபத்திமூன்றாவது அத்யாயம்** **151 - 154**

புதிய ஆடைகள் வாங்குதல்

**இருபத்திநான்காவது அத்யாயம்** **154 - 156**

புதிய ஆபரணம் அணிதல்

**இருபத்தைந்தாவது அத்யாயம்** **156 - 170**

புது வீடு கட்டுதல் - எந்த திசையில் - யார் கட்டுவது - வாஸ்து புருஷன் - உணவு உண்ணும் பகுதி - அடுப்பு அமைக்க - பிற தானியச்சாலை முதலான பகுதிகள் அமைத்தல் - வீட்டிற்கு அங்கங்கள் - அங்கங்களான தூண், சாளரம் முதலானவற்றை அமைக்கும் காலம் , அவற்றை நிர்மாணிக்கும் விதம், தயிர் கடையும் இடம் - மத்து அமைப்பது - தக்க காலத்தில் கட்டப்படும் வீட்டின் வயது - தினசரி வீட்டு வேலைகள் - வீட்டு வேலைக்குத் தகாத மரங்கள் - எந்த திசைப் பார்வையுள்ள வாசல் அமைப்பது - வீட்டிற்கு அஸ்திவாரம் இடுவது.

**இருபத்தாறாவது அத்யாயம்** 170 - 172

புதுமனை புகுதல்

**இருபத்தி ஏழாவது அத்யாயம்** 172 - 174

வாகனம் ஏறுதல் - போர் - யானை வாங்குதல் - யானை தங்குமிடம் - குதிரை வழங்குவது, பழக்குவது - ஆடுகள் வாங்க.

**இருபத்தி எட்டாவது அத்யாயம்** 174 - 177

புதியதாகக் கோயில் அமைக்க - தேவதா ஸ்தாபனம்.

**இருபத்தி ஒன்பதாவது அத்யாயம்** 177 - 200

யாத்ராவிதி - சுப, அசுப நக்ஷத்திரங்கள் - திதிகளின் பலன்கள் - சூலம் - உயர்ந்த நேரம் - யோகினி, திதி, சூலம் - வாரசூலம் - உகந்த நாட்கள், பொதுவிதி - பெண்களின் பிரயாண விஷயத்தில் சுபசகுனங்கள் - அசுபசகுனங்கள்.

**முப்பதாவது அத்யாயம்** 201 - 202

நோய் ஆரம்பித்த நக்ஷத்திர சுப - அசுப பலன்கள்

**முப்பத்தொன்றாவது அத்யாயம்** 202 - 208

நோய்கள் தீர்வதற்கான வைத்யம் செய்யும் காலம் - எண்ணெய் தேய்த்து முழுகுதல்

**முப்பத்திரண்டாவது அத்யாயம்** **208 - 209**

கடன் தீர்த்தலுக்கு உரிய விதிமுறைகள்

**முப்பத்தி மூன்றாவது அத்யாயம்** **209 - 234**

சுபகாரியங்களில் விலக்கத்தக்க நாட்கள், நக்ஷத்திரங்கள் பற்றி - அசுபயோகங்கள் - அசுப கரணங்கள் - தினம்ருத்யு - தினரோகம் - குருட்டு நக்ஷத்திர - திதி - ராசிகள் - சகடயோகம்- கர்த்தரி - சூன்ய யோகங்கள் - ஹோரை - பலன்கள் - ஷட்வர்கங்கள் - சுபகிரஹங்கள் - பக்ஷச்சித்ரை - ஊர்த்வ - அதோமுக - திர்யங்முக நக்ஷத்திரங்கள் - சீர்ஷோதய - ப்ருஷ்டோதய - உபயோதய ராசிகள் - மிருத நக்ஷத்திரங்கள் - தியாஜ்யம் முதலானதுகள் பற்றி.

**முப்பத்தி நான்காவது அத்யாயம்** **234 - 238**

எல்லா தோஷங்களும் அபவாதங்கள் Nutralisation of Adverse Yogas லக்னத்தில் குளிகன் இருக்கும்பொழுது செய்யவேண்டிய கார்யங்கள்.

**முப்பத்தி ஐந்தாவது அத்யாயம்** **238 - 248**

கிழமைகளுடன் சேரும் நக்ஷத்திரங்களின் திதிகள், சுப-அசுபத்தன்மை (சுப-அசுப யோகங்கள்)

ஸ்ரீ குருப்யோ நம:

## ஸ்ரீ ந்ருஸிம்ஹஸூரியால் இயற்றப்பட்ட

# காலப்ரகாசிகை

## முதல் அத்தியாயம்

தூய ஸ்படிகம் போன்றிருப்பவராயும் அழகிய (ரத்ன) சிம்மாசனத்தில் வீற்றிருப்பவராயும் ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் கூடியவராயுமுள்ள ஸ்ரீநரஸிம்மமூர்த்தியை வழிபடுகிறோம்.

எவருடைய நினைவு வந்த மாத்திரத்தில் (எவரை தியானித்தவுடன்) இடையூறுகள் பயந்து வெகுதொலைவில் சென்றுவிடுமோ அப்படிப்பட்ட சக்ரத்தை தரித்த திருமாலின் சேனாபதியைத் தியானிக்கிறேன்.

எவரைச் சரணமென்று அடைந்தவர்கட்கு இவ்வுலக போகங்களும் அப்பால் முக்தி நிலையும் எளிதில் ஏற்படுமோ அப்படிப்பட்ட வதூல வரதாசார்யரின் திருவடித் தாமரைகளைத் தஞ்சமடைகிறேன்.

வதூல கோத்திரத்தின் தலைசிறந்தவரான - காந்தோபயந்தா எனும் யோகியின் கருணைக்குப் பாத்திரமானவருமாகிய ஸ்ரீந்ருஸிம்ஹார்யர் என்பவரை வணங்குகிறோம்.

நியாயம் வியாகரணம் (ஸம்ஸ்க்ருத இலக்கண நூல்) மீமாம்ஸை முதலான சாஸ்திர நூல்களின் அசைக்கவொண்ணாத அறிவுபெற்றவரும், எவர் இவ்வுலகில் தோன்றியதால் ஜீவராசிகள் பெரும்பேறு பெற்றனவோ அப்படிப்பட்ட ஸமரபுங்கவரை வணங்குகிறேன்.

பொள்(போ)ளிப்பாக்கம் என்று புகழ்பெற்ற அம்மலார்யபுரம் என்னும் (ப்ரௌடராயபுரம் என்னும்) ஊரில் வசித்துக்கொண்டு தன்னுடைய நற்குடிப் பிறப்பினாலும், பிறர் வியக்கும் வகையிலான தூய ஆசாரங்களாலும் (நல்லொழுக்க முறையிலும்) கல்வியாலும் சிறந்து விளங்கிய ஸ்ரீ வரதார்யருடைய திருக்குமாரனும், பரத்வாஜ கோத்திரத்திலுதித்தவரும், சோதிட சாஸ்திரக் கடலின் கரையைக் கண்டவருமான நரஸிம்ஹ எனும் (தன் பெயராலும், தகுதியாலும்கூட) புகழ்பெற்று விளங்கிய நான், சாஸ்திர அறிவுடன் மட்டுமின்றி பண்டைய - ஆசார - அனுஷ்டான நடைமுறைகளையும் நன்கு ஆய்ந்தறிந்து - அவற்றின் சாரமாகவுள்ள பகுதிகளைச் சுருக்கி, **காலப்ரகாசிகை** எனும் நூலை இயற்றுகிறேன்.

இவ்வுலகில் பொறாமை, அசூயை போன்ற தீய குணங்கள் நிறைந்தவர்கள் மிகுதியாகவுள்ளனர். அவர்கள் உனது இச்செய்கையை (இந்நூலை இயற்றும் செயலை) எங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள்? அதிலும், விதிமுறைகளின் சுருக்கமே சொல்ல இருப்பதாகச் சொல்வதால் நேர்மையுள்ளம் கொண்டவர்கள் பாராட்டினாலும், பொறாமையுள்ளம் கொண்டவர்கள் உனது நூல் சிறப்பாக எழுதப்பட்டிருப்பினும் கூட எவ்வாறு ஏற்கப் போகிறார்கள் என நினைக்க வேண்டாம். நான் எவரிடத்தும் கோபமூட்டும் வகையிலோ பகைமை கொள்ளும் வகையிலோ பேசாதவன் என்பதுடன் எல்லோரிடத்தும் இன்முகம் காட்டி இனிமையாகப் பேசும் இயல்பினன். சிறிதும் கர்வமில்லாதவன் என்பதால் என்னைக் கண்டு யார் பொறாமைப்பட இருக்கிறார்கள் - யாருமில்லை.

அனுஷ்டானங்கள் பற்றி விரிவாகக் கூறும் பல நூல்கள் இருக்கும்போது, உனது நூலை ஆதரிப்பவர் யார் என்று கேட்பீர்களாகில் சொல்கிறேன் கேளுங்கள்.

பண்டைய நூல்கள் அனைத்துமே, நேர்முகமாக வெளிப்படையாகக் கருத்துக்களைக் கூறமாட்டா, நான் அவற்றைக் கண்டறிந்து அக்கருத்துக்களைச் சுருக்கிக் கூற விரும்புகிறேன்.

முகூர்த்த பத்ததி போன்ற பல நூல்கள் இருப்பினும் அவை விரிவானவைகளாயும், நுண் பொருளை உள்ளடக்கியவை யாயும் இருப்பதால் அந்நூல்களை உட்புகுந்து பார்க்கப் பலரும் விழைவதில்லை. என்னால் செய்யப்படும் இந்நூலோ மிகவும் சுருக்கமானதாகவும், சந்தேகமேற்படாமல் தெளிவான பொருளைக் கொண்டதாயும் பல நூல்களின் ஸாராம்சத்தை அறிவிப்பதுமாயிருப்பதால் அனைவரும் அவற்றை விட்டுவிட்டு இந்நூலை ஆதரிக்கவே செய்வர்.

ஆகையால் உலக மக்களின் நன்மைக்காக "காலப்ரகாசிகை"யைச் சொல்லுகிறேன்.

தினந்தோறும் உரிய காலத்தில் (காலை வேளையில்) திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் இவ்வைந்து அங்கங்களை அறிகிறவருக்குப் பாபம் கிடையாது. அறிந்தால் நன்மைகள் உண்டு.

ஒருவன் திதியை அறிவதால் செல்வத்தையும், வாரத்தை அறிவதால் நீண்ட ஆயுளையும் அடைகிறான். நக்ஷத்திரத்தினை அறிவதால் பாபம் போகிறது. யோகத்தை அறிவதால் நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளலாம். கரணத்தை அறிவதால் சகல கார்யஸித்திகளும் ஏற்படுகின்றன. இவை பஞ்சாங்கப் பலன்களாகும். ஐந்து அங்கங்களான திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் இவற்றைத் தினந்தோறும் ஒருவர் காலையில் பார்த்து அறிந்துகொள்வதற்கென்றே "பஞ்சாங்கம்" எனும் நூல் பயன்படுத்தப்படுகிறது.

அறிஞர்களால் ஜ்யோதிஷ சாஸ்திரம் அவசியம் அறியத் தகுந்தது. இச்சாஸ்திரத்தை அறிவதால் தர்மம் (அறம்) , பொருள், காமம் (இன்பம்), மோக்ஷம் (வீடு) எனும் புருஷார்த்தங்களை அடையலாம்.

ஜ்யோதிஷம் - தர்ம விவஹாரம் செய்யப்பட்ட பாபத்திற்கும் பாப பலன்கள் அனுபவப்படும்போது அவற்றை விலக்கிக் கொள்வதற்குமான பிராயஸ்ச்சித்தங்கள், நோய்க்கான சிகிச்சை இவைகளை எவனொருவன் சாஸ்திர அறிவில்லாமல் சொல்கிறானோ அவனைப் ப்ரம்மகாதகன் (பஞ்சமஹா பாதகங்களில் ஒன்றைச் செய்தவனுக்குச் சமமாகவே) என்று சொல்லுகிறார்கள்.

"சித்திரம் எழுதுபவன், காவியம் இயற்றுபவன், வைத்யன், சோதிடர் இந்நால்வரும் சந்திரர் சூரியர் உள்ளவரை நரகத்தை அடைகிறார்கள்" (விடுதலைபெற முடியாதவாறு நரகத்தில் உழல்கிறார்கள்). (மேலே கூறிய கருத்தினால் சோதிடம் அறிவதால் தோஷமே ஏற்படுகிறது என்று இருக்கும்போது ஜ்யோதிஷம் சம்பந்தப்பட்ட பல கருத்துக்களைச் சொல்ல முற்படுவது ஏன் என்றால்).

சோதிடம், தர்மசாஸ்திர விவஹாரம் முதலானவற்றை எவன் சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்து சொல்லுகிறானோ அவனுக்கு அச்வமேதயாகம் செய்தால் ஏற்படும் பலனைக் காட்டிலும் அதிக புண்ணிய பலன் ஏற்படுமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

குணதோஷங்களை நன்றாக அறிந்து முகூர்த்தத்தை எவன் நிச்சயித்துக் கூறுகிறானோ, அவன் அளவற்ற புண்யத்தை அடைகிறான். மூன்று உலகிலும் கொண்டாடப்படுகிறான். இதுபோன்ற பிரமாணங்களால், சாஸ்திர மார்க்கத்தை அனுசரித்து வழிமுறைகளை வகுப்பதில் உயர்ந்த பலன்களும், அதை மீறினால் தோஷமும் ஏற்படுகிறது. இது எல்லா விஷயத்திற்குமே பொருந்தும்.

ஜ்யோதிஷம் அறிந்தவனை தெய்வம்போல் கருத வேண்டும். ஒருபோதும் அவமதிக்கலாகாது. ஜ்யோதிஷம் அறிந்தவனை அவமதித்தால் நன்மைகள் யாவும் அழிந்துவிடும்.

தீபம் எவ்வாறு அருகில் உள்ள குடம் முதலான பொருள்களைக் காண்பிக்குமோ (கண்களுக்குப் புலனாகச் செய்யுமோ) அவ்விதமே இந்த **“காலப்ரகாசிகை”** நூல் காலம் மற்றும் அதன் தொடர்பான கருத்துக்களை நன்கு பிரகாசப்படுத்தும்.

மேற்பார்வைக்கு மிக அழகான கருத்துக்களைக் கூறும் பல நூல்கள் இருந்தாலும் உண்மை நிலையை (குணத்தை மட்டும்) ஏற்கும் இயல்புள்ளவர்களுக்கு இந்த நூல் மனதிற்கு மிகவும் உகந்ததாய் திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் குணங்களும், தோஷங்களும் கலந்ததாகவே இருக்கும். குணம் மட்டிலுமே உள்ள நாள் - தேவதைகளுக்கும்கூட கிடைப்பது அரிது.

தோஷங்கள் கணக்கிலடங்காதவை. நக்ஷத்திரங்களோ இருபத்தேழு. எல்லா நக்ஷத்திரங்களுமே தோஷங்கள் கலந்தவையாகவே இருக்கும். எனவே, முற்றிலும் தோஷமற்ற தூய்மையான நாள் ஒன்றினைக் கண்டறிவது மிகவும் கடினம்.

எல்லா தோஷங்களையும் விலக்கி விடுவோம். எந்த தோஷமும் இல்லாத நாளைக் காண்போம் என்று முயற்சித்தால் பல ஆண்டுகள் தேடி ஆராய்ந்து பார்த்தாலும் அப்படிப்பட்ட நாளைக் கண்டறிவது கடினம். ஆதலால் நன்கு ஆராய்ந்து பார்த்து, தோஷங்கள் குறைந்தும் குணங்கள் அதிகமாயுள்ள நாளையே உகந்ததென மேற்கொள்ளவேண்டும்.

பல நூல்களை நன்கு ஆராய்ந்து அவற்றிலுள்ள கருத்துக்கள் இங்கு உரிய இடங்களில் அமைத்துக் கூறப்பட்டுள்ளன. எனவே, அறிஞர்கள் "கூறியது கூறல்" எனும் குறை (ஒருவரால் கூறப்பட்ட கருத்துக்களே இங்கும் கூறப்பட்டுள்ளன என்ற குறை) பற்றிய சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.

"காலப்ரகாசிகை"யெனும் இந்த நூலைத் தொகுக்கும் விஷயமாக என்னால் 'வாஸிஷ்டம், காலதீபம், காலாதர்சம், பத்ததி, நாரதீயம், ஆத்ரேயம், வாசஸ்பத்யம்' முதலான நூல்களும் நன்கு ஆராயப்பட்டன. அவற்றில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஸாரமான கருத்துக்களை எடுத்து இந்த காலப்ரகாசிகை எனும் நூல் இயற்றப்பட்டது.

முதல் அத்யாயம் முற்றிற்று.

## இரண்டாம் அத்யாயம்

# ஜாதகர்மா

இனி, பிறந்த குழந்தையின் நன்மை தீமைகள் சொல்லப்படுகின்றன. "ஜாதகர்மா" எனும் இந்தச் சடங்கு குழந்தை பிறந்தவுடன் செய்யப்படவேண்டும்.

குழந்தைக்கு ஸ்தன்யம் அளிப்பதற்கு முன்போ - தொப்புள்கொடி அறுப்பதற்கு முன்போ - ஜாதகர்மம் செய்வதற்குத் திதி, வார, நக்ஷத்திரங்கள் கவனிக்கப்பட வேண்டியதில்லையென அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்த மேலே கூறப்பட்ட காலம் கடந்துவிட்டால், ஜாதகர்மச் சடங்கைச் சுப காலத்தில்தான் (அனுகூலமான திதி, வார, நக்ஷத்திரங்கள் கூடிய நாளில்தான்) செய்யவேண்டும். விசேஷமான சுபயோக காலங்களில் குழந்தையைப் பார்ப்பது நல்லது.

பிதா குழந்தையை ஒருவருக்கொருவர் வச்ய ராசியிலோ, ஸ்திர லக்னத்திலோ - சந்திரன் குணத்துடன் கூடியவனாக இருக்கும் காலத்திலோ - பார்ப்பது நல்லது. இதனால் ஸௌக்யம், ஆயுள், ஐச்வர்யம் விருத்தியாகும்.

குழந்தையின் தலையைக் காண்பது; மூக்கைப் பார்ப்பது; பூமியில் விழுதல் என மூன்று வகையாகப் பிறப்பு சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுள் மூக்கின் அடிப்பாகத்தைப் பார்த்தவுடன் கிரஹ நிலையை ஆராயவேண்டும்.

புத்ரன் பிறந்தவுடன் குழந்தையின் முகத்தைத் தந்தை பார்க்கவேண்டும். இவ்விதம் பார்ப்பதால் தந்தை பிதிருக் கடனிலிருந்து விடுபடுகிறான்.

தந்தை, தனக்குக் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டவுடன் ஆற்றிலோ, ஏரியிலோ, தடாகத்திலோ, கோயில் புஷ்கரணியிலோ, பிராம்மணர்களால் அனுமதிக்கப்பட்டு வடக்கு முகமாக உடுத்தியுள்ள துணியுடன் ஸ்நானம் செய்யவேண்டும்.

கோபம், பேராசை (லோபம்) சாஸ்திரத்வேஷம் - பிராம்மணர்களின் வார்த்தைகளை அலக்ஷ்யம் செய்தல் - தகுதி இல்லாதோருக்குத் தானம் செய்தல் - வேதவிஹித கர்மாக்களில் நம்பிக்கை இல்லாமை (நாஸ்திக்யம்). இவைகள் சகல வசதிகளுடன் கூடியவனாக இந்திரனுடைய மகனாக இருந்தாலும் கொன்றுவிடும்.

ஜோதிஸ் சாஸ்திரம் அறிந்தவர்கள் லக்னத்தையே புகழ்கிறார்கள். ஆகையால் இந்த சமயத்திலேயே பசு தானம், ஸ்வர்ணதானம், வஸ்திரதானம், ஆபரணதானம், எள்-நெல் தானம் முதலானவற்றைத் தகுந்த பாத்திரத்திற்குக் கொடுத்துப் பிறகு - ஜாதகத்தை - குழந்தை பிறந்த லக்னத்தையும் பிற அம்சங்களையும் பரிசீலிக்கவேண்டும்.

புத்ர ஜாதக விஷயமாக ஜ்யோதிஷனிடம் கேட்கச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லலாகாது. ஏதேனும் உபஹாரத்துடன் (பழம், தாம்பூலம் முதலானவற்றுடன்) சென்று கேட்கவேண்டும். தானே ஜ்யோதிஷம் அறிந்தவனாக இருப்பினும் சாஸ்திரத்தை அனுசரித்து ஜாதக பலனைச் சிந்திக்கவேண்டும்.

ஜன்ம லக்னத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், கேது இவர்கள் இருந்தால் தாய், தந்தை, குழந்தை இம்மூவருக்கும் நாசம்.

லக்னத்திற்கு இரண்டாமிடத்தில் சூரியன், சனி, செவ்வாய் இவர்கள் இருந்தால் தாய்க்கு நாசம் ஏற்படும்.

மூன்றாமிடத்தில் புதன் இருந்தால் தாய்க்குக் கெடுதல்.

நான்காமிடத்தில் ராகு இருந்தால் குழந்தைக்குத் தீமை.

ஐந்தாமிடத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இருந்தால் தந்தை, சகோதரன், ஜனித்த குழந்தை இவர்களுக்குத் தீமை ஏற்படும்.

ஆறாமிடத்தில் சந்திரன் பாபிகளோடு கூடியிருந்தால் குழந்தைக்கும், தாய்க்கும் தீமை.

ஏழில் பாபி இருந்தால் தாய்க்கும் தீமை.

8-9-10ஆமிடங்களில் சந்திரன் இருந்து, 1-4-7-10 ஆமிடமான கேந்திர ஸ்தானங்களில் ஒன்றில் குரு இல்லாமல் இருந்தால், குழந்தைக்குக் கெடுதி உண்டு.

பதினொன்றாமிடத்தில் (லாப ஸ்தானத்தில்) உள்ள கிரஹங்கள் ஸகல இஷ்ட லாபத்தையும் அளிப்பர்.

பன்னிரண்டாமிடத்தில் சூரியன், சனி, செவ்வாய்கள் இருந்தால் தாயார், தந்தைஸ, குழந்தை இம்மூவருக்கும் தீமை ஏற்படும்.

ஐந்தாமிடத்தில் சூரியனிருந்தால் தந்தைக்கும், ஏழாமிடத்தில் (4க்கு 4ல்) சந்திரன் இருந்தால் தாய்க்கும், 10ஆமிடத்தில் சனி இருந்தால் குழந்தைக்கும் தீமை உண்டு

லக்னத்திற்கு எட்டாமிடத்தில் எந்த கிரஹம் இருந்தாலும் குழந்தைக்குத் தீமை ஏற்படும். மேற்படி எட்டாமிடத்தில் செவ்வாய் இருந்தால் குழந்தைக்குத் தாமதப்படாத மரணம் ஏற்படும்.

நான்காமிடத்தில் சந்திரனும், 7ஆமிடத்தில் செவ்வாயும் இருந்தால் குழந்தையின் தாயாருக்கு ஏழு நாட்களில் தீமை ஏற்படும். இதில் சந்தேஹமில்லை.

பன்னிரண்டில், சூரியனும்-சனியும், 7ல் தேய்பிறைச் சந்திரனும் இருந்தால் தந்தைக்குத் தீமை ஏற்படும். சுப க்ரஹங்களின் பார்வை ஏற்படுமானால் மூன்று வருடங்களில் தந்தைக்கு மரணம் ஏற்படலாம்.

ராகு/கேது, ஏதேனும் கேந்திரத்திலிருந்து பாப கிரஹங்களால் பார்க்கப்பட்டால் குழந்தைக்குத் தீமையையும், 9ஆமிடத்தில் (ராகு/கேது) இருந்து பாபிகளால் பார்க்கப்பட்ட தந்தைக்கு மூன்று நாட்களில் தீமையையும் அளிக்கும்.

மூன்றாமிடமான சகோதர ஸ்தானத்தில் (3ம் இடத்தில்) உள்ள பாபிகள் பாப கிரஹங்களால் பார்க்கப்பட்டால் உடனே சகோதரனுக்கு நாசம் உண்டாகும். சுப கிரஹங்களால் பார்க்கப்பட்டால் எட்டு வருஷங்களுக்குள் சகோதரனுக்குத் தீமை ஏற்படும்.

லக்னத்தில் சனி பகவான் பாப கிரஹத்துடன் சேர்ந்திருப்பின் பதினாறு ஆண்டுகளுக்குள் பிறந்த குழந்தைக்கு மரணம் சம்பவிக்கும். பாபக் கிரஹங்களின் பார்வையும் பெற்றால் ஒரு மாதத்தில் அல்லது ஒரு வருஷத்தில் மரணம் ஏற்படும்.

ஜன்ம லக்னத்திற்கு ஐந்தாமிடத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் இருந்தால் முறையே தந்தை, தாய், சகோதரன், பிறந்த குழந்தை இவர்களுக்கு ப்ராணபயம் ஏற்படும்.

ஜன்ம லக்னத்திற்கு ஏழாமிடத்தில் சனி இருந்தால் தந்தையையும், சூரியனிருந்தால் தாயையும், செவ்வாய் இருந்தால் ஜனித்த குழந்தையையும் அழிக்கிறார்கள்.

பாபியுடன் கூடிய சூரியன் சர ராசியில் இருந்தால், விஷம், ஜலம், ஆயுதங்கள் இவறறால் ஜனித்த குழந்தைக்கும், குழந்தையின் தந்தைக்கும் மரணம் சம்பவிக்கும்.

சனி பகவான், லக்னத்திற்கு நான்கிலும், ஏழில் சந்திரனும், பத்தாமிடத்தில் செவ்வாயுமிருந்தால் கிணற்றிலோ அல்லது கலஹம்-கலவரம் காரணமாகவோ மரணம் சம்பவிக்கும்.

கன்னி லக்னமாக இருந்து, லக்னத்தில் சூரியன் சந்திரனுடன் கூடியிருந்து பாபிகளால் பார்க்கப்பட்டால் ஜலத்தினாலோ, கலஹத்தினாலோ மரண் சம்பவிக்கும்.

மீனத்தில் சூரியனும், ஏழாமிடத்தில் பாபியுடன் கூடிய சந்திரனும் இருந்தால் பெண் காரணமாகத் தன் வீட்டிலேயே மரணம் ஏற்படும். இது நிச்சயம்.

ஸுகஸ்தானமான நான்காமிடத்தில் செவ்வாயோ, சூரியனோ இருந்து, ஒன்பதாமிடம் அல்லது எட்டாமிடத்தில் சந்திரனும் இருந்தால் நெருப்பின் காரணமாகவோ அல்லது சூலம் போன்ற கூர்மையான பொருளாலோ குத்தப்பட்டு மரணம் சம்பவிக்கலாம்.

ஜன்ம லக்னத்திற்கு நான்காமிடத்தில் சூரியனும், ஏழாமிடத்தில் செவ்வாயும், பத்தாமிடத்தில் சனியுமிருக்கப் பிறந்தவன் முறையே ஆயுதம், நெருப்பு, பைசாச உபத்ரவம் இவற்றால் மரணம் அடைவான்.

லக்னத்திற்கு இரண்டாமிடத்தில் சனியும், நான்காம் இடத்தில் சந்திரனும், பத்தாமிடத்தில் செவ்வாயும் இருக்கப் பிறந்தவன், புண் காரணமாகவோ அல்லது புழு காரணமாகவோ மரணம் அடைவான்.

ஜன்ம லக்னத்திற்கு ஐந்தாமிடத்தில் செவ்வாயும், பத்தாமிடத்தில் சூரியனும், எட்டாமிடத்தில் சந்திரனும் இருக்கப் பிறந்தவன், மரம் (மரக்கிளை), வாஹனம் காரணமாக மரணம் அடையலாம்.

மிதுனம், கன்னி போன்ற உபய ராசிகள் லக்னமாகி, அதில் சூரியனும், சந்திரனும் இருந்து பாப கிரஹங்களால் பார்க்கப்பட்டால், நீரில் மூழ்கியோ, கொம்புள்ள பிராணிகள் அல்லது கோரைப்பல் உள்ள பிராணிகள் காரணமாகவோ மரணம் அடைவான்.

ஜன்ம லக்னம், சந்திர லக்னம் இவற்றிலிருந்து (ஐந்தாம் இடத்தில் சுப கிரஹங்கள் இருந்தாலும் அல்லது

சுபகிரஹறங்களால் பார்க்கப்பட்டாலும் நல்ல புத்திரர்கள் பிறப்பார்கள். இது மாறுபட்டிருப்பின் ஸந்ததி இல்லை.

புத்ர ஸ்தானமெனப்படும் ஐந்தாமிடத்தில் செவ்வாய் இருந்தால் ஜனித்த குழந்தைக்கு மரணம். ஜன்ம லக்னம் அல்லது சந்திர லக்னத்திற்கு ஏழாமிடமான களத்ரஸ்தானம் சுபகிரஹறங்களுடன் இருந்தால் நல்ல மனைவியை அடைகிறான். இதில் சந்தேஹமில்லை. இது மாறுபட்டால் களத்ர ஸ்தானம் பாபக்ரஹறங்களால் பார்க்கப்பட்டால் துர்குணமுள்ள பத்நியை அடைகிறான்.

கன்னி லக்னமாகி, அதில் சூரியனும், மீனத்தில் சனியும் இருந்தாலும் அல்லது களத்ரஸ்தானமான ஏழாமிடத்தில் சூரியனும், த்ரிகோணங்களான ஐந்து அல்லது ஒன்பதாமிடத்தில் சுக்ரனும் இருந்தாலும் பத்னீ நாசம் ஏற்படும்.

சுக்ரன் இருக்கும் ராசிக்கு நான்காமிடம், எட்டாமிடங்களில் பாப கிரஹறங்கள் இருந்தால் அவனுடைய மனைவி தீயில் விழுந்தோ, தீயின் காரணமாகவோ அல்லது உயரமான இடத்திலிருந்து விழுந்தோ மரணம் அடைவாள்.

சனி, செவ்வாய்களின் வர்கம் லக்னமாக இருந்து, அதற்கு ஏழாமிடத்தில் சந்திரனும், சுக்ரனும் இருந்தால் அவனுடைய மனைவி விரைவில் மரணமடையலாம் அல்லது புத்ரர்கள் மரிப்பார்கள்.

லக்னத்திற்கு ஏழாமிடத்தில் சுக்ரன் அல்லது சந்திரன் இருந்து, புருஷ கிரஹறங்களாலும் பார்க்கப்பட்டால் தன் குலத்திற்கு ஏற்ற பெண்ணை மணந்துகொள்வான்.

லக்னத்திற்கு 12ஆமிடத்தில் சந்திரனும், ஆறாமிடத்தில் சூரியனும் இருக்கப் பிறந்தவன் தானும் ஒரு கண் இல்லாமல் போவதுடன், இவனுடைய மனைவியும் ஒரு கண் இல்லாதவள் ஆகிறாள்.

லக்னத்திற்கு பத்தாமிடம், ஏழாமிடம், நான்காமிடம் இவற்றில் முறையே சந்திரனும், சுக்ரனும் பாபக் கிரஹங்களும் இருந்தால் தன் குலத்தில் பிறந்தவர்களைத் தானே கொல்வான்.

சந்திரன், ரிஷபம்-கடகம்-விருச்சிக ராசிகளில் இருக்கத் தோல் சம்பந்தமான நோய்களின் தொல்லைகள் ஏற்படும்.

ஜன்ம லக்னத்திற்குப் பத்தாமிடத்தில் சனி இருந்தால், சிசுவுக்கு மரணம் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

ஜன்ம லக்னத்தையும், சந்திரனையும் சுப கிரஹ ஸம்பந்தமில்லாத பாப கிரஹங்கள் பார்த்தால் கேந்திரத்தில் குரு இல்லாதவரையில் (கேந்திரம் தவிர வேறு இடத்தில் குரு இருந்தால்) தந்தைக்கு மரணம் ஏற்படலாம்.

லக்னாதி கேந்திரங்களுக்குள் ஏதேனும் ஒருகேந்திரத்தில் ராகு இருந்து பாபிகளால் பார்க்கப்பெற்றால் உடனே மரணம் ஏற்படலாம். பாபிகளின் பார்வை இல்லாவிட்டால் 10 வயதிலோ, 16வது வயதிலோ மரணம் சம்பவிக்கலாம்.

லக்னத்திற்கு எட்டாமிடம் செவ்வாயின் இடமாக இருந்து, அதில் குரு இருந்து, சந்திரன் பாப கிரஹங்களின் பார்வையைப் பெற்றால், ஜாதகன் மூன்று வருடங்களில் மரணமடைவான். மேற்படி குருவையோ, சந்திரனையோ சுக்ரன் பார்த்தால் கூறப்பட்டவாறு பலன் சொல்லக்கூடாது.

லக்னத்திற்கு4, 6 அல்லது 8ஆமிடம் செவ்வாயின் இடமாக இருந்து, அதில் வக்ரியான சுக்ரன் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு இரண்டு வருடங்களில் மரணம் ஏற்படலாம்.

சனி பகவான், சந்திரன்-சூரியன் இருவருடன் ஐந்தாமிடத்தில் இருந்தால், ஒன்பது வருடங்களில் ஜாதகனுக்கு மரணம் சம்பவிக்கும்.

ஒரு பாபகிருஹம் எட்டாமிடத்தில் இருந்து, இதர பாப கிரஹ பார்வைபெற்றால் ஒரு வருடத்தில் ஜாதகனுக்கு மரணம் ஏற்படும்.

சந்திரன் ஸிம்ஹத்தில் இருந்து, சுக்ரன் 6 அல்லது 12ஆமிடத்தில் இருந்து சுபகிரஹங்களால் பார்க்கப்பட்டால் ஆறு வருடங்களில் ஜாதகன் மரணம் அடைவான்.

கடகம் ஜன்ம லக்னத்திற்கு ஆறாமிடமாகவோ எட்டாம் இடமாகவோ ஆகி அதில் புதன் இருந்து சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரு வருடத்தில் மரணம் நேரிடும்.

லக்னத்தில் கேது இருந்தால் இரண்டு மாதங்களில் மரணம்.

பாபியுடன் கூடிய சனி லக்னத்தில் இருந்தால் பதினாறு நாட்களில் ஜாதகனுக்கு மரணத்தை அளிப்பார்.

லக்னத்தில் உள்ள சனி வேறு பாப கிரஹத்தால் பார்க்கப்பட்டால் ஒரு மாதத்திலோ, ஒரு வருடத்திலோ ஜாதகனுக்கு மரணம்.

லக்னத்திற்கு ஆறாமிடம் எட்டாமிடத்தில் உள்ள சந்திரன் ஒரு வருடத்தில் மரணத்தை அளிப்பான். மேற்படி 6 அல்லது 8ல் உள்ள சந்திரன் பாப கிரஹங்களால் பார்க்கப்பட்டால் ஒரு வருடத்திற்கு முன்னதாகவே மரணம். பிறந்தவுடன் மரணம் என்றும் பொருள் கொள்ளலாம்.

6ஆமிடம், 8ஆமிடத்தில் உள்ள சந்திரனை சுப கிரஹங்கள் பார்த்தால் எட்டு வருஷங்களிலும், சுப-அசுப கிரஹங்காளால் பார்க்கப்பெற்றால் நான்கு வருடங்களிலும் மரணம்.

சூரியனிலிருந்து எட்டாமிடத்தில் சனியும், செவ்வாயும் இருந்து சுபகிரஹ பார்வை ஏதும் பெறாதிருப்பின் ஜாதகனின் தந்தைக்கு விரைவில் மரணத்தைத் தருவார்.

சந்திர லக்னத்திற்கு 7, 8 அல்லது 9ஆமிடத்தில் பாபிகள் இருந்தால் தாயுடன் குழந்தைக்கு மரணம் சம்பவிக்கலாம்.

ஜன்ம லக்னம் மீனமாக இருந்து, அதற்கு மூன்றாமிடத்தில் சூரியனும், சந்திரனும் இருந்தால் ஜாதகனுக்கு வியாதி, பீடை உண்டு. மூன்று நாட்கள் தாண்டாது.

திரிகோண ஸ்தானமான 5 அல்லது 9ஆமிடத்தில் சந்திரனும், நான்கு அல்லது எட்டாமிடத்தில் சூரியனும் இருப்பின் ஜாதகன் மோசமான வியாதியால் பீடிக்கப்படுவான். மூன்று நாட்களில் மரணம் சம்பவிக்கும்.

சந்திரனுக்குத் திரிகோண ஸ்தானங்களான 5 அல்லது 9ஆமிடத்தில் சூரியன் இருந்தால் நோய் பயத்தால் பீடிக்கப்பட்ட ஜாதகனுக்கு 20 தினங்களில் மரணம் சம்பவிக்கலாம்.

லக்னம் நான்காமிடம் அல்லது 10ஆமிடம் இவற்றில் செவ்வாய் இருந்து, இவ்விடங்களுக்குக் குருவின் பார்வை ஏற்படாமலுமிருந்து குழந்தை ஜனித்தால் அது இறந்து பிறக்கும்.

சூரியன் லக்னத்திலும், எட்டாமிடத்தில் ஏதோ ஒரு கிரஹமும் இருந்து கேந்திரங்களில் (1-4-7-10ஆமிடத்தில்) ஏதேனும் ஒரு கேந்திரத்தில் குரு இல்லாமலிருக்க ஜனிக்கும் ஜாதகன் பிறந்தவுடன் மரணம்.

லக்னத்திற்கு எட்டாமிடத்தில் பல கிரஹங்கள் இருக்க ஜனிக்கும் குழந்தை ஒரு மாதம் அல்லது ஏழு நாட்கள் ஜீவிக்கும்.

ஒரு குழந்தையின் ஜனன காலத்தில் லக்னத்தில் செவ்வாய் இருந்து, கேந்திரத்தில் (1-4-7 அல்லது 10ல்) சுக்ரனும் இருந்தால் பிறந்த குழந்தை மறுபடி அந்த லக்னம் வரும்போது மரித்துவிடும்.

லக்னாதிபதி 8ஆமிடத்தில் இருந்து, அதை எல்லா பாபிகளும் பார்க்க நான்கு மாதங்களில் மரணம்.

சூரியன் சர ராசிகளில் பாபிகளோடு கூடியிருக்க விஷம் - ஜலம் - ஆயுதங்களால் மரணம்.

காதுகளில் கோளாறு சம்பந்தமாக :- லக்னத்திற்கு 3ஆமிடம் அல்லது 11ஆமிடம் ஆகிய ஸ்தானங்களில் சந்திரன் பாபிகளுடன் இருக்க ஜனித்தவன் உடனேயும், பாபிகளால் பார்க்கப்பட்டால் காலதாமதமாகவாவது காது கேளாதவனாக ஆவான்.

கண்களில் கோளாறு பற்றி :- லக்னத்திற்கு 12ல் சனி இருந்தால் வலது கண்ணைக் கெடுப்பார். 12ல் செவ்வாய் இருந்தால் இடது கண் கெட்டுவிடும்.

சூரியன் 8ஆமிடத்திலும், சந்திரன் 6ஆமிடத்திலும், செவ்வாய் 12ஆமிடத்திலும் இருக்க பல நோய்கள் காரணமாகக் கண்ணுக்குத் தீமை ஏற்படும்.

பாப கிரஹங்கள் 3 அல்லது 5 அல்லது 9 அல்லது 10ஆமிடத்தில் இருந்து சுப கிரஹ பார்வையும் இல்லாதிருப்பின் காதுகள், பற்கள், பேசும் சக்தி இவைகளுக்குத் தீமை எழலாம்.

லக்னத்தில் ராகு இருந்து 7ஆமிடத்தில் சூரியனும் இருந்தால் கண் குருடாகும்.

ராகு லக்னத்தில் இருக்க ஆறாமிடம் அல்லது எட்டாமிடத்தில் சந்திரன் பாபிகளுடன் இருந்தால் அல்லது சூரியனும், சந்திரனும் எட்டில் இருந்தால் கண் பார்வை இல்லாது போகும்.

மூல நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்தவன் தந்தையை இழப்பான். (அதனால் மூலம் 1ம் பாதத்தில் பிறந்த குழந்தையைத் தகப்பனார் எட்டு வருஷங்கள் கழித்துப் பார்க்கவேண்டும்). மூலம் இரண்டாம் பாதத்தில் பிறந்த குழந்தையால் தாய்க்குக் கெடுதல். மூன்றாம் பாதத்தில் பிறந்த குழந்தையால் பொருள் நஷ்டம். மூலம் நான்காம் பாதத்தில் பிறந்தவன் செல்வந்தனாகவும், புத்ர ஸம்பத்து உள்ளவனாயும், நோயற்றவனாகவும், அரசாங்கத்தினால் கொண்டாடத் தக்கவனாகவும், பேச்சுவன்மை மிக்கவனாகவும், சுகமுள்ளவனாகவும் விளங்குவான்.

பூராடம் - தனுர் லக்னத்தில் பிறந்தவனும், பூசம் - கடக லக்னத்தில் பிறந்தவனும் தந்தைக்கு நாசத்தைச் செய்வான்.

பூராடம், பூசம் இந்த நக்ஷத்திரங்களின் முதல் பாதத்தில் பிறந்தால், பிறந்த குழந்தையின் தந்தைக்கும், இரண்டாவது பாதத்தில் பிறந்தால் தாய்க்கும், மூன்றாவது பாதத்தில் பிறந்தால் ஜனித்த சிசுவுக்கும், நான்காவது பாதத்தில் பிறந்தால் தாய் மாமனுக்கும் நாசம்.

ஹஸ்தம் - பரணி மூன்றாம் பாதத்தில் பிறந்தால் ஜாதகனின் மாதா - பிதாக்களுக்கு நாசம்.

உத்தர நக்ஷத்திரம் முதல் பாதத்திலும், ஹஸ்த நக்ஷத்திரம் இரண்டாம் பாதத்திலும், ஆயில்யம் மூன்றாம் பாதத்திலும், பரணி நான்காம் பாதத்திலும் ஜனித்த சிசு ஆண் குழந்தையாகில் தந்தைக்கும், பெண் குழந்தையாகில் தாய்க்கும் மரணம் ஏற்படும்.

பின்வரும் நக்ஷத்திரங்களில் ஜனிக்கும் சிசுவால் தந்தைக்குத் தீமை என்பதால் குழந்தையைச் சிறிது காலம் பார்க்காமல் இருத்தல் வேண்டும்.

***சிசுவின் ஜன்ம நக்ஷத்திரம் :-***

| | | |
|---|---|---|
| உத்தரம் ஆகில் | - | இரண்டு மாதங்களும் |
| பூசம் ஆகில் | - | மூன்று மாதங்களும் |
| பூராடம் ஆகில் | - | எட்டு மாதங்களும் |
| சித்திரை ஆகில் | - | ஆறு மாதங்களும் |
| ஆயில்யம் ஆகில் | - | ஒன்பது மாதங்களும் |
| மூலம் ஆகில் | - | எட்டு வருடங்களும் |
| கேட்டை ஆகில் | - | பதினைந்து நாட்களும் |

தந்தை குழந்தையைப் பார்த்தல் கூடாது.

***கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்த குழந்தை பற்றி :-***

கேட்டை நக்ஷத்திரத்தைப் பத்து பாகங்களாகப் பிரித்து

| | |
|---|---|
| முதல் பாகத்தில் பிறந்ததானால் | - மாதாவின் தாய்க்கும் |
| இரண்டாவது பாகத்தில் பிறந்ததானால் | - தாயின் பிதாவுக்கும் |
| மூன்றாவது பாகத்தில் பிறந்ததானால் | - தாய் மாமனுக்கும் |
| நான்காவது பாகத்தில் பிறந்ததானால் | - தாய்க்கும் |
| ஐந்தாவது பாகத்தில் பிறந்ததானால் | - சிசுவுக்கும் |
| ஆறாவது பாகத்தில் பிறந்ததானால் | - சிசுவின் வம்சத்திற்கும் |
| ஏழாவது பாகத்தில் பிறந்ததானால் | - தாய் தந்தைகளின் வம்சத்திற்கும் |
| எட்டாவது பாகத்தில் பிறந்ததானால் | - மூத்த சகோதரனுக்கும் |
| ஒன்பதாவது பாகத்தில் பிறந்ததானால் | - தன் மாமனாருக்கும் |
| பத்தாவது பாகத்தில் பிறந்ததானால் | - அனைவருக்கும் நாசம் |

ஜன்ம நக்ஷத்திரத்தில் சூரியனின் நவாம்சத்தில் ஜனனமாகில் குழந்தையின் தந்தைக்குத் தீமை.

சந்திர நவாம்சமாகில் - தாய்க்கும்
செவ்வாயின் நவாம்சமாகில் - தாயின் சகோதரனுக்கும்
சனியின் நவாம்சமாகில் - சகோதரனுக்கும்

குரு - சுக்ரர்களின் நவாம்சத்தில் தியாஜ்ய சம்பந்தம் இருக்கும்போது ஜனித்தால் சிசுவுக்கும் மரணம் உண்டாகும்.

முன்சொல்லப்பட்ட அம்சங்களில் தின மிருத்யுவும், தின ரோகமும் சம்பந்தப்பட்டிருந்தாலும் முன்சொன்ன பலனே ஏற்படும்.

தினந்தோறும் மரண காலமும், ரோக ஸமயமும் நிகழ்ந்தபடியே இருக்கின்றன. இந்த மரண ஸமயத்தை தினமிருத்யு என்றும் நோய்க்கான நேரத்தை ரோக மிருத்யு என்றும் சொல்வார்கள்.

நக்ஷத்ர கண்டாந்தம் : ஆயில்யம் - கேட்டை - ரேவதிகளில் கடைசி இரண்டு நாழிகைகளும்; அச்வினி - மகம் - மூலம் இவைகளின் ஆரம்பகால இரண்டு நாழிகைகளு கண்டந்தம் என்பர். இது நக்ஷத்ர கண்டாந்தம்.

பஞ்சமி - தசமி - பௌர்ணமி - அமாவாஸ்யை இவற்றில் முடிவில் உள்ள இரண்டு நாழிகைகளும் கண்டாந்தமாகும். இது திதி கண்டாந்தம் எனப்படும்.

மீனம் - கடகம் - விருச்சிகம் இவைகளின் கடைசி பாகத்தின் நவாம்சமும்; மேஷம் - ஸிம்ஹம் - தனுஸ் இவைகளின் முதல் நவாம்சமும் கண்டாந்தம் எனப்படும். இதை ராசி கண்டாந்தம் என்று சொல்வார்கள்.

இவைகளில் நக்ஷத்ர கண்டாந்தம் தாய், தகப்பன், பிறந்த சிசு, சகோதரன் இந்நால்வருக்கும் தீமை தரும். திதி கண்டாந்தம் தாய் தந்தையர்களுக்கும் நாசத்தை அளிக்கும்.

சிலர் கண்டாந்த தோஷம் எல்லாவற்றையுமே நாசமாக்கும் என்று கூறுகிறார்கள்.

கண்டாந்த தோஷத்தில் பிறந்த குழந்தை ஜீவிப்பதில்லை. ஜீவித்தால் தாய், தந்தையர், அவர்களது தாய், தந்தையர், சகோதரர்கள் வம்சம் இவைகள் அனைத்தையும் இழக்கச் செய்யும்.

| | |
|---|---|
| விஷ்டியில் ஜனிக்க | - தரித்திரன் |
| குளிகனில் ஜனிக்க | - சரீர விகாரம் |
| யமகண்டத்தில் ஜனிக்க | - முடமாவான் |
| ரிக்தையில் ஜனிக்க | - அலியாவான் |
| வியதீபாதத்தில் ஜனிக்க | - அங்கஹீனன் |
| பரிகத்தில் ஜனிக்க | - குழந்தைக்கு மரணம் ஏற்படலாம் |
| சூலத்தில் ஜனிக்க | - குலநாசம் (ஆகையால் குலத்திலிருந்து தள்ளத்தக்கவன்) |
| அமாவாசையில் ஜனிக்க | - கண்ணில்லாதவன் |
| வைதிருதியில் ஜனிக்க | - தந்தைக்கு மரணம் |

கிரஹண தோஷத்தால் தோஷம் ஏற்பட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தவன் ரோஹியாவான்.

கிரஹங்கள் இருக்கும் நக்ஷத்திரத்தில் பிறந்தவன் பகைவரிடமிருந்து பீடையை அடைவான்.

***கிருஷ்ணபக்ஷ (தேய்பிறை) சதுர்தசியில் பிறக்கிறவனின் பலன் கூறப்படுகிறது:-*** சதுர்தசியை ஆறு பாகமாக்கி, அதில் முதல் பாகத்தில் ஜனிக்க, ஒரு கெடுதலும் இல்லை. இரண்டாம் பாகத்தில் தந்தைக்கும், மூன்றாம் பாகத்தில் தாய்க்கும், நான்காம் பாகத்தில் தாய் மாமனுக்கும், ஐந்தாம் பாகத்தில் பசுக்களுக்கும், ஆறாவது பாகத்தில் ஜனித்த குழந்தைக்கு மரணம். இவ்வாறு தேய்பிறை சதுர்தசியில் பிறந்தவர்களின் பலனைக்

கூறுகிறார்கள். ஜனன காலத்தில் ஒரு கிரஹம் உச்சமாக இருந்தால் ஸர்வ அரிஷ்டங்களும் போகும். இரண்டு கிரஹங்கள் உச்சம் பெற்றிருந்தால் சிற்றரசனாவான். மூன்று கிரஹங்கள் உச்சமாயின் அரசனாவான். நான்கு கிரஹங்கள் உச்சமாயின் சக்ரவர்த்தியாவான். ஐந்து கிரஹங்கள் உச்சமாயின் லோகநாயகனாக விளங்குவான்.

மேலே கூறியவாறு ஜனன காலத்தில் கிரஹங்கள் நீசமாக இருந்தால் மேலே சொல்லப்பட்ட வரிசைப்படி எதிர்மாறான பயன்கள் ஏற்படும். ஜனன காலத்தில் சூரியன் உச்சனாகில் சேநாதிபதியாவான். சந்திரன் உச்சமாகில் தனதான்யங்கள் நிறைவாக இருக்கும். செவ்வாய் உச்சமாகில் காட்டில் அரசனாவான். (இக்கால நிலைப்படி வன இலாக்காவில் பெரிய பதவியில் இருப்பான் எனலாம்.)

புதன் உச்சனாயிருக்கப் பிறந்தவன் அரசாங்கத்தினின்றும் பெரிய வசதிகளைப் பெறுவான்.

குரு உச்சமாக இருக்கப் பிறந்தவன் ராஜ்யாதிபதி.

சுக்ரன் உச்சனாக இருக்கப் பிறந்தவன் ராஜ்யலக்ஷ்மியை அடைவான். சனி உச்சமாயிருக்க அரசனுக்குச் சமமாவான்.

### *ஸுனபா, அனபா துருதுரா யோகங்கள் பற்றியும்; வேறு பல சுபயோகங்கள் பற்றியும் :-*

சந்திரனுக்கு (சந்திரன் இருக்கும் ராசிக்கு) இரண்டாம் இடத்தில் சூரியனைத் தவிர்த்த வேறு கிரஹங்கள் இருந்தால் **"ஸுனபா யோகம்"** என்றும், சந்திரனுக்கு (சந்திரன் இருக்கும் ராசிக்கு)ப் பன்னிரண்டாம் இடத்தில் சூரியனைத் தவிர்த்த வேறு கிரஹங்கள் இருந்தால் **"அனபா யோகம்"** என்றும், சந்திரனுக்கு (சந்திரன் இருக்கும் ராசிக்கு) 12ஆம் இடத்திலும் இரண்டாமிடத்திலும் சூரியனைத் தவிர்த்த மற்ற கிரஹங்கள் இருந்தால் அது **"துருதுரா"** யோகம் என்றும் சொல்லப்படும்.

இந்த மூன்று யோகங்களும் எல்லோருடைய விஷயத்திலும் கல்வி, நீண்ட ஆயுள், புகழ் இவற்றை அளிக்கும். இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றில் ஜனித்தவன் உலகப்புகழ் பெற்றவனாவான்.

சூரியனுக்கு (சூரியனிருக்கும் ராசிக்கு) இரண்டில் சந்திரனைத் தவிர்த்த வேறு கிரஹங்கள் இருந்தால் அது **"வாஸி"** யோகம் எனப்படும். சூரியனுக்கு (சூரியனிருக்கும் ராசிக்கு 12ல் சந்திரனைத் தவிர்த்த வேறு கிரஹங்கள் இருந்தால் அது **"வேஸி"** யோகம் எனப்படும். சூரியனிருக்கும் ராசிக்கு 2லும் 12லும் சந்திரனைத் தவிர்த்த வேறு கிரஹங்கள் இருந்தால் **"உபயசரீ"** யோகம் எனப்படும். இந்த யோகங்களில் ஜனித்தவர்களும் முன்கூறப்பட்டவாறு புகழ், நீண்ட ஆயுள், கல்வி, லோக பிரஸித்தி முதலான சுபபலன்களைப் பெறுவர்.

சந்திரனுக்கு 4, 7, 10ஆமிடங்களில் குரு இருந்தால் அது **"கஜகேஸரீ"** யோகம் எனப்படும். இந்த யோகத்தில் பிறந்தவன் தனவானாகவும், கீர்த்திவாய்ந்தவனாகவும், சுகபோக வசதிகளைப் பெற்றவனாகவும் பல சாஸ்திர அறிவு பெற்றவனாகவும் இருப்பான்.

லக்னாதிபதி, வேறொரு கிரஹத்தின் (சத்ருவின்) அம்சத்தில் இருந்து ஜன்ம லக்னம், சந்திர லக்னம் இவற்றைக் குரு பார்க்கவில்லையாகில் அக்குழந்தைப் பிறருக்குப் பிறந்ததாகும்.

சூரியனும், சந்திரனும் சேர்ந்து சத்ருவின் வீட்டிலிருந்து லக்னத்தைப் பார்க்கவில்லையானால், அக்குழந்தையும் பிறருக்குப் பிறந்ததாகவே கருதலாம்.

சூரியனோடு கூடியிருக்கும் சந்திரனை, குரு பார்க்காவிட்டாலும் ஜாதகன் பிறருக்குப் பிறந்தவனெனலாம் அல்லது சூரியன்-சந்திரன்-குரு இம்மூவருமே நீசத்வம் பெற்றிருந்தாலும் பிறருக்குப் பிறந்தவனெனலாம்.

12ஆமிடம், 7ஆமிடம் இவற்றில் பாபி இருக்க 5ஆமிடத்தில் தேய்பிறைச் சந்திரன் இருக்க ஜனித்தவன் மனைவி மலடியாவாள் என ஜ்யோதிஷ சாஸ்திரம் அறிந்தவர் கூறுகிறார்கள்.

லக்னத்திற்கு 7ஆமிடத்தில் செவ்வாய், சனி இருக்க அவர்களைப் பாபிகள் பார்த்தால் ஜாதகனின் அண்டம் பெருப்பது நிச்சயம்.

தினமிருத்யு, தினரோக காலங்களில் ஜனித்தவன் விஷயத்தில் மேலே கூறப்பட்ட பலன் ஏற்படும்.

## மேஷாதி லக்னங்களில் ஜனித்தவர்களின் பொதுவான சில குணங்கள் :-

மேஷ லக்னத்தில் பிறந்தவன் தரித்ரனாவான். மேஷம் லக்னமாகி அதில் செவ்வாய் இருந்தாலும் அல்லது அதனைச் செவ்வாய்ப் பார்த்தாலும் விவசாயத்தில் ஈடுபட்டவனாக விளங்குவான். லக்னத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்தால் அற்ப ஜீவனம் உடையவான இருப்பான்.

விருஷபத்தில் பிறந்தவன் பாக்யமுள்ளவனாக இருப்பான். சந்திரன் பார்க்கின் பூமி சம்பத்து ஏற்படும். சுக்ரன் (விருஷப) லக்னத்தில் இருந்தாலும் (விருஷப லக்னத்தைப்) பார்த்தாலும் சுகபோகங்களைப் பெறுவான்.

மிதுனத்தில் ஜனித்தால் பல ஸ்த்ரீகளுடன் கூடியிருப்பான். கல்வியில் தேற்சியுள்ளவனாக விளங்குவான்.

லக்னத்தை - லக்னாதிபதி புதன் பார்த்தாலோ, லக்னத்தில் லக்னாதிபதி புதன் இருந்தாலோ - எல்லா வேதங்களையும் கற்றவனாவான். கடக லக்னத்தில் (லக்னாதிபதி) சந்திரன் இருந்தாலும் - லக்னத்தை லக்னாதிபதி சந்திரன் பார்த்தாலும் சுகபோகங்களைப் பெறுவான். குரு கடகத்தில் இருந்தாலும், கடகத்தைப் பார்த்தாலும் பெரும் செல்வமுள்ளவனாகவும் சுகபோகங்கள் உள்ளவனாகவும் இருப்பான். ஸிம்ம லக்னத்தில் பிறந்தவன் மிகுந்த தைரியமுள்ளவனாகவும், எல்லோரையும் வெல்லக்கூடியவனாகவும், வீரம் மிக்கவனாகவும் விளங்குவான்.

கன்யா லக்னத்தில் பிறந்தால் பல மனைவியர் உள்ளவனாகவும், பெண் குழந்தைகளைப் பெறுகிறவனாகவும் (சாதாரண) அற்ப ஜீவனம் உள்ளவனாகவும் இருப்பான். கன்யா லக்னத்தில் சுப கிரஹங்கள் இருந்தாலும், லக்னத்தைச் சுபர்கள் பார்த்தாலும் அதிகம் தனதான்யங்களுடன் கூடியவனாக இருப்பான்.

துலா லக்னத்தில் பிறந்தவன் சுக வாழ்க்கையுள்ள வனாகவும், அதிகம் பேசாதவனாகவும், உண்மையாகப் பேசி நடந்து கொள்பவனாகவும், வியாபாரத்தில் திறமையுள்ள வனாகவும், இருப்பான். சுக்ரன் (லக்னாதிபன்) துலா லக்னத்திலேயே இருப்பின் பெரிய பிரபுவாக விளங்குவான்.

விருச்சிகத்தில் ஜனித்தவன், சற்று க்ரூர குணம் உள்ளவனாயும், ஆசாரஹீனனாயும், அல்ப புத்தியுள்ள வனாகவும் இருப்பான். லக்னாதிபதி செவ்வாய் லக்னத்தில் இருந்தாலும், லக்னத்தைப் பார்த்தாலும் சேனைத் தலைவனாக விளங்குவான்.

லக்னம் தனுஸானால், அதில் முன்பாகத்தில் பிறந்தால் எப்போதும் பாபச் செயல்களில் ஈடுபட்டவனாக இருப்பான். பின்பாகத்தில் பிறந்தவனாக இருப்பின், பெருஞ்செல்வந்தனாக இருப்பான். பின்பாகத்தில் குருவும் இருப்பின் அரசனாவான்.

மகர லக்னத்தில் பிறந்தவன் செல்வனாகவும், போகமுள்ளவனாயும் இருப்பான். சனி பார்த்தால் அதிகம் அறியாதவன். பல உணவு வகைகளை உண்பவன். சுபர்கள் பார்க்கின் அரசனாவான்.

கும்பம் லக்னமானால் லோபி (பேராசைக்காரன்) சொற்ப தனமுள்ளவன். அழுத்தமான உள்ளம் கொண்டவனாயும் பொறாமை உள்ளவனாயும், தீயவனாயும் எப்போதும் திருட்டுப் புத்தியுள்ளவனாயும் இருப்பான். சுபர் பார்க்கின் அரசனாவான்.

மீனம் லக்னமானால் சுகபோகமுள்ளவனாயும், நீண்ட ஆயுள் உள்ளவனாயும் இருப்பான். சுக்ரன் லக்னத்தில் இருந்தால் அரசனாவான்.

***மேஷாதி ராசிகளில் சந்திரனிருக்கப் பிறந்தவனின் லக்ஷணங்கள் :-***

ஜனன காலத்தில் மேஷத்தில் சந்திரனிருக்க ஜாதகன் (பொதுவாக) லேசான செம்பு (உலோக) நிறமும், வட்டமான சிகப்புக் கண்கள் உள்ளவன், சூடான சொற்பத் தாவர உணவு உண்பவன். எளிதில் மகிழ்ச்சியடைபவன், யாத்திரை செய்வதில் பற்றுள்ளவன், காமம் மிக்கவன், பலமற்ற முழங்கால்கள் உள்ளவன், நிலைத்த செல்வமற்றவன், திறமை உள்ளவன், பெண்களிடம் பற்றுள்ளவன், சேவை (ஊழியம்)செய்யத் தெரிந்தவன், விகாரமான நக அமைப்புள்ளவன், தலையில் வடு அடையாளமுள்ளவன், தன்மானம் உள்ளவன், மூத்த சகோதரன், உள்ளங்கையில், 'சக்தி' ஆயுதரேகை உள்ளவன். அற்ப ஆசைகள் உள்ளவன். தண்ணீரில் இறங்க அச்சப்படுபவன். (மேஷ ராசியில் ஜனித்த ஜாதகனிடம் இந்த குணங்கள் யாவுமே இருக்கும் என்பதற்கில்லை. இவற்றுள் சில, பல குணங்கள் இருக்கக்கூடும். இதுபோல் ரிஷப, மிதுனாதி ராசிகளில் ஜனித்த ஜாதகர்கள் விஷயத்திலும் அறியவும்).

ஜனன காலத்தில் ரிஷபத்தில் சந்திரன் இருந்தால், ஜனித்தவன் (பொதுவாக) அழகானவன். அழகிய நடையுள்ளவன். பருத்த தொடை, அகன்ற முகம் உள்ளவன், இடுப்பின் பக்கப் பிரதேசத்தில் மச்சமுள்ளவன், தாராள மனப்பான்மை உள்ளவன். கஷ்டங்களை சகித்துக்கொள்ளும் இயல்புள்ளவன். செல்வாக்குள்ளவன், பருத்த தோள் உள்ளவன், அதிகம் பெண் குழந்தையுள்ளவன், கபமுள்ளவன், உறவினர்களை விட்டு விலகி இருப்பவன். கௌரவமான - அமைதியான வாழ்க்கையுள்ளவன். அமைதி - பொறுமை உள்ளவன், நன்கு நிறைந்த உணவு அருந்துபவன், தம் மனைவியிடம் பற்றுமிக்கவன், நட்பில் உறுதியாக இருப்பவன், வாழ்நாட்களின் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டாலும் நடுப்பகுதியிலும் கடைசிப் பகுதியிலும் மகிழ்ச்சியுடன் இருப்பான்.

ஜனன காலத்தில் மிதுனத்தில் சந்திரன் இருந்தால், அந்த ஜாதகன் (பொதுவாக) அதிகம் பெண் ஆசையுள்ளவனாக, சிவந்த கண்கள் உள்ளவனாக, சாஸ்திர அறிவும், நல்ல அறிவாற்றலும் உள்ளவனாச, தலையில் சுருட்டை மயிருள்ளவனாக, ஹாஸ்யச் சுவையுடன் பேசுபவனாக, முகக்குறிப்பு முதலானவற்றைக் கொண்டு பிறர் கருத்தை உணர்ந்துகொள்ளும் சமர்த்தனாக, சூதாட்டம் அறிந்தவனாக, அழகிய உடலமைப்பை உடையவனாக, இனிமையாகப் பேசுபவனாக, திறமைசாலியாக, அறுவகைச் சுவைகளுள் இன்ன சுவையில்தான் விருப்பம் உள்ளவன் என்று இல்லாமல் எல்லா சுவைகளிலும் விருப்பமுள்ளவனாக, பாட்டு - நாட்டியம் இவற்றில் பற்றும் அறிவும் உள்ளவனாக, ஆண்மையற்றவர்களால் ஊக்குவிக்கப்படுகிறவனாக, கௌரவிக்கப்படுகிறவனாக, தாழ்ந்த மூக்கு உள்ளவனாக இருப்பான்.

ஜனன காலத்தில் சந்திரன் கடக ராசியில் இருக்க ஜனித்த ஜாதகன் பொதுவாகச் சற்றே முதுகு வளைந்தவனாக, விரைந்து செல்லும் இயல்பினனாக, உயர்ந்த இடுப்புள்ளவனாக,

பெண்களின் கட்டுப்பாட்டில் உள்ளவனாக, நல்ல நண்பர்களை உடையவனாக, ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவனாக, பல வீடுகளைக் கொண்டவனாக, வளர்பிறைச் சந்திரன் ஒவ்வொரு நாளாகக் கலைகளைப் பெற்று முழுமை அடைவதுபோல் சிறுகச் சிறுகப் பொருள் சேர்த்துச் செல்வமுள்ளவனாக, சற்றே குள்ளமான வடிவம் உள்ளவனாக, பருத்த கழுத்துள்ளவனாக, இன்சொற்களுக்கு வயப்படுகிற வனாகவும், உயர்ந்த கௌரவமிக்க பதவியில் உள்ளவனாக, உயர் பதவிகளில் உள்ளவர்களுடன் நற்குணமுள்ளோரிடனும் நட்பு கொள்ளவிருப்பமுள்ளவனாக - நீர்நிலை, தோட்டம் இவற்றில் பற்றுள்ளவனாகவும் இருப்பான். சிம்மத்தில் சந்திரனிருக்கப் பிறந்த ஜாதகன் பொதுவாக எளிதில் கோபப்படுபவனாக, பருத்த தாடை கன்னப் பிரதேசங்களை உடையவனாக, பழுப்பு நிறக் கண்களை உடையவனாக, சொற்ப சந்ததிகளை உடையவனாக, பெண்களை வெறுப்பவனாக, பெண்களிடம் வெறுப்புற்று வனம், பிராணிகள் இவற்றில் பற்றுள்ளவனாக ஒன்றுமில்லாததற்கெல்லாம் கோபம் கொள்பவனாக, அடக்கமாட்டாத பசி, ஆசை, தாகம் உள்ளவனாக, வயிறு, பற்களில் நோயுள்ளவனாக, சற்றே வளைந்த உடற்தோற்றமும், உறுதியான மனமும் படைத்தவனாக, அகங்காரம் மிக்கவனாக, தாயிடம் பற்றும் மதிப்பும் உள்ளவனாக இருப்பான்.

கன்னி ராசியில் ஜனித்தவன், பொதுவாக எளிதில் பொருள் சம்பாதிப்பவனாக, உறுதியான தெளிவான அறிவாற்றல் உள்ளவனாக, பெருந்தன்மையுடன் நிறைந்த அளவு கொடுக்கும் இயல்பினனாக, அழகிய முகமுள்ளவனாக சுகியாக - கபம் மிக்கவனாக, பல கலைகளிலும் தேர்ச்சியும், திறமையும் உள்ளவனாக, சாஸ்திரங்களின் உட்பொருளை அறியப்பெற்றவனாக, நல்ல மேதாவிலாஸமுள்ளவனாக, சிற்றின்பப் பற்று மிக்கவனாக, பிறருடைய செல்வங்களையும், வீடுகளையும்அனுபவிப்பவனாக பல நாடுகளுக்குச் செல்பவனாக, இன்சொல் பேசுகிறவனாக, அதிகம் பெண் குழந்தைகளைப் பெற்றவனாக, அதிகம் ஆண் குழந்தைகள் இல்லாதவனாகவும் இருப்பான்.

ஜனன காலத்தில் துலாத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் பொதுவாக வேதமோதும் அன்பர்களையும், தெய்வங்களையும் நல்லோரையும் உபசரிக்கும் இயல்பினனாக, மேதாவியாக தூய்மையுள்ளவனாக, பெண்களால் வெல்லப்பட்டவனாக, உயரமானவனாக, உயர்வான மூக்குள்ளவனாக, அழகுள்ள நல்ல தேகத்தையுடையவனாக, தேச ஸஞ்சாரம் செய்பவனாக, பொருள் மிக்கவனாக, குறைபாடுள்ள உடலுறுப்புக்களை உடையவனாக, வியாபாரம் செய்வதில் திறமை மிக்கவனாக, தெய்வம்-பிராம்மணர்கள்-நண்பர்கள்-உறவினர்களுக்கு உதவி புரிபவனாக, இவனிடம் உதவிபெற்றவர்களாலேயே பிற்பாடு ஒதுக்கப்படுகிறவனாகவும் இருப்பான்.

விருச்சிகத்தில் சந்திரன் இருக்கப் பிறந்தவன், பெரிய கண்களையுடையவனாக, அகன்ற மார்புடையவனாக, உருண்டையான அடிக்கால் தொடை முழங்கால்களை உடையவனாக, பெற்றோர்கள், ஆசிரியர்களிடமிருந்து பிரிந்தவனாக, இளம்பருவத்தில் நோயினால் கஷ்டப்(படுகிற) பட்டவனாக, அரச குடும்பத்தினரின் கௌரவத்திற்கும், மரியாதைக்கும் பாத்திரமானவனாக, பழுப்பு நிறமுள்ளவனாக, சற்று கொடுமையான செயல்களைச் செய்கிறவனாக, கையில் மீன், வஜ்ரம், சந்திரன் இவற்றின் அடையாள ரேகைகள் உள்ளவனாக, (சந்திரன் கடலில் தோன்றுவதுபோல் ஜாதகன் தன் குலத்திற்குப் பெருமை சேர்ப்பவனாக இருப்பான் என்று பொருள்(?) சொல்வாரும் உண்டு.) காலில் ஏதோ ஒருவகைக் குறைபாடு உள்ளவனாக இருப்பான். (மீன், வஜ்ரம், சந்திரன் முதலான அடையாளமுள்ள பாதமுள்ளவன் எனவும் பொருள் கொள்ளலாம்.)

தனுஸ் ராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவன், நீண்ட முகம், இளைத்த வயிறு உள்ளவனாக, தந்தையின் பூர்வீக செல்வங்களைச் செலவு செய்பவனாக கற்பனை மிகுந்த உள்ளத்தினனாக (கவியாக) வீரதீரம் மிக்கவனாக, வளைந்த பெரிய பற்களை உடையவனாக, உழைப்பாளியாகச்

சோம்பலற்றவனாகப் பல வேலைகளையும் ஏற்றுச் செய்கிறவனாக, சிற்ப வேலை அறிந்தவனாக, சற்றே குள்ளமான கூனலுடன் கூடிய உடலை உடையவனாக, ஒழுங்கில்லாத நகங்களை உடையவனாக, சதைப்பற்றுள்ள கைகளை உடையவனாக, மிகுந்த ஆற்றலும், திறமையும் உள்ளவனாக, தர்மம் அறிந்தவனாக, உற்றார் உறவினரின் அன்பினைப் பெற்றவனாக, இன்சொல்லுக்கு வயப்படுவனாக இருப்பான்.

சந்திரன் மகர ராசியிலிருக்கப் பிறந்தவன் தினமும் தன் மனைவி மக்களிடம் பேரன்பு காட்டுபவனாக, தர்மச் செயல்களில் அக்கரையுள்ளவன்போல் உலகுக்குக் காண்பிப்பவனாக, இடைக்குக் கீழே இளைத்த உறுப்புக்களைக் கொண்டவனாக, அழகிய கண்கள் உள்ளவனாக இளைத்த இடையுள்ளவனாக, பிறர் கூறும் கருத்துக்களை ஏற்பவனாக, சகல ஸௌபாக்யங்களும் பெற்றவனாக, சோம்பலுள்ளவனாக, குளிர்ச்சியான உடல் அமைப்பைப் பெற்றவனாக, சிற்றின்பத்தில் ஈடுபட்டுக் களைத்துப்போகும் இயல்பினனாக, கடமையுணர்வும், நற்குணமும், பலமும் உள்ளவனாக, பேராசை உள்ளவனாக, தகுதிக்குப் பொருந்தாத பெண்களிடம் பற்றுள்ளவனாக, வெட்கம், கூச்சம் அற்றவனாக, கருமித்தனம் உள்ளவனாக இருப்பான்.

சந்திரன் கும்பத்தில் இருக்கப் பிறந்தவன் இளம் யானைக் குட்டிக்கு இருப்பதுபோன்று கழுத்துள்ளவனாக வலிமையான (உறுதியான) மயிரடர்ந்த கைகளுள்லவனாக அழுத்தமான கழுத்தெலும்பு கொண்டவனாக உயரமானவனாக, பெரிய பாதங்களையும், தொடையையும், பின் இடைப் பகுதியையும் உடையவனாக, பிறர் பெண்டிரை விரும்பும் இயல்பினனாக, பாபச் செயல்களைச் செய்யும் இயல்பினனாக வாழ்க்கையில் ஒரு சமயம் ஏற்றமும், பின்னொரு சமயம் இறக்கமும் உள்ளவனாக, பிறரை ஏமாற்றும் குண இயல்பினனாக, நறுமண மலர்கள்-நறுமண திரவியங்கள் (Perfurmes) நண்பர்கள் இவர்களிடம் விருப்பமும் நட்பும்

உள்ளவனாக அலைச்சல் அல்லது பிராயணத்தில் ஈடுபாடு உள்ளவனாக இருப்பான்.

மீன ராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவன் கடலில் விளையும் செல்வங்களைக் கொண்டு சுகபோகங்களை அனுபவிப்பவனாக (will be a dealer in property acquired from the sea.) தன் மனையாளிடம் பற்றுள்ளவனாக வெல்லமுடியாத அழுத்தமான பலம் மிக்க உடல் அமைப்பினைக் கொண்டவனாக, (சண்டையில் வீழ்த்தமுடியாதவனாக உயர்வான (நிமிர்ந்த) மூக்கையுடையவனாக, பெரிய தலையை உடையவனாக, பிற பெண்டிர்களின் ஆணைப்படிக்கு நடப்பவனாக, அழகான கண்களையும், பார்வையையும் உடையவனாக, அழகிய உடலைக் கொண்டவனாக 'புதையல் செல்வங்'களை அனுபவிப்பவனாக, நல்ல மேதாவிலாஸம் பெற்றவனாக இருப்பான்.

லக்னத்தில் உச்சம் பெற்ற கிரஹம் இருப்பின் அவர் எல்லா தோஷங்களையும் போக்குகிறார்.

ஜனன காலத்தில் லக்னாதிபதியோ, குருவோ, சுக்ரனோ கேந்திரத்தில் இருந்தால் தனவாகவும், நீண்ட ஆயுள் உள்ளவனாகவும், ராஜாங்கத்தின் அன்புக்குரியவனாகவும் இருப்பான்.

குரு, சுக்ரன், புதன் இவர்களுள் யாரேனும் ஒரு கிரஹம் கேந்திரத்தை அடைந்து பலவானாக இருப்பின், பதினாயிரம் தோஷங்கள் விலகும்.

லக்னத்தில் சுக்ரனும், ஏதேனும் ஒரு கேந்திரத்தில் குருவும், 8ஆமிடத்தில் பாபிகள் இல்லாமலுமிருந்தால் 120 ஆண்டுகள் ஜீவித்திருப்பான்.

சுபர்களில் ஒருவர் கேந்திரத்திலோ, த்ரிகோணத்திலோ இருப்பின் ஜனன காலத்தில் ஏற்படக்கூடிய தோஷங்களை சூரியன் இருளை அகற்றுவதுபோல் விலக்குவார்.

ராகு 3 அல்லது 6 அல்லது 11ஆமிடத்தில் இருந்து சுபக்ரஹங்கால் பார்க்கப்பட்டாலும், ரிஷப - கடக - விருச்சிக ராசிகளுள் ஏதேனும் ஒன்றில் இருந்தாலும் எல்லா அரிஷ்டங்களும் விலகும்.

குரு முழு பலமுடன் தன் வீட்டிலோ, உச்ச ராசியிலோ, மித்ரன் வீட்டிலோ, தன் வர்க்கத்திலோ, லக்ன கேந்திர - திரிகோணங்களிலோ இருக்க எல்லா தோஷங்களும் விலகும்.

இவ்விதமே சுக்ரன், புதன் இருவருக்கும் பலன் சொல்லப் படவேண்டும். சுக்ரன் 7லும், புதன் 4ஆமிடத்திலும் இருக்கக் கூடாது.

குரு அல்லது சுக்ரன் லக்னத்தில் இருந்தால் நூறு வயது வரை ஜீவித்திருப்பான். இதனால் 8லுள்ள பிற எல்லா கிரஹங்களாலும் ஏற்படும் அரிஷ்டங்களும் விலகும்.

லக்னம் சுபர்களின் க்ஷேத்ரமாகவோ, அம்சமாகவோ இருந்தாலும், சுபகிரஹ பார்வை பெற்றாலும் லக்னாதிபனுடன் கூடியதாக இருந்தாலும் ஸகல அரிஷ்டங்களும் விலகும்.

லக்னாதிபதி சுபனாகவோ, சுபகிரஹத்தின் நவாம்சத்தில் வர்க்கோத்தமம் பெற்றிருந்தாலோ அல்லது சுபகிரஹங்கால் பார்க்கப்பட்டாலோ சகல அரிஷ்டங்களும் விலகும்.

லக்னத்திற்கு 3, 6, 11ஆமிடம் சுபவர்கமாகி பாபிகள் இருந்தாலும், பாபிகள் லக்னத்தைப் பார்த்தாலும் தோஷங்கள் விலகுமெனச் சிலர் கூறுகிறார்கள்.

பாப ராசியில் இருக்கும் சந்திரன், அந்த வீட்டுக்கு அதிபதியாலோ, மித்ரனாலோ பார்க்கப்பெற்றால் லோபி செல்வத்தைக் காப்பதுபோல் குழந்தையை ரக்ஷிப்பான்.

சந்திரன் சுபனாகவும், பூரணனாகவும், சுப வர்கோத்தமம் பெற்றிருப்பினும், சுபகிரஹங்களால் பார்க்கப் பெற்றிருப்பினும், சுப கிரஹங்களுடன் கூடயவனாக இருந்தால் ஸகல தோஷங்களும் விலகும்.

சந்திரனும், சூரியனும் தன் சொந்த வர்கத்தில் இருப்பினும், மித்ர வர்கத்தில் இருப்பினும், சுபர்களின் வர்கத்தில் இருப்பினும், சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது சுபர்களின் பார்வை பெற்றோ இருப்பினும் தத்தமது உச்ச க்ஷேத்ரங்களில் இருப்பினும் ஸகல தோஷங்களும் விலகும். ஆனால் அவர்கள் (சூரியனும், சந்திரனும்) பாபிகள் அல்லது சத்ருக்கள் பார்வை - சேர்க்கை பெறாமலும் இருக்கவேண்டும்.

## ஸ்த்ரீ ஜாதகம்

இனி, இதற்குமேல் ஸ்த்ரீ ஜாதகத்தைச் சொல்லுகிறோம்.

லக்னத்திற்கு 7ல் சந்திரனும், சுக்ரனும் இருக்கப் பிறந்த பெண் வயதானவனை மணந்துகொள்வாள். 7ல் பாபிகள் இருந்தால் இளமையிலேயே ஸௌமாங்கல்யத்தை இழந்து விடுவாள்.

மகரம், கும்பம், மேஷம், விருச்சிகம் இவற்றில் ஒன்று லக்னமாகி, அதில் சுக்ரனோ, சந்திரனோ இருந்து, பாப கிரஹங்களும் பார்த்தால் ஜனனமான பெண்ணும், தாயும் பிரச்சனைக்குரிய நடத்தையுள்ளவராயிருப்பர்.

8-ல் க்ரூரர் இருக்கப் பிறந்தவள் விதவையாவாள். 8-ல் பாபியும் இரண்டாமிடத்தில் சுபர்களும் இருக்கப் பிறந்தவள் கணவனுக்கு முன்பாக மரிப்பாள்.

ரிஷபம், ஸிம்மம், விருச்சிகம் கன்னி இவற்றில் சந்திரன் இருப்பின் அல்ப ஸந்ததி (The native will have very few children).

7-ஆமிடம் சுக்ரனின் இடமாகில் புருஷன் அழகனாக இருப்பான். 7-ஆமிடம் புதனின் வீடாகில் புருஷன் படித்தவனாக இருப்பான். 7-ஆமிடம் குருவின் வீடாகில் கணவன் குணசாலியாக இருப்பான். 7-ஆமிடம் சூரியன் வீடாகில் கணவன் சாந்த குணமுள்ளவன். அங்கு சூரியனே இருப்பானாகில் மனைவியைத் தள்ளிவைப்பான். (She will be divorced by her husband).

7-ஆமிடம் பலவீனமாகவும், கிரஹங்களற்றதாகவும், சுப கிரஹ பார்வையின்றி பாப கிரஹங்களின் பார்வை பெற்றதாக இருந்தால் அவளுடைய கணவன் மிகக் கெட்டவனாவான். அப்பெண்ணும் மலடியாகவோ, துர்பாக்யவதியாகவோ, ஊர் சுற்றுபவளாகவோ இருப்பாள்.

சரராசி 7-ஆம் வீடாகி, அவ்வீட்டுக்கு அதிபதி சரராசி அல்லது சர அம்சத்தில் இருந்தால் ஜாதகியின் கணவன் வெளியிடங்களில் ஸஞ்சரிப்பவனாக இருப்பான். (Will be a traveller in foriegn lands).

ஸ்திர ராசியாகில், அதன் அதிபதி இன்னொரு ஸ்திர ராசியிலோ, ஸ்திர அம்சத்திலோ இருப்பின் கணவன் வீட்டிலேயே தங்கியிருப்பவனாவான்.

7-ஆமிடத்தில் சூரியன் இருக்கிறதை சத்ருக்கள் பார்க்க அவளைப் புருஷன் விலக்குவான். 7-ல் செவ்வாய் இருந்து சத்ருக்கள் பார்க்க சிறு வயதில் அமங்கலியாவாள். 7-ல் சனி இருந்து சத்ருக்கள் பார்த்தால் பால்யத்தில் விதவையாவதுடன் கிழத்தன்மையும் அடைவாள். (One learned opines that the lady will live a prostitute till old age).

7-ல் சுப - அசுப கிரஹங்கள் இருக்க பரபுருஷனிடம் விருப்பமுள்ளவனாக இருப்பாள். (The women will be inclinecd to commit adultery.)

7-ஆமிடம் பாபியின் வீடாகி, அதில் செவ்வாயும், சனியும் இருந்தால் ஜாதகி விதவையாவாள்.

ஏழாமிடத்தில் பலமற்ற பாபி இருந்து, சுபர்கள் பார்த்தால் அப்பெண் புருஷனால் விலக்கப்படுவாள். 7-ல் உள்ள பாப கிரஹம் நீசம் பெற்றவனாகவோ, சத்ரு வீட்டில் இருப்பவனாகவோ அமையுமானால் அப்பெண் கணவனை வெறுப்பாள்.

சுக்ராம்சத்தில் செவ்வாயும், செவ்வாய் அம்சத்தில் சுக்ரனும் இருப்பின் அப்பெண் 'சோர' புருஷனிடம் பற்றுள்ளவளாவாள். (She will be addicted to adultery.) அத்துடன் 7-ல் சந்திரனும் இருப்பின் கணவனின் அனுமதியுடன் கெட்ட நடத்தையில் ஈடுபட்டவள் ஆவாள். (The wife will be immoral with passive consent of her husband.)

சூரியன், சந்திரன், சனி, சுக்ரர்களின் வீடுகள் லக்னமாகி, அங்கு சனி, சுக்ரர்கள் இருந்து, 5-ஆமிடம் (பாபிகளுடன் கூடியோ) பாபிகளின் பார்வைபெற்றோ இருப்பின் அப்பெண் மலடி எனலாம்.

7-ஆமிடம் சுபரின் வீடாகி (ஸப்தமாதிபதி சுபனாகி அல்லது ஸப்தமாதிபதி சுப நவாம்சத்தில் சுபர்களுடன் கூடியோ, சுபர்களால் பார்க்கப்பட்டோ இருப்பின் அந்த ஜாதகி அழகிய இடை உள்ளவளாகவும், கணவனால் விரும்பப்பட்ட வளாகவும், பலவித சுகபோகங்களைப் பெறுபவளாகவும் இருப்பாள்.

ஏழாமிடம் சூரியனுடன் கூடியும் (சிலர் ஸ்வக்ஷேத்திரம் என்றும் பொருள் கூறுவர்), சூரியன்சொந்த நவாம்சத்திலும் இருப்பின் அவளுடைய புருஷன் சுகபோகத்தில் அதிகம் ஈடுபாடு உள்ளவனாகவும், அதே சமயம் அமைதி நிறைந்தவனாகவும் இருப்பான்.

(7ஆமிடம் சந்திரனுடைய வீடாகி) 7ல் சந்திரன் இருந்து அல்லது சந்திரன் தன் சொந்த அம்சத்தில் இருப்பின் அவளுடைய புருஷன் கெட்ட நடத்தையுள்ளவனாயும் உயர்பதவியிலுள்ளவனாயும் இருப்பான்.

7ஆமிடம் (செவ்வாய் வீடாகி) செவ்வாயுடன் இருந்து அல்லது அவன் சொந்த நவாம்சத்தில் இருப்பின் அவளுடைய புருஷன் பெண் பித்தனாகவும், செல்வமற்றவனாகவும் இருப்பான்.

7ஆமிடம் புதனுடைய வீடாகவோ, புதனுடைய அம்சமாகவோ இருந்து, அந்த 7ஆமிடத்தில் புதன் இருந்தால் புருஷன் நற்குணங்களுள்ளவனாகவும், செல்வந்தனாகவும், இந்திரியங்களை ஜயித்தவனாகவும் இருப்பான்.

7ஆமிடம் குருவின் வீடாகவோ, குருவின் நவாம்சமாகவோ இருந்து, அதில் குரு இருந்தால் கணவன் நல்ல குணங்கள் அமையப்பெற்றவனாகவும், செல்வந்தனாகவும் இருப்பான்.

(7-ல் குருவிருந்து, சொந்த நவாம்சத்திலும் இருப்பின் மேற்கூறிய பலன் அமையும்.)

7ஆமிடத்தில் சுக்ரன் இருந்து, (7ஆமிடம் சுக்ரன் வீடாகி) சொந்த நவாம்சத்தில் இருந்தால், கணவன் மனங்கவரும் தன்மையுள்ளவனாகவும், செல்வம், தான்யங்கள் நிரம்பப் பெற்றவனாகவும் இருப்பான்.

7ஆமிடம் சனியுடன் கூடியிருந்தும், (7ஆமிடம் சனியின் வீடாகி) சனி சொந்த நவாம்சத்திலும் இருப்பின் கணவன் மூர்க்கனாயும், வயதானவனாயும் இருப்பான். இவ்வாறு 7ஆம் பாவத்திலுள்ள கிரஹங்களின் பலாபலம் கொண்டு பெண்கள் விஷயத்தில் பலன்கள் சொல்லவேண்டும்.

புதன் வீடு லக்னமாகி, அதில் சுக்ரனுடன் சந்திரன் இருந்தாலும்: மனைவி, கணவனை வெறுப்பவளாகவும், தன் இஷ்டத்திற்கு (தன் மனம்போனவாறு) நடந்துகொள்ப வளாகவும் இருப்பாள்.

சுக்ரனும், புதனும் லக்னத்தில் இருப்பின் ஸௌபாக்யம், செல்வம், உத்தமகுலப் பெருமைகொண்டவளாக இருப்பாள்.

சந்திரன், புதன், சுக்ரன் மூவரும் லக்னத்தில் இருப்பின் அதிக ஸுகபோகங்கள் பெற்றவளாக இருப்பாள்.

குரு லக்னத்தில் இருந்தால் ஸம்பத்துக்களுள்ளவளாயும், புத்ர - மித்ராதியருடன் ஸுகங்களுடன் கூடியவளாக இருப்பாள்.

எட்டாமிடத்தில் பாபி, தன் அம்சத்தில் இருந்தால் அந்த தசையில் மரணம் நேரிடும்.

லக்னத்தில் இருப்பவர்கள் அசுபர்களானாலும், அவர்கள் லக்னாதிபர்களாகவோ, உச்சமாகவோ ஆனால் சுப பலன் களையே அளிப்பர்.

தனுஸ், கடகம், மீனம் லக்னமாகி, அதில் பாபிகள் இருந்தால் அந்த ஸ்த்ரீ தன் கணவன், புத்ரர் முதலானவர்களால் துக்கத்தை அடைவாள்.

லக்னம், 7ஆமிடம், 8ஆமிடம், 9ஆமிடம் இவை பாபிகளுடன் இருந்து, சுபகிரஹ ஸம்பந்தமில்லாதிருந்தால் அந்த ஸ்த்ரீ பலவிதத் துக்கங்களை அனுபவிப்பாள்.

9ஆமிடத்தில் சுபர்கள் இருந்தால், 7ஆமிடம், 8ஆமிடம் இவற்றில் பாபிகள் இருந்தாலும், அப்பெண் பர்த்தா (கணவன்) மகன் மற்றும் பிற சுக வசதிகளுடன் பல்லாண்டுகள் வாழ்ந்திருப்பாள்.

**இனிமேல் த்ரிம்சாம்சத்தில் ஜனித்த ஸ்த்ரீகளுக்கான பலன் கூறுவோம்.**

த்ரிம்ச(த்) என்றதன் பொருள் 30 என்பதாம். 30 சமபாகமாகப் பிரிக்கப்பட்ட ஒரு ராசியின் 1 பாகம் த்ரிம்சாம்சம் எனப்படும். மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுஸ், கும்பம் இவைகள் ஒற்றைப்படை ராசிகளாகும். ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவைகள் இரட்டைப்படை ராசிகளாகும்.

ஒற்றைப்படை ராசிகளில் முதல் 5 டிகிரிகள் செவ்வாயின் த்ரிம்சாம்சங்கள், அடுத்துள்ள 5 டிகிரிகள் சனியின் த்ரிம்சாம்சங்கள், அடுத்துள்ள 8 டிகிரிகள் குருவினுடைய த்ரிம்சாம்சங்கள், அடுத்துள்ள 7 டிகிரிகள் புதனுடைய த்ரிம்சாம்சங்கள், அடுத்துள்ள 5 டிகிரிகள் சுக்ரனுடைய த்ரிம்சாம்சங்களாகும்.

இரட்டைப்படை ராசிகளில் முதலாவது 5 டிகிரிகள் சுக்ரனுடைய த்ரிம்சாம்சங்கள், அடுத்துள்ள 7 டிகிரிகள் புதனுடைய த்ரிம்சாம்சங்கள், அதற்கடுத்துள்ள 8 டிகிரிகள் குருவின் த்ரிம்சாம்சங்கள், அதற்கடுத்துள்ள 5 டிகிரிகள் சனியின் த்ரிம்சாம்சங்கள், அதற்கடுத்துள்ள 5 டிகிரிகள் செவ்வாயின் த்ரிம்சாம்சங்களாகும்.

*ஒற்றைப்படை ராசிகளில் :*

| | |
|---|---|
| செவ்வாய் | 5 டிகிரிகள் |
| சனி | 5 டிகிரிகள் |
| குரு | 8 டிகிரிகள் |
| புதன் | 7 டிகிரிகள் |
| சுக்ரன் | 5 டிகிரிகள் |
| 'மொத்தம் | 30 டிகிரிகள் |

*இரட்டைப்படை ராசிகளில் :*

| | |
|---|---|
| சுக்ரன் | 5 டிகிரிகள் |
| புதன் | 7 டிகிரிகள் |
| குரு | 8 டிகிரிகள் |
| சனி | 5 டிகிரிகள் |
| செவ்வாய் | 5 டிகிரிகள் |
| மொத்தம் | 30 டிகிரிகள் |

லக்னம் மேஷம் அல்லது விருச்சிகமாக இருந்து, அதில் செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் பிறந்த பெண் துஷ்டையாக இருப்பதுடன், அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மரிக்கும். சனியின் த்ரிம்சாம்சத்தில் பிறந்த பெண் கெட்ட நடத்தையுள்ளவளாக இருப்பாள். (will be of bad conduct) குருவின் த்ரிம்சாம்சத்தில் ஜனனமான பெண் செல்வங்களையும், பிள்ளைகளையும் அடைவாள். புதனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்த பெண் கெட்ட நடத்தையுள்ளவளாக இருப்பாள். சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்த பெண் பிற புருஷனிடம் போகமனுபவிப்பதில் பற்றுள்ளவளாக இருப்பாள்.

லக்னம் ரிஷபம் அல்லது துலாமாக இருந்து செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் பிறந்த பெண் துஷ்டையாகவும், கலஹம் செய்பவளாயும் இருப்பாள்.

சனியின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவளாகில் -
பிறக்கும் குழந்தைகள் மரிக்கும்.

குருவின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவளாகில் -
பிள்ளைகள் செல்வங்களுடன் சுகபோகமுண்டு

புதனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவளாகில் -
கலைஞானம் உள்ளவள்.
கெட்ட ஸ்வபாவம் உள்ளவள்.

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவளாகில் -
சாமர்த்தியசாலி,
உலகோருக்குப் பிரியமாக நடந்துகொள்பவள்.

லக்னம் மிதுனம் - கன்னியாக இருந்து,

செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
பரபுருஷனிடம் ஈடுபட்டவள்.
சொற்ப புத்ரர்களை உடையவள்.

சனியின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
வேசி - குழந்தைகள் நாசம்.

குருவின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
ஸாத்வீ, பதிவிரதை.

புதனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
குணவதி.

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
தனம், பசு முதலான சகல சுகபோகங்களைப்
பெறுவாள்.

லக்னம் கடகமாக இருந்து,

செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
இஷ்டப்படி நடப்பவள், புத்ரர்கள் இறப்பர்.

சனியின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
வேற்றிடம் செல்லும் இயல்புள்ளவள்.

குருவின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
அரசனுடன் ரமிப்பவள், அரசாங்கத் தொடர்புள்ளவள்.

புதனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
சிற்பக்கலை அறிந்தவள், வேசித்தனம் உள்ளவள். (கணவனுக்குத் தொண்டு செய்யும் இயல்பினள் என்னும் பொருள் உண்டு.)

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -

வேசி, குழந்தைகளற்றவள், சொற்பக் குழந்தைகள் உள்ளவள்.

லக்னம் சிம்மாக இருந்து,

செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் - துஷ்டை.

சனியின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் - மலடி.

குருவின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் - ராஜபத்னீ

புதனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
ஆண்மகன் போன்ற நடத்தையுள்ளவள்.

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் பிறந்தவள் -
சேரத்தகாதவருடன் சேருபவள்.

லக்னம் தனுஸ் அல்லது மீனமாக இருக்க

செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
நல்ல குணவதி, பதிவிரதை.

சனியின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
அல்ப ஸந்தோஷமுள்ளவள்.

குருவின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
ஸத்குணவதி, பதிவிரதை.

புதனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
ஸாமர்த்தியசாலி, ஆசாரமற்றவள்.

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
பதிவிரதை

லக்னம் மகரம் அல்லது கும்பமாக இருக்க

செவ்வாயின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
குழந்தைகள் பிறக்கப் பிறக்க நசிக்கும்.

சனியின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
நீச ஆசாரங்களில் பற்றுடையவள்

குருவின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
கணவனிடம் பற்றுமிக்கவள்.

புதனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
கெட்ட நடத்தையுள்ளவள்.

சுக்ரனின் த்ரிம்சாம்சத்தில் ஜனித்தவளாகில் -
குழந்தைகளற்றவள், ஆசாரமற்றவள்.

இவ்வாறு த்ரிம்சாம்சத்தில் ஜனித்த ஸ்த்ரீ பிரஜைகளுக்குப் பலன்கள் கூறப்பட்டன.

பெண்கள் விஷயத்தில் எட்டாமிடம் கொண்டு மாங்கல்யம் - அமாங்கல்ய பாவமும்; ஏழாவது இடம்கொண்டு நல்ல புருஷன் கிடைப்பது பற்றியும், சுகம் பற்றியும்; லக்னத்தைக் கொண்டு அழகு - ஸௌந்தர்யம் பற்றியும்; ஒன்பதாமிடம் கொண்டு புத்ர ஸம்பத்து பற்றியும் கண்டறியவேண்டும்.

இரண்டாம் அத்யாயம் முற்றுற்று.

## மூன்றாம் அத்யாயம்

பிறந்த குழந்தைக்கு ஆபரணமணிவித்தல் பற்றிக் கூறப்படுகிறது.

ஜன்ம நக்ஷத்திரத்தில் 5ஆவது நக்ஷத்திரத்தில் சந்திரன் வந்ததும் குழந்தையின் தந்தை குழந்தைக்கு ஐந்து ஆயுதங்களுடன் கூடிய ஆபரணங்களால் அலங்காரம் செய்யவேண்டும்.

பெண் குழந்தைக்கு அதிகம் மங்களமும், ஆயுள் விருத்தியாவதற்காக விசேஷமாக ஆபரணம் அணிவிப்பது அவசியம். குழந்தை பிறந்த 7ஆவது நாளில் யமதர்மராஜன் தொல்லை கொடுப்பதற்காக வருகிறான். ஆதனால் அன்றைய நாளில் குழந்தையின் ஆயுள் விருத்தியைக் கருதி ரக்ஷை (பாதுகாப்பு) செய்யவேண்டும்.

மாலை வேளையில் தம் இஷ்ட (குல)தெய்வத்தைப் பூஜை செய்துவிட்டு உலக்கையால் கதவை இடுக்கும் யமனை வேத மந்த்ரங்களாலும், முட்களுடன் கூடிய (பனை) ஓலைகள் கொண்டும் விரட்டியடிக்கவேண்டும். (முட்களுடன் கூடிய தாழை மடல்களைக் கொண்டுதான் இச்சடங்கு நடத்தப்பட்டது) வீட்டிற்கு வெளியில் நீர் நிறைந்த பூர்ணகும்பத்தை முட்கள் நிறைந்த இலைகளிடையே ஸ்தாபித்து பனை ஓலைகள் முதலானவற்றால் அந்தக் கும்பத்தை அடிக்கவேண்டும்.

மாட்டுமணி முதலானவற்றை ஒலிக்கச் செய்யவேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால் ஜனித்த குழந்தைக்கு யமபாதை விலகுகிறது.

[இது முற்காலத்தில் குழந்தை பிறந்த 7வது நாளில் நடத்தப்பட்டுவந்தது. இக்காலத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது எனச் சொல்லமுடியவில்லை. கிராமங்களில் எங்கேனும் நடக்கலாம். ஜனித்த குழந்தைக்கு ஏற்படக்கூடிய பலவித துஷ்ட கிரஹத் தொல்லைகளை விலக்குவதற்குப் பிரஸவ அறைக்கு வெளியில் இந்தச் சடங்கு முன்பெல்லாம் (சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வரையில்) நடத்தப்பட்டு வந்தது, நம்பிக்கைக் குறைவும், நாகரிகமும் இந்நிகழ்ச்சி நடப்பதற்குத் தடையாகிவிட்டன.]

## நாமகரணம்

இதற்குமேல் ஜனனமான குழந்தைக்கு நாமகரணம் (பெயர் சூட்டுதல்) விதி பற்றிக் கூறுகிறேன்.

ஜன்ம நக்ஷத்திரத்திலோ, 12வது அல்லது 10வது அல்லது 16வது நாளில் மங்களகரமான பெயர் சூட்டும் நிகழ்ச்சியைச் செய்யவேண்டும். அந்த நாட்களில் சௌகர்யப்படவில்லை எனில் நல்ல சுபநக்ஷத்திரம், திதி, முகூர்த்தத்தில் சுப அம்சத்தில் செய்யவேண்டும் என்பது ஸம்பிரதாய நடைமுறை.

உத்திரம், ரேவதி, திருவாதிரை, பூசம், ஹஸ்தம், அச்வினி, சதயம், திருவோணம், புனர்பூசம், அனுஷம், ஸ்வாதி, மிருசீர்ஷம், ரோகிணி, அவிட்டம் இவை உகந்தவை.

பின்வரும் திதிகளில் நாமகரணம் செய்யலாகாது. அவையாவன : இரு பக்ஷங்களிலுமுள்ள சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்தசி, பௌர்ணமி, அமாவாஸ்யை ஆகும்.

சகுனி, விஷ்டி கரணங்களும் விலக்கத்தக்கவை.

திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகள் உகந்தவை. மேலே கூறப்பட்ட சந்திரன், புதன், குரு, சுக்ரன் இவர்களின் அம்சங்களும், வீடாகவும் உள்ள லக்னங்களும், திரேக்காணங்களும், ஹோரைகளும் நாமகரணம் செய்ய உத்தமம்.

லக்னத்திற்கு எட்டாமிடம் சுத்தமாக இருக்கவேண்டும். (எட்டாமிடத்தில் ஒரு கிரஹமும் இருக்கக்கூடாது.)

ஸ்திர ராசிகள் உத்தமம். உபய ராசிகளில் சுபகிரஹம் இருந்தால் செய்யலாம்.

முற்பகலில் முன் இரு பாகங்களிலும் (நண்பகல் வரையில்) நாமகரணம் செய்யலாம். பிற்பகலிலும், சந்தியா காலங்களிலும், அர்த்தராத்திரிகளிலும் கூடாது.

தெய்வத் திருநாமங்களையும், குலப்பெரியோர்களின் பெயரையும் வைக்கவேண்டும். அரசர், யாகங்களின் பெயர்கள், கோயில்கள் யானை, குதிரை, மரங்கள், ஓடை, கிணறு மற்றும் உபயோகமுள்ள அடையாளங்கள், பெண்கள், புருஷர்கள், காவியங்கள், கவிகள், பசு, அரசர்கள் கௌரவப்படுத்திக் கொடுத்த பட்டப் பெயர்களும் சூட்டத்தக்கவையே.

குரு, கேந்திர - த்ரிகோணங்களிலும், 11ஆம் இடத்தில் ஒரு பாபியும், கேந்திரத்தில் - சுபாம்சத்தில் புதனும் இருப்பின் இது நாமகரணத்திற்குச் சிறந்த யோகமாகும்.

சுக்லபக்ஷத்தில் (வளர்பிறையில்) சுக்ரன் அல்லது செவ்வாய் 11லும், குரு - சந்திரன் இவர்கள் கேந்திரத்திலும் இருக்க இதுவும் சுபயோகமாகும்.

செவ்வாய் 3ஆமிடத்திலும், சுக்ரன் பன்னிரண்டிலும், சந்திரன் சுப க்ரியைகளுடன் இருக்க, சுபகிரஹங்களின் ராசிகள் லக்னமாகவும் இருப்பின், நாமகரணம் செய்ய உத்தமம்.

# தொட்டிலில் இடுதல்

குழந்தை பிறந்த 10-வது அல்லது 12-வது நாளில் தொட்டிலில் இடவேண்டும். வசதிப்படாவிட்டால் 16-வது, 32-வது நாளில் தொட்டிலில் இடலாம்.

# பால்புகட்டுதல்

குழந்தை பிறந்த 31-வது நாளில் குழந்தைக்குச் சங்கினால் பால் புகட்டவேண்டும். அந்த நாள் சௌகரியப்படவில்லை எனில்; குழந்தையின் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 10-வது நக்ஷத்திரம் வரும் நாளில் பால் புகட்டலாம்.

அச்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், அவிட்டம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி இவைகள் பால் புகட்ட உத்தமம்.

சதுர்த்தி, நவமி, ஷஷ்டி, அஷ்டமி, சதுர்தசி. அமாவாசையும், விஷ்டி, ஸ்திர கரணங்களும் விலக்கத்தக்கவை.

மேஷம், விருச்சிகம், மீனம் ஆகிய ராசிகளும், சூரியன் நிற்கும் ராசிகளும் (அதோமுக ராசிகள்) விலக்கத்தக்கவை.

சந்திரன், புதன், குரு, சுக்ரன் இவர்களின் வார நாட்களும், வர்கமும், அவர்களின் பார்வை பெற்ற ராசி - லக்னமும் உயர்ந்தவை. லக்னத்திற்கு 10ஆமிடத்தில் ஒருவரும் இருக்கக் கூடாது. முற்பகலிலோ, நண்பகலிலோ முதல் பால் புகட்டவேண்டும். இரவை விலக்கவேண்டும்.

முற்பகலிலும், நண்பகலிலும் பால் புகட்டலாம். (முற்பகலிலும், நண்பகலிலும் அமையும் சுப லக்னத்தில் பால் புகட்டலாம்.)

# உபநிஷ்க்ராமணம்

*(பிறந்த வீட்டிலிருந்து வெளியில் கொண்டுபோதல்)*

நிஷ்க்ராமணம் என்பது முதல் முதலாக பிறந்த வீட்டிலிருந்து வெளியில் கொண்டுசெல்லும் சமயம் தெய்வானுக்ரஹம் அக்குழந்தைக்குக் கிட்டவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் சடங்கு. குழந்தை பிறந்த 3வது மாதத்தில் குழந்தைக்குச் சூரியனைக் காண்பித்தல் வேண்டும். அப்படிச் செய்வது குழந்தையின் ஆயுள் விருத்திக்குக் காரணமாகும். நான்காவது ஸாவன மாதத்தில் சந்திரன், பசுமாடு முதலானவற்றைக் காண்பிக்கவேண்டும். உரிய காலத்தில் இதைச் செய்யாவிட்டால் குழந்தையின் ஆயுளும், லக்ஷ்மியும் குறையும். இச்சடங்கினைச் செய்தால் ஆயுள் விருத்தி உண்டாகும். குழந்தையின் தாய்மாமன் குழந்தையை நன்றாக அலங்கரித்து, அதன் தலையில் மந்திர அக்ஷதை தூவி, ஆசீர்வதித்து, "உனக்கு லக்ஷ்மியும், ஆயுஸ்ஸும் விருத்தியாக வேண்டும்" என்று பிரார்த்தித்துத் தன் சக்திக்கு ஏற்ப புத்தாடை, அணிகலன் முதலானது கொண்டு அலங்கரித்து வீட்டிற்கு வெளியில் கொண்டுவந்து (குதிரை போன்ற) வாஹனத்தில் ஏற்றி, உற்றார் உறவினருடன் புறப்படவேண்டும். வாத்ய கோஷங்களுடன் நான்கு வீதிகள் கூடுமிடம் அல்லது திறந்த வெளியில் பசுஞ்சாணியால் சுத்தப்படுத்தப்பட்ட இடத்தில் தான்யங்களைப் பரத்தி அதன்மீது குழந்தையை உட்காரச்செய்து (அல்லது பிறந்த மூன்று நான்கு மாதங்களேயாவதால் படுக்கவைத்து) அதன் நெற்றியிலும், தலையிலும் சந்தனம், மலர்கள் கொண்டு அர்ச்சித்து, '**மிருதஸஞ்ஜீவினி**' மந்த்ரத்தை ஜபித்து, குழந்தைக்கு ரக்ஷை செய்து, பலவகை பக்ஷணங்களையும், பழங்களையும் அக்குழந்தையின் ஆரோக்யம், நீண்ட ஆயுள், செல்வவளம் இவற்றைக் கருதி, அங்கு குழுமியுள்ளோருக்கு, முக்யமாகக் குழந்தைகளுக்கு

வினியோகம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் அக்குழந்தையின் ஆரோக்யமும், செல்வ வளமும் வளர்ச்சியுறும். இதனைக் குழந்தை பிறந்த நான்காவது ஸாவனமாதத்தில் செய்ய இயலாவிட்டால் அன்னப்ராசனம் செய்யும் சமயத்தில் அதற்கெனக் குறிக்கப்பட்ட நன்னாளில் செய்யலாம்.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

## நான்காம் அத்யாயம்

இதற்குமேல் குழந்தைகளுக்குக் காது குத்துதல் எனும் சுபகார்யம் பற்றிக் கூறுகிறேன். குழந்தை பிறந்த 12வது, 16வது நாளிலோ; 6, 7, 8 அல்லது 10வது மாதத்திலோ குழந்தைகளுக்குக் காது குத்தும் வைபவத்தைச் செய்யவேண்டும். நக்ஷத்ர ஸந்தியில் செய்யலாகாது.

பின்வரும் நக்ஷத்ரங்கள் சிறந்தவை :- மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, திருவோணம், அவிட்டம், ரேவதி ஆகியவை.

த்விதியை, த்ருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி இவை உத்தமம். மற்றவை விலக்கத்தக்கவை.

சூரியன், செவ்வாய், சனி இவர்களின் வாரம், அம்சங்களில் கர்ணவேதனம் செய்யலாகாது.

குரு, சுக்ரன், புதன், சந்திரன் இவர்களின் வாரங்களும், அம்சங்களும் உத்தமம்.

ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுஸ், மீனம் ஆகிய லக்னங்கள் உயர்ந்தவை. மகரமும், மேஷமும் - இவ்விரண்டும் மத்யமம். சிம்மம், விருச்சிகம், கும்ப லக்னங்கள் கர்ணவேதனத்திற்கு உகந்தவையல்ல.

இரு நக்ஷத்திரங்கள் பகலில் கூடுமாகில் அதேபோல இரண்டு திதிகள் ஒரு பகலில் சேருமானால் அந்த நாட்கள் விலக்கத்தக்கவை. இந்தக் கூடாத நாட்களில் காது குத்தினால் காது அறுபடும்.

முற்பகலில் காது குத்துவது உத்தமம். நண்பகல் மிகவும் நல்லது. பிற்பகலிலும், இரவிலும் இரு சந்தியாகாலங்களிலும் செய்யலாகாது.

கர்ணவேதன லக்னத்திற்கு 8ஆமிடம் சுத்தமாக இருத்தல் வேண்டும். ஆறு, எட்டில் சுக்ரனும், 8ல் புதனும் இருக்கக் கூடாது. வெள்ளைப்பாலுடன் சேர்ந்த செப்பூசியால் காது குத்தவேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்ட காலங்களில் கர்ணவேதனம் செய்யப்படவேண்டும். விதிக்கப்படாத காலங்களில் கர்ணவேதனம் செய்யப்பட்டால் காது அறுபடலாம் அல்லது குத்தியதால் ஏற்பட்ட புண் ஆறாமல் போகலாம். எனவே விதிக்கப்பட்ட காலத்தில் செய்ய வேண்டும்.

## அன்னப்பிராசனம்

### *(உணவு ஊட்டுதல்)*

குழந்தையின் உடல் வளர்ச்சிக்குக் காரணமான முதல் உணவு ஊட்டுதல் பற்றிக் கூறுகிறேன்.

ஸௌரமான ரீதியில் குழந்தை பிறந்த ஆறாவது மாதத்திலோ , அது சௌகரியப்படவில்லையாகில் 8வது, 10வது, 12வது மாதத்தில் முதல் உணவு ஊட்டலாம். இது ஆண் குழந்தை பற்றியது. பெண் குழந்தையாகில் 7, 9, 11 ஆகிய ஒற்றைப்படை மாதத்தில் செய்யலாம்.

அச்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி இவை உத்தமம்.

திருவாதிரை, கேட்டை, கார்த்திகை, ஆயில்யம், பூசம், பூராடம், பூரட்டாதி இவையுள்ள நாட்கள் கூடாதவை. சோகம், மோஹம், பயமளிப்வை என்பதால் அன்னப்ராசனத்திற்குக் கூடாதவை.

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்தசி இவைகள் விலக்கத்தக்கவை.

குரு, புதன், சுக்ரன், சந்திரன் இவர்களின் வார நாட்களும், அம்சங்களும் நல்லவை. செவ்வாய், சூரியன், சனி இவர்களின் வாரங்களும், அம்சங்களும் கூடாதவை.

ரிஷபம், கும்பம், துலாம், கன்னி, ஸிம்மம், கடகம், மகரம், மிதுனம், தனுஸ் லக்னங்கள் உத்தமம்.

குழந்தையின் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 2, 4, 6, 8, 9 ஆகிய நக்ஷத்திரங்கள் உகந்தவை. ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 10, 19 நக்ஷத்திரங்களிலும் செய்யலாம். ஜன்ம நக்ஷத்திரம் மரணப்ராயமானது என்பதால் விலக்கத்தக்கது.

அன்னப்ராதனத்திற்குக் குறிப்பிடப்பட்ட லக்னத்திற்கு 8-ல் செவ்வாயும், 7-ல் சுக்ரனும், 9-ல் புதனும் இருத்தல் கூடாது. 6-ல் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது.

உறவினர்களிடையில் சண்டை ஏற்படக் காரணமாகும் என்பதால் 6-ல் கிரஹம் ஏதும் இருப்பது நல்லதல்ல. (கூடாது.)

அன்னப்ராசனம் என்னும் சடங்கிற்குக் குறிப்பிட்ட மாதமே முக்யம் என்பதால் சுக்ராஸ்தமனாதி தோஷம் இல்லை. (பார்க்கவேண்டாம்.)

# முதலாம் ஆண்டு நிறைவு

ஸௌரமான (சித்திரை, வைகாசி என்று மாதங்களைக் கணக்கிடும் ஆண்டு ஸௌரம் எனப்படும்) முறையில் குழந்தை பிறந்து ஒரு வருடம் நிறைவுற்றதும் ஜன்ம நக்ஷத்திரம் கூடும் நாளில் குழந்தையை நதியில் ஸ்நானம் செய்வித்து நல்லநேரத்தில் வசதிக்குத் தக்கவாறு இடையில் தங்கத்தாலான அரைஞாண் கட்டி, புதுப்பட்டாடை அணிவிக்கவேண்டும். குழந்தையின் நீண்ட ஆயுள், ஆரோக்யம், ஸகல ஸம்பத்துக்களின் அபிவிருத்தி இவற்றைக் கருதி ஒவ்வொரு (ஸௌர) ஆண்டின் முடிவிலும் ஜன்ம நக்ஷத்திர தினத்தில் செய்யவேண்டிய விதிமுறைகளைக் கூறுகிறேன். இதனைச் செய்வதானால் குழந்தைக்கு ஆயுள், செல்வம், உடல் பலம், தேஜஸ், ஸௌக்யம் யாவும் வளர்ச்சியுறும்.

ஜன்ம நக்ஷத்திரம் கூடும் தினத்திற்கு முதல் நாள் இரவு ரக்ஷாபந்தனம் செய்து "உதகசாந்தி", "மந்த்ர ஜபம்" எனும் சடங்கையும் செய்து, மறுநாள் காலையில் அப்புனித நீரால் குழந்தையை முழுக்காட்டவேண்டும்.

பிறகு நவக்ரஹ சாந்தி செய்து முடித்த பின்னர் நக்ஷத்ர தேவதையைப் பூஜித்து ஆயுஷ்ய ஹோமம் செய்து, (குல-இஷ்ட) தேவதைகளை ஆராதிக்கவேண்டும். அப்பால் சந்தனம், மலர்கள், புத்தாடைகள், தாம்பூலம் கொடுத்து அந்தணர்களை மகிழ்விக்கவேண்டும். ஆயுஷ்யஹோமம் அப்தபூர்த்தி விழாவில் எது செய்யப்பட்டாலும் ஒன்றுக்கு பத்து மடங்கு அதிக பலன் ஏற்படும். எனவே, மந்திரம், திரவியம் முதலானவற்றில் குறைபாடு ஏதும் ஏற்பட இடம்தரலாகாது.

நான்காம் அத்யாயம் முற்றிற்று.

## ஐந்தாம் அத்யாயம்

# (சௌளம் - முதல் முடி இறக்குவது)

## (Tonsure Ceremony)

குழந்தையின் ஆயுள் விருத்தியைக் கருதி "சௌளம்" பற்றிக் கூறுகிறேன். முடி இறக்குவது ஆயுளை விருத்தி செய்யும் என அறிஞர்கள் கூறுவர்.

பிறந்தது முதற்கொண்டோ, கர்பத்திலிருந்தோ 3 அல்லது 5 அல்லது 7-வது ஆண்டில் சௌளம் செய்யப்படவேண்டும். பிறந்ததிலிருந்து மூன்றாம் ஆண்டில் இதனைச் செய்வது உத்தமம் என அறிஞர்கள் கூறுகிறார்கள். ஐந்தாவது, ஏழாவது ஆண்டில் செய்வது அத்தனை சிறப்பில்லை. 3வது, 5வது ஆண்டில் செய்வதாகில் முக்கால் பகுதி சென்ற பிறகு செய்யலாம். சௌள கர்மாவை உத்தராயணத்தில் செய்வதுதான் சிறப்புடையதாகும். தக்ஷிணாயணத்தில் செய்யலாகாது. (விலக்கவேண்டும்.)

தை மாதத்தில் எல்லா சம்பத்துக்களும் பெருகும். மாசியில் ஸந்தான விருத்தியும், பங்குனி மாதத்தில் சௌக்யமும், சித்திரையில் சகல செல்வ வளர்ச்சியும், வைகாசியில் வெற்றியும், ஆனியில் வம்ச விருத்தியும் அமையும்.

குரு, சுக்ரன் முதலான சுபகிரஹங்கள் அஸ்தமனம் ஆகாமலும், பாப கிரஹங்கள் பலமில்லாதிருக்கும் போதும் சௌளம் நடத்தப்படவேண்டும். சுக்லபக்ஷத்தில் சௌளத்தைச் செய்தால் ஆயுள் விருத்தியாகும். கிருஷ்ணபக்ஷத்தில் செய்தால் ஆயுள், தனம் இவற்றைக் குறைக்கும்.

கிருஷ்ணபக்ஷத்தில் ஷஷ்டிக்கு (ஆறாவது நாளுக்கு) முன் உள்ள திதிகள் நன்மை தருபவை. சிலர் (கிருஷ்ணபக்ஷம்) அஷ்டமிவரை (அஷ்டமி சேராது) (The first seven days of the dark fortnight) சுபம் எனக் கூறுகிறார்கள். சித்திரை, அவிட்டம்,

ஹஸ்தம், அச்வதி, ரேவதி, புனர்பூசம், திருவோணம், மிருகசீர்ஷம், பூசம் இந்த நக்ஷத்திரங்கள் சௌள கர்மாவிற்கு உகந்தவை.

ஸ்வாதி, சதயம், ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவைகள் மத்யமம்.

மற்ற பன்னிரண்டு நக்ஷத்திரங்களும், (பரணி,, கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூரட்டாதி) அதமம். (கூடாதவை.)

அச்வினியில் சௌளம் செய்ய (Tonsure) சந்தோஷம் ஏற்படும்.

பரணியில் சௌளம் செய்ய மரணம் ஏற்படும்.

கார்த்திகையில் சௌளம் செய்ய க்ஷயரோகம் ஏற்படும்.

ரோகிணியில் சௌளம் செய்ய ரோக நாசம் ஏற்படும்.

மிருகசீர்ஷத்தில் சௌளம் செய்ய ஸௌபாக்யம் ஏற்படும்.

திருவாதிரையில் சௌளம் செய்ய மனக்லேசம் ஏற்படும்.

புனர்பூசத்தில் சௌளம் செய்ய பராக்ரம விருத்தி ஏற்படும்.

பூச நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய செல்வம் வளர்ச்சி ஏற்படும்.

ஆயில்யத்தில் நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய தேஹபீடை ஏற்படும்.

மகத்தில் நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய பொருள் நாசம் ஏற்படும்.

பூர நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய வியாதி ஏற்படும்.

உத்திர நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய ரோகநாசம் ஏற்படும்.

ஹஸ்த நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய உடல் காந்தி வளர்ச்சி ஏற்படும்.

சித்திரை நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய ஸௌக்ய விருத்தி ஏற்படும்.

ஸ்வாதி நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய துக்க நாசம் ஏற்படும்.

விசாக நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய தன (செல்வ) நாசம் ஏற்படும்.

அனுஷ நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய தனநாசம் ஏற்படும்.

கேட்டை நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய பூமி நாசம் ஏற்படும்.

மூல நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய குலநாசம் ஏற்படும்.

பூராட நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய குலநாசம் ஏற்படும்.

உத்திரா நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய ஸௌக்யம் ஏற்படும்.

திருவோண நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய உடல் சுகம் ஏற்படும்.

அவிட்ட நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய ஆயுள் விருத்தி ஏற்படும்.

சதய நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய பலம் ஏற்படும்.

பூரட்டாதி நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய மரணம் ஏற்படும்.

உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய சுகம் ஏற்படும்.

ரேவதி நக்ஷத்திரத்தில் சௌளம் செய்ய சுகவிருத்தி ஏற்படும்.

அனுஷ நக்ஷத்திரம், குழந்தைக்கு முதலாவதாகச் செய்யப்படும் வபன (க்ஷௌர) விஷயத்தில்தான் விலக்கப்பட்டது. மற்றபடி அடுத்தடுத்து செய்யப்படும் வபன காரியங்கள் விஷயத்தில் அல்ல, ஏற்கத்தக்கதே. வெள்ளி, வியாழன், புதன், திங்கட்கிழமை சௌளத்திற்கு ஏற்ற நாட்களாகும்.

ஞாயிறு, சனி, செவ்வாய்கிழமைகள் விலக்கத்தக்கவை. திங்கட்கிழமையும் சுக்லபக்ஷத்தில்தான் உகந்தது. கிருஷ்ண பக்ஷமாகில் உகந்ததல்ல. புதன் பாபிகளுடன் சேர்ந்திருப்பின் புதன்கிழமையும் விலக்கத்தக்கதே. ஞாயிற்றுக்கிழமையில் ஸௌக்யமும், திங்கட்கிழமையில் தேஜஸ் விருத்தியும், செவ்வாயில் ஆயுட்குறைவும், புதன்கிழமையில் ராஜ சம்மானமும், வியாழக்கிழமையில் வெற்றியும், வெள்ளிக் கிழமையில் எல்லோராலும் கொண்டாடப்படுதலையும் அடைகிறான். சனிக்கிழமையில் சரீர நாசம் ஏற்படும். சௌள விஷயத்தில் இவ்வாறு கிழமைகளுக்கான பலன்களாகும்.

க்ஷௌர கர்மா விஷயத்தில் த்விதீயை, திருதீயை, பஞ்சமி, ஸப்தமி, நவமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய இந்த திதிகள் உயர்ந்தவை. ஷஷ்டி, அஷ்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்தசி, பிரதமை, பௌர்ணமி, அமாவாஸை ஆகிய திதிகள் விலக்கத்தக்கவை. கடகம், கன்னி, துலாம், மீனம், மிதுனம், ரிஷபம், மகரம் ஆகிய லக்னங்கள் சுபமானவை. மேஷம், விருச்சிகம், ஸிம்மம், தனுஸ் ஆகிய லக்னங்கள் கூடாதவை. சிம்ம-விருச்சிக லக்னங்களில் செய்தால் வியாதி, சோகம் ஏற்படும். மேஷ லக்னத்தில் மிகுந்த துக்கத்தை அளிக்கும். தனுஸ் ராஜ பயத்தைத் தரும். கும்ப லக்னத்தில் செய்தால் குலவிநாசம் ஏற்படும்.

சுபகிரஹங்கள் இருந்தாலும், பார்த்தாலும் இந்த மேலே கூறப்பட்ட அசுப லக்னங்கள்கூட உகந்தவையே. ஆனால் சுபர் இருந்தாலும் சரி, சுபர் பார்வை பெற்றாலும் சரி கும்பம் சுபமல்ல. விவசாயம், யாத்திரை, க்ஷௌரம், விவாஹம், அன்னப்ராசனம், புத்தாடை அணிதல், வாஹனத்தில் ஏறுதல் இவைகளை ஜன்ம ராசியில் செய்யலாம்.

சௌள லக்னத்திற்கு 7ஆமிடத்தில் சூரியனும், செவ்வாயும் இருக்கக் குழந்தைக்கு மரணம். அதில் சனி இருக்க பாக்ய நாசம். 7ல் ராகு-கேதுக்கள் இருப்பின் காரியக்கேடு. மற்றவர்கள் இருப்பின் தனவிருத்தி. எட்டாமிடத்தில் சுக்ரன் தவிர வேறு கிரஹங்கள் இருத்தல் கூடாது. எட்டில் சுக்ரன் இருக்கும் காலத்தில் க்ஷௌரகர்மா நடத்தப்பட்டால் ஸகல ஸம்பத்துக்களையும் அளிக்கிறான்.

இரவில் க்ஷௌரம் செய்துகொள்ளக்கூடாது. அதுபற்றி ஒருவார்த்தையும் பேசலாகாது. அது தொடர்பான பேச்சையும் பேசலாகாது. அப்படி அதுபற்றிக் குறிப்பிடவேண்டிய அவசியம் நேரிட்டால் ஆயுஷ்கர்மா என்று குறிப்பிடலாம்.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 2, 4, 6, 8, 9 ஆகிய நக்ஷத்திர தினங்களில் வபனம் செய்துகொள்ள நல்லது. 3, 5, 7, 22வது நக்ஷத்திர தினங்களில் செய்துகொள்ளலாகாது. தவிர, ஜன்ம நக்ஷத்திரம், அனுஜன்ம நக்ஷத்திரம், த்ரிஜன்ம நக்ஷத்திர நாட்களில் விலக்குதல் வேண்டும். சந்திராஷ்டம தினங்களிலும் கூட விலக்கத்தக்கதே.

முதல் பர்யாதத்தில் 3, 5, 7-ஆம் நக்ஷத்திரங்கள் முற்றிலுமாக விலக்கத்தக்கதாகச் சொல்லாப்பட்டுவிட்டதால் "**ஆத்யாம்ஸோ விபதி**" எனும் ச்லோகம் அனுஜன்மம் பற்றியதாகும். இரண்டாவது பர்யாயத்தில், மூன்றாம் நக்ஷத்திரமானால் முதலா**வது** பாதமும்; 5-வது நக்ஷத்திரமானால் 4வது பாதமும்; 7-வது நக்ஷத்திரமானால், 3-வது பாதமும் விலக்கத்தக்கது. பிற அம்சங்கள் சுபமே.

வைநாசிகம் என்பது 22-வது நக்ஷத்திரமாகிறது. அதிலும்கூட 88-வது பாதம் தவிர, பிற அம்சங்கள் (பாதங்கள்) சுபமே.

நிர்பந்தமாக அசுபதினத்தில் (நக்ஷத்திரத்தில்) க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டால் மறுபடியும் காலம் தாழ்த்தாமல் சுப நக்ஷத்திர தினத்தில் க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டும். ஏதேனும் காரணங்களால் கேசம் தீயில் பொசுங்கிவிட்டிருந்தால் அவ்விஷயத்தில், பஞ்சகவ்யம், தேன் இவற்றைத் தடவி சுத்தம் செய்து பின்னர் க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டும்.

வபன லக்னம் மீனம், மேஷம், ரிஷபமாகி அதில் சுக்ரன் அல்லது புதன் இருந்து, 11ஆமிடத்தில் சூரியன் இருந்தால் வபனத்திற்கு இது உத்தம யோகமாகும்.

மிதுனம், கடகம், சிம்மம் இவைகளில் ஏதேனும் ஒன்று லக்னமாகி, அதில் சுக்ரனோ, புதனோ இருந்து 11ஆமிடத்தில் சூரியன் இருந்தால் இதுவும் வபனத்திற்கு உரிய சுபயோகமே.

லக்னம் 11, 12-ஆமிடங்களில் சுக்ரன், புதன் இருந்து, சந்திரன் சுபனின் அமசத்திலும் இருந்தால் இதுவும் க்ஷௌர கர்மாவிற்கு உகந்த யோகமாகும்.

3, 6, 11-ஆமிடங்களில் பாபிகளும், கேந்திர-த்ரிகோணங் களில் ஒன்று, இரண்டு, மூன்று சுபகிரஹங்களும் இருப்பின் சௌள (Tonsure Ceremony) கர்மாவிற்குச் சிறந்த யோகமாகும்.

ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று.

## ஆறாவது அத்யாயம்

# அக்ஷர ஆரம்பம்

பிறந்த குழந்தைக்கு முதன் முதல் எழுத்தறிவு புகட்டுவதற்கு சுபமானதொரு நாள் தேர்வு செய்யப்பட வேண்டும். அதுபற்றிக் கூறுகிறேன்.

குழந்தை பிறந்து ஐந்தாவது வயது வந்தவுடன், உத்தராயணத்தில் எழுத்தறிவு புகட்டும் அக்ஷராரம்பம் எனும் சடங்கு செய்யப்படவேண்டும். ஆனால் மாசி மாதம் விலக்கப்படவேண்டும்.

உபநயனத்திற்கு முன்பாக அக்ஷராப்யாசம் ஆரம்பிக்கப் படவேண்டும். குழந்தை மேற்கு முகமாக இருந்து குருவிடமிருந்து கல்வியைப் பெறவேண்டும்.

சுக்லபக்ஷம் (வளர்பிறை) அக்ஷராரம்பத்திற்கு உயர்வானது. தேய்பிறையானால் அதனை மூன்று பங்காக வகுத்து அதில் முதல் பகுதியில் அக்ஷராரம்பம் செய்வதும் உத்தமம். மற்ற பகுதிகள் கூடாது.

சதுர்தசீ, ப்ரதமை, சதுர்த்தீ, ஷஷ்டீ, அஷ்டமீ, நவமீ, பௌர்ணமீ, அமாவாசை இவை விலக்கத்தக்கவை. மற்ற திதிகள் அக்ஷராரம்பத்திற்குச் சுபம்.

அச்வினி, திருவாதிரை, புனர்வஸு, ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், திருவோணம், ரேவதி ஆகிய நக்ஷத்திரங்கள் உத்தமம். பிற நக்ஷத்திரங்கள் விலக்கத்தக்கவை.

வியாழன், புதன், வெள்ளி ஆகிய கிழமைகள் உத்தமம். ஞாயிறு, திங்கள் ஆகிய இரு கிழமைகள் மத்யமம். விலக்கத் தக்கதல்ல. ஆனால் செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும் அக்ஷராரம்பத்திற்கு விலக்கத்தக்கவை.

ஒரு சில வித்வான்கள் ஞாயிற்றுக்கிழமையையும் விலக்குகிறார்கள்.

ராசிகளில் மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் ஆகிய உபய ராசிகளில் (லக்னங்களில்) அக்ஷராரம்பம் செய்வது உத்தமம். மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர ராசிகளில் (லக்னங்களில்) செய்வது மத்யமம். ரிஷபம், ஸிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய ஸ்திர ராசிகளில் (லக்னங்களில்) **செய்வதை எவ்வாற்றானும் விலக்கவேண்டும்.**

முற்பகலில் கல்வி ஆரம்பம் செய்வது உயர்வானது, நண்பகலில் மிகவும் உத்தமம். பிற்பகலிலும், இரவிலும், இரு சந்தியாகாலங்களிலும் வித்யாரம்பம் கூடாது.

வித்யாப்யாஸம் செய்யத் தேர்வு செய்யும் வக்னத்திற்கு 8ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. புத்தி ஸ்தானம் எனப்படும், ஐந்தாமிடத்தில் புதன், குரு, சுக்ரன் இருப்பது மிகவும் உயர்வாகும். (நான்காமிடமும், கல்வியறிவு பற்றியதே. எனவே 4ஆமிடத்தில் வித்யாகாரகனான புதனும், ஞான காரகனான குருவும், கலையறிவுக்குக் காரகனான சுக்ரனும் இருப்பதுவும் சிலாக்யமே. இதில் மதபேதம் உண்டு. ஆத்மகாரகனான சூரியனும், வித்யாகாரகனான புதனும் சேர்ந்து இருப்பின் ஜாதகன் சிறந்த கல்விமான் ஆகலாம் என்பதும் தற்கால வித்வான்களின் கருத்தாகும் இது. அனுபவத்திலும் உண்மையெனக் காணமுடிகிறது.

சகுனி, விஷ்டி முதலான கரணங்கள் விலக்கத்தக்கவை.

நித்ய சுபயோகங்களில் வித்யாப்யாஸம் செய்வது சுபத்தை அளிக்கும்.

ஆறாவது அத்யாயம் முற்றிற்று.

## ஏழாவது அத்யாயம்

# உபநயனம்

இனி உபநயனம் பற்றிக் கூறுகிறேன். அந்தணர்களுக்கு ஐந்தாவது வயதில் இதைச் செய்யவேண்டும். அதற்கு வசதிப் படாவிடில் கர்பம் முதல் அல்லது பிறந்தது முதல் எட்டாவது வயதில் செய்யவேண்டும். ஐந்தாவது வயதில் செய்தால் அறிவு வளர்ச்சி பெறலாம். ஆறாவது வயதில் செய்தால் ஞானிகளின் நிலையை - நித்ய - நிரதிசய ஸத்-சித்-ஆனந்த வடிவான பரமாத்மானுபூதியை ஏற்படுத்தும் உன்னத ப்ரம்ம தத்வத்தை அடையலாம் என சுக்ராசாரியார் கூறுகிறார். ஒருவன் ப்ரம்மதேஜஸ்ஸுடன் விளங்க விரும்பினால் ஆசார்யனால் ஐந்தாவது வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டவனாய் நல்ல சிஷ்யனாயும், நல்ல புத்திமானாயும் குணவானாயும், திறமைசாலியாகவும் ஆகலாம்.

(உபநயனம் - முக்யமாக - வேதங்களைப் பயிலுவதற்கான தகுதியை அளிக்கக்கூடிய சடங்காகும். உபநயனத்தில் வேதத்ரய ஸாரமாகவும் "வேதமாதா" என்றும் வழங்கப்படும் "காயத்ரீ" மஹாமந்த்ர உபதேசம். அதற்குரிய பல [illegible]குப்பின் நடைபெறவேண்டும். இவ்வுபதேசமின்றி குருநாதர் சமீபம் சென்று வேதாப்யாஸம் செய்ய இயலாது. இவ்வுபதேசம் பெற்ற நிலையில் மாணவன், ப்ரம்மசாரி எனப்படுகிறான்.)

க்ஷத்ரியர்களுக்கு 11வது வயதிலும், வைசியர்களுக்கு 12வது வயதிலும் உபநயனம் செய்வித்தல் அவசியம். அந்தணர்களுக்கு 16 வயது வரையிலும், க்ஷத்ரியர்களுக்கு 20வது வயது வரையிலும், வைசியர்களுக்கு 24 வயது வரையிலும் கௌண காலம் ஆகும்.

அந்தணருக்கு வஸந்த ருதுவில் (சித்திரை - வைகாசி) உபநயனமும், க்ஷத்திரியர்களுக்கு கிரீஷ்ம ருதுவில் (ஆனி -

ஆடி), வைச்யர்களுக்கு சரத்காலத்திலும் (ஐப்பசி - கார்த்திகை) உபநயனம் செய்வித்தாகவேண்டும் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

("ப்ரம்மசர்யம்" என்பது வேதம் ஓதும் தகுதிபெற்ற நிலையில் ஒரு மாணவன் விதிவிலக்கில்லாமல் நித்யமாகக் கட்டாயமாகக் கடைபிடித்தாக வேண்டிய பல விதிமுறை களைக் கடைபிடிக்கும் பருவம் என்பதேயாகும். இந்த ப்ரம்மசர்ய ஆசிரம நிலையில் கடைபிடிக்க வேண்டிய கட்டாய விதிகள் பற்றி தர்மசாஸ்திரங்களும், ஸ்மிருதி நூல்களும் கூறும். அவற்றைப் பின்பற்றினால் சிறந்த மேதாவியாக விளங்கமுடியும் என்பதுடன் அவனிடம் அபூர்வமான ஒரு தேஜஸ் - வர்ச்சஸ் எனப்படும் ஒளி காணப்படும். இதுபற்றி மேலும் விரிவாக அறிய ஸ்மிருதி நூல்களையும் தர்ம சாஸ்திர நூல்களையும் படிக்கவேண்டியது அவசியம்.)

சந்திரலக்னம் என்பது உடலாகவும், ஜன்ம லக்னம் என்பது ஜீவனாகவும் கருதப்படும். எனவே, இவ்விரண்டிற்கும் அனுகூல நிலையில் குரு இருப்பின் உபநயனம் செய்விக்க வேண்டும். உபநயன லக்னத்திற்கும், சந்திர லக்னத்திற்கும் இரண்டு, ஒன்பது, ஐந்து, பதினொன்று, ஏழு ஆகிய இடங்களில் குரு இருந்தால் சுபத்தை அளிப்பார். உபநயன லக்னம் - சந்திர அல்லது ஜன்ம லக்னத்திலோ அல்லது இவற்றிற்கு 3, 4, 6, 8, 12 ஆகிய இடங்களிலோ, குரு இருந்தால் நோய், மரணம், பயம், துக்கம், விபத்து ஆகியவற்றைத் தருவார்.

தனுஸ், மீனம், கடகம் இவை அசுபஸ்தானமாக நேரிடினும் (அசுப கிரஹபார்வை ஏற்படினும்கூட) அவற்றில் குரு இருந்தால் அது உயர்வானதாகும். உபநயனம், திருமணம் முதலானவற்றில் குரு சுபத்தையே அளிப்பார்.

உபநயனத்திற்கான காலம் வேதங்களில் கட்டளை விதியெனக் கூறப்பட்டிருக்கிறது என்பதால் குரு சுபராசியில் இல்லாமல் அனுகூலமற்ற ராசியில் இருந்தாலும்கூட [illegible]ணப்

பொருட்படுத்தாது ஜாதகனுக்கு உபநயன காலம் வந்ததும், அந்தச் சடங்கினை எக்காரணம் கொண்டும் நிறுத்தாமல் நடத்திவிட வேண்டும். குருவின் சதிபற்றி ஸ்மிருதிகளில்தான் கூறப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளைக் காட்டிலும் "ச்ருதிகள்" எனப்படும் வேதங்கள் மேலும் சக்திவாய்ந்த ப்ரமாணம் (Authoritative)ஆகும். உபநயனமோ, கர்பாஷ்டமத்தில் (கர்பம் உறுதிபட்டதிலிருந்து எட்டாவது ஆண்டில்) செய்தாக வேண்டும். எனவே, நிலையில்லாத கதியுள்ள குரு (variable movements) துஸ்தானத்தில் இருப்பின் அவருக்குரிய சாந்தி கர்மாவைச் செய்துவிட்டு உபநயனத்தைச் செய்துவிட வேண்டும்.

('முஞ்ஞி' என்பது ஒருவகை [தர்பைப்புல் போன்ற] புல் வகையாகும். உபநயன காலத்தில் ப்ரம்மோபதேசம் என்னும் காயத்ரீ மந்த்ர உபதேசம் எவ்வளவு முக்யமோ அவ்வளவு முக்யமாக முஞ்சிப்புல்லாலான மெல்லிய கயிற்றினை மாணவனுக்கு அணிவித்தல் வேண்டும். திருமண காலம்வரை அவன் அதனை அணிந்தாக வேண்டுவது அவசியமாகும். எனவேதான் உபநயனம் என்பதற்குப் பதில் "மௌஞ்ஜீ பந்தனம்" என்ற சொல் உபயோகிக்கப்பட்டது.)

மாதத்தை முக்யமாகக் கருதிச் செய்யவேண்டிய ஸீமந்தம் முதலான கார்யங்களுக்கு எப்படி மாதம் பலம் வாய்ந்ததோ அப்படியே வருஷத்தை முக்யமாகக் கொண்டு செய்யப்பட வேண்டிய கர்மாக்களுக்கு வருஷமே முக்யமாகும்.

உபநயனம் கர்பாஷ்டமத்தில் செய்யப்படவேண்டியதாக வருஷத்தை முக்யமானதென்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட உபநயனத்தை உரிய காலத்தில் செய்தாகவேண்டும்.

உபநயனத்தை உத்தராயணத்தில்தான் செய்தாக வேண்டும். தக்ஷிணாயணத்தில் செய்தல் கூடாது.

வளர்பிறையான சுக்லபக்ஷத்தில் செய்வது உத்தமம். தேய்பிறையானாலும் மூன்றாக வகுத்துப் பிரித்து முதல் ஐந்து நாட்கள் சுபமானவையாகும்.

குருவும் - சுக்ரனும் சூரியனில் அஸ்தமனம் பெறாத காலத்தில் உபநயனம் செய்யப்படவேண்டும். அவர்களின் அஸ்தமன காலத்தில் கூடாது.

ரிக் வேதத்திற்குக் குருவும், யஜுர் வேதத்திற்குச் சுக்ரனும், ஸாம வேதத்திற்குச் செவ்வாயும், அதர்வண வேதத்திற்கு புதனும் அதிபதிகளாவார். அந்தந்த வேதத்திற்கு அதிபதி பலமுடன் விளங்கும்பொழுது உபநயனம் செய்விக்கப்பட வேண்டும்.

உபநயனம் செய்வதற்கு உகந்த உத்தம நக்ஷத்திரங்கள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரோஹிணி, ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், சித்திரை, மிருகசீர்ஷம், சதயம், புனர்பூசம், திருவோணம், பூசம், அவிட்டம், அச்வினி, ரேவதி ஆகியவை.

சிலர் திருவோணம், அவிட்டம், சதயம் இம்மூன்றும் மத்யமம் என்று கூறுகிறார்கள்.

சிவாசார்யர்கள் ருத்ர தேவதாரூபமான திருவாதிரையிலும், வைஷ்ணவாலய அர்ச்சகர்கள் திருவோணத்திலும் உபநயனம் செய்யலாம்.

சுக்லபக்ஷத்தில் (வளர்பிறையில்) துவிதீயை, பஞ்சமீ, ஷஷ்டீ, ஸப்தமீ, தசமீ, திரயோதசீ ஆகிய திதிகள் உத்தமமானவை.

ஏகாதசியும், துவாதசியும் மத்யமமானவை. சந்திர பலம் மிகுந்திருப்பின் மேலே கூறப்பட்ட இரு திதிகளும் நல்லவையே.

கிருஷ்ணபக்ஷத்தில் (தேய்பிறையில்) துவிதீயை, திருதீயை, உயர்வானவை. (இங்கு **ப்ரதமா மதா** என்பதற்கு உத்தமம் எனக்கருதப்படும் என்று பொருள் கொள்வதே சரியாகும். கிருஷ்ணபக்ஷப் பிரதமையும் உபநயனத்திற்கு உகந்தது எனப் பொருள்கொள்வதும் சிலருடைய கருத்தாக இருக்கிறது.) தேய்பிறையில் திரயோதசியும் உபநயனத்திற்கு உகந்ததென்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். அமாவாஸ்யை, பௌர்ணமீ, சதுர்த்தீ, அஷ்டமீ, நவமீ, சதுர்தசீ இவைகள் தவிர **மற்ற அத்யயனத்திற்கு உரிய நாட்களில் அந்தணர்** முதலானோருக்கு உபநயனம் செய்யலாம்.

உபநயனம் செய்யவேண்டிய மாணவன் வயது அதிகமாக இருந்தால் சதுர்தசியும்கூட நல்லதே.

வியாழன் - புதன் - வெள்ளிக்கிழமைகள் உபநயனத்திற்கு உத்தம நாட்களாகும்.

திங்கட்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் மத்யமம். செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும், தேய்பிறையாகில் திங்கட்கிழமையும் விலக்கத்தக்கவை.

நித்ய யோகங்களான சுபயோகங்களும் நல்லவையே. ரிஷபம், சிம்மம், கடகம், கன்யா, மிதுனம், மீனம், துலாம், தனுஸ் ஆகிய லக்னங்கள் உத்தமம்.

மேஷ லக்னத்தில் உபநயனம் செய்யின் - மாணவன் சிறந்த பேச்சாளனாவான்.

ரிஷப லக்னத்தில் உபநயனம் செய்யின் - செல்வந்தனாகவும், கல்விமானாயும் ஆவான்.

மிதுன லக்னத்தில் உபநயனம் செய்வித்தால் - வேதாத்யாயி ஆவான்.

கடக லக்னத்தில் உபநயனம் செய்வித்தால் - ஆறு அங்கங்களையும் அறிந்தவனாவான்.

(சிக்ஷா, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் இவை வேதங்களுக்கான ஆறு அங்கங்களாகும்.)

ஸிம்மத்தில் சிற்பியாவான். கன்னியில் பண்டிதனாவான். துலாத்தில் வியாபாரத் தொழில் உள்ளவன். விருச்சிகத்தில் துஷ்டர்களுக்குத் தலைவன். தனுஸ்ஸில் பலவும் அறிந்தவன் ஆவான். மகரத்தில் விவசாய விருத்தி. கும்பத்தில் அரசாங்க ஊழியன். மீனத்தில் சகல சாஸ்திரம் அறிந்தவன். நற்பயன் தராத லக்னத்திலும்கூட உபநயனம் செய்யலாம். ஆனால் அந்த லக்னம் சுபகிரஹத்தால் பார்க்கப்பட்டதாகவும், சம்பந்தப்பட தாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறிருப்பின் சுபமான பலன் ஏற்படும்.

ஜன்ம லக்னம், சந்திர லக்னம், சூரியன் இருக்கும் ராசி நாதன் இவர்கள் ஒருவருக்கொருவர் மைத்ரம் (Friendship) உள்ளவர்களானாலோ, ஏகாதிபத்யம் பெற்றாலோ, உச்சத்தை அடைந்தாலோ நன்மை தருவர். சத்ரு வீட்டை அடைந்தாலோ, நீசத்வம் பெற்றாலோ அசுபத்தைத் தருவர்.

உபநயன லக்னத்தில் சூரியன் இருந்தால் -
அரசாங்கத் தொல்லைகள்.

உபநயன லக்னத்தில் சந்திரன் இருந்தால் -
நோயின் உபத்ரவம் அதிகம்.

உபநயன லக்னத்தில் செவ்வாய் இருந்தால் -
ஆயுத பீடை ஏற்படும்.

உபநயன லக்னத்தில் புதன் இருந்தால் -
பலவும் கற்ற மேதாவி.

உபநயன லக்னத்தில் குரு இருந்தால் -
செல்வன்.

உபநயன லக்னத்தில் சுக்ரன் இருந்தால் -
பலவும் அறிந்தவன்.

உபநயன லக்னத்தில் சனி இருந்தால் -
திருடனாவான்.

உபநயன லக்னத்தில் ராகு இருந்தால் -
அங்கக்குறைவு.

உபநயன லக்னத்தில் கேது இருந்தால் -
தோலில் குறைபாடு ஏற்படும்.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் சூரியன் இருந்தால் -
ஒரு கண் குருடாகும்.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் -
அமைதியுள்ளவன்.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் -
செவிடன்.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் புதன் இருந்தால் -
மறதியுள்ளவன்

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் குரு இருந்தால் -
புகழ், கீர்த்தி.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் -
பாபி.

உபநயன லக்னத்திற்கு 2ஆமிடத்தில் சனி இருந்தால் -
வியாதி.

உபநயன லக்னத்திற்கு 3ஆமிடத்தில் சுபர் - பாபியாயிருப்பினும் சுபமே.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் சூரியன் இருந்தால் -
இடையூறுகள்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் -
மென்மையான குணம்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் - நோய்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் புதன் இருந்தால் - நுண்ணறிவாற்றல்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் குரு இருந்தால் - யாகாதிகள் செய்பவன்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் - சோகம்.

உபநயன லக்னத்திற்கு 4ஆமிடத்தில் சனி இருந்தால் - குஷ்டரோகி.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் சூர்யன் இருந்தால் - இடையூறில்லாமை.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் - கல்வியில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் - சாஸ்திரங்களில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் புதன் இருந்தால் - மந்த்ரஜபத்தில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் குரு இருந்தால் - கல்விமான்.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் - மறதியுள்ளவன்.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் சனி இருந்தால் - குஷ்டரோகி.

உபநயன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் ராகு இருந்தால் - அபஸ்மார ரோகம் அளிப்பர்.

உபநயன லக்னத்திற்கு 6ஆமிடத்தில் சூரியன், செவ்வாய், சனி, முதலான அசுபகிரஹமிருந்தால் நன்மையும், குரு, சுக்ரன் முதலான சுபகிரஹங்கள் இருந்தால் அசுபம் ஏற்படும்.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் சூரியன் இருந்தால் - மனக்கலக்கம்.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் - கல்வியில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் - சாஸ்திரங்களில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் புதன் இருந்தால் - மந்த்ர ஜபங்களில் பற்று.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் குரு இருந்தால் - கல்விமான்.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் - மறதியுள்ளவன்.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் சனி இருந்தால் - குஷ்டரோகி.

உபநயன லக்னத்திற்கு 7ஆமிடத்தில் ராகு இருந்தால் - அபஸ்மார ரோகம் அளிப்பர்.

உபநயன லக்னத்திற்கு 8ஆமிடத்தில் எந்த கிரஹம் இருப்பதையும் வித்வான்கள் விரும்பவில்லை. உபநயன லக்னத்திற்கு எட்டாமிடம் சுத்திவேண்டும். 8-ல் சுபர்களின் ப்ரம்மோபதேசம் செய்த ஆசார்யனையும் அசுபர்களிருப்பின் சிஷ்யனையும் கொல்வர்.

உபநயன லக்னத்திற்கு 9-ல் உள்ள சூரியன் கெட்ட நடத்தையையும், சந்திரன் கலைகளில் ஈடுபாட்டையும், செவ்வாய் குஷ்டரோகத்தையும், புதன் புத்தி, சக்தியையும், குரு

யாகாதிகளில் சம்பந்தத்தையும், சுக்ரன் யோகசாஸ்திர அறிவையும், சனி கலகத்தையும், ராகு பிற பெண்களின் பற்றையும் அளிப்பர்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் சூரியன் இருந்தால் - வைத்தியன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் - வேதமறிந்தவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் - தற்பெருமை பேசுபவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் புதன் இருந்தால் - வேதமறிந்தவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் குரு இருந்தால் - தர்க்கம் முதலான சாஸ்திர அறிவுள்ளவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் - சங்கீதமறிந்தவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் சனி இருந்தால் - பாபச்செயல் புரிபவன்.

உபநயன லக்னத்திற்கு 10ஆமிடத்தில் ராகு இருந்தால் - பாபி ஆவான்.

உபநயன லக்னத்திற்கு 11-ல் உள்ள சுப / அசுபர்கள் நன்மையே தருவர்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் சூரியன் இருந்தால் - செல்வத்தை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் - மரணத்தை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் - பயத்தை அளிப்பர்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் புதன் இருந்தால் - ஞானத்தை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் குரு இருந்தால் - சுகத்தை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் சுக்ரன் இருந்தால் - கீர்த்தியை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் சனி இருந்தால் - தீய வழியில் செல்லும் குணத்தை அளிப்பார்.

உபநயன லக்னத்திற்கு 12ஆமிடத்தில் ராகு இருந்தால் - வேறு ஜாதி சம்பந்தத்தை அளிப்பார்.

ஒரு கிரஹம் அசுபஸ்தானத்திலிருப்பினும் கூட சுபகிரஹ பார்வை ஏற்பட்டாலும், சுப வர்கத்தில் இருந்தாலும் தீமை செய்கிறதில்லை.

மாசி (மாக) மாதத்தில் உபநயனம் செய்வித்தால் அந்த மாணவன் குலதர்மங்கள் அறிந்தவனாவான். (பால்குண) பங்குனி மாதத்தில் உபநயனம் செய்தால் சாஸ்திரங்கள் அறிந்தவனாகவும், தனவானாகவும் ஆவான்.

சைத்ர மாதத்தில் வேத வேதாந்தங்களை அறிந்தவனாக ஆவான். வைசாகத்தில் உபநயனம் செய்தால் தனவானாகவும் வேதங்கள் சாஸ்திரங்கள் மற்றும் பல வித்யைகளிலும் வல்லவனாக இருப்பான்.

ஜ்யேஷ்ட மாஸத்தில் உபநயனம் செய்தால் குலத்தில் உயர்ந்தவனாகவும் தர்மசாஸ்திர விதிமுறைகள் அறிபவர்களில் சிறந்தவனாகவும் இருப்பான்.

அந்தணர்களில் அனைவருமே மூன்று வேதங்களில் ஏதேனும் ஒரு பிரிவினை (ஒரு சாகையை)ப் பின்பற்றுபவ ராகத்தான் இருப்பர். ருக்வேதச் சாகைக்கு அதிபதி குரு, யஜுர்வேத சாகைக்கு அதிபதி சுக்ரன், சாம வேத சாகைக்கு அதிபதி செவ்வாய். உபநயன காலத்தில் யார் யார் எந்தப் பிரிவில் 'எந்தச் சாகை'யைச் சேர்ந்தவர்களோ அவர்களின் அந்தந்த சாகாதிபதி உச்சம் பெற்றிருக்கும் நிலையிலோ, உச்ச அம்சத்திலோ, சொந்த வீட்டிலோ (own sign) தன் ராசி அம்சத்திலோ இருப்பின் வேத-வேதாங்கங்களை அறிந்தவனாவான்.

சாகாதிபன் குரு - சுக்ரன் பரம உச்சத்தில் இருந்தால் அந்த உபநயனம் செய்விக்கப்பட்டவன் விரதானுஷ்டானம் உள்ளவனாயும், செல்வந்தனாயும், வேதவேதாங்கத்தில் கரைகண்டவனாகவும் ஆவான்.

சாகாதிபனோ, குரு அல்லது சுக்ரனோ, மித்ர ராசியிலோ, மித்ர ராசியின் அம்சத்திலோ இருந்தால், அந்த மாணவன் விரத - ஆசார, அனுஷ்டானத்துடன் கூடியவனாயும், எல்லா வித்யைகளிலும் தேர்ச்சி பெற்றவனாயும் இருப்பான்.

சாகாதிபதியின் (நாள்) கிழமையும், அவருடைய பலமும் (உச்ச, ஸ்வக்ஷேத்ர, மித்ர-க்ஷேத்ர ஸம்பந்தம் முதலான பலமும்) சாகாதிபதியின் லக்னமும் இம்மாதிரி சுப விரதானுஷ்டானத்தில் கிட்டுவது மிகவும் அரிது.

சந்திரன் சுப அம்சத்தில் இருந்தால் உபநீதனான மாணவன் ஸகல வித்யைகளிலும் தேர்ச்சி பெற்றவனாயும் இருப்பான். அப்படிக்கின்றி சந்திரன் பாபிகளின் அம்சகத்திலிருப்பின் மிகுந்த ஏழையாயும், எப்போதும் துயரவயப்பட்டவனாயும் இருப்பான்.

திருவோணம் அல்லது புனர்பூசம் அல்லது கடகாம்சத்தில் சந்திரன் இருந்தால் வேதம் - சாஸ்திரம் அறிந்தவனாயும், தனதான்யங்கள் மிகுந்தவனாயும் இருப்பான்.

சந்திரனின் உச்சராசி உபநயன லக்னமாக இருந்து, அதில் சந்திரன் இருந்தால் அது அந்த மாணவகனை க்ஷயரோகம் உள்ளவனாக்கும், கெடுக்கும்.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 10-வது நக்ஷத்திரம் "கர்ம" என்றும், 16-வது நக்ஷத்திரம் "ஸங்காதம்" என்றும், 18-வது நக்ஷத்திரம் "ஸாமுதாய்யம்" என்றும், 23-வது நக்ஷத்திரம் "விநாசனம்" என்றும், 25-வது நக்ஷத்திரம் மானஸம் எனறும் சொல்லப்படுகின்றன. இந்த மேலே கூறப்பட்ட நக்ஷத்திரங்களில் உபநயனம் முதலான சுபகாரியங்களைச் செய்தல் கூடாது.

சூரியன் கேந்திரத்தில் இருந்தால் அதற்கு "ஸ்பூர்ஜிதம்" என்று பெயர். இப்படி சூரியன் கேந்திரத்தில் இருப்பதை அனுசரித்த லக்னத்தில் உபநயனம் செய்தால் வம்சம் அழியக்கூடும்.

செவ்வாய் கேந்திரத்தில் இருந்தால் அதற்கு "ஸ்புடிதம்" என்று பெயர். இதில் உபநயனம் செய்யின் சிஷ்யன், ஆசார்யன் (மந்த்ர உபதேசம் பெற்றவன் சிஷ்யன் மாணவகன் என்பார்கள். உபநயனம் செய்துவைத்து மந்த்ரோபதேசம் செய்தவர் ஆசார்யன்) இருவருக்கும் தீமை.

சனி கேந்திரத்தில் இருந்தால், "ருதிதம்" என்று பெயர். இதில் உபநயனம் செய்ய பெரிய அளவிலான நோயை அளிக்கும்.

ராகு கேந்திரத்தில் இருந்தால் "ரந்த்ரம்" எனப்படும். அதில் உபநயனம் செய்தால் தாயாருக்குத் தீமை.

கேது கேந்திரத்தில் இருந்தால் அதற்கு "உக்ரம்" என்று பெயர். அதில் உபநயனம் செய்யின் கல்வி, செல்வம் அழிவுறும். இப்படிப்பட்ட ஐந்து தோஷங்கள் இல்லாத லக்னத்தில் உபநயனம் செய்வது நல்லது.

சூரியன் முதலானோரின் அம்சத்தில் செவ்வாய் இருக்கும்போது உபநயனம் செய்வித்தால் முறையே மந்தனாயும், பாபச் செய்கைகளில் பற்றுள்ளவனாயும், சமர்த்தனாயும், யாகம் செய்தவனாகவும், யாகம் செய்கிறவனாயும், மூர்க்கனாயும் ஆவான்.

உபநயன லக்னத்தில், சந்திரனைச் செவ்வாய் பார்க்கின் ஸாவித்ரீ மந்தர ஸ்வீகாரம் செய்துகொண்ட சிஷ்யன் குருடனாவான். சந்திரனைச்சுபகிரஹங்கள் பார்த்தால் சுபம்.

12-ல் இருக்கும் சூரியனைப் பலம்வாய்ந்த செவ்வாய் பார்த்தால் ஸாவித்ரீயை உபதேசம் செய்த ஆசார்யன் சீக்ரத்தில் குருடனாவான். செவ்வாய் பலமற்றிருந்தால் கொஞ்சநாள் கழித்து (தாமதமாகக்) குருடனாவான்.

உபநயன லக்னத்திற்கு 12-ல் இருக்கும் சூரியனைச் சனி பார்த்தால் சிஷ்யனின் வித்யாநாசம் ஏற்படும். சந்திரன், சூரியனின் அம்சத்தில் இருந்தால் ஆயுதங்களால் பீடை உண்டாகும். சந்திரன் தன் சொந்த அம்சத்திலேயே இருந்தால் ஜாதியைவிட்டு விலக்கப்படலாம்.

செவ்வாயின் அம்சத்தில் சந்திரன் இருந்தால் பாபங்களைச் செய்யும்படியான சூழல் (சூழ்நிலை) ஏற்படும். (பாபியாவான்.)

புதனின் அம்சத்தில் சந்திரன் இருந்தால் ஸகல வித்யைகளையும் அளிப்பார்.

குருவின் அம்சத்தில் சந்திரன் இருப்பின் சகல ஸௌக்யங்களும் வித்யைகளும் ஏற்படும்.

சந்திரன், சுக்ரனின் அம்சத்தில் இருந்தால் ஸகலவித்யைகளும் உள்ளவனாக ஆவான்.

சனியின் அம்சத்தில் சந்திரன் இருக்க நாசம் ஏற்படும்.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 7, 5-வது நக்ஷத்திரத்திலும், சந்திராஷ்டமத்திலும்; 27, 22-வது நக்ஷத்திரத்திலும் உபநயனம் விலக்கத்தக்கது.

ருது முடிவிலும், மாத முடிவிலும், திதி முடிவிலும், தியாஜ்யத்திலும், நக்ஷத்திர முடிவிலும், விஷ்டியிலும், ஷடசீதிமுகம், வியாகாதம், வஜ்ரம், விஷ்கம்பம், பரிகம், வைதிருதி, வியதீபாதம், சூலம், கண்டம், அதிகண்டம் இந்த யோகங்களிலும், சூன்ய நக்ஷத்திர ராசியிலும், பிற்பகலிலும், ராத்ரியிலும், இரண்டு (காலை-மாலை) சந்தியா காலங்களிலும், குருட்டு நக்ஷத்ரம், அதிமாஸம் இவைகளிலும் உபநயனம் செய்விக்லாகாது. இவற்றை ஆராயாமல் செய்தால் செல்வம், ஆயுள், வித்யை இவை நாசமாகும்.

உபநயன லக்னத்திற்குப் பன்னிரண்டில் சூரியன் இருந்து, செவ்வாய் பார்த்தாலும், சந்திரன் சுபக்ரியையோடு இருந்தாலும் ஸாவித்ரீ உபதேசம் செய்த ஆசார்யர் குருடாகமாட்டார். லக்னாதிபதி அல்லது ஒன்பதுக்கு உடையவன் இரண்டு கண்களுள்ள நக்ஷத்திரத்தில் இருந்தாலும், செவ்வாயும், சூரியனும் அவ்வாறு இருகண்களுள்ள நக்ஷத்திரத்தில் இருந்தாலும் ஆசார்யனுக்குத் தோஷம் ஏற்படாது. சந்திரனுக்கு 7, 6, 8-களில் ஏதேனும் ஒன்றில் சுபகிரஹம் இருந்தால் அது அதியோகம் ஆகும். இந்த யோகம் சுபத்தைத் தரும்.

குரு பகவான் கேந்திர - த்ரிகோணங்களில் இருந்து, 12-ல் சூரியன் அல்லது சுக்ரன் இருந்து இரண்டாமிடத்தில் புதனும் இருந்தால் அதுவும் சுபயோகமே என்பதால் அம்மாதிரி லக்னத்தில் உபநயனம் செய்யலாம்.

இதேபோல் புதன் 10-ஆமிடத்திலும், சூரியன் 11-ஆமிடத்திலும், சுக்ரன் லக்னத்திலும் பலமுள்ளவர்களாக இருந்து, சந்திரனும் சுபாம்சத்தில் இருந்தால் அது உபநயன விஷயத்தில் சுபயோகமாம். மீனம் உபநயன லக்னமாக இருந்து, அதில் குருவோ, சுக்ரனோ இருந்து, 11-ஆமிடத்தில் சூரியனும், 12-லோ, 10-லோ புதனும் இருந்தால் அதுவும் உபநயன விஷயத்தில் சுபயோகமாகும். மிதுனம் உபநயன லக்னமாகி செவ்வாய் மேஷத்திலும், சுக்ரன் ரிஷபத்திலும், சந்திரன் கடகத்திலும் இருப்பின் இதுவும் உபநயன விஷயத்தில் சுபயோகமாகும்.

ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

### எட்டாவது அத்யாயம்

## வித்யாரம்பம்

இதற்குமேல் "வித்யாரம்பம்" என்ற உயர்வான விஷயம் பற்றிக் கூறப்போகிறேன்.

ருக்-யஜுஸ்-சாம-அதர்வா எனும் நான்கு வேதங்களும், சிக்ஷா வியாகரணம், ச்சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்ப்பம் எனும் வேதங்களின் ஆறு அங்கங்களும் மீமாம்ஸை-நியாயம் (வைசேஷிகம்), புராணம், இதிகாஸம் ஆக இந்தப் பதினான்கும் வித்யைகள் எனப்படும்.

ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் இவைகள் உபவித்யைகள் எனப்படும்.

திருவோணம், புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம், ஸ்வாதி, சதயம், அனுஷம், திருவாதிரை, ஹஸ்தம், சித்திரை நக்ஷத்திரங்கள் வித்யாரம்பத்திற்கு உகந்தவையாகும்.

அச்வினி, ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை மத்யமமான நக்ஷத்திரங்களாகும். சிலர் அச்வினி நக்ஷத்திரம் உத்தமம் என்று சொல்கிறார்கள்.

கூறப்பட்ட நக்ஷத்திரங்கள் தவிர மற்ற நக்ஷத்திரங்கள் விலக்கத்தக்கவை.

அவிட்டம், ரேவதி, மிருகசீர்ஷம், ரோகிணி, பூசம், அனுஷம், புனர்பூசம், ஹஸ்தம் இவைகள் (இந்த நக்ஷத்திரங்கள்) சப்த சாஸ்திரம் எனப்படும் வியாகரண சாஸ்திரம் ஆரம்பம் செய்ய உத்தமம்.

புனர்பூசம், திருவோணம், ஸ்வாதி, பூசம், ஹஸ்தம், அச்வினி, சதயம், உத்தரம், உத்தராடம் இந்த நக்ஷத்திரங்கள் அர்த்தசாஸ்திரம் ஆரம்பம் செய்ய உத்தமமாம்.

ஜ்யோதிஷம் முதலான அங்க சாஸ்திர வித்யைகள் ஆரம்பிக்க ஸ்வாதி, ஹஸ்தம், புனர்பூசம், ரேவதி, பூசம், அச்வினி, மூலம், சதயம் ஆகிய இந்த நக்ஷத்திரங்கள் உயர்வானவை.

வேத வித்யைகளை ஆரம்பம் செய்யவும் எல்லா சாஸ்திரங்களையும் அப்யஸிக்கவும் அவிட்டம், பூசம், திருவோணம் இவை உத்தமம். ஆயுர்வேதம், தனுர்வேதம் கற்க அவிட்டம் உத்தமம்.

தசமி, திருதீயை, ஏகாதசி, *பிரதமை (?) பஞ்சமீ, ஷஷ்டி இவைகள் வித்யாரம்பத்திற்கு உகந்த திதிகள். அஷ்டமீ பர்வகாலமான - பௌர்ணமி, அமாவாஸ்யை, சதுர்த்தி, நவமீ, சதுர்தசி இவைகள் விலக்கத்தக்கவை. மற்ற திதிகள் வித்யாப்யாஸ விஷயத்தில் மத்யமம் எனப்படும்.

வித்யாரம்ப விஷயத்தில் சூரியனின் அம்சமும், வாரமுமான ஞாயிற்றுக்கிழமையும், செவ்வாயின் அம்சமும், கிழமையும் கட்டாயம் விலக்கப்படவேண்டியவை.

வித்யாரம்ப விஷயத்தில் ஞாயிறு முதலான கிழமைகள் மனிதர்களுக்கு முறையே ஆயுஸ், மந்தத்தன்மை, மரணம், மேதாவிலாஸம், நுண்ணறிவு, வெற்றி, மந்தத்தன்மை இவற்றைத் தரும். (ஞாயிறு - ஆயுஸ்விருத்தி, திங்கள் - மந்தத் தன்மை, செவ்வாய - நாசம், புதன் - மேதாவிலாஸம், வியாழன்- நுண்ணறிவு, வெள்ளி - வெற்றி, சனி - மந்தநிலை தரும்.) ஞாயிற்றுக்கிழமையில் வித்யாரம்பம் செய்தால் இடையூறு ஏற்படும் எனச் சிலர் கூறுகிறார்கள்.

உபயராசிகள் உத்தமம். சரராசிகள் மத்யமம், வித்யாரம்ப விஷயத்தில் ஸ்திரராசிகள் விலக்கத்தக்கவை.

புதன்கிழமை முற்பகலில் வித்யாரம்பம் உயர்வானது. திங்கட்கிழமை பிற்பகலில் (மாலையில்) வித்யாப்யாஸத்தை முடிக்கவேண்டும்.

---

* ***ப்ரதிபத்பாடசீலஸ்ய வித்யேவ தநுதாம் கதா*** என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸீதை பற்றிக் கூறும் ஹனுமான் ஸ்ரீராமனிடம் "பிரதமையில் படித்தவனின் வித்யைப்போல் ஸீதை இளைத்திருக்கிறாள்" என்று கூறும்முகமாக "பிரதிபத்" (பிரதமை) படிப்பிற்கு ஏற்றதல்ல என்று தெரிவிக்கிறார். ஆகையால் "பிரதிபத்" கல்வி ஆரம்பத்திற்கு உகந்ததல்ல என்பது பிரசித்தமான ஒன்று. இங்கு பிரதிபத் வித்யாரம்பத்திற்கு நல்லது என்று கூறியதற்கு "சுக்லபக்ஷ பிரதமை" என்று பொருள் கொள்ளலாம்.

வித்யாரம்ப லக்னத்திற்கு எட்டாமிடம் சுத்தி அவசியம். எட்டாமிடத்தில் கிரஹங்கள் எதுவும் இருத்தல் கூடாது. சில வித்வான்கள் 4ஆமிடம் சுத்திவேண்டும். 4ஆமிடத்தில் கிரஹங்கள் இருக்கக்கூடாது எனக் கூறுகின்றனர்.

3, 6, 11-ஆமியங்களில் பாப கிரஹங்கள் இருப்பின் ஸௌக்ய விருத்தியைத் தருவார்கள்.

சுபஸ்தானங்களில் - பாப கிரஹங்கள் இருப்பின் வித்யாப்யாஸ விஷயத்தில் இடையூறுகளைச் செய்வர். இது நிச்சயம்.

முற்பகலிலாவது, நண்பகலிலாவது வித்யாரம்பம் செய்வது உத்தமம். பிற்பகலிலும், இரவிலும் வித்யாரம்பம் செய்வதை விலக்கவேண்டும்.

வேதாதி வித்யாரம்ப விஷயத்தில் "ஸாரஸ்வத யோகம்" மிகவும் உயர்வானது என மஹான்கள் கருதுகிறார்கள். ஆகையால் "ஸாரஸ்வத யோகம்" பற்றி நன்றாகக் கூறுகிறோம்.

## ஸாரஸ்வத யோகம்

1. புதன்கிழமை ஹஸ்தம் நக்ஷத்திரம் கூடிய நாளில் சூரியன், சந்திரன், புதன் இவர்கள் புதனின் அம்சங்களான மிதுனம் அல்லது கன்னியில் இருந்து புதனுடைய ஸ்வக்ஷேத்ரமான மிதுன - கன்னி இரண்டில் ஒன்று வித்யாரம்ப லக்னமாகவும் இருந்தால் அது ஸாரஸ்வத யோகமாம்.

2. ஸூர்யன் கன்னியா ராசியிலிருக்கும் ஸமயம் (புரட்டாசி மாதத்தில்) புதன்கிழமையில் புதன் பரமோச்சத்தில் இருந்தால் ஸாரஸ்வத யோகமாம்.

---

*வித்யாரம்ப விஷயத்தில் வித்யாகாரகனான புதன் 4ஆமிடத்தில் இருப்பது உத்தமம். ***காரகோ பாவநாசாய*** என்கிற ந்யாயம் வித்யை விஷயத்திலும், செல்வம்/தனம் விஷயத்திலும் இல்லையென்பது மஹான்களின் அபிப்ராயமே.

3. சூரியன், சந்திரன், புதன் இவர்கள் மூவரும் உச்சமாக இருந்து (இந்த மாதிரி யோகம் அமையாது) அவர்களின் க்ஷேத்ரம் லக்னமாகி அதில் சுபகிரஹங்களும் இருந்தால் அது ஸாரஸ்வதயோகமாகும். இப்படி லக்னம் அமைவதில்லை.

4. புதன்கிழமை - புதனுடைய க்ஷேத்ரமானது லக்னமாக இருக்க, ஹஸ்த நக்ஷத்திரம் 3வது பாதமும் சேருமானால் அதுவும் ஸாரஸ்வதயோகமாகும்.

5. திங்கள், ஞாயிறு, புதன்கிழமைகளில் ஏதேனும் ஒரு நாளில் ஹஸ்த நக்ஷத்திரம் கூடியிருந்து முறையே (வார நாதர்களான சந்திரன், புதன், சூரியன், புதன் இவர்கள் புதனை அதிபனாகக் கொண்ட லக்னத்திலாவது, அம்சத்திலாவது இருந்தால் அதுவும் ஒருவகை ஸாரஸ்வதயோகமாகும்.

6. சூரியன் மேஷத்தில் பரம உச்சத்திலும், புதன் ரிஷபத்திலும், சுக்ரன் மீனத்திலுமோ அல்லது புதனும், சுக்ரனும் வர்கோத்தமம் பெற்றோ இருந்தால் இதுவும் ஒருவகை ஸாரஸ்வதயோகமாகும்.

7. திரயோதசி திதியில் மிதுன லக்னத்தில் புதன் உத்தரம் 1ம் பாதத்திலோ, 4ம் பாதத்திலோ (குருவின் அம்சத்தில்) இருந்து புதன், சூரியன், சுக்ரன் இவர்கள் கேந்திரங்களில் இருந்தால் இதுவும் ஒருவகை ஸாரஸ்வதயோகமாகும்.

8. புதன்கிழமை - புதன் லக்னத்தில் உச்சமாக இருக்கிற நிலையில், சூரியன் கன்னியின் 3ஆவது திரேக்காணத்திலும் இருப்பின் இதுவும் ஒருவகை ஸாரஸ்வதயோகமாகும்.

---

* சூரியன் உச்சமாக இருக்கும்போது, புதன் கன்னியில் உச்சம் பெறுவது இயலாது

# வித்யாயோகம்

1. குரு கடகத்தின் 5வது பாகத்தில் (டிகிரியில்) இருந்து, வியாழக்கிழமையில் - குரு ஹோரையும் சேர்ந்திருப்பின் இது மிகச்சிறந்த வித்யாயோகமாகும்.

2. வெள்ளிக்கிழமை மீன லக்னத்தில் 27வது பாகத்தில் (டிகிரியில்) சுக்ரன் இருக்க இதுவும் ஒருவகை வித்யாயோகமாகும்.

3. இதுவரை சொல்லப்படாத (குரு-சுக்ரன் இவர்களைத் தவிர்த்த) மற்ற கிரஹங்கள் தமது அதிஉச்ச பாகங்களில் இருந்து தத்தம்முடைய வார நாட்களில் தத்தமது ஹோரையில் - லக்னத்தில் இருப்பின் அதுவும் ஒருவகை வித்யாயோகமாகும்.

4. வாரம், நக்ஷத்ரம், யோகம் இவை சுபமாக இருக்கும்போது வாராதிபனுடையவும், நக்ஷத்திராதிபனுடையவும், லக்னாதிபதியினுடையவும், சூர்யனுடையவும், ஹோரா காலம் வித்யாயோகமாம்.

5. புதன் பரம உச்சத்தில் இருக்க - செவ்வாய், சனி இரு நாட்கள் தவிர - மற்ற வார நாட்களில் - இதுவும் ஒரு ஸாரஸ்வத(வித்யா)யோகம். புதன் பரம உச்சத்தில் இல்லாமல் லக்னத்தில் இருந்தாலும் வித்யாயோகமே.

6. சனி - செவ்வாய் தவிர பிற நாட்களில் குரு பரம உச்சத்திலோ, ஸ்க்ஷேத்திரத்திலோ - லக்னத்திலோ இருந்தால் அதுவும் (வித்யா) ஸாரஸ்வதயோகமாகும்.

இவ்விதம் ஸாரஸ்வதயோகங்களை நன்கு பரிசீலனை செய்து வித்யாரம்பம் செய்யவேண்டும். இந்த பிரகரணத்தில் சொல்லப்படாத நாட்களில் வித்யாரம்பம் செய்தால் ஜாதகன் மூடனாவது நிச்சயம்.

*வித்யாரம்பம் முற்றிற்று.*

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

## ஒன்பதாவது அத்யாயம்

# உபாகர்மா

ஸந்தர்பானுஸாரமாக "உபாகர்மா" பற்றிக் கூறப்படுகிறது. பொதுவிதியாக, யஜுர் வேதத்தினர் - சிராவண பௌர்ணமியிலும், ருக்வேதத்தினர் - சிராண மாதத்தில், சிரவண நக்ஷத்திரத்திலும், ஸாமவேத்தினர் - சூரியன் ஸிம்ஹராசியில் இருக்க, ஹஸ்த நக்ஷத்ரம் கூடிய பஞ்சமீ திதியிலும் உபாகர்மம் செய்யவேண்டும், ஸூர்ய - சந்த்ராதி க்ரஹணதோஷம். ஸங்கிரமண (மாதப்பிறப்பு) தோஷம் இல்லாதிருக்கவேண்டும். ஆவணி மாதத்தில்தான் உபாகர்மம் செய்யவேண்டும் என்ற நியதி இல்லை. சூரியன் சிம்மத்தில் இல்லாவிட்டாலும்கூட, சிராவண பௌர்ணமியிலும், ப்ரோஷ்டபத (பாத்ரபத) பௌர்ணமியிலும் உபாகர்மம் செய்யலாம்.

### *முதல் உபாகர்மம் விஷயம் :*

சூர்ய-சந்திர கிரஹணங்கள் சம்பவிக்கும் சமயத்தில் உபாகர்மம் பொதுவாக விலக்கப்பட்டது. நாட்டில் அரசன் மரணமடைந்தபொழுதும், நாடு பகைவர் கூட்டத்தினர் பிடிக்கப்பட்ட பொழுதும், பூமியில் விதைக்கப்பட்ட விதைகள் முளைக்காதிருக்கும் சமயத்திலும், குரு - சுக்ர - செவ்வாய் மௌட்யம் - பந்துஜன மரணத்தினால் ஏற்படும் பலநாள் தீட்டு, மாதப்பிறப்பு (ஸங்கிரமண தோஷம்), அதிமாஸம், மலமாஸம் இவைகளில் முதல் உபாகர்மா செய்தல் கூடாது. செய்தால் நாசம் உண்டாகும்.

சிராவண - பாத்ர பௌர்ணமியில் எதில் தோஷம் அதிகமுள்ளதோ அதில் உபாகர்மம் செய்யலாகாது.

ஆஷாட, சிராவண, பாத்ரபத மூன்று பௌர்ணமிகளிலும் தோஷமிருந்தால் சிராவண பௌர்ணமியிலேயே செய்யவேண்டும்.

நர்மதா நதத்திற்குத் தெற்கில் உள்ளவர்கள், சூரியன் கடகத்தில் இருக்கும்போதும், நர்மதை நதத்திற்கு வடக்கில் உள்ளவர்கள், சூரியன் சிம்மத்தில் இருக்கும்போதும் உபாகர்மம் செய்யவேண்டும். மாஸப்பிறப்பும், கிரஹணமும் நள்ளிரவுக்கு முன்னதாக நேரிடுமானால் உபாகர்மா செய்யக்கூடாது. நள்ளிரவிற்குப் பிறகு அவை நேரிட்டால் தோஷமில்லை. உபாகர்மா செய்யலாம்.

உபாகர்மம் வேத அத்யயனப் பிரதானமாதலால் நித்ய கர்மாவாகிவிடுகிறது; தவிர்ப்பதற்கில்லை. எனவே, கிரஹண ப்ரயுக்தமாயும், ஸங்கிரமண (மாஸப்பிறப்பு) ப்ரயுக்தமாயும் ஏற்படக்கூடிய தோஷம் சிராவணத்திற்குக் கிடையாது. மாஸத்தில் முக்யமாகச் சொல்லப்பட்ட கார்யங்கள் விஷயத்தில் குரு - சுக்ர மௌட்யம், அதிமாஸம் முதலான தோஷங்கள் இல்லை.

சிராவண பௌர்ணமீ கார்யம் நித்யமானதென ஸூத்ரகாரரான ஆபஸ்தம்பர் விதித்திருப்பதால், ஆஷாட - பாத்ரபத பௌர்ணமிகளை விலக்கிவிட்டு, சிராவண பௌர்ணமியிலேயே செய்யவேண்டும்.

சிராவண பௌர்ணமியில் மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நக்ஷத்திரங்களோடு சேர்ந்திருப்பின் ஒரு வருஷ காலம் செய்த வேத அத்யயனம் மறக்கப்பட்டுவிடும்.

உத்திராட நக்ஷத்திரத்துடன் கூடிய திருவோண நக்ஷத்திரத்திலும் உபாகர்மம் செய்யலாகாது.

பூராட நக்ஷத்திரத்திலும், ரேவதியிலும் உபாகர்மம் செய்யக்கூடாது. செய்தால் ஆசார்ய - சிஷ்யர்கள் யாவருக்கும் நாசமே ஏற்படும்.

வேதத்தை அனுசரித்து "மனு" கூறிய ஸ்மிருதி நூலில், அவர் அத்யயன கர்மாவை முக்கியமானதென விதித்துவிட்டபடியால், பிரதமோபாகர்மாவையும் செய்யலாம் என கௌதமர் கூறுகிறார்.

வேதத்தையும், வித்யைகளையும் அப்யஸித்தவர்களுக்கு ப்ரணவத்தை ஆரம்பித்தல் வேண்டும். பூணூல் புதியதாகவும், புரிகளுடன் கூடியதாகவும் இருக்கவேண்டும். சிராவணத்திற்கு கிரஹணதோஷம் இருப்பின் பிராயஸ்ச்சித்தம் (பரிஹாரம்) செய்யவேண்டும். சந்திர கிரஹணமாக இருந்தால் "ஸோமோ தேனும்" என்னும் "ருக்" கினாலும், "நவோநவோ பவதி" எனும் ருக்கினாலும் ஹோமம் செய்யவேண்டும்.

ஸூர்ய கிரஹணமாக இருந்தால் "சித்ரம் தேவானாம்", "உதுத்யம் ஜாதவேதஸம்", "ஸூர்யோதேவீமுஷஸம்" என்ற ருக்குகளைச் சொல்லி ஹோமம் செய்யவேண்டும். முடிவில் ப்ரணவத்துடன் முடித்தல் வேண்டும். அதன்பிறகு "உத்வயம் தமஸஸ்பரீ", "ஆஸத்யேன", "ஆதேவோ யாது" என்று தொடங்கும் ருக்குகளைச் சொல்லி ஹோமம் செய்யவேண்டும். பிறகு பிராயஸ்ச்சித்த ஹோமங்கள் செய்துவிட்டு, உபாகர்மாவைச் செய்தல்வேண்டும்.

சூர்ய உதயம் முதல் 12 நாழிகைக்குமேல் (ஸங்கவ காலத்திற்கு மேல்) நண்பகலுக்கு முன்பாக பௌர்ணமி - பிரதமை ஸந்தி ஏற்பட்டால் அன்றைக்கே உபாகர்மாவையும், காயத்ரீ ஹோமத்தையும் செய்யவேண்டும். ஸங்கவ காலத்திற்குள் சூர்ய உதயாதி 12 நாழிகைக்குள் (ஸங்கவ காலத்தில்) பௌர்ணமீ - பிரதமை ஸந்தி ஏற்பட்டால் உபாகர்மாவை மட்டும் அன்றைய தினம் செய்யவேண்டும். காயத்ரீ ஹோமத்தை மறுநாள் செய்யவேண்டும். இதுவே உபாகர்ம விதிமுறையாகும். ஸௌரமான / சாந்திரமான ஆவணியில் பௌர்ணமி திதி; உத்தராடம், திருவோணம்,

அவிட்டம் ஆகியவற்றுள் ஒரு நக்ஷத்திரத்துடன் வந்தாலும் அல்லது ஸெளரமான - சாந்திரமான புரட்டாசி மாதத்தில் பௌர்ணமி: சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி நக்ஷத்திரங்களில் ஒன்றுடன் கூடிவந்தாலும் யஜுர்வேதத்தைச் சார்ந்தவர்களுக்கு உபாகர்மாவை அனுஷ்டிப்பதற்கு மிகவும் உத்தம காலமாகும்.

சிரவண பௌர்ணமீ கிரஹண ஸங்க்ராந்தி தோஷங்களால் தூஷிக்கப்பட்டிருந்தாலும், வேத அத்யயனம் முக்கியம் என்பதால் சிராவண கர்மாவை விரைந்து செய்துவிடவேண்டும்.

சிராவணத்தி (உபாகர்மாவி)ற்கு கிரஹண ஸங்கிரமண தோஷங்கள் கிடையாது. குரு அஸ்தமனம் அடைந்திருந்தாலும், சுக்ரன் அஸ்தமித்திருந்தாலும் உபாகர்மாவைச் செய்யவேண்டும். உபாகர்மா விஷயத்தில் குரு - சுக்ரர் இருவருடைய மௌட்ய தோஷத்தை ஒதுக்கிவிடலாம். பொருட்படுத்தவேண்டியதில்லை.

குரு மறையாது பிரகாசமுடன் பலமுடன் இருந்தாலும்; ஸ்வக்ஷேத்ரம் - உச்ச க்ஷேத்ரம் - மித்ர க்ஷேத்ரம் இந்த அம்சங்களில் இருக்கும்பொழுதும், சுக்ரன் அஸ்தமித்திருந்தாலும் சிராவண கர்மாவை விடாமல் அவசியம் செய்யவேண்டும்.

குரு - சுக்ரர்கள் அஸ்தமனமானாலும், ஜபஹோம தானங்களாலும், அவரவர்களின் மந்த்ரங்களாலும் ப்ராயஸ்ச்சித்த (பரிஹார) கார்யங்களை அனுஷ்டித்துவிட்டு சிராவணத்தைச் செய்யவேண்டும் என்று குருபகவான் கூறியிருக்கிறார்.

செய்தாக வேண்டியதைச் செய்யாததாலும், செய்யக்கூடாதது என விலக்கப்பட்டதைச் செய்வதாலும் வேதாப்யாஸிகளின் கர்மாக்கள் பயனற்றவையாகின்றன.

ஆயுளும் குறைகிறது. கிரஹண /ஸங்கிரமண/மலமாஸ தோஷங்கள் ராஜ்யத்தில் கலஹம். அதிமாஸம் இவைகளில் உபாகர்மம் செய்வது கூடாது. அதிலும் முதல் "உபாகர்மா" செய்யவே கூடாது.

கிரஹணம் ஏற்பட்டாலும், குரு-சுக்ரர்களின் மௌட்யம் சம்பவித்தாலும் அதனை 'அந்தம்' (குருடு) என நல்லோர்களால் கூறப்படுகிறது. ஸங்கிரமண தோஷம் ஏற்பட்டால் அதற்குச் 'சின்னம்' (பிளவுபட்டது) என்றும் நல்லோர்களால் சொல்லப்படுகிறது.

சந்திர கிரஹணம் விமோசனம் ஆகாமலேயே அஸ்தமனம் ஆகிவிடுகிறது எனில் (பொழுது விடிந்து விடுகிறது) அப்பொழுது எத்தனை அபவாதங்கள்தான் இருப்பினும் அந்த நாளில் உபாகர்மவை செய்யலாகாது.

(ருக் வேதத்தினர் "சிராவணி"யில் சிராவண நக்ஷத்திரத்திலும், யஜுர் வேதத்தினர் "சிராவண பௌர்ணிமி"யிலும், ஸாம வேதத்தினர் ஹஸ்த நக்ஷத்திரத்திலும் உபாகர்மம் செய்யவேண்டும்.) சிராவணி - பௌர்ணமியிலோ, பாத்ரபத பௌர்ணமியிலோ உபாகர்மா செய்துவிட்டு ஐந்தரை மாதங்கள் கிரமமாக ச்சந்தஸ்களை (தத்தமக்குரிய) வேதங்களை அத்யயனம் செய்யவேண்டும். 'ஆஷாடம்' முதலான நான்கு மாஸங்கள் உபாகர்மத்திற்கு ஏற்றவை.

க்ஷத்ரியாதிவர்ணத்தவருக்குக் குரு - சுக்ர மௌட்ட தோஷம் தோஷமாகது. வேதப்ரதானமானவர்களுக்கு அது தோஷமே.

ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

## பத்தாவது அத்யாயம்

# மந்த்ர ஸ்வீகாரம்

இதற்குமேல் இப்பொழுது மந்த்ரங்களை கிரஹித்துக்கொள்வதற்கான காலம் பற்றிக் கூறப்படுகிறது.

சைத்ரமாஸத்தில் மந்த்ர உபதேசம்பெற (ஆரம்பம் செய்ய) பலவித துக்கத்தை அளிக்கும். வைசாகத்தில் மிகுந்த உயர்ந்த பொருள் லாபம், ஜ்யேஷ்ட மாஸத்தில் மரணத்தினை அளிக்கும். ஆஷாட மாதத்தில் பந்து ஜனங்களின் நாசத்தை அளிக்கும்.

சிராவண மாஸத்தில் மேன்மையையும், பாத்ரபத மாஸத்தில் பிரஜா நாஸத்தையும், ஆச்வயுஜ மாஸத்தில் சுகத்தையும், கார்த்திக மாஸத்தில் ஞான வளர்ச்சியையும், மார்கசீர்ஷ மாஸத்தில் சுபத்தையும் அளிக்கும்.

புஷ்ய மாஸத்தில் மந்த்ர உபதேசம்பெற ஞானவிருத்தி ஏற்படும். மாக மாஸத்தில் மேதாவிலாஸ வளர்ச்சியும், பால்குண மாஸத்தில் ஸகல வச்ய ஸித்தியும் ஏற்படும்.

உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ரோகிணி, ரேவதி, பூடம், அவிட்டம், ஸ்வாதி, அனுஷம், மகம், சித்திரை, மூலம், புனர்பூசம், திருவாதிரை, கேட்டை, திருவோணம், ஹஸ்தம் ஆகிய நக்ஷத்திரங்கள் மந்த்ரதீக்ஷை பெறுவதற்கு ஏற்றவை. சுபம் அளிக்கக்கூடியவை.

சதுர்தசி, அஷ்டமீ, அமாவாஸ்யை, செவ்வாய்க்கிழமை விலக்கத்தக்கவை.

மந்த்ர தீக்ஷைக்குச் சரராசிகள் (லக்னங்கள்) உத்தமம், ஸ்திர ராசிகள் அதமம், உபய ராசிகள் மத்யமம்.

உபதேசம் பெறும் லக்னத்திற்கு எட்டாமிடத்தில் ஒரு கிரஹமும் இருக்கக்கூடாது. இருந்தால் விநாசம். மந்த்ர

ஸ்வீகார விஷயத்தில் பித்ருமாஸம் எனப்படும் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள் விலக்கத்தக்கவை. மற்ற மாதங்கள் சுபம் எனச்சிலர் கூறுகிறார்கள். ஜன்ம நக்ஷத்திரம், அனுஜன்ம. த்ரிஜன்ம நக்ஷத்திரம் - ஸங்க்ரமாணம் (மாஸப்பிறப்பு) புதன்கிழமை இவை சுபகரமானவை.

மந்த்ர ஸ்வீகாரம் செய்து கொள்வதற்கு முன்பாக, ஸித்தம், ஸாத்யம் முதலான சோதனைகள் செய்து, தமக்குப் பொருத்தமுள்ள மந்த்ரத்தைத் தேர்ந்தெடுத்த பிறகே ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

## ஸித்தாதி கோஷ்டம்

மேல்கீழாக ஐந்து கோடுகளும் - குறுக்காக ஐந்து கோடுகளும் வரைந்தால் 16 கோஷ்டங்கள் (கட்டங்கள்) அமையும். அந்தக் கட்டங்களில் அகாரம் முதலான 51 எழுத்துக்களை வரிசைப்படி எழுதவேண்டும்.

अकथह चक्रम (सिद्धादिचक्रम)

| | | | |
|---|---|---|---|
| अ क थ ह | उ ङ प | आ ख द ळ | ऊ च फ |
| आ ड व | ऌ झ म | आ ढ श | ॡ ञ य |
| इ घ न | ॠ ज भ | इ ग ध क्ष | ऋ छ ब |
| अः त स | ए ठ ल | अ ण ष | ए ट र |

இதில் மந்த்ர ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறவனின் பெயரின் முதல் எழுத்து முதல், மந்தரத்தின் முதல் எழுத்து வரையில் வலமாக எண்ணவேண்டும். ஒவ்வொரு கட்டத்தையும் ஸித்தம், ஸாத்யம், ஸுஸித்தம், அரி எனக் கணக்கிட வேண்டும். முதல் நான்கு கட்டங்களையும் பின்வருமாறு எண்ணவேண்டும்.

1. (i) ஸித்த ஸித்தம், (ii) ஸித்த சாத்யம், (iii) ஸித்த ஸுஸித்தம், (iv) ஸித்தாரி என்று கணக்கிடவேண்டும்.

2. அடுத்துள்ள நான்கு கட்டங்களை : (i) ஸாத்ய ஸித்தம், (ii) ஸாத்ய ஸாத்யம், (iii) ஸாத்ய ஸுஸித்தம், (iv) ஸாத்யாரி.

3. அடுத்துள்ள நான்கு கட்டங்களையும் : (i) ஸுஸித்த ஸித்தம், (ii) ஸுஸித்த ஸாத்யம், (iii) ஸுஸித்த ஸுஸித்தம், (iv) ஸுஸித்தாரி.

4. கடைசியில் உள்ள நான்கு கட்டங்களையும் : (i) அரிஸித்தம், (ii) அரிஸாத்யம், (iii) அரிஸுஸித்தம், (iv) அர்யரி என்று கணக்கிடவேண்டும்.

ஸித்த ஸித்தமாக வந்தால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபம் செய்தாகவேண்டும் என்ற கட்டாயம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதை ஒட்டி, அக்குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபித்தால் மந்த்ரம் ஸித்தியாகும். ஸித்த ஸாத்யமாக வந்தால் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு இரண்டு பங்கு ஜபித்தால் மந்த்ரஸித்தி ஏற்படும். ஸித்த ஸுஸித்தமாக வந்தால் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாதி அளவு ஜபம் செய்தாலே போதும் மந்த்ரஸித்தி ஏற்படும். ஸித்த ஸுஸித்தமாக வந்தால் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாதி அளவு ஜபம் செய்தாலே மந்த்ரஸித்தி ஏற்படும். ஸித்தாரியாக வந்தால் வம்சம் நாசமாகும்.

ஸித்தாரி கோஷ்டப்படி கிடைத்த மந்த்ரங்களை ஜபித்தால் ஏற்படும் பயன் :

| *பெயரின் முதல் எழுத்து முதல் மந்த்ரத்தின் முதல் எழுத்துள்ள கட்டம்வரை கணக்கிட்டு வந்தது.* | *பலன்* |
|---|---|
| ஸித்த ஸித்தமானால் | குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபிக்கவேண்டும். |
| ஸித்த ஸாத்யமானால் | இரண்டு பங்கு ஜபிக்கவேண்டும். |
| ஸித்த ஸுஸித்தமானால் | பாதியளவு ஜபித்தாலேயே ஸித்தியாகும் |
| ஸித்த அரி | குலநாசம் |
| ஸாத்ய ஸித்தமானால் | இரண்டு பங்கு ஜபிக்கவேண்டும். |
| ஸாத்ய ஸாத்யம் | ஸித்தியாகாது. |
| ஸாத்ய ஸுஸித்தம் | குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபிக்கவேண்டும். |
| ஸாத்ய அரி | உறவினர் நாசம் |
| ஸுஸித்த ஸித்தம் | பாதி எண்ணிக்கை ஜபித்தாலே ஸித்தி. |
| ஸுஸித்த ஸாத்யம் | குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபிக்கவேண்டும். |
| ஸுஸித்த ஸுஸித்தம் | உபதேசமான பிறகு தியானம் செய்தாலே ஸித்தி |
| ஸுஸித்த அரி | பணியாட்கள் நாசம் |
| அரி ஸித்தம் | புத்ர நாசம் |
| அரி ஸாத்யம் | பெண் நாசம் |
| அரி ஸுஸித்தம் | பத்னீ நாசம் |
| அர்யரி | ஆத்ம நாசம் |

ந்ருஸிம்ஹமூர்த்தி மந்த்ரம் - ஸூர்ய மந்த்ரம் - வராஹமூர்த்தி மந்த்ரம் இவைகளுக்கும், ப்ரஸாத மந்த்ரம் பிரணவ மந்த்ரம், கூட்டெழுத்துள்ள மந்த்ரம் இவைகளின் ஸ்வீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் ஸித்தாதி(ரி) கோஷ்டம் பரிசீலிக்கப்பட வேண்டியதில்லை.

இவ்வாறு பாரத்வாஜ குலத்தில் பிறந்த வரதார்ய குமாரரான ந்ருஸிம்ஹஸூரியின் பத்தாவது அத்யாயம் முடிவுற்றது.

### பதினோராவது அத்யாயம்

## வேதாரம்பம்

இதற்குமேல் உயர்வான வேதாரம்பம் சொல்லப் போகிறேன். வேதாரம்பம் செய்வதற்கு திருவோணம், புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம், ஸ்வாதி, சதயம், அனுஷம், திருவாதிரை, ஹஸ்தம், சித்திரை இந்த நக்ஷத்திரங்கள் உயர்வானவை. அச்வினீ, ரோகிணி, ரேவதி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி இந்த நக்ஷத்திரங்கள் மத்யமம். மற்ற நக்ஷத்திரங்கள் வேதாரம்ப விஷயத்தில் விலக்கத் தக்கவை. சிலர் அச்வினி நக்ஷத்திரத்தை உத்தமமாகச் சொல்லுகிறார்கள்.

வேதாரம்பத்திற்குத் திரயோதசியும், ஸப்தமியும் மத்யமம், அஷ்டமீ, பௌர்ணமீ, அமாவாஸ்யை, பிரதமை, துவாதசி இவைகளும் ரிக்தையும் அதமம், விலக்கத்தக்கவை. மற்ற திதிகள் (த்விதீயை, த்ருதீயை, பஞ்சமி, ஷஷ்டி, நவமீ, தசமீ, ஏகாதசி) உத்தமம்.

சுக்ரன், புதன், குரு இவர்களின் வார அம்சங்கள் உத்தமம். சூர்ய-சந்திரர்களின் வார அம்சங்கள் மத்யமம். செவ்வாய், சனி இவர்களின் வார அம்சங்கள் கூடாது. உபய ராசிகள் உத்தமம். சர ராசிகள் மத்யமம். ஸ்திர ராசிகள் விலக்கத்தக்கவை. எட்டாமிடம் சுத்தி (8-ஆமிடத்தில் கிரஹம் ஏதுமில்லாமல் இருப்பது அவசியம்.

சில வித்வான்கள் நான்காமிடத்திலும் ஒரு கிரஹமும் இருக்கக்கூடாது என்று கூறுகிறார்கள்.

அத்யயனம் செய்வது மறக்காமலிருக்க வேண்டும் என்று விரும்பினால் இரவில் திரயோதசி, ஸப்தமீ, சதுர்த்திகள் இருந்தால் நள்ளிரவு வரை அத்யயனம் செய்யக்கூடாது.

இரவில் 9 நாழிகை வரையில் சதுர்த்தி இருந்தால் அது வேதாத்யயனத்தை வீணாக்கிவிடும், இரவில் இரண்டு யாமம் வரை ஸப்தமி இருந்தால் அந்தக் காலத்தில் வேதாதயயனம் செய்வது வித்யையை நாசப்படுத்தும். அதேபோல் இரவில் இரண்டு யாமம் வரை திரயோதசி இருந்தால் அந்த வேளையில் அத்யயனம் செய்வதும் ஸகல வித்யையையும் நாசமாக்கும். அவை பிரதோஷ காலங்கள் எனப்படும். அவ்வேளையில் பரமேச்வர ஆராதனம்தான் ஸகல சிரேயஸ்களையும் அளிக்கவல்லது. எனவே சிவாராதனம் தவிர அத்யயன கார்யங்களை மேலே கூறப்பட்ட நாளில், வேளையில் செய்தல் கூடாது.

திரயோதசி தினத்தில் பகலின் எட்டில் ஒரு பாகத்துடன் கூடி ஒரு விநாடியாகிலும் முன் இரவில் திரயோதசி திதி இருந்தால் அன்று நள்ளிரவு வரை மௌனம் கடைபிடித்தல் (அத்யயனம் ஏதும் செய்யாதிருத்தல்) அவசியம். திரயோதசி தினத்தில் முன் இரவில் ஒரு யாமகாலம் திரயோதசி இருந்தால் அது பிரதோஷம் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

அந்த மூன்று நாட்களும் வேதத்யயனத்தை நிறுத்திவிடல் வேண்டும். அம்மூன்று நாட்களும் "**அனத்யயனம்**". கல்வி - வேதம் பயிலக்கூடாத நாட்கள் ஆகும்.

மனக்கஷ்டம், மழை, இடி, சூரிய-சந்திர கிரஹணங்கள், பூகம்பம், வானிலிருந்து கொள்ளிக்கட்டை (உல்கா) விழுதல் நேரிட்டால் மூன்று நாட்கள் வேத அத்யயனம் செய்யக்கூடாத நாட்களாகும்.

வேதாத்யயன காலத்தில் ஆசார்ய - சிஷ்யர்களின் நடுவிலோ, அத்யயனம் செய்யும் மாணவர்களின் நடுவிலோ முயல், ஆடு, சண்டாளன் செல்ல நேரிட்டால் ஓராண்டு அதாவது அந்த (வருஷம்) ஆறு மாத காலம் அத்யயனம் கூடாது.

ஆசார்ய - சிஷ்ய மத்தியிலோ, அத்யேதாக்களான மாணவகர் மத்தியிலோ பசு, தவளை, கீரிப்பிள்ளை, நாய், காக்கை, எலி, கோழி, பூனை இவை போக நேரிட்டால் மூன்று நாட்கள் வேதாத்யயனம் செய்யத்தகாதவை.

தக்ஷிணாயன - உத்தராயணத்திலும், சைத்ர - துலா - விஷு காலத்திலும், ஆஷாட சுக்ல ஏகாதசி, கார்த்திக சுக்ல ஏகாதசி மன்வாதிகள், யுகாதிகள் ஆகிய நாட்களில் அத்யயனம் விலக்கத்தக்கது.

மன்வாதிகள் :- (1) ஆச்வயுஜ சுக்ல நவமி, (2) கார்த்திக சுக்ல த்வாதசி, (3) சைத்ர சுக்ல த்ருதீயை, (4) பாத்ரபத சுக்ல திருதீயை, (5) பால்குண அமாவாஸ்யை, (6) புஷ்ய சுக்ல ஏகாதசி, (7) ஆஷாட சுக்ல தசமீ, (8) மாக சுக்ல ஸப்தமீ, (9) சிராவண கிருஷ்ணபக்ஷ அஷ்டமீ, (10) ஆஷாட பௌர்ணமீ, (11) கார்த்திக பௌர்ணமீ, (12) பால்குண (பூர்ணிமா) பௌர்ணமீ, (13) ஜ்யேஷ்ட பௌர்ணமீ, (14) சைத்ர பௌர்ணமீ ஆகிய இவை மன்வந்தரங்கள் என முனிவர்களால் கூறப்பட்டிருக்கிறது.

யுகாதிகள் :- (1) வைசாக சுக்ல திருதீயை, (2) கார்த்திக சுக்ல நவமீ, (3) மாக அமாவாஸ்யை, (4) ப்ரோஷ்டபத கிருஷ்ண திரயோதசி ஆகிய இந்த நான்கு நாட்களும் யுகாதிகள் எனப்படும்.

பதினோராவது அத்யாயம் முற்றிற்று.

## பன்னிரண்டாம் அத்யாயம்

# ஸமாவர்த்தனம்

ஒரு பிரம்மசாரி திருமணத்திற்கு முன்பாகச் சில சடங்குகளைச் செய்தாகவேண்டியதுண்டு. அதற்கு "விரதம்" என்று பொதுப்பெயர். இதுகாறும் மேற்கொண்டிருந்த ப்ரம்மசர்ய ஆசிரமத்திற்கான அனுஷ்டானத்தைக் கைவிட்டு, கிரஹஸ்த ஆசிரம தர்மத்தை மேற்கொள்ளவிருப்பதற்கு அடையாளமாகச் செய்தாகவேண்டிய சில அனுஷ்டான முறைகளுக்கு "ஸமாவர்த்தனம்" என்று பெயர். இதனைச் செய்வதற்கு உரிய நல்ல நாளைத் தேர்வு செய்யும் விஷயத்தில் இதற்கு முன்னால் சௌள விதியில் கூறப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றப்படவேண்டும்.

உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, அனுஷம், மிருகசீர்ஷம், ரோகிணி, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சிரவணம், ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களில் விரத ஸ்நானம் (ஸமாவர்த்தனம்) செய்ய உத்தமம்.

மற்ற நக்ஷத்திரங்கள் விரத ஸ்நான விஷயத்தில் விலக்கத் தக்கவை.

ஸ்வாதி நக்ஷத்திரம் விரத ஸ்நானத்திற்கு உயர்ந்த நாளாகச் சிலர் கூறுகிறார்கள்.

விரத ஸ்நான விஷயத்தில் வெள்ளி, வியாழன், புதன், திங்கள், ஞாயிறு ஆகிய நாட்கள் நன்மை அளிப்பவை. செவ்வாய், சனி வாரங்கள் விலக்கத்தக்கவை. மீனம், ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் ஆகிய லக்னங்களில் ஸமாவர்த்தன ஸ்நானம் செய்ய உத்தமம். மற்ற லக்னங்களாகில் அவற்றில் சுபகிரஹம் இருப்பது அவசியம்.

த்விதீயை, திருதீயை, பஞ்சமீ, ஸப்தமீ, தசமீ, ஏகாதசி உத்தமம். திரயோதசி மிக உத்தமம். சில வித்வான்கள் துவாதசியையும் உயர்வாகக் கருதுகிறார்கள். அரசர்களுக்கு ஷஷ்டி சுபமானது. ரிக்தை, பிரதமை, அஷ்டமீ பௌர்ணமீ, அமாவாஸ்யை விலக்கத்தக்கவை.

எட்டாமிடத்தில் ஒரு கிரஹமும் இல்லாமலிருக்க வேண்டும். இந்த ஸமாவர்த்தன ஸ்நான கர்மாவைத் திருமணம் நடைபெறுவதாகவுள்ள நாளுக்குச் சற்று முன்பாகத்தான் நடத்தவேண்டும். அவ்வாறின்றி திருமணம், சமீபத்தில் நடப்பதாக இல்லாதபோதும், இந்த ஸ்நான கர்மா நடைபெறுமானால் மிகுந்த தோஷம் சம்பவிக்கும்.

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

**பதிமூன்றாம் அத்யாயம்**

# விவாஹ தசவிதப் பொருத்தங்கள்

இதற்குமேல் வரன் (திருமணம் செய்ய இருக்கும் புருஷன்) கன்னிகைகளின் திருமணப் பொருத்தம் பற்றிச் சொல்லப்போகிறேன்.

*(1)* தினம், *(2)* கணம், *(3)* மாகேந்திரம், *(4)* ஸ்த்ரீதீர்கம், *(5)* யோனி, *(6)* ராசி, *(7)* ராசி அதிபன், *(8)* வச்யம், *(9)* ரஜ்ஜு, *(10)* வேதை எனப் பத்துவகைப் பொருத்தங்கள் சொல்லப் பட்டுள்ளன.

***தினப்பொருத்தம் :-***

பெண் நக்ஷத்திரம் தொடங்கி எண்ணும்போது வரனின் நக்ஷத்திரம் நான்காவதாகவோ, ஆறாவதாகவோ, எட்டாவதாகவோ, ஒன்பதாகவோ வரின் தினப்பொருத்தம்

உண்டு எனக்கொள்ளவும். பெண் நக்ஷத்ரம் தொடங்கி (பெண் நக்ஷத்திரத்தையும் ஒன்று என எண்ணவேண்டும்) முதல் ஒன்பது முடிய உள்ள நக்ஷத்ர அமைப்பு முதல் "பர்யாயம்" ஆகும். 10வது முதல் 18வது முடியவுள்ள ஒன்பது இரண்டாவது "பர்யாயம்" ஆகும்". 19வது முதல் 27வது முடிய மூன்றாவது "பர்யாயம்" ஆகும். முதல் பர்யாயத்தில் பெண் நக்ஷத்திரம் எண்ணும்போது 3, 5, 7வது நக்ஷத்திரமாக வரனின் நக்ஷத்திரம் அமைந்தால் விலக்கப்படவேண்டும். தினப்பொருத்தம் இல்லை. முதல் பர்யாயத்தில் பெண் நக்ஷத்திரம் முதல் எண்ணும்போது 9க்குள் புருஷன் நக்ஷத்திரம் அமையாமல் இரண்டாம் பர்யாயத்தில் - பெண் நக்ஷத்திரம் (அனுஜன்ம நக்ஷத்திரம்) முதல் எண்ணும்போது 3, 5, 7வது நக்ஷத்திரமாகப் புருஷ நக்ஷத்திரம் வந்தால் - வரனின் நக்ஷத்திரம் 3வது நக்ஷத்திரம் 1-ம் பாதமாகில் பொருந்தாது. 5வது நக்ஷத்திரம் 4வது பாதமாகில் பொருந்தாது. 7வது நக்ஷத்திரம் 3வது பாதமாகில் பொருந்தாது. தினப் பொருத்தம் இல்லை. மூன்றாவது பர்யாயத்தில் பெண்ணின் த்ரிஜன்ம நக்ஷத்திரம் தொடங்கி எண்ணப்படும்போது (பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணத்தொடங்கி, 18வது நக்ஷத்திரம் முடியவுள்ள நக்ஷத்திர வரிசையில் புருஷ நக்ஷத்திரம் வராத நிலையில் பெண்ணின் த்ரிஜன்ம நக்ஷத்திரம் ஒன்று எனக்கொண்டு எண்ணும்போது) எல்லா நக்ஷத்திரங்களுமே பொதுவாகச் சுபம் எனப்படும். (ஆனால் இதிலும் ஒரு விலக்கு இருக்கிறது.

பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரத்திலிருந்து எண்ணும்போது, வரனின் ஜன்ம நக்ஷத்திரம் 27வதாக வந்தால், கன்னிகை - வரன் இருவருடைய "ஜன்ம ராசி" வேறுபடக்கூடாது. ஒரே ராசியாக இருத்தல் வேண்டும்.

ராசி வேறுபட்டால் பொருத்தமில்லை. உதாரணமாக பெண்ணின் நக்ஷத்திரம் அச்வினி, வரனின் நக்ஷத்திரம் ரேவதி, பெண்ணின் நக்ஷத்திரத்திற்கு 27வது நக்ஷத்திரம். ஆனால் ராசி வேறுபடுகிறது என்பதால் பொருத்தமில்லை.

கன்னிகையின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணும்போது 18ம் நக்ஷத்திரங்களையும் கடந்து வரனின் நக்ஷத்திரம் அமையுமானால் மூன்றாவது பர்யாயத்தில் புருஷன் நக்ஷத்திரம் இருப்பதாக ஆகும். பெண்ணின் த்ரிஜன்ம நக்ஷத்திரத்தை முதலாவதாகக் கொண்டு எண்ணும்போது 7வது நக்ஷத்திரமாக வரனின் நக்ஷத்திரம் அமைந்தால் விலக்கத்தக்கது. மேலும் பெண்ணின் ஜன்ம நக்ஷத்திர பாதம் முதற்கொண்டு எண்ணி வரும்போது, வரனின் ஜன்ம நக்ஷத்திர பாதம் 88வது நக்ஷத்திர பாதமாக வந்தால் அது வைநாசிகம் எனப்படும். மூன்றாம் பர்யாயத்தில் 7வது நக்ஷத்திரமாகவோ (வத நக்ஷத்திரமாகவோ), 22வது நக்ஷத்திரமாகவோ (வைநாசம் என்பதாகவோ) வைநாசிக நக்ஷத்திர பாதமாகவோ (88 வது பாதமாகவோ) வரின் பொருத்தமில்லை என்று அறிதல் வேண்டும்.

இந்த வத - வைநாசிக விஷயமாக, சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அதனையும் தெளிவுபடுத்திக்கொண்டு தினப் பொருத்தம் பற்றி முடிவு செய்யப்படவேண்டும்.

தினப்பொருத்தம் பார்க்கும் விஷயத்தில் பொதுவிதியுடன் மகரிஷிகளால் கூறப்பட்ட விசேஷ விதிகளையும் (பொதுவிதி "உத்ஸர்கம்" என்றும் விசேஷ விதி. "அபவாதம்" என்றும் ஸம்ஸ்க்ருதத்தில் சொல்வர்) கண்டு அதன் பிறகுதான், பொருத்தம் உள்ளதா இல்லையா என்னும் முடிவுக்க வருவது நல்லது. (இந்த விசேஷ விதிமுறைகளைச் சில நவீன வித்வான்கள் அங்கீகரிக்கிறதில்லை) முதல் பர்யாயத்திற்கு என்ன விதிமுறையோ, அதே முறையைத்தான் 2வது, 3வது பர்யாய விஷயங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கருதுகிறார்கள். அதற்குக் காரணம் "காலப்ரகாசிகை" என்னும் இந்நூல் ஒரு தொகுப்பு நூல் என்பதால் இதில் கூறப்படும் விசேஷ விதிகளைக் கூறியவர்கள் யாவர் என்று இந்நூலின் ஆசிரியர் குறிப்பிடாமல் தம் சொந்தக் கருத்துப்போல் கூறியிருப்பதே காரணம் என்று தெரிகிறது. ஆனால் நாரதர்

ப்ருஹஸ்பதி, கர்கர், ப்ருகு முதலான மகரிஷிகளால் கூறப்பட்டுள்ள கருத்துக்களே இந்நூலாசிரியரால் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறபடியால் ஒவ்வொரு அம்சத்திலும் உள்ள விசேஷ விதிகளையும் தீர்கமாக விசாரித்து அதன் பிறகே பொருத்தம் பற்றிய முடிவை மேற்கொள்வது நலம்).

பெண் நக்ஷத்திரம் முதல் (தொடங்கி) வரன் நக்ஷத்திரம் முடிய எண்ணும்போது முதல் பர்யாயம் 7வது நக்ஷத்திரமானால் விலக்கப்படவேண்டும் என்று பொதுவிதி இருப்பினும் சில சேர்க்கத்தக்கவையே என்று கூறப்பட்டிருக்கிறது. சில இன்ன காரணத்தால் சேர்க்கலாகாது எனவும் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக - கார்த்திகை முதல் ஆயில்யம் 7வது நக்ஷத்திரம் ஆகும். இவ்விதமே ஆயில்யம் பெண் நக்ஷத்திரமாகி, ஸ்வாதி ஆண் நக்ஷத்திரமாகவரினும் அல்லது ஸ்வாதி பெண் நக்ஷத்திரமாகி, ஆயில்யம் ஆண் நக்ஷத்திரமாகவரினும் அவை முறையே வதம் (நேர் 7வது) வைநாசிகம் (22வது தாரை) ஆவதால் சேர்க்கத் தக்கவையல்ல. இதேபோன்று (பெ) சித்திரை (ஆ) பூராடம்; (பெ) பூராடம் (ஆ) சித்திரை; (பெ) அனுஷம் (ஆ) அவிட்டம்; (பெ) அவிட்டம் (ஆ) அனுஷம்; (பெ) அவிட்டம் (ஆ) பரணி; (பெ) பரணி (ஆ) அவிட்டம்; (பெ) சதயம் (ஆ) கார்த்திகை; (பெ) கார்த்திகை (ஆ) சதயம் என்று வந்தாலும் சேர்க்கின் தீமை ஏற்படும் என்று மகரிஷிகள் கருதுவதால் இவ்விரட்டைகள் விலக்கத்தக்கவை.

திருவாதிரை - உத்திரம்; பூரம் - அனுஷம்; பூசம் - சித்திரை இவ்விரட்டைகள் 7வதாகவோ,வைநாசிகமாகவோ (22வது) வரினும் சுகத்தை அளிப்பவை என்பதால் சேர்க்கலாம். இவ்விதமே புனர்பூசம் - ஹஸ்தம் இரட்டைகள் வம்ச விருத்தியையும், கேட்டை - சதயம் இரட்டைகள் வம்ச நாசத்தையும் செய்பவையாகும்.

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் பூரம், மிருகசீர்ஷம், ஹஸ்தம், மூலம் ஆயின் நாசத்தை விளைவிக்கும் என்பதால்

சேர்க்கக்கூடாதவை. ஆனால் அதிகம் புத்ரர்களை அளிப்பவை என்பதால் ரோகிணி - மகம், பூரட்டாதி-ரோகிணி ஆகிய இரட்டைகளைச் சேர்க்கலாம். இவ்விதமே அச்வினி - புனர்பூசமும், ஸ்வாதி - உத்திராடமும் பெண் குழந்தை பிறக்கும் என்பதால் சேர்க்கத்தக்கவையே.

ரேவதி-திருவாதிரை, கேட்டை-உத்திரம் இவ்விரட்டைகள் ஒருவருக்கொருவர் பகைமையை ஏற்படுத்தும். விசாகம் - மகம் துஷ்டபுத்ர லாபம். விசாகம் - திருவோணம் ஒருவருக்கு ஒருவர் பகைவராவர். அச்வினி - திருவோணம் பிரித்துவிடும். உத்தரட்டாதி - மிருகசீர்ஷம் ஆகில் ஸ்த்ரீ விதவையாவாள்.

உத்தராடம் - ரேவதியாகில் போகங்கள் அமையும். மூலம் பூரட்டாதியாகில் செல்வம் மிகும். பூராடம் - உத்திரட்டாதி பரஸ்ப்பரப்ரீதி, பரணி - பூசங்களானால் ஸௌபாக்யம் ஏற்படும்.

### *தினப்பொருத்தம் தொடர்பாக :*

*த்ரிபஞ்சஸப்தமா: பாபா: த்விஜந்மாஷ்டமமத்யமா:*
*ஷட்சதுர்நக்மா: ச்ரேஷ்டா:*

என்றபடி பெண் நக்ஷத்திரம் முதல் 3-வது, 5-வது, 7-வது நக்ஷத்திரங்கள் தீயவையென்றும் 2-வது, ஜன்மம் (அநுஜன்ம - த்ரிஜன்ம) 8-வது நக்ஷத்திரங்கள் மத்யமம் என்றும், 4, 6, 9-வது நக்ஷத்திரங்கள் உத்தமம் என்றும் சொல்லப்படும். அதில் பெண், ஆண்களுக்கு நக்ஷத்திரம் ஒன்றாகவே இருப்பின் அவ்வாறான சில நக்ஷத்திரங்கள் உயர்வு என்றும், சில மத்யமம் என்றும், சில விலக்கத்தக்கவை என்றும் கூறப்பட்டுள்ளன. ஸ்த்ரீ- புருஷ நக்ஷத்திரங்கள் ஒன்றாக இருப்பின் உயர்வு உண்டு எனப்படும் நக்ஷத்திரங்களாவன - ரோகிணி, திருவாதிரை, மகம், விசாகம், ஹஸ்தம், திருவோணம், ரேவதி, உத்திரட்டாதி இவை ஏக நக்ஷத்திரமாகில் உத்தமம்.

அச்வினி, கார்த்திகை, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், பூரம், உத்தரம், சித்திரை, அனுஷம், பூராடம், உத்தராடம் இவை ஏக நக்ஷத்திரமாகில் மத்யமம்.

பரணி, ஸ்வாதி, ஆயில்யம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இவை ஸ்த்ரீ - புருஷர்களுக்கு ஏக நக்ஷத்திரமாகில் பொருந்தாது. சேர்க்கக்கூடாது.

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் இரண்டு ராசிகளில் வரக் கூடியதாக இருந்தால் முன்பாகம் (முன்ராசி) புருஷனுடையதாகவும், பின்பகுதி (அடுத்துள்ள ராசி) பெண்களுடையதாகவும் இருப்பது அவசியம். இது மாறி இருப்பின் தம்பதிகளுக்குத் தீமை தருவதாம்.

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் ஒரே ராசியில் வருமாகில் முன் நக்ஷத்திரம் புருஷனுடையதாயும் (Prior to that of the bride) பின் நக்ஷத்திரம் பெண்ணுடையதாகவும் இருப்பின் உத்தமம். இதற்கு மாறுபட்டிருப்பின் தீமை பயக்கும்.

ஒரே ராசியில் ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் வரும் விஷயத்தில் பரணி, கார்த்திகை, அவிட்டம், சதயம், பூசம், ஆயில்யமும் விலக்கத்தக்கவை. (கூடாது.)

***இதற்கு விதிவிலக்காவது :***

ஒரே ராசியில் ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் வரும் விஷயத்தில் முன்னது புருஷனுடையதாகவும், பின்னது ஸ்த்ரீயுடையதாகவும் இருத்தல் அவசியம் என்பதற்கு விதிவிலக்காக் கூறப்படுவதாவது - சதயம், ஹஸ்தம், ஸ்வாதி, அச்வினி, கார்த்திகை, பூராடம், மிருகசீர்ஷம், மகம் இவை பெண் நக்ஷத்திரமாகவும், அடுத்துள்ள பூரட்டாதி, சித்திரை, விசாகம், பரணி, ரோகிணி, உத்திராடம், திருவாதிரை, பூரம் இவை புருஷ நக்ஷத்திரமாக வந்தால் அது மங்களகரம். தினப்பொருத்தம் உண்டு.

ஏக நக்ஷத்திர விஷயம் (Janma Nakshatra belonging two Signs) ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரம் ஒன்றாக இருந்து, அது இரண்டு இராசிகளின் சம்பந்தமுள்ளதாக இருப்பின், முதற்பாதமுள்ள நக்ஷத்திரம் இருக்கும் ராசி பெண்ணினுடையதாகவும், பிற மூன்று பாதங்கள் உள்ள ராசி புருஷனுடையதாகவும் இருத்தல் வேண்டும். பாதங்கள் ஸமமாக இருப்பின், முன் இரண்டு பாதங்கள் உள்ள ராசி புருஷனுடையதாக இருத்தல்வேண்டும்.

**கணப்பொருத்தம்**

| தேவகணம் | மனுஷ்யகணம் | ராக்ஷஸகணம் |
|---|---|---|
| அச்வினி | ரோகிணி | கார்த்திகை |
| மிருகசீர்ஷம் | பூரம் | மகம் |
| பூசம் | பூராடம் | ஆயில்யம் |
| ஸ்வாதி | பூரட்டாதி | விசாகம் |
| ஹஸ்தம் | பரணி | சதயம் |
| புனர்பூசம் | திருவாதிரை | அவிட்டம் |
| அனுஷம் | உத்திரம் | சித்திரை |
| திருவோணம் | உத்திராடம் | கேட்டை |
| ரேவதி | உத்திரட்டாதி | மூலம் |

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் ஏக கணமாகில் உத்தமம். ஒருவருடைய நக்ஷத்திரம் தேவ கணமாகவிருந்து, மற்றவருடைய நக்ஷத்திரம் மனுஷ்ய கணமெனில் மத்யமம்.

இருவருடைய நக்ஷத்திரங்களில் ஒன்று தேவகணமாகவும், மற்றது ராக்ஷஸ கணமாகவும் இருப்பின் அதமம். மனுஷ்ய-ராக்ஷஸ கணமாக இருப்பின் ஆபத்தாக முடியும். புருஷ நக்ஷத்திரம் மனுஷ்ய கணமாகவும், ஸ்த்ரீ நக்ஷத்திரம் ராக்ஷஸ கணமாகவும் இருப்பின் திருமண வாழ்க்கை அத்தம்பதிகளுக்கு தொல்லைகள் மிக்கதாக இருக்கும் என்பதால் மனுஷ்ய கணமுள்ள புருஷன் ராக்ஷஸ கணமுள்ள ஸ்த்ரீயை மணத்தல் சரியல்ல.

பெண்ணின் நக்ஷத்திரம் ராக்ஷஸமாக இருப்பின் புருஷனின் நக்ஷத்திரத்திற்கு 14 நக்ஷத்திரங்களைக் கடந்ததாக இருப்பின் குற்றமில்லை.

ஸ்த்ரீ - புருஷ ராசிகள் இரண்டின் அதிபதி ஒருவராகவே இருந்தாலும் அல்லது ராசி நாதர்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தாலும் அல்லது ஸ்த்ரீ - புருஷ ராசிகள் ஒன்றுக்கு மற்றது ஏழாவதாக இருந்தாலும் ரஜ்ஜு, வேதை, கண, ராசி தோஷங்கள் கிடையாது.

### மாஹேந்திரப் பொருத்தம்

ஸ்த்ரீ நக்ஷத்திரம் தொடங்கி எண்ணும்போது, புருஷ நக்ஷத்திரம் 4, 7, 10, 13, 16, 21, 22, 25வதாக வந்தால் மாஹேந்திரப் பொருத்தம் உண்டு. இப்பொருத்தம் ஸௌபாக்யம் (மாங்கல்யம் - புருஷனின் ஆயுள் தீர்க்கம்) ஆயுள் விருத்தியைத் தருவ[redacted]

### ஸ்த்ரீ[redacted] பொருத்தம்

தம்பதிகளுக்கு வாழ்க்கை இன்பத்தைத் தரவல்லது இந்த ஸ்த்ரீதீர்க்கப் பொருத்தமாவது :

பெண்ணின் நக்ஷத்திரம் தொடங்கி எண்ணி வரும்போது 13 நக்ஷத்திரங்களுக்கு மேற்பட்டதாகப் புருஷ நக்ஷத்திரம் இருப்பின் இப்பொருத்தம் உண்டு.

சில வித்வான்கள் 7 நக்ஷத்திரங்களுக்கு மேலிருந்தாலும் இப்பொருத்தம் உண்டு எனக் கூறுகிறார்கள்.

## யோனிப் பொருத்தம்

| நக்ஷத்திரங்கள் | யோனி | நக்ஷத்திரங்கள் | யோனி |
|---|---|---|---|
| அச்வினி M | குதிரை | ஸ்வாதி M | எருமை |
| பரணி M | யானை | விசாகம் M | புலி |
| கார்த்திகை F | ஆடு | அனுஷம் F | மான் (முயல்) |
| ரோகிணி M | ஸர்ப்பம் | கேட்டை M | மான் (முயல்) |
| மிருகசீர்ஷம் F | ஸர்ப்பம் | மூலம் M | நாய் |
| திருவாதிரை F | நாய் | பூராடம் M | குரங்கு |
| பூனர்பூசம் F | பூனை | உத்திராடம் M | பசு (கீரி) |
| பூசம் M | ஆடு | திருவோணம் F | குரங்கு |
| ஆயில்யம் M | பூனை | அவிட்டம் F | மனிதன் (சிங்கம்) |
| மகம் M | எலி | சதயம் F | குதிரை |
| பூரம் F | எலி | பூரட்டாதி M | மனிதன் (சிங்கம்) |
| உத்தரம் M | பசு | | |
| ஹஸ்தம் F | எருமை | உத்திரட்டாதி F | பசு |
| சித்திரை F | புலி | ரேவதி F | யானை |

### *பகை யோனி நக்ஷத்திரங்கள் :*

| *பகை யோனிகள்* | *நக்ஷத்திரங்கள்* |
|---|---|
| குரங்கும், ஆடும் | பூராடம், திருவோணம் X பூசம்-கிருத்திகை |
| சிங்கமும், யானையும் | அவிட்டம், பூரட்டாதி X பரணி-ரேவதி |
| குதிரையும், எருமையும் | அச்வினி, சதயம் X சுவாதி-ஹஸ்தம் |
| பசுவும், புலியும் | உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி X விசாகம்-சித்திரை |
| எலியும், பூனையும் | மகம், பூரம் X ஆயில்யம்-புனர்பூசம் |
| பாம்பும், எலியும் | ரோகிணி, மிருகசீர்ஷம் X மகம்-பூரம் |
| கீரியும், பாம்பும் | உத்தராடம், ரோகிணி-மிருகசீர்ஷம் |
| மானும், நாயும் | கேட்டை, அனுஷம் X மூலம்-திருவாதிரை |

ஸ்த்ரீ - புருஷ நட்சத்திரங்கள் ஒரே யோனியானால் உத்தமப் பொருத்தம் உண்டு. வேறு யோனியாக (பகையற்றதாக) இருப்பின், மத்யமப் பொருத்தம், பகை யோனியாயின் அதமம். பொருந்ததாது.

### *ராசிப் பொருத்தம்*

| | |
|---|---|
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 2வது ராசியாகில் மரணம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 3வது ராசியாகில் துக்கம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 4வது ராசியாகில் ஏழ்மை |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 5வது ராசியாகில் வைதவ்யம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 6வது ராசியாகில் புத்ரநாசம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 7வது ராசியாகில் உத்தமம் மாங்கல்ய ஆயுள் விருத்தி |

| | |
|---|---|
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 8வது ராசியாகில் அதிக புத்ரலாபம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 9வது ராசியாகில் ஸௌமாங்கல்யம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 10வது ராசியாகில் ஐச்வர்யம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 11வது ராசியாகில் சுகம் |
| ஸ்த்ரீ ராசிக்குப் புருஷ ராசி | 12வது ராசியாகில் ஆயுர் விருத்தி |

இதில் த்வி-த்வாசம் ஷஷ்டாஷ்டம் இவை விஷயத்தில் விதிவிலக்குகள் உண்டு. பெண் ராசி ஒற்றைப்பட்ட ராசியாகவும், புருஷ ராசி இரட்டித்த ராசியாகவும் இருப்பின் "த்வி-த்வாதசம்" எனும் தோஷம் இல்லை. அதாவது இரட்டித்த ராசியான புருஷனின் ஜன்ம ராசிக்கு 12வது ராசியாகப் பெண் ராசி இருத்தல் வேண்டும் என்பது கருத்து. இது மாறியிருப்பின் புருஷனின் ராசி ஒற்றைப்பட ராசியாக இருந்து அதற்குப் 12வது ராசியாக இரட்டித்த ராசி பெண் ராசியாயின் தீமையளிக்கும்.

## ஷஷ்டாஷ்டமம்

பெண்ணின் ராசிக்கு புருஷனின் ராசி 6வது ராசியாக இருப்பின் அது ஷஷ்டாஷ்டமம், பொருந்தாது. புத்ரநாசம் தரும் என்று சொல்லப்படும். இதிலும் ஒரு விதிவிலக்கு.

ஸ்த்ரீ ராசி ஒற்றைப்பட்ட ராசியாக இருந்து, அது இரட்டித்த ராசியாகுமானால் அது சுபம். பொருத்தப்படும்.

| *பெண் ராசி* | *புருஷ ராசி* | |
|---|---|---|
| மேஷம் | கன்னி | சுப ஷஷ்டாஷ்டமம் |
| தனுஸ் | ரிஷபம் | சுப ஷஷ்டாஷ்டமம் |
| துலாம் | மீனம் | சுப ஷஷ்டாஷ்டமம் |

| | | |
|---|---|---|
| கும்பம் | கடகம் | சுப ஷஷ்டாஷ்டமம் |
| ஸிம்மம் | மகரம் | சுப ஷஷ்டாஷ்டமம் |
| மிதுனம் | விருச்சிகம் | சுப ஷஷ்டாஷ்டமம் * |

### *ராசி அதிபதிப் பொருத்தம்*

மேஷ, விருச்சிக ராசிகளுக்குச் செவ்வாய் அதிபதி. அவருக்கு சுக்ரனும், புதனும் மித்ரர்கள். (பொதுவிதிப்படி செவ்வாயும், புதனும் சத்ருக்கள்) மற்றவர் சத்ருக்கள். ரிஷப, துலா ராசிகளுக்குச் சுக்ரன் அதிபதி. அவருக்குச் சூரியனும், சந்திரனும் பகைவர். மிதுன, கன்னி ராசிகளுக்கு அதிபதி புதன். அவருக்குச் சூரியன் சத்ரு. கடக ராசிக்கு அதிபதி சந்திரன். அவருக்குப் புதனும், குருவும் மித்ரர்கள். சிம்மத்திற்கு அதிபதி சூரியன். அவருக்குக் குரு மித்ரன். தனுஸ், மீன ராசிகளுக்கு அதிபதி குரு. அவருக்குச் செவ்வாய் சத்ரு. மகர, கும்ப ராசிகளுக்கு அதிபதி சனி. அவருக்குக் குரு சத்ருவாகிறார்.

ஜ்யோதிஸ் சாஸ்த்ர பொது விதிமுறைகளின்படி கிரஹங்களுக்குள் சத்ரு - மித்ர பாவங்கள் வேறாகவும், விவாஹ விஷயத்தில் கிரஹங்களுக்குள் உள்ள சத்ரு - மித்ர பாவம் வேறாகவும் இருக்கும். ஸாமான்ய ரீதியிலான சத்ரு - மித்ர பாவத்தையே விவாஹப் பொருத்த விஷயத்திலும் பயன் படுத்துவது சரியா என்பது ஆராய்ச்சிக்குரியது. இது பற்றிய, இதற்கு மாறுபட்ட கருத்தும் ப்ரயோக பாரிஜாத நூலில் உள்ளவாறு தரப்படுகிறது.

---

* இந்த "சுப ஷஷ்டாஷ்டமம்" எனும் விதிவிலக்கை சமீபகாலமாக வித்வான்கள் அங்கீகரிக்கிறதில்லை. அனுபவ ரீதியில் இந்த "சுப ஷஷ்டாஷ்டமமும்" தம்பதிகளிடையே ஒற்றுமையைக் குறைக்கவே செய்கிறது என்பது காரணம்.

**श्रीधरीय -**

'मेषवृश्चिकपतिर्महीसुते
भार्गवो वृषतुलाधरेश्वरः ।
बोधनस्तु मिथुनाङ्गनापति-
र्भास्करिर्मकरकुम्भनायकः ।।

सिह्मकर्क**टयोरि**नोडुपौ
मीनधन्विपतिरिन्द्रपूजितः ।
अंशका नव नव व्यवस्थिताः
शौनकादिमुनिभिः प्रकीर्तिताः ।।

शत्रु मन्दसितौ समःशशिसुतो मित्राणि शेषा रवेः
तीक्ष्णांशुर्हिमरश्मिजश्च सुहृदौ शेषाः समाः शीतगोः ।
जीवेन्दुष्णकराः कुजस्य सुहृदो ज्ञोऽरिः सितार्को समौ
मित्रे सूर्यसितौ बुधस्य हिमगुः शत्रुः समाश्चापरे ।।

(कवे) सूरेः सौम्यसितावरी रवीसुतौ मध्यः परे बान्धवाः
सौम्यार्की सुहृदौ समौ कुजगुरु शुक्रस्य शेषावरी ।
शुक्रज्ञौ सुहृदौ समः सुरुगुरु सौरस्यचान्येऽरयो
ये प्रोक्ताः सुहृदस्त्रिकोणभवनात्तेऽमी मया कीर्तिताः ।।
इति ।। बृहस्पतिरपि -

गुरुर्गुरुज्ञौ शुक्रज्ञौ व्यर्का व्यारास्तु वीन्द्विनाः ।
व्यर्केन्द्ववनिजाः सर्वे सुहृदो रिपवःपरे ।।

## வசியப் பொருத்தம்

| மேஷாதி ராசிகள் | வசிய ராசிகள் |
|---|---|
| மேஷத்திற்கு | சிம்மமும் - விருச்சிகமும் |
| ரிஷபத்திற்கு | கயகமும் - துலாமும் |
| மிதுனத்திற்கு | கன்னி |
| கடகத்திற்கு | விருச்சிகமும் - தனுஸுூம் |
| சிம்மத்திற்கு | துலாமும் - மீனமும் |
| கன்னிக்கு | மிதுனம் |
| தூலாத்திற்கு | மகரம் |
| விருச்சிகத்திற்கு | கடகமும் - கன்னியும் |
| தனுஸுூக்கு | மீனம் |
| மகரத்திற்கு | மேஷமும் - கும்பமும் |
| கும்பத்திற்கு | மேஷம் |
| மீனத்திற்கு | மகரம் |

## ரஜ்ஜுூப் பொருத்தம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **சிரோரஜ்ஜுூ** | மிருக | | சித்திரை | | ஆவிட்டம் | |
| **கண்டரஜ்ஜுூ** | ரோகி | திரு↓ | ஹஸ் | ஸ்வா↓ | திரு | சத↓ |
| **நாபிரஜ்ஜுூ** | கார் | புனர் | உத்-ம் | விசா | உத்ரா | பூர-தி |
| **ஊருரஜ்ஜுூ** | பர | பூச | பூரம் | அனு | பூரா | உத்-தி |
| **பாதரஜ்ஜுூ** | அச்↑ | ஆயி | மக↑ | கேட் | மூல↑ | ரேவ |

ஸ்த்ரீ- புருஷ நக்ஷத்திரங்களின் ரஜ்ஜுூ ஒரே ரஜ்ஜுூவாகில் பொருத்தம் இல்லை. வேறுபட்ட ரஜ்ஜுூவாகில் பொருத்தம்

உண்டு. அதிலும் இருவருடைய ரஜ்ஜுக்களுமே ஏறுமுகமாக இருப்பின் உத்தமம். ஒன்று ஏறுமுகமாயும் மற்றது இறங்குமுகமாயும் இருப்பினும் சுபமே. இரண்டுமே இறங்குமுகமாகில் ஸ்த்ரீ நாசம். இரண்டுமே ஏக ரஜ்ஜுவாகில் அதில் பாத ரஜ்ஜுவாகில் தேசாந்தர யாத்திரை. இரண்டுமே ஊரு ரஜ்ஜுவாக இருந்தால் செல்வம் நாசமாகும். நாபி ரஜ்ஜுவாகில் ஸந்ததி நாசம் (கர்பதோஷம்). கண்ட ரஜ்ஜுவாகில் ஸ்த்ரீ நாசம். இரண்டுமே சிரோ ரஜ்ஜுவாகில் புருஷ நாசம் என இவ்வாறு ரஜ்ஜுவின் பலன்களை வித்வான்கள் கூறுகிறார்கள்.

## வேதைப் பொருத்தம்

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்களில் சில ஒன்றுக்கொன்று பொருத்தமற்றவை என்பதால் அத்தகைய நக்ஷத்திரங்களைக் கொண்ட ஸ்த்ரீ - புருஷர்களுக்குத் திருமணம் செய்வித்தல் சரியல்ல.

அச்வினியும் - கேட்டையும், பரணியும் - அனுஷமும், கார்த்திகையும் - விசாகமும், ரோகிணியும் - ஸ்வாதியும், திருவாதிரையும்-திருவோணமும், புனர்பூசமும்- உத்திராடமும், ஆயில்யமும் - மூலமும், மகமும் - ரேவதியும், பூரமும் - உத்திரட்டாதியும், உத்தரமும் - பூரட்டாதியும், ஹஸ்தமும் - சதயமும் இவைகள் ஒன்றுக்கொன்று வேதைகள். மிருகசீர்ஷம், சித்திரை, அவிட்டம் ஒன்றுக்கொன்று வேதைகள்.

பொருத்தங்களில் தினம், கணம், யோனி, ராசி, ரஜ்ஜு இவை ஐந்தும் முக்கியமானவையாகும். பிராமணர்களுக்குத் தினப்பொருத்தம் அவசியம் இருத்தல் வேண்டும். க்ஷத்ரியர்களுக்குக் கணப்பொருத்தமும், வைசியர்களுக்கு ராசிப் பொருத்தமும், மற்றோருக்கு யோனிப் பொருத்தமும் அவசியம்.

# இந்த பத்துவிதப் பொருத்தங்களின் பலன்களாவன

தினப் பொருத்தத்தால் க்ஷேமமும், கணப் பொருத்தத்தால் செல்வமும், மாகேந்திரப் பொருத்தத்தால் ப்ரீதியும், ஸ்த்ரீ தீர்க்கத்தால் ஸௌக்யமும், யோனிப் பொருத்தத்தால் புத்திரர்களும், ராசிப் பொருத்தத்தால் குலவிருத்தியும், ராசி அதிபதிப் பொருத்தத்தால் தான்ய விருத்தியும், வச்யப் பொருத்தத்தால் வம்ச விருத்தியும், ரஜ்ஜுவால் மாங்கல்யமும், வேதையால் புத்ரஸம்பத்தும் ஏற்படும்.

இதுவரை சொல்லப்பட்ட பத்துவிதப் பொருத்தங்களில் சுப அளவு நல்ல பொருத்தங்கள் அதிகமாயின், 5க்கு மேலிருப்பின் சுபம். அப்படிக்கில்லையேல் சுப - அசுப சகுனங்களைப் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் ஆயில்யம் முதல் நான்கு (1. ஆயில்யம், 2. மகம், 3. பூரம், 4. உத்திரம்) நக்ஷத்திரங்களும், 5. திருவாதிரை, 6. பரணி - சித்திரை முதல் மூன்று (7. சித்திரை, 8. ஸ்வாதி, 9. விசாகம்) நக்ஷத்திரங்களும், 10. பூராடம், 11. உத்திராடம், 12. கேட்டை, 13. அவிட்டம், 14. திருவோணம் ஆகியவை ஸ்த்ரீ நக்ஷத்திரங்களாகும். மிருகசீர்ஷம், சதயம், மூலம் இவை நபும்ஸகம். இவை தவிர்த்த மற்ற நக்ஷத்திரங்கள் புருஷ நக்ஷத்திரங்களாகும்.

பொருத்தம் பார்க்கப்படும் ஸ்த்ரீ - புருஷர்களின் நக்ஷத்திரங்கள் அந்தந்த இனத்தவையாக இருந்தால் மிகவும் உத்தமம். மாறுபட்டிருப்பின் அதமம். ஆண், பெண் நக்ஷத்திரங்கள் இரண்டிலும் ஒன்று நபும்ஸகமாயும் மற்றது ஸ்த்ரீயாகவும் அல்லது ஒன்று நபும்ஸகமாயும் மற்றது புருஷத்வம் உள்ளதாகவும் அல்லது இரண்டுமே ஸ்த்ரீ நக்ஷத்திரங்களாகவோ, புருஷ நக்ஷத்திரங்களாகவோ இருந்தால் அது மத்யமம்.

## கோத்ர சம்பந்தம்

| நக்ஷத்திரங்கள் | கோத்ரம் | நக்ஷத்திரங்கள் | கோத்ரம் |
|---|---|---|---|
| அச்வினி | மரீசி | அனுஷம் | புலஸ்த்யர் |
| பரணி | மரீசி | கேட்டை | புலஸ்த்யர் |
| கார்த்திகை | மரீசி | மூலம் | புலஸ்த்யர் |
| ரோகிணி | மரீசி | பூராடம் | புலஸ்த்யர் |
| மிருகசீர்ஷம் | வஸிஷ்டர் | உத்தராடம் | புலஹர் |
| திருவாதிரை | வஸிஷ்டர் | அபிஜித்* | புலஹர் |
| புனர்பூசம் | வஸிஷ்டர் | திருவோணம் | புலஹர் |
| பூசம் | வஸிஷ்டர் | அவிட்டம் | புலஹர் |
| ஆயில்யம் | அங்கிரஸ் | சதயம் | க்ரது |
| மகம் | அங்கிரஸ் | பூரட்டாதி | க்ரது |
| பூரம் | அங்கிரஸ் | உத்திரட்டாதி | க்ரது |
| உத்தரம் | அங்கிரஸ் | ரேவதி | க்ரது |
| ஹஸ்தம் | அத்ரி | | |
| சித்திரை | அத்ரி | | |
| ஸ்வாதி | அத்ரி | | |
| விசாகம் | அத்ரி | | |

ஸ்த்ரீ - புருஷ நக்ஷத்திரங்கள் ஒரே கோத்ரத்தைச் சேர்ந்தவையாகில் அதமம். கோத்ரங்கள் மாறுபடின் உத்தமம்.

## ராசிகளின் வர்ணங்கள்

1. கடகம், மீனம், விருச்சிகம் இம்மூன்று ராசிகளும் பிராமண இனம்.

*அபிஜித் நக்ஷத்திரம் என்பது - உத்தராடம் 4வது பாதமும், திருவோணம் முதல் பாதமும் சேர்ந்ததாகும்.

2. சிம்மம், தனுஸ், துலாம் இம்மூன்று ராசிகளும் க்ஷத்திரிய இனம்.

3. மேஷம், மிதுனம், கும்பம் இம்மூன்று ராசிகளும் வைசிய இனம்.

4. ரிஷபம், மகரம், கன்னி இம்மூன்று ராசிகளும் பிற இனத்தைச் சேர்ந்தவை.

அடி வரிசைகளிலுள்ள ராசியைச் சேர்ந்த புருஷன் தனக்கு மேலுள்ள வரிசையிலுள்ள ராசியைச் சேர்ந்த பெண்களை மணப்பது அதமம். புருஷனுக்கு ஆகாது.

## திருமண விஷயமான பிரச்னம்

***இந்தத் திருமணம் நடக்குமா?*** என்னும் கேள்வி கேட்கப்படும் நேரத்தைக் குறித்துக்கொண்டு லக்னம் அறிந்து கொண்டதும், அந்த லக்னத்திற்கு 3 அல்லது 5, 7, 10, 11ல் சந்திரன் இருந்து அவனை, குரு பார்த்தால் அப்போது எந்த ஸ்த்ரீ - புருஷர்களைக் குறித்துப் பிரச்னம் செய்யப்பட்டதோ அவ்விருவருக்கும் விவாஹம் நடக்கும்.

***எனக்குத் திருமணத்திற்குப் ஒரு பெண் கிடைப்பாளா ?*** என்று கேள்வி கேட்டு ஒருவர் வந்தால், அந்த நேரத்திற்கான லக்னத்தைக் கணக்கிடும்போது கிடைத்த லக்னம், துலாம் அல்லது ரிஷபம் அல்லது கடகமாக இருந்து, அதில் சுபர்கள் இருந்தாலோ, அந்த லக்னத்தை சுபர்கள் பார்த்தாலோ பெண் கிடைப்பாள்.

விவாஹ பிரச்னம் கேட்கும் காலம் கிருஷ்ணபக்ஷமாக (தேய்பிறையாக) இருந்து ப்ரச்ன லக்னத்திற்கு இரட்டைப்பட்ட ராசியில் சந்திரன் இருந்தாலும், 8ஆமிடத்தில் சந்திரன் இருந்து, பாபியின் பார்வை பெற்றாலும் அந்த விவாஹம் நடைபெறாது.

விவாஹ விஷயமான பிரச்னம் செய்யப்பட்ட காலத்திற்கான லக்னத்திற்கு 6 அல்லது 8ஆமிடத்தில் சந்திரன் இருந்தால் எந்த ஸ்த்ரீ - புருஷ ஸம்பந்தமான பிரச்னமோ - அந்த தம்பதிகளுக்குத் திருமணமான எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக மரணம் ஸம்பவிக்கும் என்று சொல்லப்படவேண்டும்.

பிரச்ன லக்னத்தில் செவ்வாயும், 7ஆமிடத்தில் சுப கிரஹமும் இருந்தால் அந்த ஸ்த்ரீ - புருஷ விவாஹத்திற்குப் பிறகு அந்த ஸ்த்ரீ கெட்ட நடத்தையுள்ளவளாவாள் அல்லது ஜனிக்கும் குழந்தை இறக்கும். எட்டு ஆண்டுகளில் கணவனும் இறப்பான்.

பிரச்ன லக்னத்தில் சந்திரனும், அதற்கு 7ஆமிடத்தில் செவ்வாயும் இருப்பின் அந்த பிரச்னம் சம்பந்தப்பட்ட ஸ்த்ரீ - புருஷர்களுக்கு விவாஹமானால் எட்டு ஆண்டுகளில் புருஷன் இறக்கலாகும்.

பிரச்ன லக்னத்திற்கு 5ஆமிடத்தில் பாப கிரஹம் நீசமாக இருந்து அந்த கிரஹத்தை சத்ரு கிரஹங்கள் பார்த்தால் அந்தப் பிரச்னம் சம்பந்தப்பட்ட பெண்ணுக்குப் பிறக்கும் பிள்ளைகள் இறக்கும். அல்லது அப்பெண் துர்நடத்தை உள்ளவளாக இருப்பாள்.

பதிமூன்றாம் அத்யாயம் முற்றிற்று.

## பதினான்காவது அத்யாயம்

## பாணிக்ரஹண (கன்யாதான) காலம் பற்றி

இதற்குமேல் பாணிக்ரஹண (விவாஹ)த்திற்கான காலம் சொல்லவிருக்கிறேன்.

உத்தராயணத்தில் திருமணம் செய்வதே உயர்வானதாகும். தக்ஷிணாயணத்தில் செய்வது மத்யமம்.

ஸ்த்ரீ - புருஷர்களின் ஜன்ம ராசிக்கு 1, 3, 4, 6, 8, 10, 12 ஆகிய இடங்களில் குரு இருக்கும் சமயம் திருமணம் நடத்துவது நல்லதல்ல. விவாஹம் செய்துகொள்ளும் / கொடுக்கும் நோக்கமே வீணாகிவிடும்.

திருமணம் செய்யவுள்ள பெண்ணின் ஜன்ம ராசிக்கு 5, 6 அல்லது 7ல் அல்லது சுபஸ்தானமாகிய பாக்யத்தில் குரு இருக்க விவாஹம் செய்யவேண்டு.

ரோகிணி, மிருகசீர்ஷம், மகம், ஹஸ்தம், ரேவதி, அனுஷம், மூலம், ஸ்வாதி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி இந்த நக்ஷத்திர தினங்களில் விவாஹம் செய்வது, உரிய காலத்தில் புத்ர விருத்தி ஏற்படும். மற்ற நக்ஷத்திரங்களில் செய்வது புத்ரன் ஆயுஸ் இவற்றைக் குறைக்கும்.

அதோமுக நக்ஷத்திரங்களான பரணி, கார்த்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி இவற்றில் திருமணம் செய்வது சிலாக்யமல்ல. திர்யங்முக நக்ஷத்திரங்களான அச்வினி, மிருகசீர்ஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், கேட்டை, ரேவதியில் திருமணம் செய்வது உடல் நோய் பயம் உண்டு. ஊர்த்வமுக நக்ஷத்திரங்களில் திருமணம் செய்ய ஸகல இஷ்டஸித்தியும் ஏற்படும்.

துவிதீயை, தசமீ, சப்தமீ, திரயோதசீ, திருதீயை, ஏகாதசி, பஞ்சமீ திதிகள் இவைகள் மிகவும் உத்தமம்.

ஷஷ்டி, அஷ்டமீ, துவாதசீ, பௌர்ணமீ, கிருஷ்ணபக்ஷ பிரதமை இவை மத்யமம். மற்றவை விலக்கத்தக்கவையே. கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமிக்குமேல் உள்ள தினங்களில் திருமணம் நடத்துவது தீமை தரும்.

மிதுனம், கன்னி, துலாம் இந்த லக்னங்கள் உத்தமமானவை. மீனம், மேஷம், மகரம், விருச்சிக லக்னங்கள்

விலக்கத்தக்கவை. அசுப கிரஹ அம்சம், வாரங்கள் (கிழமைகள்) விலக்கத்தக்கவை. சுபகிரஹ அம்சங்கள், வாரங்கள் உத்தமம்.

மேஷ லக்னம் திருமணத்திற்கு உகந்ததல்ல. ரிஷப லக்னம் மத்யமம். செல்வக்குறைவு ஏற்படும்.

மிதுன லக்னம் உத்தமம். கடகம் உயர்ந்ததல்ல. ஸிம்மம் மத்யமம். பெண், தந்தை வீட்டில் இருப்பாள். கன்னி லக்னத்தில் விவாஹம் நடந்தால் ஸ்த்ரீ, புருஷனுடைய நன்மையை விரும்புவாள். துலாத்தில் புருஷனிடத்தில் மனம் உள்ளவள். விருச்சிகத்தில் துக்கத்தை அடைவாள். தனுஸின் முன்பாகத்தில் ஸ்த்ரீ வேசியாவாள்; பின்பாகமாகில் ஸ்த்ரீ பதிவிரதை. மகரம், கும்பம், மீனங்களாகில் பரபுருஷனிடம் ஆசைகொண்டவளாவாள். பாலசுக்ரன், சுக்ரன் உதயமாகி 10 நாட்களுக்குள் விவாஹமானால் ஸ்த்ரீக்கும் - விருத்த சுக்ரன் அஸ்தமனத்திற்கு முன் 10 நாட்களில் விவாஹம் நடந்தால் புருஷனுக்கும் தீமை.

பாலகுரு உதயமாகி 8 நாட்களில் விவாஹம் செய்தால் புருஷனுக்கும், அஸ்தமனத்திற்கு முன் 15 நாட்களில் விவாஹம் செய்தால் ஸ்த்ரீக்கும் ஆபத்து.

விவாஹ லக்னத்தில் உள்ள கிரஹங்கள் - சுபாசுப பலன்களைத் தருவர்.

| | |
|---|---|
| சூரியன் இருந்தால் | - ஸ்த்ரீ விதவை |
| சந்திரன் இருந்தால் | - ஸ்த்ரீ மரணம் |
| செவ்வாய் இருந்தால் | - இருவருக்கும் நாசம் |
| புதன் இருந்தால் | - புகழ் |
| குரு இருந்தால் | - ஆயுள் விருத்தி |
| சுக்ரன் இருந்தால் | - ஆயுள் விருத்தி |
| சனி இருந்தால் | - ஏழ்மை |
| ராகு / கேது இருந்தால் | - சந்ததி ஏற்படுவதில்லை. |

விவாஹ லக்னத்திற்கு 2ஆமிடத்தில் பாப கிரஹங்கள் இருந்தால் அதிகம் துக்கம் ஏற்படும். சூரியன் இருந்தால் அதிகம் துக்கம் ஏற்படும். சந்திரன் இருந்தால் பல குழந்தைகள் பிறக்கும். புதன், குரு இருந்தால் பெரும் செல்வம் ஏற்படும். சுக்ரன் இருந்தால் ஸௌமாங்கல்யத்தை அளிப்பார். விவாஹ லக்னத்திற்கு 3ஆமிடத்தில் உள்ள எல்லா கிரஹங்களுமே ஸௌக்யத்தையும், புத்ரர்களையும் அளிப்பர். விவாஹ லக்னத்திற்கு 4-ல் சூரியாதியர் இருப்பின் முறையே (1) தௌர்பாக்யம், (2) பிரிவு, (3) ஏழ்மை, (4) ஸௌக்யம், (5) மாங்கல்ய பலம், (6) பாதிவ்ரத்யத் தன்மை, (7) துர்பாக்யம், ராகு - கேதுக்கள் துர்நடத்தையை அளிப்பர்.

ஐந்தாமிடத்திலிருக்கும் சுபக்ரஹங்கள் புத்ரர்களை அளிப்பார்கள். செவ்வாய், சூரியனிருந்தால் இறந்த குழந்தைகள் பிறக்கும். சனி - ராகுக்கள் இருந்தால் குஷ்டரோகம் ஏற்படும்.

6ஆமிடத்திலிருக்கும் சந்திரன் வைதவ்யத்தைத் தருவான். புதன் இருந்தால் இருவரும் பிரியாமல் இருப்பார்கள். ராகு இருந்தால் ஏழையாவர். மற்ற கிரஹங்கள் புத்ரர்களை அளிப்பார்கள்.

7ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. விவாஹ லக்னத்திற்கு 7ல் இருக்கும் கிரஹங்களின் பலன்களைத் தனியாகக் கூறுகிறேன்.

குரு 7ல் இருந்தால் புருஷனை அவமதிப்பாள். 7ல் சந்திரன் இருந்தால் பெண் துஷ்டசீலையாவாள் (துஷ்டை), 7ல் புதன் இருந்தால் துஸ்சீலை. செவ்வாய் இருந்தால் வியபிசாரி. சனி இருக்க குழந்தைகளுக்கு மரணம். கேது இருந்தால் மனமயக்கம் உடையவளாவாள். சூரியன் இருக்க வைதவ்யம் நேரும். ராகு இருந்தால் தரித்திரத்தன்மை ஏற்படும். சந்திரன் இருந்தால் எல்லா துக்கங்களையும் அளிப்பான். ஆகையால் 7ல் கிரஹம் எதுவும் இருத்தல் நல்லதல்ல.

8-ம் இடத்தில் சூரியன், செவ்வாய், சனி இவர்கள் இருத்தல் நல்லது மற்றவர்கள் இருக்க அசுபம் உண்டு.

ஒன்பதாமிடத்தில் ராகு, செவ்வாய், சனி இவர்கள் இருந்தால் அசுபமும், மற்றவர்கள் இருந்தால் சுபமும் உண்டு. 9-ல் உள்ள சுபர்கள் இஷ்டஸித்தியை அளிப்பர்.

10-ஆமிடத்தில் செவ்வாய் இருந்தால் மரணம். சூரியன் இருந்தால் க்ஷயரோகம். சனி இருந்தால் வியபிசாரம். குரு இருந்தால் வைதவ்யம். மற்றவர்கள் இருப்பின் நன்மை உண்டு.

11-ல் உள்ள எல்லா கிரஹங்களுமே நன்மையைத்தான் தருவர். 12-ல் உள்ள சுக்ரன், குரு, புதன் இவர்கள் சுபத்தை அளிப்பர். மற்றவர் பயத்தை அளிப்பார்கள்.

## விவாஹ கால யோகங்கள்

இனி புத்ரன், ஆயுஸ், ஸுகம் முதலான பலன்களைத் தரவல்ல விவாஹ கால யோகங்கள் பற்றிச் சொல்லப் போகிறேன்.

10-ல் சந்திரன், லக்னத்தில் குரு, 6-ல் சூரியன், 8-ல் சுக்ரன் இருக்க விவாஹம் செய்தால் வாஹனம், ரத்னங்கள், உயர்ந்த படுக்கை, ஆஸனம், தனதான்யங்களுக்கு அதிபதியாவான்.

லக்னத்தில் குரு, 6-ல் சூரியன், சந்திரன் 7 அல்லது 4-ல், 3-ல் சனி, செவ்வாய்கள் இருந்தால் அத்தம்பதிகள் அறம், பொருள், இன்பங்களையும், புத்ர-பௌத்ராதிகளையும் அடைவர் என்பதுடன் நூறாண்டுகள் ஜீவிப்பர்.

3, 6, 10, 11-ஆம் இடங்களில் பாப கிரஹங்கள் இருந்தால் கேந்திர - த்ரிகோணங்களில் சுபர்களும், லாபாதிபதியும் உச்சம் பெற்றும் இருந்தாலும் புத்ர, ஆயுஸ், ஐச்வர்யம் விருத்தியாகும்.

விவாஹ லக்னத்திற்கு 10-ல் சூரியனும், சனிபகவான் 6-லும், குரு 9-லும், புதன் 1-லும் (லக்னத்திலும்) இருந்தால் தம்பதிகள் புத்ர - பௌத்ரர்களையும், ஸுகம், நீண்ட ஆயுள் இவற்றையும் அடைகிறார்கள்.

குரு லக்னத்திலும், அசுபர்கள் 6-ஆமிடத்திலும், புதனும், சுக்ரனும் கேந்திரத்திலும் இருந்தால் தம்பதிகள் உயர்ந்த வாஹன வசதிகளையும், ரத்னங்களையும் அடைகிறார்கள். செவ்வாய் 11-லும், சூரியன் 10-லும், புதனும் - சுக்ரனும் லக்னத்திலும், குரு 5-லும் இருந்தால் அந்த தம்பதிகள் ஸௌபாக்ய விருத்தியையும் பெறுகிறார்கள்.

புதனும், குருவும் லக்னத்திலும், அசுப கிரஹங்கள் 3, 6, 10, 11 எனும் உபசயத்திலும், சந்திரன் இரண்டிலும் இருந்தால் தம்பதிகள் புத்ரன், ஆயுஸ், செல்வம் யாவற்றையும் பெறுவர்.

## மாஹேந்திராதி யோகங்கள்

குரு லக்னத்திலும், சுக்ரன் 8-லும், சூரியன் 11-லும், புதன் 4-லும் இருந்தால் இந்த கிரஹயோகம் மாஹேந்திரம் எனப்படும். இதனால் தம்பதிகளுக்கு ஆயுஸ், பொருள், ஸௌக்யம் யாவும் ஏற்படும்.

***விஷ்ணுப்ரியம் :***

சுக்ரன் லக்னத்திலும், குரு 10-லும், சூரியனும், புதனும் 11-லும் இருந்தால் இம்மாதிரியான கிரஹயோகம் விஷ்ணுப்ரியம் எனப்படும். இதனால் தம்பதிகளுக்கு ஸகல ஸௌக்யங்களும் கிட்டும்.

### அர்த்தநாரீ யோகம் :

சுக்ரன் விவாஹ லக்னத்திலும், குரு 11-லும், எட்டாமிட சுத்தியும் (எட்டாமிடத்தில் ஒரு கிரஹமும் இல்லாமலிருந்தும்) இருந்தால் இந்த லக்னம் தம்பதிகளுக்குள் அன்பை, ப்ரேமையை வளர்க்கும் அர்த்தநாரீ யோகம் எனப்படும்.

### ஸ்ரீமதீ யோகம் :

சுக்ரன் இரண்டாமிடத்திலும், குரு 12-லும் சூரியன் 8-லும், சனிபகவான் 6-லும் இருந்தால் இவ்வகையிலான கிரஹயோகம் தம்பதிகளுக்கு செல்வம், சுகம் முதலான நன்மைகள் அளிக்கும் ஸ்ரீமதீ யோகமாகும்

### ஸமுத்ர யோகம் :

சுக்ரன் லக்னத்திலும், குரு 4-லும், புதன் 2-லும், சனி 11-லும் இருந்தால் இது தம்பதிகளுக்கு ஸகல ஸௌக்யங்களையும் அளிக்கவல்ல ஸமுத்ர யோகம் எனப்படும்.

### மஹாவிஷ்ணு யோகம் :

ஆபோக்லிமம் எனப்படும் 3, 6, 9, 12-ல் முறையே செவ்வாய், சனி, சுக்ரன், குரு இருந்தால் தம்பதிகளுக்கு ஸகல ஸௌக்யத்தையும் அளிக்கும் மஹாவிஷ்ணு யோகமாகும்.

### புஷ்ய யோகம் :

உபசய ஸ்தானங்களான 3, 6, 10, 11-ல் முறையே சனி, குரு, சூர்யன், செவ்வாய் இருந்தால் அது தம்பதிகளுக்கு ஸகல ஸௌபாக்யங்களைத் தரும் புஷ்ய யோகமாகும்.

### ஸ்தாவர யோகம் :

சுக்ரனும், குருவும் லக்னத்தில் தோஷமின்றி பலமுடன் இருந்தால் அது தம்பதிகளுக்கு எல்லா ஸௌக்யங்களையும் அளிக்கும் ஸ்தாவர யோகமாகும்.

### ஜய யோகம் :

லக்னத்தில் சுக்ரனும், புதனும் மிக்க பலமுடன் இருந்தால் அது தம்பதிகளுக்கு ஸகல ஸௌபாக்யங்களையும் அளிக்கும் ஜயயோகமாகும்.

### விஜய யோகம் :

புதன், குரு, சுக்ரர்கள் வக்ர-அஸ்தமயாதி தோஷங்களின்றி பலமுடன் லக்னத்தில் இருந்தால் அது ஸகல யோகங்களிலும் தலைவன் போன்றது. இது தம்பதிகளுக்கு ஸகல கார்ய ஜயத்தையும் அளிக்கும்.

குருவும், சுக்ரனும் லக்னத்திலும், சந்திரன் தன் சொந்த அம்சத்தில் கடக ராசியில் இருந்தால் அது தம்பதிகளுக்கு இல்வாழ்க்கையினை அமைதி, பரஸ்பரம், அன்பு மிகுந்ததாகச் செய்யும். அவர்களின் பிள்ளைகளின் நிலையும் உயரும்.

உத்தராயணத்தில் நடத்தப்படும் விவாஹத்தினால் புத்ர - பௌத்ராதி அபிவிருத்தியுடன் மிகுந்த செல்வத்தையும் தம்பதிகள் அடைவர். நல்ல (சுபமான) மாதங்களில் விவாஹம் நடத்தப்படவேண்டும். ஓர் ஆண்டில் 8 மாதங்கள் உயர்ந்தவை. ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி ஆகிய நான்கு மாதங்கள்

சுபமானவையன்று. ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி ஆகிய நான்கு மாதங்கள் விலக்கத்தக்கவை. புஷ்யமாதத்திலும், கார்த்திக மாதத்திலும் விவாஹம் செய்தால் அந்த ஸ்த்ரீ நல்ல நடத்தையுடையவளாக ஆவாள். பால்குண மாதத்தில் விவாஹம் செய்தால் ஸௌபாக்யத்தோடும், ஐச்வர்யத்தோடும் கூடியவளாக இருப்பாள்.

மிதுன - வைசாக மாதங்களில் விவாஹம் நடந்தால் அந்த ஸ்த்ரீ செல்வம் மிக்கவளாயும், ஸௌபாக்யம், புத்ர - தனாதிகளுடன் கூடியவளாயும், யாவருக்கும் அன்பானவளாயும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அனுகூலம் செய்பவளாயும் ஆவாள். சிராவணம், ஆச்வயுஜம், சைத்ரம் ஆகிய இம்மாதங்கள் மத்யமம் என்று சில வித்வான்கள் சொல்லுகிறார்கள்.

2, 4, 6, 8, 9-வது நக்ஷத்திரங்களில் விவாஹம் நடத்தப்பட்டால் தம்பதிகள் ஸகல ஐச்வர்யத்தையும், பூமி லாபத்தையும் பெறுவர். மக நக்ஷத்திரத்தில் விவாஹம் செய்தால் அந்த புருஷன் நீண்ட ஆயுளைப் பெறுவான். அப்பெண் புத்ர பாக்யம், தனதான்யங்களுடன் கூடியவளாகவும், நீண்ட ஆயுள் உள்ள சகோதரர் உள்ளவளாகவும் இருப்பாள். மிருகசீர்ஷத்தில் விவாஹம் செய்யின் அத்தம்பதிகளுக்குள் உயிருக்குயிரான அன்பு ஏற்படும். அந்த தம்பதிகள் ஸகல சுகமும் பெறுவர்.

ஹஸ்த நக்ஷத்திரத்தில் திருமணம் நடந்தால் தன வ்ருத்தி, சுகம், தான்யம் பெருகும்.

ஸ்வாதி, அனுஷ நக்ஷத்திரத்தில் திருமணம் நடந்தால் அத்தம்பதியர்களிடையே மிகுந்த ப்ரேமை ஏற்படும் - வளரும். மூல நக்ஷத்திரத்தில் விவாஹம் நடந்தால் முத்து, ரத்தினம், பவளம் இவைகளுக்கு அதிபதியாவர்.

ரேவதி நக்ஷத்திரத்தில் விவாஹம் செய்தால் அத்தம்பதிகள் எப்போதும் ஒற்றுமையுள்ளவர்களாயும், இன்முகம் உள்ளவர்களாயும் இருப்பர். ரோகிணியில் புத்ர-பௌத்ராதி, சம்பத்து ஏற்படும். உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதிகளில் விவாஹம் நடத்தினால் அந்தத் தம்பதிகள் மேன்மேலும் சுகம் பெறுவர். புத்ர-பௌத்ராதி லாபம், தாஸிதாஸர்கள் (பணியாட்கள்) உள்ளவர்களாக இருப்பர்.

## விவாஹத்தில் விலக்கத்தக்கவை

சுக்ல - கிருஷ்ணபக்ஷ (வளர்பிறை, தேய்பிறை) முடிவிலும், உத்தராயண - தக்ஷிணாயண முடிவிலும், சந்திரன் பலவீனனாக இருக்கும் காலத்திலும், வஸந்த - கிரீஷ்ம முதலான ருது முடிவுறும் காலத்திலும், வியதீபாதம், சைத்ர, துலா, விஷு காலத்திலும், ஷடசீதி முகம் வருட முடிவு காலத்திலும், ப்ருஷ்டோதயமெனப்படும் மேஷம், ரிஷபம், கடகம், தனுஸ், மகரம் ஆகிய லக்னத்திலும், குரு நீசத்வம் பெற்றபோதும், வானிலிருந்து கொள்ளி (எரிதல் என்றும் சொல்லலாம்) இடி விழும் காலத்திலும், பூகம்பம், திக்தாகம் உள்ள நக்ஷத்திரத்திலும், ஜன்ம நக்ஷத்திரத்திலும், 10வது, 3, 5, 7வது நக்ஷத்திரத்திலும், பாப கிரஹத்திலிருந்து விடபட்ட நக்ஷத்திரத்திலும், பாப கிரஹத்தின் ஸம்பந்தம் ஏற்படப்போகிற நக்ஷத்திரத்திலும், பாப கிரஹம் இருக்கும் நக்ஷத்திரத்திலும் விவாஹம் விலக்கத்தக்கது.

பக்ஷச்சித்திரையில் விவாஹம் நடந்தால் தம்பதிகளின் உறவில் தீமை ஏற்படும். சந்ததி ஹானியும் ஏற்படும். ரிக்தையில் ஏழ்மை நிலை ஏற்படும். சந்திரன் பலஹீனனாக இருப்பின் திரவிய நஷ்டம். ருதுவின் முடிவில் செய்தால் புத்ர நாசம். விஷுவத்தில் வியாதி. வியதீபாதத்தில் மரணம். ஷடசீதி முகத்தில் கலஹம். வருட முடிவில் தனக்கோ, தன்னைச் சேர்ந்தவருக்கோ நாசம். அயனத்தின் முடிவில் மரணம்.

பிருஷ்டோதய ராசி லக்னமானால் தாபம் ஏற்படும். குரு நீசத்தன்மை பெற்ற காலத்தில் திருமணம் செய்தால் புருஷன் நீசனாவான்.

உல்கா பாதம் (கொள்ளி விழுதல்) ஏற்படும் காலத்தில் செய்யின் ராஜதண்டனை ஏற்படும். பூகம்ப நக்ஷத்திரத்தில் செய்தால் ஸ்தான நாசம். இடிவிழுந்த நக்ஷத்திரத்தில் செய்தால் கிராமத்தில் தீ விபத்து ஏற்படும். திக்தாஹ நக்ஷத்திரத்தில் அக்னி பயம் உண்டாகும். 22-வது நக்ஷத்திரத்திலும் ஜன்ம நக்ஷத்திரத்திலும் மரணம். 10-வது (அனுஜன்மம்) 5-வது, 7-வது தாரையில் செய்தாலும் பதிநாசம். 3-வது தாரையில் அன்புக் குறைவு ஏற்படும்.

பாப கிரஹம் விட்ட நக்ஷத்திரத்தில் விரோதம். பாப கிரஹம் வரவிருக்கும் நக்ஷத்திரத்தில் பசி, பாப கிரஹத்துடன் கூடிய தாரையில் செய்யின் ஏழ்மை சந்திர - சூர்ய கிரஹண காலத்திலும், தூமகேது (வால் நக்ஷத்திரம்) நக்ஷத்திரத்தில் செய்தால் ஆறு மாதத்திற்குள் மரணம் (சூரியனோடு சந்திரன் சேர்ந்திருக்கையில்) அமாவாஸையில் செய்தால் தாரித்ரியம். செவ்வாயுடன் சந்திரன் சேர்ந்திருக்கும்போது செய்தால் வியாதி, மரணம். புதனுடன், சந்திரன் கூடியிருக்கும்போது செய்யின் குழந்தை பிறக்காது. குருவுடன் சந்திரன் கூடியிருக்கும்போது செய்யின் தௌர்பாக்யம். சுக்ரனுடன் சந்திரன் கூடியிருக்கும் போது செய்தால் மணப்பெண்ணுக்குச் சக்களத்தி ஏற்படலாம். சந்திரன் சனியுடன் கூடியிருக்கத் திருமணம் செய்தால் ஸந்யாசம். ராகுவுடன் சேர்ந்திருக்க தம்பதிகளுக்குள் கலஹம். சந்திரன் கேதுவுடன் சேர்ந்திருக்கத் திருமணம் செய்யின் நித்திய துக்கம். சந்திரன் பாபியின் ராசியில் இருக்க தம்பதிகளுக்கு நாசம். லக்னத்திற்கு 6, 8, 12-ல் சந்திரன் இருந்தால் மரணம்.

முதலில் ஜனித்த ஆண் ஆயினும், பெண் ஆயினும் ஜன்ம மாதம், ஜன்ம நக்ஷத்திரம், ஜன்ம வார நாளில் (கிழமை) திருமணம் தவிர்க்கப்படவேண்டும். மற்ற குழந்தைகளுக்குச்

செய்யலாம். லக்னத்தில் புதன் இருந்தால் நூறு பிழைகளையும், சுக்ரன் லக்னத்திலிருந்தால் ஆயிரம் தோஷங்களையும் விலக்குவார். குரு லக்னத்தில் மூன்று லக்ஷம் தோஷங்களையும் விலக்குவார்.

## பதினைந்தாவது அத்யாயம்

# ருதுபலன்

மாதம், நக்ஷத்திரம், திதி, கிழமை, அம்சம், லக்னம், பார்த்த காலம் ஆகிய இவைகளுக்குரிய ருது பலனைக் கூறப்போகிறேன்.

***மாத பலன் :***

சித்திரை மாதத்தில் ருதுவானால் விதவை. வைகாசியில் பதிவிரதை. ஆனியில் சுகபோகம் பெறுபவள். ஆடியில் நடத்தைக் கெட்டவள். ஆவணியில் பல ஆண், பெண் குழந்கைதள் பெறுவாள். புரட்டாசியில் செல்வச் செழுமை உள்ளவள். ஐப்பசியில் வைதவ்யம் உள்ளவள். கார்த்திகையில் பரபுருஷ நாட்டமுள்ளவள். மார்கழியில் கெட்ட நடத்தை உள்ளவள். தை மாதத்தில் பதிவிரதை. மாசியில் பொருள் நஷ்டம். பங்குனியில் பல குழந்தைகள் பெறுவாள்.

***கிழமை பலன் :***

ஞாயிற்றுக்கிழமையில் ருதுவானால் குழந்தை ஏற்படாது. திங்கட்கிழமையில் பதிவிரதையாயிருப்பாள். செவ்வாய்க் கிழமையில் புருஷனுக்கு நாசம் ஏற்படும். புதன்கிழமையில் பல புத்ரர்களைப் பெறுபவள். வியாழக்கிழமையில் நன்னடத்தையுள்ளவள். வெள்ளிக்கிழமையில் குழந்தைகள் உள்ளவள். சனிக்கிழமையில் ஏழ்மை (தரித்திரம்.)

## நக்ஷத்திர பலன் :

அச்வினியில் ருதுவானால் விதவை, பரணியில் புத்ர ஸம்பத்து ஏற்படும். கார்த்திகை நக்ஷத்திரத்தில் குழந்தை இறந்து பிறக்கும், ரோகிணியில் குழந்தை பெறுவாள் (ஸுகமேததே - என்ற பாடபேதம் உண்டு. அதன்படி ஸுகவிருத்தி ஏற்படும்). மிருகசீர்ஷத்தில் புத்ரலாபம், திருவாதிரையில் வியாதி பீடை. புனர்பூசத்தில் புருஷனுக்கு ஸுகம். புருஷ ஸுகம் பெறுவாள். பூசத்தில் ராஜபோகம் ஏற்படும். (அரசப் பெண்டிருக்குரிய சுகபோகம்). ஆயில்யத்தில் குழந்தை இறந்து பிறக்கும். மகத்தில் குழந்தை விருத்தி. பூரத்தில் பாக்யவதி. உத்தர நக்ஷத்திரத்தில் ஸுகம் ஏற்படும். ஹஸ்த நக்ஷத்திரத்தில் மிகுந்த சுகம். சித்திரையில் சுகம் ஏற்படும். ஸ்வாதியில் குடும்பத் தலைவியாவாள். விசாகத்தில் வைதவ்யம். அனுஷத்தில் ஸௌக்யம். கேட்டையில் பிற புருஷனுடன் சகவாஸம். மூலத்தில் வியபிசாரம். பூராடத்தில் செல்வம் மிகுந்தவள். உத்திராடத்தில் சௌக்யம். திருவோணத்தில் அதிகம் விருத்தி. அவிட்டத்தில் ஸகல போகங்களும் பெறுபவள். சதயத்தில் செல்வமற்றவள். பூரட்டாதியில் உயர்ந்த புத்ரலாபம். உத்திரட்டாதியில் செல்வம் மிகுந்தவள். ரேவதியில் கணவனுக்கு ஹிதமானவளாக இருப்பாள்.

## திதி பலன் :

பிரதமையில் ருதுவானால் கணவனுக்கு ஆகாது. த்விதீயையிலும், திருதீயையிலும் சுகம் மிகுந்தவள். சதுர்த்தியில் பரபுருஷனின் தொடர்பு. பஞ்சமியில் புத்ரலாபம். ஷஷ்டியில் புத்ர நாசம். ஸப்தமியில் சுகபோகங்களைப் பெறுபவள். அஷ்டமியில் வியாதி பீடை. நவமியில் தரித்திரம். ஏகாதசியில் சுகபோகம். துவாதசியில் விதவை. திரயோதசியில் ஸுகம். சதுர்தசியில் பிற புருஷர்களின் அன்பிற்கு உரியவள். பௌர்ணமியில் எல்லா நன்மைகளும் நிரம்பியவள். அமாவாஸையில் குலநாசம்.

### லக்ன பலன்

மேஷ லக்னத்தில் ருதுவானால் தன்மனம் போனபடி நடப்பவள். ரிஷப லக்னத்தில் ஸுகபோகம். மிதுனத்தில் ஸகல சம்பத்தும் ஏற்படும். கடகத்தில் கெட்ட நடத்தையுள்ளவள். சிம்மத்தில் புத்ர லாபம். கன்னியில் செல்வம் மிகுந்தவள். துலாத்தில் சாமர்த்தியமுள்ளவள். விருச்சிகத்தில் பரபுருஷனிடம் இச்சையுள்ளவள். தனுஸின் முன்பாதியில் கெட்ட நடத்தை; பிற்பாதியில் பதிவிரதை. மகரத்தில் கௌரவக் குறைவு, கும்ப லக்னத்தில் தான்யம் மிகுந்தவள். மீனத்தில் சாமர்த்தியசாலி.

### அம்ச பலன்

செவ்வாயின் அம்சத்தில் ருதுவாக வேலைக்காரி. சுக்ராம்சத்தில் தரித்திரை. புதனின் அம்சத்தில் ஸகல போக லாபங்களும் ஏற்படும். சந்திரனின் அம்சத்தில் துர்நடத்தை உள்ளவள். சூர்ய அம்சத்தில் மேதாவிலாஸமுள்ளவள். குரு அம்சத்தில் ஸௌபாக்யம். சனி அம்சத்தில் தரித்திரம்.

ருது லக்னத்தில் சூரியன் இருந்தால் மரணம். சந்திரன் இருந்தால் பெண் பிறக்கும். செவ்வாய் இருந்தால் கர்பம் கலையும். புதன் இருந்தால் புத்ரவதீ. குருவும், சுக்ரனும் இருந்தால் தீர்க்காயுஸ், ப்ரீதி, ஆரோக்யம் ஏற்படும்.

ருது லக்னத்தில் சனி இருந்தால் விரோதம். ராகு - கேது இருப்பின் ஸகலவித துயரங்களும் சம்பவிக்கும்.

ருது லக்னத்திற்கு 7-ல் சூரியனிருப்பின் வைதவ்யம். சுக்லபக்ஷ சந்திரன் இருந்தால் க்ஷேமம். கிருஷ்ணபக்ஷ சந்திரன் இருந்தால் நாசம். (க்ஷயரோகம் என்றும் சொல்லப்படுகிறது.) ருது லக்னத்திற்கு 7-ல் செவ்வாய் இருக்க புத்ரநாசம். புதன்

இருக்க புத்ரலாபம், குரு இருக்க ஆயுஸ், செல்வம் அதிகமாகும். சுக்ரன் இருக்க ஸகல அர்த்தலாபம். சனி இருந்தால் மலடி. ராகு இருப்பின் மரணம்.

சூரியன், செவ்வாய், சனி இவர்களின் வாரம். வர்க்கம் இவற்றில் ருதுவானாலும், ருது லக்னத்தை மேலே கூறப்பட்டுள்ளவர்கள் பார்த்தாலும் முறையே மரணம், கர்பச் சிதைவு, முறைகேடுகள் ஏற்படும்.

புதன், சுக்ரன், குரு இவர்களின் வார வர்கங்களில் ருதுவானாலும் அல்லது ருது லக்னத்தை மேலே கூறப்பட்டவர்கள் பார்த்தாலும் ஸத்புத்ர லாபம், ஸுகம், ஆரோக்யம், நீண்ட ஆயுள் ஏற்படும். முற்பகலில் ஏற்பட்டால் சுபம். நண்பகலில் ஏற்படின் மத்யமம். பிற்பகலிலும், இரவிலும் அசுபமான பலன்கள் ஏற்படும். ஜன்ம நக்ஷத்திரத்திற்கு ப்ரதிகூலமான நக்ஷத்திரங்களில் ருதுவானாலும், ஜன்ம லக்னம், எட்டாம் இடம் இவற்றில் சந்திரன் இருந்தாலும், சந்திராஷ்டம தினங்களில் ருதுவானாலும் பலவித துன்பங்களை அடையவேண்டியதாகும்.

ஒரு ஸ்த்ரீ ருதுவாகி ஸ்நானம் செய்ததும் எப்படிப்பட்ட புருஷனைப் பார்க்கிறாளோ அப்படிப்பட்ட குழந்தையையே அவள் அடைகிறாள். எனவே எந்த ஸ்த்ரீயும் ருதுவாகி ஸ்நானம் செய்ததும் தன் கணவனையே பார்த்தல் அவசியம்.

## பதினாறாவது அத்யாயம்

புருஷன் வேதங்கள், சாஸ்திரங்கள் முதலானவற்றில் சொல்லப்பட்டுள்ள சுபவேளையில் புண்ய தீர்த்தங்களுடன் கூடிய அழகியதாயும், சந்தன புஷ்பாதிகளால் அலங்கரிக்கப் பட்டதாயும் உள்ள இடத்தில் மகிழ்ச்சியுற்ற மனத்தினனாகத் தம் மனம்கவர்ந்த மனைவியைச் சேரவேண்டும். தினமும் 108

தடவை சுதர்ஸன மஹாமந்த்ரத்தை ஜபிக்க ஸத்புத்ரனை அடைவான். "விஷ்ணுர் யோனிம்" எனும் மந்த்ரத்தையும் ஜபித்து ஸ்த்ரீயை அடைபவன் உத்தம ஆண் மகவைப் பெறுவான்.

இவ்வாறும், மேலும் பலவாறும் சாஸ்திரங்களில் நிஷேக விதிகள் கூறப்பட்டிருப்பினும் காலத்தை அனுசரித்து என்னால் இவ்விஷயம் விரிவாகச் சொல்லப்படவில்லை. அதுபற்றிய கருத்துக்களையறிய ஆவலிருப்பின் பல சாஸ்திர நூல்களைக் கண்டுகொள்க.

## பதினேழாவது அத்யாயம்

# பும்ஸவனம்

இனி, பும்ஸவனம் பற்றிக் கூறவிருக்கிறேன். கர்ப்பம் நிச்சயமான பிறகு இந்த பும்ஸவன கார்யத்தைச் செய்தல் வேண்டும். மூன்றாவது மாதத்தில் கர்ப்பம் நிச்சயப்படும் என்பதால் அப்பொழுது இதனைச் செய்விக்கலாம். அப்பொழுது இயலாத பக்ஷத்தில் 4-வது அல்லது 6-வது, அல்லது 8-வது மாதத்தில் செய்வித்தல் வேண்டும்.

பூசம் அல்லது திருவோணம் நக்ஷத்திரத்திலோ பும்ஸவன கார்யத்தைச் செய்யலாம். சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமீ, (நவமீ) சதுர்தசீ, பௌர்ணமீ, அமாவாஸ்யை, மாதப்பிறப்பு நாட்கள் விலக்கத்தக்கவை. மிதுனம், கடகம், கன்னி லக்னங்கள் தவிர பிற லக்னங்கள் சுபமே. கன்யா லக்னத்திற்குச் சுபகிரஹ பார்வை இருப்பினும் அந்த லக்னம் விலக்கத்தக்கது. வியாழன், வெள்ளி, புதன், திங்கட்கிழமைகள் சிறந்தவை. பும்ஸவன லக்னத்திற்கு 8-ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. லக்னத்தில் அல்லது 12-ல் சந்திரன் இருப்பது இதற்குச் சிறந்தது. லக்னம், சுக்ரனால் பார்க்கப்பட்டாலும் உத்தமமே.

சுபக்ரஹங்கள் கேந்திர - த்ரிகோணங்களில் இருக்க நன்மையுண்டு. ஆனால் அவை (அவிடங்கள் ) பாபிகளின் க்ஷேத்திரமாக இருத்தல் கூடாது. பாபிகள் 3, 6, 11-ல் இருப்பின் அது பும்ஸவனத்திற்குச் சுபமாகும்.

சந்திரன் பலமுள்ளவனாக இருக்கும்பொழுது பும்ஸவனம் செய்யப்படவேண்டும். பும்ஸவன கார்யம் தனியாகச் செய்வதாக இருந்தால் அதற்கு உரிய காலம் அறிவதற்காகத் தனித்துக் கூறப்பட்டது.

'ஸீமந்த' த்துடன் நடத்துவதாகில் ஸீமந்தத்திற்கு எந்தெந்த திதி, வாரம், நக்ஷத்திரம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்தந்த திதி, வார, நக்ஷத்திர, தினத்திலேயே (கிழமை) பும்ஸவன கார்யங்களைச் செய்யலாம்.

## ஸீமந்தம்

ஸீமந்தத்திற்குரிய காலத்தைச் சொல்லவிருக்கிறேன். 4-வது அல்லது, 6-வது அல்லது, 8-வது மாதம் வந்ததும் அந்த மேலே குறிப்பிட்ட மாதங்களில் ஸீமந்தோன்னயனம் செய்யப்படவேண்டும்.

ஸௌரமாத ரீதியில்தான் ஸீமந்தோந்நயனம் செய்யப்பட வேண்டும். போதாயனர்களுக்கும், கௌஷீதகர்களுக்கும் 5-வது அல்லது, 7-வது மாதங்கள் ஸீமந்த விஷயத்தில் முக்ய காலமாகும்.

காலாதிக்ரமம் ஏற்படும் காலத்தில் 9-வது மாதத்திலோ, பத்தாவது மாதத்திலேயே கூட ஸீமந்தம் செய்யலாம். பத்தாவது மாதத்திலும், பிரஸவகாலம் வரையிலும் இதைச் செய்யலாம் என்பது சங்க முனிவரின் கருத்தாகும்.

ஸீமந்த கர்மா என்பது கர்ப்பத்திற்குச் செய்யப்படும் கர்ப்ப சம்பந்தப்பட்ட பாத்ர ஸம்ஸ்காரமேயன்றி புருஷனுக்கோ, ஸ்த்ரீக்கோ செய்யப்படுகிறதல்ல. ஆதலால் முதல் கர்ப்ப காலத்திலேயே இந்த ஸீமந்த ஸம்ஸ்கார கர்மா செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு கர்ப்ப காலத்திலும் ஸீமந்தம் செய்யப்படவேண்டியதுதான் என்றாலும் ஒருமுறை (முதலாவது கர்ப்ப காலத்தில்) இந்த ஸீமந்த ஸம்ஸ்காரம் செய்யப்பட்டால் பிறகு ஏற்படும் எல்லா கர்பங்களுமே ஸம்ஸ்காரம் செய்யப்பட்டதாக ஆகும்.

## ஏற்கத்தக்க நக்ஷத்திரங்கள்

ரோகிணீ, பூசம், ஹஸ்தம், புனர்பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, திருவோணம், ரேவதி, மிருகசீர்ஷம் இந்த நக்ஷத்திரங்களில் சுபாம்சத்தில் ஸீமந்தோன்னயனம் செய்யப்படவேண்டும்.

நெருக்கடியான நிலை, நிர்பந்தம் ஏற்பட்டால் அச்வினி, அனுஷம், மூலம் இவைகளில் ஸீமந்தம் செய்யலாம் என்று சில ஜ்யோதிஷம் அறிந்த பெரியோர்கள் கருதுகிறார்கள்.

## விலக்கத்தக்க திதிகள்

சதுர்தசி. சதுர்த்தி, ஷஷ்டி, த்வாதசி, அஷ்டமீ, நவமீ, அமாவாஸ்யை ஆகிய இந்த திதிகளை ஸீமந்த கார்யத்தில் விலக்கத்தக்கவை. சந்திரன் பலமுள்ளவனாக இருந்தால் சதுர்த்தி, சதுர்தசி, பௌர்ணமியையும்கூட சிலாக்யமானவை எனச் சிலர் கூறுகிறார்கள்.

## ஏற்கத்தக்க வாராம்சங்கள்

வியாழன், வெள்ளி, புதன், திங்கள் ஆகிய கிழமைகளும், அவர்களின் அம்சங்களும் உயர்ந்தவை.

## விலக்கத்தக்க வாராம்சங்கள்

செவ்வாய், ஞாயிறு, சனி வாரங்களும், அவர்களின் அம்சங்களும் விலக்கத்தக்கவை.

விருச்சிகம், ஸிம்ம லக்னங்களில் ஸீமந்தம் செய்யப் படலாகாது. மற்ற (ராசிகள்) லக்னங்கள் உத்தமம். ஸீமந்த லக்னத்திற்கு 8-ஆமிடத்தில் கிரஹங்கள் இருத்தல் கூடாது. மேற்படி லக்னத்திற்கு அஷ்டமாதிபதி. கேந்திரத்தில் இருந்து சுபர்களாலும் பார்க்கப்பட்டால் அஷ்டம ஸ்தானத்தில் உள்ளமைக்கான தோஷம் விலகும்.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 3, 5, 7-வது நக்ஷத்திரங்களிலும், 22-வது நக்ஷத்திரத்தலும் சந்திராஷ்டமும், ஜன்ம, அனுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திரத்திலும் ஸீமந்தம் செய்யப்படலாகாது.

ஸீமந்தம், கர்ப்பமாஸத்தை முக்யமாகக் கொண்டது என்பதால் குரு, சுக்ர அஸ்தமனம் அதிமாஸம் முதலான தோஷங்கள் ஏதும் ஸீமந்த கார்யத்தில் காலபலத்தால் ஏற்படுவதில்லை.

### பதினெட்டாவது அத்யாயம்

## பிரஸவ கிருஹ அமைப்பு

இதற்குமேல் பிரஸவ கிருஹ லக்ஷணம் பற்றி உரைக்கப் போகிறேன். இந்த விஷயம் 16-வது அத்யாயம்போல் இந்தக்

காலத்திற்குப் பொருத்தமற்றது என்றே சொல்லவேண்டும். விஞ்ஞான யுகமாகிய இக்காலத்தில் நகரத்திலேயே இருப்பினும், ராஜகிருஹம் போன்ற தனது சொந்த கிருஹத்தை விட்டுவிட்டு நகரங்களில் பல ஸ்த்ரீ - புருஷர்களின் துணையுடன் நடத்தப்பெறும் விஞ்ஞான வசதிகள் உள்ள நாகரிக வைத்யசாலைகளில் யார் யாரோ பிரஸவித்து விட்டுச் சென்ற இடத்தில் கர்ப்பிணி - ஸ்த்ரீகள், தலைப்பிரஸவமானாலும் சரி, கடைப்பிரஸவமானாலும் சரி, பிரஸவத்திற்காகச் சேர்க்கப்படுவதையே விரும்புகிறார்கள். பல லௌகிக ஸௌகர்யங்கள் காரணமாகச் சிசுவின் ஜனன லக்னம் கூட நாகரிக வைத்யர்களாலேயே நிர்ணயிக்கப்படுகிற காலம் இது. எனவே, இப்பகுதி இக்காலத்திற்கு உபயோகமற்றது என்றாலும், இப்படி ஒரு பழக்கம் ஒரு காலகட்டம் வரை இருந்திருக்கிறது என்பதனை அறிய உதவுகின்றது என்பதற்காகவேனும் கூறுவோம்.

பத்தாவது (அதாவது பிரஸவ ஸமயம்) நெருங்கும் பொழுது பிரஸவ கிருஹத்தை அமைக்கவேண்டும்.

மிருகசீர்ஷம், ரேவதி, புனர்பூசம், ஹஸ்தம், ரோகிணி, அனுஷம், ஸ்வாதி, உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, சித்திரை, அச்வினி, திருவோணம் ஆக இந்த நக்ஷத்திரங்களில் செய்ய உத்தமம்.

சதுர்த்தி, பௌர்ணமி, அமாவாஸ்யை, அஷ்டமீ, நவமீ, சதுர்தசி (மாஸப்பிறப்பு) இவை தவிர பிற திதிகள் சுபம்.

சகுனி, சதுஷ்பாத், நாக, கிம்ஸ்துக்ன விஷ்டி கரணங்கள் விலக்கத்தக்கவை.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களும், சந்திர, புதன், குரு, சுக்ர அம்சங்களும் உத்தமம்.

சூரியன், செவ்வாய், சனி வார அம்சங்கள் விலக்கத் தக்கவை.

ஸ்திர ராசி லக்னங்களான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், உத்தமம். உபயராசி லக்னங்களான மிதுன, கன்னி, தனுஸ், மீனம் ஆகியவை மத்யமம். சரராசி லக்னங்களான மேஷம், கடகம், துலாம், மகரம் அதமம்.

ப்ரஸவ கிருஹம் இன்ன திசைகளில்தான் அமைக்கப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. வீட்டின் வசதி, தமது வசதிகளுக்கு ஏற்ற விதத்தில் அமைத்துக்கொள்ளலாம்.

### பத்தொன்பதாவது அத்யாயம்

## கிருஷி ஆரம்பம் (விவசாய வேலை)

இதற்குமேல் மிக உயர்ந்த கிருஷி - விவசாயப்பணி தொடக்கம் பற்றி கூறவிருக்கிறேன். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே உலகின் நிலை அமைந்திருப்பதால் விவசாயமே மிக முக்யமானது. ஆகையால் அறிவாளியாக இருப்பவன், மிக்க சிரத்தை (முயற்சியை) மேற்கொண்டு பிரதி ஆண்டிலும் விவசாய வேலையைத் தொடங்கவேண்டும். முதலில் விவசாயத்திற்கான பூமியில் நல்ல நாளில், நேரத்தில் பிரவேசம் செய்து, பிறகு விவசாய வேலையைத் தொடங்க வேண்டும் என்பதால் விவசாய பூமியில் பிரவேசம் செய்வதற்கான நல்ல நக்ஷத்திரங்கள் முதலானவை கூறப்படுகின்றன. உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, மகம், ஸ்வாதி, பூசம், அனுஷம், சித்திரை, திருவாதிரை, பரணி ஆகிய நக்ஷத்திரங்களில் விவசாய பூமியில் பிரவேசம் செய்ய உத்தமம்.

ஒற்றைப்படை திதிகள் நவமீ தவிர உத்தமம்.

இரட்டித்த திதிகள் த்விதீயை, தசமீ தவிர பிற திதிகள் விலக்கத்தக்கவை. (பிரதமை, த்விதீயை, திருதியை, பஞ்சமீ, ஸப்தமீ, தசமீ, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள் உத்தமம்.) சில தெய்வக்ஞர்கள் பத்ரைகளும் கூடாதவை எனக் கூறுகிறார்கள்.

(பத்ரை = த்விதீயை, ஸப்தமீ, த்வாதசி ஆகியவை.) செவ்வாய், புதன், திங்கள், வியாழக்கிழமைகள் உகந்தவை. சிலர் சனிக் கிழமையும் உகந்தது என்று கூறுகிறார்கள்.

ரிஷபம், விருச்சிகம், கன்னி இந்த ராசிகள் (லக்னங்கள்) விவசாய நிலத்தில் பிரவேசிக்க உத்தமம்.

இவ்வாறு நல்ல நாள், நக்ஷத்திரம், லக்னத்தில் விவசாய நிலத்தில் பிரவேசம் செய்தல் வேண்டும்.

சுப வாரங்கள் யாவும் உத்தமம். அசுபர்களின் வாரங்கள் விலக்கத்தக்கவை.

சிம்ம லக்னமோ, ஸூர்யன் இருக்கும் ராசியிலோ (லக்னத்திலோ) கார்த்திகை, உத்தரம், உத்தராடம் நக்ஷத்திரங்களிலோ பிரவேசம் செய்து உழவு ஆரம்பிக்க உத்தமம்.

மூலம், புனர்பூசம், உத்தராடம், உத்தரம், உத்திரட்டாதி, ரோகிணி, அனுஷம், ரேவதி, பூசம், ஹஸ்தம் இவை உழவு தொடங்க உத்தமம்.

திருவோணம், ஸ்வாதி, சதயம், அச்வினி, அவிட்டம், சித்திரை, மிருகசீர்ஷம், மகம், விசாகம் இவைகள் சிறந்தவை என்று சிலர் கூறுகிறார்கள்.

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமீ, நவமீ, துவாதசி, சதுர்தசி, அமாவாஸ்யை தவிர மற்ற திதிகள் யாவும் உத்தமம்.

நவமியில் ஏர் உழவு தொடங்கினால் பயிர் நாசமாகும். சதுர்த்தியில் பயிர்களுக்குப் பூச்சிகள் ஏற்படும். சதுர்தசியில் ஏர் உழவு தொடங்கினால் நிலத்தின் எஜமானன் நாசம். பாபிகள் இருக்கும் லக்னத்தில் உழவு ஆரம்பம் செய்தால் மரணம்.

ரிஷபம், கடகம், மகரம், மீன, மிதுன லக்னங்களில் ஏர் பிடிக்க உத்தமம். மேஷம், கும்பம், விருச்சிகம், சிம்மம் இவை தகாதவை. விலக்கத்தக்கவை. மற்றவை மத்யமம்.

***ஏர் பிடிக்க லக்ன பலன் :-*** மேஷ லக்னத்தில் பசு ஹானி. கடகத்தில் சுபபலன். சிம்மத்தில் நாசம். துலாத்தில் பயிர்கள் செழிக்கும். மிதுனம், கன்னி, விருஷபம் இவைகளில் விசேஷ பலன் உண்டு. விருச்சிகத்தில் தீயினால் நாசம் ஏற்படும். தனுஸில் ஆரம்பிக்க தான்ய விருத்தி. மகரத்தில் பலவிதங்களிலும் சுப பலன்கள். கும்பத்தில் ஆரம்பம் செய்தால் திருடர் பயம். மீனத்தில் சுபிக்ஷம். இவ்வாறு விவசாய ஆரம்ப விஷயத்தில் பலன்கள் கூறப்படுகின்றன.

வடக்கு முகமாகவோ, கிழக்கு முகமாகவோ நின்று விவசாய வேலையைத் தொடங்கவேண்டும். (உழவானாலும் அப்படியே.) உழவு செய்வதென்றால் முதல் நாளில் (விவசாய வேலை ஆரம்பம் செய்து உழவும் போடும் நாளில்) ஒன்று, மூன்று அல்லது ஐந்து உழவுப் பதிவுக் கோடுகள் ஏற்படும் வகையில் (சால்கள்) மட்டுமே உழவு செய்தல் வேண்டும். ஆரம்ப தினத்தில் அதற்குமேல் கூடாது. உழவு செய்வதாகில் கலப்பையில் கொம்பு - குளம்பு முறிந்ததும், வால் அறுந்ததும், பொன் நிறமாயுள்ளதுமான காளைகளைப் பூட்டக்கூடாது. சிகப்பு நிறம், கருப்பு நிறம் உள்ள காளைகளைப் பூட்டலாம். உழவு செய்யும்போது அந்த வயலில் ஸர்ப்பம் தென்பட்டால் அந்த நிலம் பிறருக்குப் போய்ச் சேருமென்று ஜ்யோதிஷ வித்வான்கள் கூறுகிறார்கள்.

உழவு செய்யும்பொழுது அந்த வயலில் ஆமை தென்பட்டால், அந்த வயல் மிகுந்த (தான்ய) லாபத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உழவு செய்யும்பொழுது இழுக்கப்படும் கலப்பை மண்ணைக் கிளறுகிற எந்த இடத்தில் சாம்பல், கரி, உமி, எலும்பு, தலைமயிர், பல் இவைகள் தென்படுகின்றனவோ, அதை விட்டுவிடவேண்டும். மேற்கொண்டு உழவேண்டாம். இம்மாதிரி தோஷம் ஏற்படும் சமயத்தில் நெய், பால் கலந்து அந்த ரேகையில் உழவுக் கோட்டில் தெளித்தால் தோஷங்கள் விலகும். அவ்வாறு செய்வது விவசாயிக்கு நன்மையையும் தரும்.

## இருபதாவது அத்யாயம்

கலப்பை மேழி ஏர்க்கால் நோக்கால் இவைகள் சேர்ந்ததாக ஒரு சக்ரமெழுதி அதில் சூரியன் இருக்கும் நக்ஷத்திரம் முதலாக எழுதவேண்டும். ஏர்க்கால், கலப்பை, மாடுகள் நிற்குமிடம் இவைகளின் இரண்டு பக்கங்களிலும் மும்மூன்று நக்ஷத்திரங்கள், நுகக்காலில் இரண்டு நக்ஷத்திரங்கள், ஏர்க்காலின் நடுவில் ஐந்து நக்ஷத்திரங்கள் எழுதவேண்டும்.




உழவு ஆரம்பிக்கும் நக்ஷத்திரம் ஏர்க்காலில் இருந்தால் மாடுகளுக்குத் தீமை ஏற்படும். மாடுகள் இருக்கும் இடத்தில் இருந்தால் யஜமானனுக்குத் தீமை ஏற்படும். கலப்பை மேழி, நுகக்கால் இவைகளில் இருந்தால் ஸம்பத்து உண்டாகும்.

(சூரியன் இருக்கும் நக்ஷத்திரத்திலிருந்து 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 26, 27-வது நக்ஷத்திரங்கள் நன்மை தரும். 13-வது முதல் 18-வது முடியவுள்ள நக்ஷத்திரங்கள், நிலத்தின் சொந்தக்காரருக்கும்; மற்றவை பசுக்களுக்கும் தீமை பயக்கும்.

உழும்பொழுது கலப்பை முறியுமானால் குலநாசம் ஏற்படும். கலப்பைப்பிடி முறிந்தால் ஸ்த்ரீ நாசம். நுகத்தடி முறிந்தால் யஜமானருக்குத் தீமை ஏற்படும். "சமீ" (The Pin of a Yoke) பழுதுற்றால் பெண்களுக்கு நாசம். முனை முறிந்தால்பிள்ளைகளுக்கு ஆகாது. ஜங்கா முறிந்தால் சகல காரிய ஸித்தி. ஸகல தான்யங்களும், சம்பத்துக்களும் நிறையும். கழுத்துப் பகுதி முறிந்தால் தான்யங்களுக்குத் திருடர் பயம் ஏற்படும். நுகத்தடி துணைப்பகுதி முறிந்தால் (செல்வம்) பணம் நாசம். (செலவு மிகும்.) கால் பகுதியில் (பாதம்) முறிந்தால் மேன்மேலும் விருத்தி. கயிறு (உழவு மாட்டின் தலைக்கயிறு உள்பட அறுந்தால் நன்மையே ஏற்படும்.

இதற்குமேல் விதை விதைத்தல் எனும் உத்தமமான விஷயத்தைக் கூறப்போகிறேன்.

உரிய காலத்தில் விதை விதைத்தல் நற்பயனைக் கொடுக்கும்.

## விதை விதைக்க ஏற்ற நக்ஷத்திரங்கள்

சதயம், திருவோணம், ஸ்வாதி, பூசம், விசாகம், உத்தரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரோகிணி, மூலம், அனுஷம், ஹஸ்தம், ரேவதி, மகம் ஆகிய இந்த 14 நக்ஷத்திரங்களில் விதை விதைக்க உத்தமம். அச்வினி, புனர்பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம் நான்கு நக்ஷத்திரங்களில் விதை விதைக்க மத்யமம்.

## கூடாத நக்ஷத்திரங்கள்

பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய 9 நக்ஷத்திரங்கள் விதை விதைப்பதற்கு ஏற்றவையன்று.

## கிழங்குகள் விதைக்க ஏற்ற நக்ஷத்திரங்கள்

விசாகம், பரணி, மூலம், கிருத்திகை, மகம், பூரம், சித்திரை, கேட்டை, பூராடம், பூரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்களில் கிழங்கு விதைகள் விதைக்க நல்லது.

## பழம், புஷ்பம் தரும் செடி கொடிகள் நடுவதற்கு

ஸ்வாதி, கேட்டை, ஹஸ்தம், புனர்பூசம், அனுஷம், மிருகசீர்ஷம், ரேவதி, சித்திரை ஆகிய நக்ஷத்திரங்களில் பழம், புஷ்பம் தரும் செடிகளையும், கொடிகளையும் நடுவதற்கும், மரங்களாகும் செடிகளை நடுவதற்கும் நல்லது.

## விசேஷ பலன்தரும் சில குறிப்பிட்ட நக்ஷத்திரங்கள்

ப்ருஹதீ எனப்படும் கண்டங்கத்திரி முதலானவற்றை பரணீ நக்ஷத்திரத்திலும், பாக்குக் கன்றுகளை அச்வினி நக்ஷத்திரத்திலும், மரங்களை ரோகிணீ நக்ஷத்திரத்திலும், கரும்பு வகைகளை புனர்வஸு நக்ஷத்திரத்திலும், பயறு முதலானவற்றை சித்திரை நக்ஷத்திரத்திலும், எள்ளு முதலானவற்றை அனுஷ நக்ஷத்திரத்திலும், கிழங்கு பலனைக் கொடுக்கும் கொடிகளை மூல நக்ஷத்திரத்திலும், உளுந்து போன்ற கருப்பு நிற தான்யங்களை சதய நக்ஷத்திரத்திலும்,

நெல் வகைகளைத் திருவோண நக்ஷத்திரத்திலும் பயிர் செய்ய உத்தமம்.

கும்ப லக்னத்தில் ஐந்தாவது அம்சத்தில் (லக்னத்தில்) சுக்ரன் இருக்கும்பொழுது தென்னை போன்ற பெரியதாகவும், அதிகமாகவும் காய்க்கக் கூடிய மரங்களைப் பயிர் செய்யலாம். மீனத்தின் கடைசி அம்சமான லக்னத்தில் அதிக நாள் பலன்களை அளிக்கக்கூடிய மரச்செடிகளை நடலாம். மீனத்தின் ஐந்தாவது அம்சமான லக்னத்தில் சுக்ரன் இருக்கும்பொழுது பூசணி விதை விதைத்தால் பூசணிக்காய்கள் மிகவும் பெரியதாகவும், அதிக அளவிலும் பலன் தரும்.

பிரதமை, த்விதீயை, சதுர்த்தி, ஷஷ்டி, ஸப்தமி, ஏகாதசி, துவாதசி, சதுர்தசி. நவமி, பௌர்ணமி, அமாவாசை ஆகிய நாட்கள் தவிர மற்ற திதிகளும், விஷ்டி, சதுஷ்பாதம், நாகவ, கிம்ஸ்துக்னம் ஆகிய கரணங்கள் தவிர, பவம் முதலிய கரணங்களும் உத்தமம்.

சுக்ரன், சந்திரன், புதன், குரு இவர்களுடைய வார அம்சங்கள் விதை விதைப்பதற்கு உத்தமம்.

ஞாயிற்றுக்கிழமையில் ஸூர்யோதய வேளையில் நெல் விதைகள் விதைக்க வேண்டும்.

திங்கட்கிழமையில் சந்திரன் லக்னத்தில் இருக்கும் பொழுது நீரில் பூக்கும் தாவரவிதைகளை விதைக்க நலம்.

செவ்வாய்க்கிழமைகளில், செவ்வாய் லக்னத்தில் இருக்க வரகு தான்யம் விதைக்க நன்மை உண்டு.

புதன்கிழமைகளில், புதன் லக்னத்தில் இருக்க பனை, பாக்கு முதலான மரக்கன்றுகள் ஊன்ற வேண்டும்.

வியாழக்கிழமையில் குரு லக்னத்தில் இருக்கும்பொழுது அதிக காலம் விளைச்சல் தரக்கூடிய பழமரக்கன்றுகளை நடவேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் சுக்ரன் லக்னத்தில் இருக்கும் பொழுது புஷ்பிக்கக்கூடிய மரக்கன்றுகளை நடவேண்டும்.

சனிக்கிழமையில் நண்பகலில் கருப்புநிற தான்யங்களை விதைத்துப் பயிர் செய்யவேண்டும்.

திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் விதை விதைத்துக் கன்றுகளை ஊன்றிப் பயிர்செய்தால் எல்லா தானியங்களும், பயிர்களும், காய்கனிகளைத் தரும் மரச்செடிகளும் நல்ல பயன் அளிக்கும். மற்ற கிழமைகளில் முன்பு குறிப்பிட்டவை மட்டும் பயன்தரும்.

ரிஷபம், ஸிம்மம், கடகம், மீனம், மகரம் ஆகிய லக்னங்கள் உத்தமம். தூலாம், மிதுனம், கும்பம் ஆகிய லக்னங்கள் மத்யமம்.

பாப கிரஹங்கள் 3, 6, 11ஆமிடத்தில் இருப்பின் நல்லது. மற்ற இடங்களில் அவர்கள் (பாபிகள்) இருப்பது சுபமல்ல. சந்திரன் 4, 2, 5, 7, 3, 10, 11 ஆகிய இடங்களில் இருப்பது சுபம். 8ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. 7-ல் சுக்ரன் இருத்தல் கூடாது.

சுக்ரன் இருக்கும் நக்ஷத்திரம் தொடங்கி அடுத்துள்ள மூன்று நக்ஷத்திரங்களிலும் பயிர்கள் பயிரிடப்பட்டால் குறைவற்றதாக இருக்கும். அதனை அடுத்த மூன்று நக்ஷத்திரங்களில் தொடங்கினால் நல்லதல்ல. வருவாய் குறையும்.

அதுமுதல் 12 நக்ஷத்திரங்களில் சுக சாதனப்பொருள்களான சந்தனம் இக்காலத்திய காபி, தேயிலை, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், குங்குமபூ முதலான பலன் தரும் மரங்கள், பயிர்கள்,

செடி, கொடிகள் பயிர் செய்ய உத்தமம் என்பதால் அப்படிப்பட்ட நல்ல நேரத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அதற்கு மேலுள்ள 6 நக்ஷத்திரங்களில் பயிர் செய்வது பயனில்லாத விளைச்சல் தரும். (தேங்காய் குலை தள்ளினாலும் காய்களின் உள்ளே தேங்காய் பருப்பு இராது. உளுந்து பயிர் செய்தால், காய் பிடித்தாலும் காயின் உள்ளே மணி இராது) அவற்றை அடுத்த 3 நக்ஷத்திரங்களில் பயிர் செய்தால் பயிர் அழியும்.

இவ்வாறு நன்கு நாள், நக்ஷத்திரம், திதி, நேரம் இவற்றைத் தேர்வு செய்து விதை விதைத்தல் வேண்டும்.

இங்கு கூறப்பட்ட நல்ல காலத்தில் விதை விதைக்கும் பணியைச் செய்தால் உத்தம பலன் உண்டு.

இதற்குமேல் அறுவடை பற்றிக் கூறுகிறேன். ஹஸ்தம், திருவாதிரை, மகம், ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, திருவோணம், ரேவதி, மிருகசீர்ஷம், பூசம், அனுஷம், பரணி, விசாகம் ஆகிய நக்ஷத்திர தினங்கள் அறுவடை தொடங்க நல்லது.

துவாதசி, ஏகாதசி, சதுர்த்தி, நவமி, சதுர்தசி, அமாவாஸ்யை, அஷ்டமீ ஆகிய திதிகளும், சகுனி முதலான கரணங்களும், விஷ்டியும் கூடாதவை. பிற நல்லவை. சுபகிரஹங்களின் ராசிகளும், வாரங்களும் சுபம்.

பரணி நக்ஷத்திரமுள்ள தினத்தில் மீனத்திலும், திருவோண நக்ஷத்திரம் உள்ள நாளில் விருச்சிக லக்னத்திலும், விசாக நக்ஷத்திரம் உள்ள நாளில் கடக லக்னத்திலும் அறுவடை ஆரம்பம் செய்ய நலம்.

மேஷ, கடக லக்னங்களில் (வாழை) இலைகளும், மலர்களும் அறுவடை செய்தல்வேண்டும். மீன லக்னத்தில் பழங்கள் அறுவடை செய்ய உத்தமம். இரவு வேளையில் அறுவடை செய்ய ஆரம்பிக்கலாகாது. குரு 4வது ராசியில்

இருந்தால் எந்த லக்னத்திலும் அறுவடை தொடங்கலாம். ஜன்ம நக்ஷத்திரத்திலும், அனுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திரத்திலும் அறுவடை செய்வது சரியல்ல.

இதற்குமேல் தான்யங்களைச் சேமித்தல் பற்றி சொல்லவிருக்கிறேன்.

உத்தராயணம், தக்ஷிணாயணம் இவைகளில் இரண்டிலும் தான்யங்களைச் சேமிப்பது நலம். அதிலும் சரத் காலம், வஸந்த, ஹேமந்த, கிரீஷ்ம காலங்களில் தான்யங்களைச் சேமிப்பது நல்லது.

## சுப நக்ஷத்திரங்கள்

ரோகிணி, புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம், ரேவதி, ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, ஸ்வாதீ, மூலம், அனுஷம், பரணி, திருவாதிரை, மகம், திருவோணம் ஆகிய நக்ஷத்திரங்கள் தான்யங்களைச் சேமிக்க உத்தம நக்ஷத்திரங்கள் ஆகும். 4-ஆம் இடத்தில் சனி இருக்கும்போது தான்யங்களைச் சேமிக்க உகந்ததாகும்.

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமீ, நவமீ, துவாதசி, சதுர்தசீ, அமாவாஸ்யை ஆகிய நாட்கள் தவிர மற்றவை தான்யச் சேமிப்பிற்கு உகந்தவை.

சகுனி முதலான கரணங்கலும், விஷ்டியும் முக்யமாக விலக்கத்தக்கவை. பிற யோகங்கள் நல்லவை.

குரு, சனி, சந்திரன், சுக்ரன் ஆகியவர்களின் வார வர்கோதயங்கள் சுபம். புதனின் வார வர்கோதயங்கள் மத்யமம். செவ்வாய், சூர்யர்களின் வார வர்கோதயங்கள் தானியங்களைச் சேமிக்கும் விஷயத்தில் விலக்கத்தக்கவை.

தான்ய சேமிப்பிற்கு ஸ்திரராசிகள் மேன்மேலும் விருத்தியை அளிக்கும். உபய ராசிகள் விருத்தி நஷ்டங்கள் இரண்டையும் தருவதாக இருக்கும், சரராசிகள் கூடாதவை.

தான்யங்களைச் சேமிக்கும் லக்னத்திலும், அதற்கு 4, 5, 7, 9, 10லும் சுபர்கள் இருக்க உத்தமம். 3, 6, 11-ல் பாபிகள் இருப்பின் தான்ய விருத்தியளிப்பர். பாபிகள் உள்ள ராசியிலும், பாபிகள் விட்ட ராசியிலும், வரவிருக்கும் ராசியிலும் தான்யங்களைச் சேமிக்கலாகாது.

ஊர்த்துவமுக நக்ஷத்திரங்களில் ஸ்திர அம்சங்களிலும் குரு, சனி இருக்கும்போதும் அந்த அம்சங்களை குருவும், சனியும் பார்க்கும்பொழுதும் தான்ய சேமிப்பு நல்லது.

தானியங்களைச் சேமிக்கும் முன்பாக, க்ஷேத்ரபாலர் களுக்கு மௌனமாக இருந்துகொண்டு வயலின் நாற்புறமும் தயிர்சாதம் பலியாகக் கொடுக்கவேண்டும். அதன் பிறகே தான்ய ஸங்கிரஹம் செய்யவேண்டும்.

சேமிப்பின்பொழுது ஒரு கன்னிகை முதலில் தான்யங்களை வாங்கி, ஒரு கர்ப்பிணியின் கையில் கொடுக்க வேண்டும். பிறகு அந்த ஸ்த்ரீ அதனை வாங்கிவைத்தல் வேண்டும்.

1. சனியின் பார்வை பெற்ற ஸ்திர லக்னத்தில் சேமித்தல் நலம். ஆனால் குரு 7-ல் இருத்தல் அவசியம். இதனால் தான்யங்கள் மேன்மேலும் விருத்தியாகும்.

### 2. தான்ய பர்வத யோகம் :

மாசி மாதம் மகம், பங்குனி உத்தரம் நக்ஷத்திரங்களில் ரிஷப லக்னத்தில் தான்யங்கள் சேமிக்க நலம். இந்த யோகம் தான்ய பர்வத யோகம் எனப்படும்.

### 3. தான்ய மேரு யோகம் :

சனி லக்னத்தில் இருக்க, 7-ல் குருவும், சூரியனுக்கு 7-ல் சந்திரனும், 2-ல் சூரியனும் இருக்க அந்த லக்னத்தில் தான்யம் சேமிக்க மேருமலைபோல் தான்யங்கள் வளர்ச்சியுறும்.

### 4. இன்னுமொரு நல்ல நேரம் :

பிற்பகலில், லக்னத்தில் சனி அல்லது சூரியன் அல்லது குளிகன் இருக்கும்போது தான்யங்களைச் சேமித்தல் தான்யங்கள் மேன்மேலும் விருத்தியடையும்.

### 5. இன்னொரு சுபயோகம் :

ஸ்திர லக்னத்தை சனி பார்க்கும்பொழுது, 7-ல் குரு இருந்தால் மேற்படி லக்னத்தில் தான்யம் சேமிக்கவேண்டும்.

### 6. இன்னும் ஓர் உத்தம யோகம் :

லக்னத்தில் குரு இருக்க 12-ல் சந்திரனும், 6-ல் சூரியனும் இருந்தால் மேற்படி லக்னத்தில் தான்யங்களைச் சேமித்தால் தான்யங்கள் விருத்தியாகும்.

### 7. தான்ய பர்வத யோகம் :

தை மாதத்தில் பூசம், ஆவணி மாதத்தில் திருவோணம் நக்ஷத்திரத்தில் தான்யங்களைச் சேகரம் செய்ய உத்தமம். இது தான்ய பர்வத யோகம் என்ற யோகம் ஆகும்.

### 8. தான்யார்ணவ யோகம் :

சந்திரன் நான்காம் இடத்திலும், சூரியன் 11-லும், குரு லக்னத்திலும், சனி ஏழாம் இடத்திலும் இருக்க அது தான்ய

அர்ணவ யோகமாகும். இந்த லக்னத்தில் தான்யங்களைச் சேகரம் செய்தால் கடல் எவ்வாறு வற்றாதோ அதுபோல் தான்யம் குறைவின்றி இருக்கும்.

முதன் முதலில் தான்யச் செலவு செய்வதற்கு உகந்த நாட்கள் : பூசம், புனர்பூசம், அச்வினி, விசாகம், அனுஷம், ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, பூரம், பூராடம், பூரட்டாதி, அவிட்டம், மிருகசீர்ஷம், திருவோணம், ரேவதி ஆகிய நக்ஷத்திரங்கள் உள்ள நாட்களில் தான்யங்கள் செலவு செய்ய ஆரம்பித்தால் செலவு செய்தது போக மீதமுள்ளது மேலும் விருத்தியடையும்.

கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, சித்திரை, கேட்டை, மூலம், ஸ்வாதி, சதயம், பரணி ஆகிய நக்ஷத்திர நாட்களில் தானியச் செலவு ஆரம்பிக்கலாகாது. பிற நக்ஷத்திரங்கள் மத்யமம்.

சுபமான நக்ஷத்திரமும், சுப திதியும், சனி வாரமும் கூடிய நாளில் லக்னத்தில் குரு இருக்கச் செலவு ஆரம்பம் செய்தால் பாக்கியுள்ள தானியங்கள் விருத்தியாகும்.

அஷ்டமீ, அமாவாசை, சதுர்த்தி, நவமி, சதுர்தசி ஆகிய திதிகளில் தானியச் செலவு செய்யலாகாது. மற்ற திதிகள் நலம், சிலர் சதுர்த்தி, நவமி, சதுர்தசி ஆகிய நாட்களும் நல்லவை என்று கூறுகிறார்கள்.

சகுனி முதலிய கரணங்களும், விஷ்டியும் கூடாதவை. சூரியன், செவ்வாய், சுக்ரன் ஆகியவர்கள் வார வர்கங்கள் கூடாதவை. மற்றவை சுபம்.

சிலர் சுக்ரனின் வார வர்கங்களும் நல்லவை எனக் கூறுகிறார்கள்.

ஸ்திர ராசிகள் உத்தமம். உபயராசிகள் மத்யமம். சர ராசிகள் அதமம்.

3, 6, 11-ஆமிடங்களில் இருக்கும் பாபிகள் சுபர்கள். கேந்திர, த்ரிகோணங்களில் இருக்கும் சுபர்களும் நன்மையே செய்வர். 8-ஆமிடத்தில் ஒரு கிரஹமும் இருக்கக்கூடாது. இவ்வாறு சுப-அசுப காலமறிந்து தான்யங்களைச் செலவிட்டால் தான்யம் குறைவற்றிருக்கும்.

## இருபத்தோராவது அத்யாயம்

## கோச ஸங்கிரஹம்

இதுவரை தான்யங்களைச் சேமிப்பது பற்றிச் சொல்லப் பட்டது. அவை தவிர வெள்ளி, தங்கம், ரத்தினங்கள் போன்றவற்றை (Treasure) வாங்கிச் சேர்ப்பது பற்றி இதில் கூறப்படிகிறது.

ரிக்தை திதிகள், அமாவாஸை, பௌர்ணமீ, அஷ்டமீ தவிர பிற திதிகள் உயர்ந்தவை

திருவாதிரை, திருவோணம், பூசம்,. மிருகசீர்ஷம், அனுஷம், சதயம், அவிட்டம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்கள் செல்வங்களை வாங்கிச் சேர்க்க உகந்தவையாகும். சகுனி, விஷ்டி முதலான கரணங்கள் விலக்கத்தக்கவை. சுபமான நித்ய யோகங்களும் செல்வச் சேமிப்புக்கு உகந்ததே.

சுப கிரஹங்களின் வாரம், அம்சம், க்ஷேத்ரம், வர்கம், லக்னங்கள் சுபம். ஸ்திர ராசிகள் உத்தமம். உபய ராசிகள் மத்யமம்.

3, 6, 11-ல் பாபிகள் இருப்பதும், கேந்திர திரிகோணங்களில் சுப கிரஹங்கள் இருப்பதும் ஸகல விதமான செல்வங்களையும் தரக்கூடியதாகும். இதற்கெனப் பார்க்கப்படும் லக்னத்திற்கு எட்டாமிடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது.

## தங்கம் வாங்குவதற்குகந்த காலம்

குரு வர்கோத்தமம் பெற்றிருக்க புதனும், சுக்ரனும் கேந்திரத்திலிருக்கும்படியான லக்னத்தில் தங்கத்தை வாங்கிச் சேர்த்தால் ஒன்று கோடி மடங்காக வளர்ச்சியுறும்.

இதுபோலவே சந்திரன் தன் உச்ச அம்சமான லக்னத்தில் இருக்க, அதற்கு ஏழாமிடத்தில் குருவும் இருக்க செல்வங்களைச் சேமித்தால் தங்கம், வெள்ளி, ரத்னங்கள், ஆபரணங்கள் முதலானவை ஒன்றுக்குப் பலமடங்காகப் பெருகும்.

தங்கம், தான்யங்கள், ரத்னம் இவைகளைச் சேமிக்கும் விஷயத்திலும், சம்பாதிக்கும் விஷயத்திலும் லக்னத்தில் குரு இருந்தால் மேன்மேலும் விருத்தியாகும்.

லக்னத்தில் குருவும், இரண்டாமிடத்தில் சுக்ரனும், பத்தாமிடத்தில் சந்திரனும், பதினொன்றாம் இடத்தில் புதனும் இருந்து, அப்படிப்பட்ட நேரத்தில் செல்வத்தினைச் சேமிப்பது நல்லது. குறைவற்றிருக்கும்.

வியாழக்கிமை தினம், லக்னத்தில் குருவும், 11-ல் சூர்யனும், 6-ல் சனியும் இருந்தால் அதுசமயம் பணியாட்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளவேண்டும். பொருள்களையும் சேமிக்கவேண்டும்.

லக்னத்தில் சுக்ரனும், 10-ஆமிடத்தில் குருவும், சந்திரனும் இருக்க, ஈயம், பித்தளை, வெண்கலம் ஆகியவற்றை வாங்கிச் சேமித்தால் ஒன்று கோடி (பல) மடங்காகும்.

## வெள்ளி, தங்கம், நவரத்னங்கள் முதலானவற்றைச் சேமிக்க

தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, இரும்பு, முத்து, பவளம், வைடூர்யம், வைரம் முதலானவற்றைச் செல்வச் சேமிப்புக்கெனக் கூறப்பட்ட நக்ஷத்திரத்தில் வாங்குவது மேன்மேலும் செழிக்கும்.

## வாசனைத் திரவியங்கள் சேமிக்க

லக்னத்தில் குருவும், 12-ல் சந்திரனும் இருக்கும்பொழுது கற்பூரம், அகில், சந்தனம், கலபம் முதலிய வாஸனைச் சாமான்களையும், மாலைகளையும் வாங்கிச் சேர்க்க மேன்மேலும் வளர்ச்சியுறும்.

## நூலகம் அமைக்க - பத்திரங்கள் - ரிக்கார்டுகள் தயாரிக்க - சேமிக்க

புத்தகங்களைச் சேமிப்பது; ஆவணங்கள், ரிக்கார்டுகள், பத்திரங்களைத் தேடிப் பெறுவதற்கு புதன் உச்சத்தில் இருப்பது அல்லது வியாக்கிழமையன்று உச்ச லக்னத்தில் இருப்பது நல்லது.

## வெள்ளியை - வெள்ளிச் சாமான்களைச் சேமிக்க

சனிக்கிழமையில் - ரோகிணியில் சந்திரனும் (சந்திரன் உச்சத்தில் இருக்க) குரு கும்பத்தைப் பார்க்கும் சமயம் வெள்ளி, வெள்ளியிலான ஆபரணங்கள், பாத்திரங்களைச் செய்து (பெற) கிரஹிக்க நல்லது. ஒன்று நூறாகும்.

வெள்ளியாலான பாத்திரங்களைச் சேமிக்க இன்னும் ஒரு நல்ல நேரம் - சுக்ரன் உச்சமான லக்னத்திலும், குரு 7-லும் ஐந்தாமிடத்தில் சூரியனும் இருக்கும் சமயத்தில் வெள்ளியைச் சேமித்தால் ஒன்று பலமடங்காப் பெருகும்.

ஒரு குறிப்பிட்ட நிலம் வழக்கில் இருந்து, அதன் உரிமை பற்றிய பிரச்சனை இருந்தால் பரணி, திருவாதிரை, விசாகம், ஹஸ்தம் இவற்றின் நான்காவது அம்சத்தில் கடக ராசியில் அப்பூமியிலிருந்து சிறிது மண்ணை எடுத்து வந்தால் அந்த பூமி தமது வசமாகும்.

எந்த ராசியானாலும், லக்னத்தில் ஒரே அம்சத்தில் சூரியனும், கேதுவும் இருந்தால் அச்சமயம் பூமியை ஸங்கிரஹம் செய்தால் அது தன்னுடையதாகும். பூமியைத் தனக்கு உடைமையாக்கும் விஷயத்தில் அச்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், புனர்பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், அவிட்டம், திருவோணம், சதயம் இவைகள் உத்தமம், ரிக்தைகளும், விஷ்டியும் தவிர்க்கப்படவேண்டும்.

## பூமி - பசு - எருமைகளை வாங்கிச் சேர்க்க

திங்கள், புதன், செவ்வாய், சனி ஆகிய நாட்களில் வாராதிபன் லக்னத்தில் இருக்கும் சமயம், பூமி - பசு - எருமை முதலானவற்றை வாங்கிச் சேர்ப்பது நல்லது.

## ஆடுகள் வாங்கிச் சேர்க்க

ஒரு வாரத்தில் பூச நக்ஷத்திரம் கூடிய நாளில் மேஷ லக்னத்தில் ஆடுகளை வாங்கிச் சேர்த்தால் ஒன்று பல கோடியாகும். (விருத்தியடையும்.)

## வாங்க நல்லதும், கொடுக்க தீயதுமான நாட்கள்

கார்த்திகை, திருவாதிரை, மகம், அனுஷம், ஸ்வாதி, ஆயில்யம் ஆகிய நக்ஷத்திரங்களில் பொருள்களை வாங்க வேண்டுமேயன்றி கொடுத்தல் கூடாது.

## பிறருக்குக் (வட்டிக்கும், பாதுகாப்பிற்காகவும்) கொடுக்கக்கூடாத நாட்கள்

சாதாரணம், உக்ரம், தீக்ஷ்ணம் ஆகிய நக்ஷத்திரங்களிலும், முக்யமாக ஸ்வாதி நக்ஷத்திரத்திலும் கொடுக்கப்பட்ட பொருளும், வட்டிக்காகக் கொடுக்கப்பட்ட பொருளும், ஈடாக வைக்கப்பட்டதும், பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட பொருளும் திரும்பக் கிடைக்காது என்பதால் அந்த நாட்களில் கொடுப்பது கூடாது.

## தங்கத்தை வாங்குவதற்குரிய நாட்கள்

கார்த்திகை, மூலம், ஹஸ்தம், அனுஷம், மகம், சதயம் இந்த நக்ஷத்திரத்திலும் தங்கத்தைக் கொடுக்கலாகாது. அப்படிக் கொடுப்பவன் தரித்ரனாகிறான். வாங்குகிறவன் செல்வங்கள் நிறைந்தவனாகிறான்.

***சாதாரண நக்ஷத்திரங்கள் :*** விசாகமும், கார்த்திகையும்.

***உக்ர நக்ஷத்திரங்கள் :*** பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், பரணி.

***தீக்ஷ்ண நக்ஷத்திரங்கள் :*** மூலம், ஆயில்யம், கேட்டை, திருவாதிரை.

***லகு நக்ஷத்திரங்கள் :*** அச்வினி, பூசம், ஹஸ்தம்.

***ஆர்த்ர (மிருது) நக்ஷத்திரங்கள்*** : அனுஷம், மிருகசீர்ஷம், சித்திரை, ரேவதீ.

***ஸ்திர நக்ஷத்திரங்கள்*** : உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, ரோகிணி ஆகியவை.

***சர நக்ஷத்திரங்கள்*** : அவிட்டம், புனர்பூசம், திருவோணம், ஸ்வாதி, சதயம்.

## வாங்கவும் - விற்கவும் உகந்தவை

உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, ரோகிணி, மூலம், திருவாதிரை, சதயம், விசாகம், கேட்டை, மகம், பூசம், புனர்பூசம், ஹஸ்தம், அச்வினி, மிருகசீர்ஷம், பூரம் இவைகளில் வாங்கவும் - விற்கவும் நல்லவை.

ரிஷபம், மிதுனம், விருச்சிகம், துலாம், ஸிம்ஹம் ஆகிய ராசிகளில் வாங்கவும் - விற்கவும் சுபம். நல்லது.

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி இவைகள் தவிர பிற திதிகள் சுபம்.

## பசுக்கள் வாங்கவும் - விற்கவும் ஏற்ற நாட்கள்

அவிட்டம், கேட்டை, ஹஸ்தம், விசாகம், பூரம், ரேவதி, புனர்பூசம், அச்வினி, ஸ்வாதி இவைகளில் பசுக்களை விற்றாலும் சரி, வாங்கினாலும் சரி, பசுக்கள் விருத்தியடையும்.

ஜ்யோதிஸ் சாஸ்திரமெனும் பெருங்கடலைக் கடைந்து, வெண்ணெய் திரட்டுவதுபோல் நரஸிம்ஹஸூரி என்கிற வித்வானால் நன்கு பரிசீலிக்கப்பட்டு ஸாரங்களின் சுருக்கம் கூறப்பட்டது.

# இருபத்திரண்டாவது அத்யாயம்

***புதிய உணவு உண்ணுதல் :***

அறுவடைக்குப் பிறகு புது நெல் மற்றும் பிற தான்யங்களைச் சேமித்த பிறகு, ஒரு நான்னாளில் புதிய அரிசி கொண்டு சமையல் செய்து உண்பது வழக்கம் என்பதால் அதற்குரிய நல்ல நாட்கள் நக்ஷத்திரங்கள் முதலானவை கூறப்படுகின்றன. புதிய உணவு உண்பதற்கு ஹஸ்தம், திருவோணம், ரேவதி, அச்வினி, மூலம், ரோகிணி, பூசம், புனர்பூசம், மகம், விசாகம், ஸ்வாதி, சதயம், அவிட்டம். சித்திரை, அனுஷம், மிருகசீராஷம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்கள் உகந்தவை.

பரணி, கார்த்திகை, கேட்டை, பூரம், பூராடம், பூரட்டாதி, ஆயில்யம் ஆகியவை கூடாதவையாகும்.

விஷ்டி - சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமீ, நவமீ, த்வாதசி, சதுர்தசி, பௌர்ணமீ, அமாவாஸ்யை ஆகிய திதிகள் தள்ளத்தக்கவை.

குரு, சுக்ரன், புதன் ஆகியவர்களின் திரேஷ்காணம், வாரணம், அம்சம் முதலானவை நல்லது. மற்றவை கூடாதவை.

உண்பவனும் - உண்ணப்படும் பொருளும் புதிதானால் ரிஷபம், தனுஸ், கும்பம், கன்னி, துலாம், ஸிம்மம், மகரம், கடகம் ஆகிய லக்னங்கள் உத்தமம். மிதுனம், மத்யமம். மீனம், மேஷம், விருச்சிகம் ஆகியவை விலக்கத்தக்கவை.

தேவராதர் எனும் சோதிட வல்லுனரின் கருத்துப்படி உண்ணப்படும் பொருள் புதிது எனில், மீனமும் சுபமே ஆகும்.

மலர்களை முதலில் (பருவ காலம் மலர்கள் பூக்கத் தொடங்கி அவற்றை முதல் முறையாக) உபயோகிக்க மேஷம், மிகவுயர்ந்த லக்னமாகும். பழங்களை உபயோகிக்க மீனம் நல்லது. (வாழை) இலைகளை உபயோகிக்க விருச்சிகம் உயர்வானது.

லக்னத்திற்கு 9-ல் எந்த கிரஹமும் இருக்கக்கூடாது. (சுப கிரஹமானும் சரி, அசுப கிரஹமானாலும் சரி) லக்னத்திற்கு 10-ல் பலமுள்ள குரு இருந்தால் சுபத்தையே தருவார்.

லக்னம் எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் சந்திரன் இருக்கக்கூடாது. பாப கிரஹங்கள் 3, 6, 11-ல் இருப்பது நல்லதே. மேலே கூறப்பட்ட இடங்களில் தவிர வேறு இடங்களில் பாபிகள் இருக்கக்கூடாது.

பிரதி ஆண்டிலும் நன்னாளில் புதிய உணவு அருந்த வேண்டும். மார்கசீர்ஷம் - ஆஷாட மாதங்கள் தவிர மற்ற மாதங்கள் நன்மை தரும்.

## இருபத்திமூன்றாவது அத்யாயம்

இதற்குமேல் புதிய ஆடைகளை அணிவது பற்றிச் சொல்ல இருக்கிறேன்.

***நல்ல நக்ஷத்திரங்கள் :***

பூசம், அச்வினி, அவிட்டம், ரேவதி, ரோகிணி, புனர்பூசம், உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம் ஆகியவை புதிய ஆடைகள் அணிய நல்ல நாட்கள். மற்ற நக்ஷத்திரங்கள் விலக்கத்தக்கவை.

| | |
|---|---|
| அச்வினியில் | - புது வஸ்திரம் அணிய, அரசாங்க கௌரவம் |
| பரணியில் | - மனைவிக்குத் தீமை |
| கார்த்திகையில் | - உடல் எரிச்சல் |
| ரோகிணியில் | - ஸகலார்த்த லாபம் |
| மிருகசீர்ஷத்தில் | - வஸ்திரத்தை எலி கடிக்கும் |
| திருவாதிரையில் | - மரணம் |
| புனர்பூசத்தில் | - தனதான்ய விருத்தி |
| பூசத்தில் | - ஸகலார்த்த லாபம் |
| ஆயில்யத்தில் | - நோய் |
| மகத்தில் | - மரணம் |
| பூரத்தில் | - நோய்த் தொல்லை |
| உத்தரத்தில் | - பல ஆடைகளை அணியும் பாக்யம் |
| ஹஸ்தத்தில் | - இனிய பொருள்கள் லாபம் |
| சித்திரையில் | - பலவகைப்பட்ட ஆடைகள் லாபம் |
| ஸ்வாதியில் | - சிறந்த உணவு |
| விசாகத்தில் | - மனஸ் ஸந்தோஷம் |
| அனுஷத்தில் | - உறவினர்களால் லாபம் |
| கேட்டையில் | - ஆடை கிழிந்துவிடுதல் |
| மூலத்தில் | - தான்ய நாசம் |
| பூராடத்தில் | - நோய் |
| உத்திராடத்தில் | - பல ஆடைகள் கிடைக்கும் |
| திருவோணத்தில் | - கண் நோய் |
| அவிட்டத்தில் | - தான்ய விருத்தி |
| சதயத்தில் | - விஷபயம் |
| **பூரட்டாதியில்** | - **அரசாங்க பயம்** |
| **உத்திரட்டாதியில்** | - புத்ர சம்பத்து |
| ரேவதியில் | - உயர்ந்த பொருள் லாபம். |

இவ்வாறு அச்வினீ முதலான நக்ஷத்திரங்களில் புதிய ஆடைகளை அணிவதால் ஏற்படும் பலன்கள் கூறப்பட்டன.

### திதி பலன்கள்

புதிய வஸ்திரம் அணிவதற்கு - த்விதீயை, திருதீயை, பஞ்சமீ, ஸப்தமீ ஆகிய திதிகள் சுபம்.

சதுர்த்தி, நவமீ, அமாவாஸ்யை, சதுர்தசீ ஆகிய திதிகளை விலக்குதல் வேண்டும். மற்ற திதிகள் மத்யமம்.

புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் உயர்ந்தவை.

ஞாயிறு, திங்கள் இரு நாட்களும் மத்யமம், மற்ற இரு நாட்களும் (செவ்வாய் / சனி) விலக்கத்தக்கவை.

ஞாயிறுக்கிழமையில் புது வஸ்த்ரம் அணிந்தால் நோய். திங்கட்கிழமையில் துயரம் (புதிதாக அணிந்த ஆடை கண்ணீரால் நனையும்). செவ்வாய்க்கிழமையில் அணிந்த ஆடை தீயினால் நாசமாகும். புதன்கிழமையில் பலவகைப் பொருள்கள் லாபம். சனிக்கிழமையில் பெரிய துயரம் அனுபவப்படும்.

கும்பம், விருச்சிகம், ஸிம்ஹம், மீனம், மேஷம், தனுஸ் ஆகியவை தவிர மற்ற ராசிகள் உத்தமம்.

ரிஷபத்தில் தான்ய லாபம். மிதுனத்திலும், கன்னியிலும் தனலாபம். மகரத்தில் மத்யம பலனும் ஏற்படும். கடகத்தில் மிகுந்த சுகம். துலாத்திலும் மிகுந்த சுகமே. மேஷத்தில் மிகுந்த துயரம். சிம்மத்தில் கௌரவக்குறைவு. கும்பத்தில் நோய்த் தொந்திரவு, விருச்சிகத்தில் வியாதி பயம்.

## இருபத்திநான்காவது அத்யாயம்

### புது ஆபரணம் அணிதல் :

இதற்குமேல் புதிய ஆரணங்கள் அணிவது பற்றிக் கூறவிருக்கிறேன்.

ரோகிணி, பூசம், அனுஷம், ஹஸ்தம், திருவோணம், சதயம், ஸ்வாதி, புனர்பூசம், மகம், ரேவதி, அச்வினி, சித்திரை, மிருகசீர்ஷம், உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி ஆதிய நக்ஷத்திரங்களில் புது அணிகலன்கள் அணிய மிகுந்த ஸௌக்யம் உண்டு.

பிரதமை, பௌர்ணமி, ஷஷ்டி, ஏகாதசி, பஞ்சமி, தசமி ஆகிய நாட்கள் நல்லவை. புதன், குரு, சந்திரன், சுக்ரன் ஆகியவர்களின் வார வர்க்கங்கள் உத்தமம்.

தனுஸ், மீனம், விருஷபம், மிதுனம், கன்னி இவை சுபத்தை அளிக்கும்.

கேந்திரத் திரிகோணங்களில் சுபர்களும்; 3, 6, 11-ஆம் இடங்களில் பாபிகளும் இருந்தால் சுபம் ஏற்படும். 8-ஆம் இடத்தில் ஒருவரும் இருக்கக்கூடாது.

தன் உச்சாம்சத்தில் குருவும், நான்கில் புதனும், சுக்ரனும் இருக்கும் சமயம் ஒரு தங்க ஆபரணம் அணிந்தால் அது பலவாக வளரும்.

ரோகிணியுடன் கூடிய சனிக்கிழமையில் அமிருத கடிகையில் தங்க ஆபரணம் செய்து, அதே நாளில் அது திரும்பக் கிடைத்து, அதை ஒருவன் அணிந்துகொண்டால், அவன்

ஸகலவித ஆபரணங்களோடும் பெரும் செல்வத்துடன் கூடியவளாக சுகவாசியாகவும், அழிவற்ற சொத்தைப் பெற்றவனாகவும் விளங்குவான்.

உச்சக்ஷேத்ரம், மித்ரக்ஷேத்ரம், ஸ்வக்ஷேத்ரம், கேந்திரம், த்ரிகோணம் இவைகளில் சுக்ரன் இருக்கும் சமயம் புது வஸ்திரம், புது நகைகள் உபயோகித்தால் மேன்மேலும் விருத்தியாகும்.

லக்னத்தில், தன் உச்ச பாகத்தில் சந்திரனும், ஏழாம் இடத்தில் குருவும் இருக்க, தங்க நகைகள் அணிந்தால் (செல்வமும், ஆபரணமும்) ஒன்றுக்குப் பதினாயிரமாக வளர்ச்சியடையும்.

சூரியன் பரம உச்ச பாகத்தில் இருக்கும் சமயம் தங்கத்தால் மோதிரம் செய்து ஆள்காட்டி விரலிலும், மோதிர விரலிலும் அணிந்தால் நல்லது. (மேன்மேலும் விருத்தியாகும்.)

புதனும், சந்திரனும் மிருகசீர்ஷத்தின் ஒரே அம்சத்தில் இருக்க கால் கைகளில் மோதிரம் அணிதல் வேண்டும். இந்த யோகத்தில் அணிந்தால் ஒன்று கோடி மடங்கெனப் பெருகும்.

சந்திரனோ அல்லது குருபகவானோ பரம உச்ச பாகத்தில் இருக்கும்பொழுது முறையே ரிஷப லக்னத்திலும், கடக லக்னத்திலும் தலையில் அணியப்படும் ஆபரணங்களை அணிந்தால் (இது பெண்கள் விஷயம்) அது குறைவற்றிருக்கும் (நாசமே கிடையாது).

குருவும், சுக்ரனும் மூலத்ரிகோணத்தில்* இருக்கும் பொழுது மாணிக்கம், வைடூரியம், ரத்தினங்கள் இவற்றால் அமைந்த ஆபரணங்களை அணிதல் வேண்டும்.

இடை நாடியில் இடது மூக்கில் வாயு ஸஞ்சாரம் நடக்கும் சமயம் எல்லா மங்கள காரியங்களையும் செய்யவேண்டும். புதிய ஆபரணங்களையும் அணிதல் வேண்டும்.

ரதம் - வாத்யம் குடை ஆபரணங்கள் சாமரங்கள் ஸிம்ஹாஸனம் - தங்கம், வெள்ளிப் பாத்திரங்களையும், புத்தாடைகளையும், புத்தாடை அணிவதற்காகச் சொல்லப்படும் நாட்களில் அணிதல் வேண்டும்.

## இருபத்தைந்தாவது அத்யாயம்

## வீடுகட்டுதல் பற்றி

இதற்குமேல் வீடு கட்டுவது தொடர்பான விஷயங்களைச் சொல்லவிருக்கிறேன்.

தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய (ஸௌர) மாதங்களில் முறையே கிழக்கு முதலான எட்டு திசைகளிலும் வீடு கட்டலாம். நன்மையுண்டு.

மீனம், தனுஸ், கன்னி, மிதுனம் இவற்றில் சூரியன் சஞ்சரிக்கும் பங்குனி, மார்கழி, புரட்டாசி, ஆனி மாதங்களில் வீடு கட்டுவதும், ***கிருஹப்ரவேசம்*** செய்வதும் கூடாது.

மீனம், மிதுனம், கன்னி, தனுஸ் ஆகிய உபய ராசிகளில் சூரியன் இருக்கும் மாதங்களில் நெல் குத்துமிடம், சமையல் அறை, மாட்டுத்தொழுவம் ஆகியவற்றை அமைக்கலாம்.

---

*சூரியனுக்கு சிம்மம், சந்திரனுக்கு விருஷபம், செவ்வாய்க்கு மேஷம், புதனுக்குக் கன்னி, குருவுக்கு தனுஸ், சுக்ரனுக்கு துலாம், சனிக்குக் கும்பம் ஆகிய மூலத்ரிகோண வீடுகள்.

## *எந்தத் திசைகளில் யார் வீடு கட்டுவது ?*

விருச்சிகம், தனுஸ், மகரம், கும்பம், மீனம், மேஷம் ஆகிய ஆறு ராசிகள் ஜன்ம லக்னமாக இருக்கப் பிறந்தவர்கள் கிழக்கில் வீடு கட்டலாம். ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம் இவை லக்னமாக இருக்கப் பிறந்தவர்கள் மேற்கு திசையில் வீடு கட்டலாம். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுஸ், மகரம் லக்னமாக இருக்கப் பிறந்தவர்கள் வடக்கு திசையில் வீடு கட்டலாம்.

## *வாஸ்து புருஷன்*

வீடு கட்டப்படும் இடத்தின் தெய்வமான வாஸ்து தேவதை புருஷாகிருதியாகத் தன் இடது பாகத்தைக் கீழாக வைத்துக்கொண்டு தூங்குகிறார். அவர் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கிழக்கில் தலைவைத்தும், மார்கழி, தை, மாசி மாதங்களில் தெற்கில் தலைவைத்தும், பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் மேற்கில் தலைவைத்தும், ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வடக்கில் தலைவைத்தும் படுத்து உறங்குகிறார். தலைப்பகுதியில் வீடு கட்டினால் தந்தைக்கும், கால்களில் வீடு கட்டினால் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் ஆகாது. கையிலும், முதுகுப்புறமும் வீடு கட்டினால் திருடர் பயம் ஏற்படும். வயிற்றுப் பகுதியில் வீடு கட்ட சுபம், ஸகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.

ரோகிணி, திருவோணம், ரேவதி, மிருகசீர்ஷம், அனுஷம், பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்கள் வீடு கட்டுவதற்கு உத்தமம்.

சித்திரை, மூலம், புனர்பூசம், ஸ்வாதி, அவிட்டம், சதயம், ஹஸ்தம் ஆகியவை மத்யமம். மற்றவை விலக்கத்தக்கவை.

### கிழக்கில் வீடு கட்ட

ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம் ஆகியவை உத்தமம்.

### தெற்கு திக்கில் வீடு கட்ட

மகம், ஸ்வாதி, ஹஸ்தம், உத்தரம் ஆகியவை உத்தமம்.

### மேற்கு திசையில் வீடு கட்ட

உத்தராடம், திருவோணம், மூலம் ஆகியவை உத்தமம்.

### வடக்கு திசையில் வீடு கட்ட

அவிட்டம், உத்திரட்டாதி, சித்திரை, சதயம் ஆகிய நக்ஷத்திரங்கள் உத்தமம்.

### எல்லாத் திசைகளிலும் வீடு கட்ட

ரேவதியில் எல்லா திசைகளிலும் வீடு கட்டலாம்.

### நகரம் அமைக்க

சித்திரை, அச்வினி, ரேவதி இவை நகரங்கள் அமைக்க உத்தமம்.

உத்திரட்டாதியில் சேனைகளின் இருப்பிடம் அமைக்க உத்தமம்.

உத்தரம், உத்தராடம், அனுஷம், ரோகிணி, திருவோணம், மகம் ஆகியவை தான்யசாலை அமைக்க நல்லவை.

கேட்டை, மூலம், திருவாதிரை, கார்த்திகை, விசாகம், உத்தரம், மகம், உத்தராடம், பூரம் ஆகிய நக்ஷத்திரங்களில் உணவுச் சாலைகள் (அடுப்பு என்றும் பொருள் கொள்ளப்

படுகிறது. அரண்மனை போன்ற கிருஹ அமைப்புக்கு ஏற்றவாறு வெவ்வேறு பகுதிகளை அமைக்க சுபதினங்கள் கூறப்படுகின்றன எனக்கொள்ளலாம்.)

## உணவு உண்ணும் பகுதி (DINING HALL)

ஹஸ்த நக்ஷத்திரத்தில் போஜனசாலை அமைக்க நல்லது.

## சயன கிருஹம் அமைக்க (Bed Chamber)

மூல நக்ஷத்திரத்தில் சயன கிருஹம் வேலை ஆரம்பம் செய்ய உத்தமம்.

## விளக்கு வைக்கும் இடம் (To Construct a Place to install a Lamp)

கிருத்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கும் இடம் அமைக்க நலம்.

## அடுப்பு அமைக்க

அடுப்பு அமைக்க ரேவதீ உகந்தது. தம் மனைவிக்கு அனுகூலமான சுபநக்ஷத்திரத்தில் - சுபதினத்தில் - சுபலக்னத்தில் அடுப்பு அமைக்கவேண்டும்.

எட்டாமிடத்தில் பாப கிரஹங்கள் இல்லாதிருப்பது அவசியம்.

பூரம், ஸ்வாதி இவைகளிலும் சயன கிரஹம் அமைக்க ஆரம்பிக்கலாம்.

## தண்ணீர்த் தொட்டி அமைக்க

பூரம், ஸ்வாதி, அனுஷம், பூராடம், உத்திரட்டாதி, திருவாதிரை, ரேவதி, மூலம் ஆகியவை தண்ணீர்த் தொட்டி அமைக்க நலம்.

### ஒரே நோக்கில் வீட்டின் அமைப்பு

வீட்டின் கிழக்குப் பகுதியில் உடற்பயிற்சிசாலை, அக்னி மூலையில் தான்யக்கிடங்கு, தெற்கில் போஜன சாலை (உணவு உண்ணுமிடம்), தென்மேற்கு திசையில் பிரசவ அறை, மேற்கில் படுக்கை அறை, வாயு திசையில் பூஜை அறை (மேற்கில் நீர்த் தொட்டியும், வாயு திக்கில் பொக்கிஷ அறையும்), வடதிசையில் பொக்கிஷம் வைக்குமிடமும், ஈசான மூலையில் சமையல் அறையும் அமைக்கவேண்டும்.

ஒற்றைப்படைத் திதிகள் நல்லவை. ஆனால் நவமி கூடாது.

இரட்டித்த திதிகள் கூடாதெனினும் த்விதீயை, தசமி, ஷஷ்டி சுபம்.

வீடுகட்ட ஆரம்பித்து, அஸ்திவாரம் அமைக்கும் பணியை ஸித்தயோகம் அல்லது அம்ருதயோகத்தில் தொடங்க வேண்டும்.

புதன், வெள்ளி, திங்கள், வியாழன், சனி ஆகிய ஐந்து நாட்கள் உத்தமம். மற்ற நாட்கள் விலக்கத்தக்கவை.

ஸ்திர ராசி - லக்னங்கள் உத்தமம். உபய ராசிகள் சுபகிரஹங்களுடன் கூடியிருப்பின் நல்லது.

சர ராசிகளும் - லக்னங்களும் உத்தமம். உபய ராசிகள் சுப கிரஹங்களுடன் கூடியிருப்பின் நல்லது.

ஊர்த்வமுக லக்னம் உத்தமம். (**OORDHWAMUKHA** - a sign just vacated by the sun) அதோமுக லக்னம் (**ADHOMUKHAM** - a suign just occupied by the sun) சுப க்ரஹங்களுடன் கூடியிருந்தாலும் விலக்கத்தக்கதே. திர்யங்முக லக்னம் (Thd sign next to the one occupied by the sun) நல்லதே. ஆனால் சுபகிரஹ ஸம்பந்தமுள்ளதாக இருத்தல் வேண்டும்.

லக்னம், 2, 9, 12 ஆகிய இடங்களில் சுபர்கள் நன்மையே செய்வர்.

3, 6, 11-ல் உள்ள பாபிகளும் சுபத்தையே செய்வர். ஆனால் 8-ம் இடத்தில் ஒரு கிரஹமும் இருத்தல் கூடாது. சில ஜ்யோதிஷ வித்வான்கள் 12-ம் இடத்தில் கிரஹம் எதுவும் இருக்கலாகாது என்று கூறுகிறார்கள்.

தூண்கள், உத்தரம், உட்புற வாசல், நிலைகள் இவற்றை சீர்ஷோதய ராசியில் அமைக்கவேண்டும். கூரைப்பகுதி அமைத்தல் உத்தரம் (மரம் அல்லது இரும்பால் ஆனது) அமைத்தல் முதலானதும் (Roofing) வாசல் கதவு (நிலைகள் அமைத்தல்) இவற்றையும் மற்றும் வீட்டின் பகுதிகளை அமைத்தல், வீடு கட்டுவதற்குக் கூறப்பட்ட சுபவேளையில் அமைத்தல் வேண்டும்.

## வீட்டிற்கு அம்சங்கள்

தூண், சாளரம், துலா, பாவு முதலியன வீட்டிற்கு அங்கங்கள் என்று சாஸ்திரம் அறிந்தோர்கள் கூறுகிறார்கள். (The Pillars lying-in-room, door way beams and interior door ways are the same as that indicated for the laying the foundation.)

உத்தரம், உத்தராடம், ரோகிணி, அனுஷம், சித்திரை, ரேவதி, மிருகசீர்ஷம் ஆகிய இவை வாசல் நிலை வைப்பதற்கு உகந்தவை. அந்த நாட்களில் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் இடத்தில் நிலை அமைக்கவேண்டும்.

உபய ராசியில் வீட்டிற்குக் கூறையும், கதவும் போடலாம்.

ஸ்திர லக்னத்தில் சுபமான திதி, வார லக்னங்களில் வாயிலில் மரங்கள் வைக்கவேண்டும். இது சகல சம்பத்துக் களையும் அளிக்கும். அச்வினி, பூசம், ஹஸ்தங்களாகிய சர நக்ஷத்திரங்களில், ரோகிணி, உத்திரம், உத்தராடம், உத்தரட்டாதி ஆகிய ஸ்திர நக்ஷத்திரங்களிலும், புதன், வெள்ளிக்கிழமைகளில் சுப திதிகளில் உபய லக்னங்களில் கதவு அமைக்கவேண்டும்.

லக்னமும், சந்திர லக்னமும், ஸ்திர ராசியின் அம்சமாக இருந்து லக்னத்தில் சுப கிரஹங்கள் இருப்பதை சுபர்கள் பார்க்க வீட்டிற்குத் திண்ணை முதலிய இடங்களில் தூண் அமைக்க வேண்டும்.

வீடு கட்டுவதற்கு உபயோகப்படும் எல்லாச் சாமான்களையும் கிழக்கு அல்லது வடக்கு நுனியாக வைக்க வேண்டும்.

புதிய சாமான்களால் வீட்டை நிர்மாணிக்க வேண்டும். பழைய சாமான்களை உபயோகிக்கக் கூடாது. தூண்கள் முதலானவை ஒற்றைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அக்னி திக்கில் அல்லது தென்மேற்கு திசையில் ஆட்டுத் தொழுவமும், வாயு மூலையில் பசு, எருமைகளுக்கான தொழுவமும் அமைத்தல் நல்லது.

## தயிர் கடையும் இடத்தில் மத்தினை அமைத்தல்

சர ராசியான லக்னத்திலும், சந்திர லக்னத்திலும், தயிர் கடையும் மத்தைப் பயன்படுத்த வேண்டும். திங்கள்கிழமையில் சந்திரன் லக்னத்திலிருக்கும் பொழுது, தயிர் கடைவதற்குக் கயிறு முதலியவற்றை அமைக்கும் ஸ்தம்த்தை அமைக்க வேண்டும். நல்ல நக்ஷத்திரத்தின் அம்சத்துடன் சந்திரன் லக்னத்தில் இருக்க தயிர் கடைவதற்கு ஆரம்பித்தல் நலம். இந்த

யோகத்தில் பசுக்களைப் பால் கறக்கத் தொடங்கினால் மிகுந்த பால்வளம் தரும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியன் ராசியான லக்னத்தில் சனி, செவ்வாய்களின் அம்சத்தில் சந்திரன் ரேவதியில் இருக்க முதல் கடைசல் தொடங்கவேண்டும்.

வீடு கட்டும் வேலை தொடங்கும்பொழுது கட்டப்பட இருக்கும் வீட்டிற்கு ஆயுர் யோகத்தைச் சொல்லப் போகிறேன். (இன்ன மாதிரி கிரஹநிலை இருக்கும் பொழுது வீட்டு வேலை தொடங்கப்படுமானால் கட்டப்படவிருக்கும் வீட்டின் ஆயுள் இத்தனை என்று அறியலாம்.)

***80 வருடங்கள் :*** லக்னத்திற்கு 10-ல் சந்திரன், 4-ல் குரு, 11-ல் செவ்வாயும், சனியும் இருக்கும்பொழுது கட்டப்படும் வீடு 80 ஆண்டுகள் லக்ஷ்மீயுடன் கூடியதாக இருக்கும்.

***100 வருடங்கள் :*** லக்னத்தில் குரு, 7-ல் புதன், 3-ல் சனி, 6-ல் சூரியன், 4-ல் சுக்ரன் இருப்பின் நூறு ஆண்டுகள் இருக்கும் அல்லது லக்னத்தில் சுக்ரன், 10-ல் புதன், ஏதேனும் ஒரு கேந்திரத்தில் குரு, 11-ல் சூரியன் இருந்தால் அவ்வாறு கட்டப்படும் வீடு 100 ஆண்டுகள் வரை இருக்கும்.

***200 வருடங்கள் :*** லக்னத்தில் சுக்ரன், 5-ல் குரு, 3-ல் சூரியன், 6-ல் செவ்வாய் இருக்கும் பொழுது ஆரம்பம் செய்து அமைக்கப்படும் வீடு 200 ஆண்டுகள் வரை இருக்கும்.

***600 வருடங்கள் :*** குடியிருக்கும் வீடு அல்லது கிராமம் அல்லது நகரம் அமைக்கப்படும் லக்னத்தில் சந்திரன், 7-ல் குரு, 10-ல் புதன் இருக்க அல்லது 10ல் சுக்ரன், 7-ல் குரு ஸ்திர லக்னத்தில் புதன் இருக்க ஆரம்பித்து அமைக்கப்படும் வீடு அல்லது கிராமம் அல்லது நகரம் செழிப்புடன் 600 ஆண்டுகள் வரை விளங்கும்.

***800 வருடங்கள் :*** லக்னத்தில் சுக்ரனும் ஸ்திர ராசியாகவுள்ள 7-ம் இடத்தில் குருவும் இருக்க ஆரம்பித்துக் கட்டப்படும் வீடு 800 ஆண்டுகள் வளர்ச்சியுற்று செல்வச் சிறப்புடன் எல்லாவித ஆசியுடன் இருக்கும்.

***ஆயிரம் வருடங்கள் :*** லக்னத்தில் சூரியன், 7-ல் குரு, 10-ல் சந்திரன் இருக்கும்பொழுது ஆரம்பிக்கப்பட்ட வீடு, ஆரம்பிக்கப்பட்ட கிராமம் முதலானவை ஆயிரம் ஆண்டுகள் செல்வ வளத்துடன் கூடியவைகளாக இருக்கும்.

இதுபோலவே லக்னத்தில் சுக்ரன், 7-ல் குரு, 10-ல் சந்திரன் இருக்க வீடு (தேவாலயம்) முதலானவைகள் ஆயிரம் ஆண்டுகள் சிறப்புடன் விளங்கும்.

லக்னத்தில் புதன், 7-ல் குரு, 10-ல் குரு, 10-ல் குரு இருக்க ஆரம்பிக்கப்பட்ட வீடு, தேவாலயம் முதலானவை ஆயிரம் ஆண்டுகள் பிரகாசமுடன் இருக்கும்.

ஸ்திர லக்னத்தில் குரு, 7-ல் புதன், 10-ல் சந்திரன் இருக்க ஆரம்பிக்கப்பட்ட வீடு முதலானவை ஆயிரம் ஆண்டுகள் வளர்ச்சியுற்று விளங்கும்.

வெள்ளி, திங்கட்கிழமைகளில் வீட்டை பசுஞ்சாணியால் மெழுக வேண்டும்.

## *வீட்டு வேலைகள் (தினசரிக் கடமைகள்)*

தினந்தோறும் வீட்டில் காலையில் துடைப்பத்தால் தூசியகற்றி பசுஞ்சாணி நீர் தெளித்தல் வேண்டும்.

அமாவாசை, பௌர்ணமி, கிரஹணம், மாதப்பிறப்பு, சுக்ர-சந்திரர்கள் சேரும் காலம் இவைகளில் வீட்டை பசும் சாணத்தால் மெழுக வேண்டும்.

வீட்டுச் சுவரில் தூசியகற்றி, பெருக்கி சுத்தம் செய்து, சுண்ணாம்பு அடிப்பது போன்ற காரியங்களைச் சுப வாரங்களில் செய்யவேண்டும்.

பாபிகளின் வாரங்களிலும், சதுர்தசியிலும் வீட்டுச்சுவரில் சுண்ணாம்பு அடித்தல் போன்ற கார்யங்களைச் செய்தால் அந்த வீடு சூன்யமாகும்.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறையோ மண்பாண்டம் (பித்தளை) போன்ற பாத்திரங்களைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

கார்த்திகை, மகம், பூரம், உத்தரம், ஹஸ்தம், மூலம், ரேவதி இவைகளுடன் செவ்வாய் சேரும்பொழுது வீட்டு வேலை செய்யக்கூடாது. செய்தால் வீட்டில் தீப்பிடிக்கும். புத்ரனுக்கும் தீமை ஏற்படும்.

வீட்டுக்கூரை, ஓட்டு வீடாகில் செவ்வாய்க்கிழமை முற்பகலில் உஷ்ண ராசியான லக்னத்தில் செவ்வாய் இருக்கும் பொழுது வீட்டிற்குக் கூரை வேய்ந்தாலோ, ஓடு போட்டாலோ அந்த வீடு தீயினால் பாதிக்கப்படும்.

சர லக்னத்தில் சுக்ரனும், கேந்திரத்தில் குருவும் இருக்கும் பொழுது வீட்டிற்கு வைக்கோல் (தென்னங்கீற்று/கோரை) முதலானவற்றால் கூரை வேய்ந்தால் அந்த வீட்டிற்குக் காற்றினாலோ தீயினாலோ பயம் இருக்காது.

சுபமான கிழமைகளில் - சந்திரன் சுப லக்னத்தில் (ஜல ராசியான ரிஷபம், கடகம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் ஆகிய லக்னத்தில்) இருக்க வைக்கோல் (கோரை / தென்னங்கீற்று) முதலானவற்றால் கூரை வேய்ந்தால் அந்த வீடு தீயினால் பாதிக்கப்படும்.

வியாழக்கிழமை தினத்தில் ரோகிணி, மிருகசீர்ஷம், ஆயில்யம், உத்தரம், பூராடம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி இவைகளுள் ஏதேனும் ஒன்றுடன் குரு சேர்ந்திருக்கும் வேளை "ராஜயோகம்" என்பர். இந்த சுபயோகத்தில் தொடங்கப்பட்ட வீடு சிறப்புறும் என்பதுடன் வீட்டின் தலைவன் சிறந்த புத்ரனையும், செல்வங்களையும் (ராஜ்யம் என்பது இக்காலத்திற்கு ஏற்ற பொருளாகாது) பெறுவான்.

வெள்ளிக்கிழமை தினத்தில் ஜல ராசியாகவும், தன் சொந்த வீடாகவும் உள்ள லக்னத்தில் சுக்ரன் இருக்க வீட்டிற்குக் கூரை வேய்ந்தால் அந்த வீட்டிற்கு நெருப்பு பயமே இல்லை. திங்கட்கிழமையில் ஜல ராசியான லக்னத்தில் சந்திரன் இருக்க வீட்டிற்கு வைக்கோல், கோரை போன்ற புல் வேய்ந்தால் அந்த வீட்டிற்குத் தீயின் பயமே ஏற்படாது.

### *வீட்டு வேலைக்குத் தகாத மரங்கள்:*

அரசு, அத்தி, இரளி (இச்சி), ஆல், ஏழிலம்பால், வில்வம், புரசு (குடஜம்), வெட்பாலை, பீலு (ச்லேஷ்மாதகம்), நறுவிலி லோத்ரம் (அடம்பை), கத(ட)ம்ப மரம், பாதிரி (சிரீஷ), காட்டு வாகை, கோவிதாரம், மலையகத்தி, புளி, பெருமரம், இலவ மரம், ஸர்ப்பமரம், கிம்சுகம், கடுக்காய்மரம், விளாமரம், புத்ரதீபம், மாவிலங்க மரம், அச்வமாரகம், இலந்தை மரம், மகிழமரம், நெல்லி ஆகிய மரங்கள் (மரச்சாமான்களை) வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தலாகாது. மேலும் மிகுந்த நிழல் தரும் மரங்கள், பாதையில் உள்ள மரங்கள், பொந்து இருக்கும் மரங்கள், கோயிலுக்குச் சொந்தமான மரங்கள், புயல் காற்றினாலோ, இடிவிழுந்ததாலோ விழுந்த மரங்கள், வெள்ளம் வந்தால் விழுந்த மரங்களோ, உளுத்த மரங்கள், தேன் கூடுள்ள, தீ பற்றிய, சுடுகாட்டில் உள்ள பெரும் சத்தமுடன் விழுந்த, காளி கோயிலில் உள்ள, ஒன்றுக்கொன்று தாங்கலாக நிற்கிற மரங்களும் வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தலாகாது. பில்வம், திந்துகம் (ச்லேஷமாதம்), நறுவிலி (கோவிதாரம்)

மலையகத்தி ஆகியவை கோயில்களுக்கு உகந்தவை. மனிதர்களுக்குத் தீங்கு செய்பவை என்பதால் வீடு கட்டுவதற்கு அவற்றைப் பயன்படுத்தலாகாது.

சாதாரணமாகப் பழமையான காலத்தில் சிறந்த மரங்கள் கொண்டு தூண்கள், உத்தரங்கள், நிலைவாசல்கள், கதவுகள் அமைக்கப்பட்டிருக்கும். காலப்போக்கில் அந்த வீட்டை ஒருவர் விற்க வந்தால் வாங்கலாம். அதே வீட்டைப் பழுது பார்க்கலாம். அப்படிக்கின்றி அந்த பழைய வீட்டை வாங்கி இடித்துவிட்டு அதிலுள்ள அச்சிறந்த மரங்களைக் கொண்டு வேறு இடத்தில் வீடு கட்டுவது சரியில்லை என்று கூறப்படுகிறது.

வேறு வீட்டில் பயன்பட்ட மரங்களுக்கு க்ருஹசல்யம் என்று பெயர் உண்டு. அதே "கிருஹசல்யங்களை"க் கொண்டு வேறு ஒரு வீடு கட்டப்படுமானால் அதன் யஜமானன் அழிந்து விடுவான் (காலதாமதமின்றி). அறிவு குறைந்தவர்கள், வேறு வீட்டில் இருந்த பழைய மரங்களைக் கொண்டு வீடு கட்டினால் அந்த வீடு, புத்ரர்கள் - ஆயுஸ் - மனைவி, செல்வங்கள் ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்படும். தன் குடும்பத்தினருடன் வசிப்பதற்கான வீட்டை புதிய மரங்களைக் கொண்டே கட்டுவதுதான் நல்லது. "கிருஹசல்ய"ங்கள் கொண்டு கட்டப்பட்ட வீடு அதிகத் தாமதமின்றி அழிந்துவிடும்.

கதவுகள் இல்லாத, கூரைப்பகுதி கட்டப்படாமல் உள்ள, பூஜை செய்யப்படாமல் உள்ள வீட்டில் பைசாசங்கள் உலவும். அந்த வீடு ஆபத்துக்களுக்கு உறைவிடமாக ஆகிவிடும். (தீமை விளைவிக்கும்.)

## *வீட்டிற்கு யார் யார் எந்த எந்த திசைப் பார்வையுள்ள வாசல் அமைக்கலாம்.*

கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய லக்னங்களில் பிறந்தவர்களுக்குக் கிழக்குப் பார்வையான வாசல் உத்தமம். மகரம், கன்னி, ரிஷப லக்னங்களில் பிறந்தோருக்குத் தெற்குப்

பார்த்த வாசல் வைப்பது நலம். கும்பம், மிதுனம், துலா லக்னங்களில் பிறந்தவர்களுக்கு மேற்குப் பார்த்த வாசல் உத்தமம். மேஷம், சிம்மம், தனுஸ் லக்னங்களில் பிறந்தவர்க்கு வடக்குப் பார்த்த வாசல் நல்லது. சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.

வீடு உள்ள பகுதியை ஒன்பது பாகமாகச் செய்து, வலதுபுறம் 5 பாகங்களும், இடதுபுறம் 3 பாகங்களும் விட்டு விட்டு மீதியுள்ள பகுதியில் வீடுகட்டுவது நல்லது.

வீட்டை 8 பாகமாக்கிக் கொள்ளவும். கிழக்குப் பார்த்த வாசல் உள்ள வீட்டை 8 பாகமாக்கினால் அந்த ஒவ்வொரு பாகத்திற்கான பலன் பின்வருமாறு. மனக்கிறை (ஹானி), பலவீனம், தனலாபம், அரசாங்க கௌரவம், பெரும்செல்வம், அளவற்ற சுகம், அதிகத் துயரம், பயம்.

தெற்குப் பார்த்த வீட்டினை 8 பாகமாக்கினால் - மரணம், சிறைவாசம், அன்பு, பாதுகாப்பு, தான்ய லாபம், மன அமைதியின்மை, வியாதி பயம், பலக்குறைவு ஆகிய பலன்கள் ஏற்படும். புத்ரநாசம், சத்ரு விருத்தி, செல்வ லாபம், பணவரவு, ஸௌபாக்யம், தௌர்பாக்யம், பயம், சோகம் ஆகிய பலன்கள் மேற்கு திசையைப் பார்த்த வீட்டிற்கான பலன்கள் பலன்கள் என்பது பொருத்தமான பொருள்

மனைவிக்கு அவமானம், பலக்குறைவு, ஹானி, தனலாபம், தான்ய லாபம், சம்பத் விருத்தி, பூமி விருத்தி, ரோகம் இவை வடக்குப் பார்த்த வீட்டிற்கு உண்டாகும் பலன்கள்.

மனைவி கர்பவதியாக இருக்கும்பொழுதும், குரு, சுக்ரர்களின் மௌட்யம் இருக்கும்பொழுது வீட்டைக் கட்ட ஆரம்பிப்பதும், புதுமனை புகுவதும் கூடாது. அப்படிச் செய்தால் மனைவிக்கு மரணம் வரையிலான தீமையைப் பலனாகச் சொல்லவேண்டும்.

புதுவீடு கட்டுவது, புதுமனை புகுவது, அணிகலன்கள் அணிவது, விவசாய வேலை ஆரம்பம் செய்தல், வித்யாப்யாஸம், ராஜ்யாபிஷேகம் ஆகியவற்றை ஜன்ம நக்ஷத்திரத்திலோ அனுஜன்ம நக்ஷத்திரத்திலோ, த்ரிஜன்ம நக்ஷத்திரத்திலோ செய்யவேண்டும்.

## வீட்டிற்கு அஸ்திவாரம் இடுவது பற்றி

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>வடகிழக்கு | மேஷம்<br>கிழக்கு | ரிஷபம்<br>கிழக்கு | மிதுனம்<br>தென்கிழக்கு |
| கும்பம்<br>வடக்கு | ப்ராம்மம் | | கடகம்<br>தெற்கு |
| மகரம்<br>வடக்கு | ப்ராம்மம் | | சிம்மம்<br>தெற்கு |
| தனுஸ்<br>வடமேற்கு | விருச்சிகம்<br>மேற்கு | துலாம்<br>மேற்கு | கன்னி<br>தென்மேற்கு |

மனையை 16 சம பாகமாக்கினால் நடுவில் உள்ள 4 சதுரங்கள் ப்ராம்மம் எனப்படும் ஈசான திசையில் (வடகிழக்கு திசையில்) உள்ளது மீனம் அடுத்த கட்டம் முதல் பிரதக்ஷிணமாக மேக்ஷம் முதலான 12 ராசிகள் ஆகும். அவற்றுள் மேஷம். சிம்மம், தனுஸ் உள்ள பகுதியில் முதலில் அஸ்திவாரம் அமைத்தல் உறவினர்களின் உறவு முறையைப் பாதுகாக்கும். ரிஷபம், கன்னி, மகரம் இம்மூன்றுமுள்ள பகுதியில் வீடு ஆரம்பம் செய்தால் அந்த கிராம அதிபதியின் அனுசரணை ஏற்படும். மிதுனம், துலாம், கும்பமுள்ள பகுதியில்

வீட்டிற்கான அஸ்திவார வேலை ஆரம்பிக்கப்பட்டால் புத்ர - பௌத்ர (son and grandson) முதலானவர்களின் முன்னேற்றம். கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய இடங்களில் அஸ்திவார வேலை ஆரம்பம் செய்தால் மனைவி, மக்கள் முதலானோருக்குத் தீமை.

## இருபத்தி ஆறாவது அத்யாயம்

## புதுமனை புகுதல்

இதற்குமேல் புதுமனை புகுவது பற்றிச் சொல்ல இருக்கிறேன். வளர்பிறையில் புதுவீட்டில் பிரவேசம் செய்யலாம். தேய்பிறையில் தசமீ வரையிலும் கிரஹப்பிரவேசம் செய்யலாம். முற்பகலில் புதுமனை புக உத்தமம். நண்பகலில் பிரவேசம் செய்வதும் உத்தமமே.

(1) ரோகிணி, (2) உத்தரம், (3) ஹஸ்தம், (4) அனுஷம், (5) பூசம், (6) மிருகசீர்ஷம், (7) திருவோணம், (8) ரேவதி, (9) புனர்பூசம், (10) சதயம், (11) உத்தராடம், (12) உத்தரட்டாதி ஆக இந்த 12 நக்ஷத்திரங்கள் உத்தமம்.

பிரதமை (கிருஷ்ணபக்ஷப் பிரதமை) த்விதீயை, த்ருதீயை, பஞ்சமீ, ஸப்தமீ, சுக்ல ஏகாதசி, சுக்ல திரயோதசி இவை நலம். சந்திரன், புதன், குரு, சுக்ரன் இவர்களின் வாரம் உத்தமம். சனியின் வாரம் மத்யமம். மற்றவை விலக்கத்தக்கவை.

கிருஹப்பிரவேசம் செய்யும் விஷயத்தில் ஸ்திர ராசிகள் உத்தமம். உபய ராசிகள் மத்யமம். சர ராசிகள் கூடாது.

விருஷபத்தின் அம்சகமான லக்னத்தில் எல்லாவகை கிருஹங்களிலும் பிரவேசம் செய்யலாம். குணமற்றிருப்பினும் விருஷபம் சிறந்ததே. அதில் சுபர்கள் இருந்தால் மிகவும் உத்தமம். விருஷபாம்சமான லக்னத்தில் சுபகிரஹம் இருந்தால் இரவு நேரத்திலும்கூட கிரஹப்பிரவேசம் செய்யலாம் எனச் சிலர் சிறப்பாகக் கூறுகிறார்கள்.

கிருஹப்பிரவேசத்திற்கான லக்னம் உங்கள் ஜன்ம ராசியாகி, அது ஸ்திர ராசியாகவும் இருந்தால் நோய் தீரும். (நோயற்ற வாழ்வு உண்டு.)

ஜன்ம ராசிக்கு இரண்டாம் ராசி பிரவேச லக்னமாகில் நோய் உபத்திரமும், செல்வ நாசமும் ஏற்படும். மூன்றாமிடம் பிரவேச லக்னமாகில் தனலாபம். 5-ஆமிடத்தில் ப்ரவேச லக்னம் அமைய புத்ரநாசம். 6-ல் ப்ரவேச லக்னம் இருக்க பகைவர் நாசம். 7-ல் மனைவி மரணம். 8-ல் மஹாவியாதியுடன் மரணமும் ஏற்படும். 9-ல் லக்னமாகில் ராஜ தண்டனை கிடைக்கும். ஜன்ம ராசிக்கு 10-ல் பிரவேச லக்னம் அமைந்தால் அஸாத்யமாயினும் கார்யஸித்தி ஏற்படும். 11-ல் பிரவேச லக்னம் அமைந்தால் பெரும் செல்வமும், 12-ல் போகமும் ஏற்படும்.

மேஷாதி ராசிகளில் கிருஹப்பிரவேசம் செய்ய என்ன என்ன பலன்கள் ஏற்படும் என்பதனை "**யாத்திரை விதிமுறை**"கள் என்னும் பகுதியில் கூறப்படுவதால் இங்கு கூறப்படவில்லை. அங்கு பார்த்துக்கொள்ளவும்.

சுக்ரன் முன்போ, இடதுபுறமோ இருக்க கிருஹப்ரவேசம் செய்யலாகாது.

சுக்ரன் தனது அல்லது மித்ரனின் அல்லது உச்ச ஸ்தானத்தில் இருக்கும்பொழுது தோஷம் செய்யமாட்டார். ப்ரவேச லக்னத்திற்கு 8-ல் யாரும் இருக்கக்கூடாது

க்ருஹப்ரவேசம், ஸீமந்தம், யாகங்கள், பும்ஸவனம், கர்பாதானம், விவாஹம் (திருமணம்) முதலானவை ஸ்த்ரீ நக்ஷத்திரத்திற்குப் பொருத்தமான நாளில் செய்யவேண்டும்.

அரசர் முடிசூட்டுவது சம்பந்தமான விபரங்கள் இக்காலத்திற்குப் பொருத்தமாக இல்லாமையால் அந்தப்பகுதி விளக்கப்படவில்லை.

## இருபத்தி ஏழாவது அத்யாயம்

### *வாகனம் ஏறுதல்*

மகம், ஹஸ்தம், உத்தரம், ரேவதி, அச்வினி, சித்திரை, மிருகசீர்ஷம், உத்தராடம், திருவோணம், ரோகிணி. ஸ்வாதி, அனுஷம் இவைகளில் வாஹனம் ஏற சுபம்.

நந்தையிலும் (பிரதமை, ஷஷ்டி, ஏகாசி) பௌர்ணமியிலும்; செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்றவைகளில் வாஹனம் ஏறலாம்.

### *ஆயுதம்கொண்டு செய்யப்படும் கார்யங்கள். (போர் முதலியன)*

மகம், திருவாதிரை, கார்த்திகை, சித்திரை, பூரம், ஆயில்யம், அச்வினி, சதயம், பரணி ஆகிய நக்ஷத்திரங்களிலும்; சதுர்த்தி, நவமி, சதுர்தசியிலும்; பத்ரை (விஷ்டி) கரணத்திலும்; ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி வாரங்களிலும், இவர்களின் லக்னாம்சங்களிலும் ஆயுத கார்யங்கள் செய்யலாம். போர் செய்யின் வெற்றி பெறலாம்.

### *யானை வாங்குதல்*

பூசம், மிருகசீர்ஷம், பூரம், ரேவதி, ரோஹிணி, அவிட்டம், அனுஷம், உத்தரம், திருவோணம், உத்தராடம், உத்தரட்டாதி ஆகியவற்றில் யானை வாங்க உத்தமம்.

திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளும்; சந்திரன், புதன், குரு, சுக்ரன் ஆகியோரின் லக்னம், அம்சங்களும் யானைகள் வாங்குவதற்கும், யானை ஏறுவதற்கும், யானைகளைப் பழக்குவதற்கும் உத்தமம்.

மேற்படி நக்ஷத்திரங்கள், திதி, வாரங்களில் யானை சம்பந்தப்பட்ட கார்யங்கள் யாவும் செய்யலாம். சுபம்.

சுப நக்ஷத்திரங்கள், சுப லக்னங்கள், சுபாம்சங்கள், சுப திதிகள் முதலியவற்றில் யானைகளுக்கு அங்குசத்தைப் பயன் படுத்தவேண்டும். சனியின் லக்னத்திலும் (மகர, கும்ப), சனி வாரத்திலும் அங்குச யோஜனம் உத்தமம்.

## யானைக்குத் தங்குமிடம் அமைக்க

சூரியன் உச்சத்திலும், குரு ஸ்வக்ஷேத்திரத்திலும, சந்திரன் லக்னத்திலும், சுப நக்ஷத்ராம்சத்திலும் சந்திரன் இருக்கும் பொழுதும் கஜ சாலை ஆரம்பிக்கவேண்டும்.

## குதிரை வாங்குவது - பழக்குவது - குதிரை ஏற்றம் செய்வது சம்பந்தமாக

ஹஸ்தம், புனர்பூசம், ரேவதி, அச்வினி, பூசம், ஸ்வாதி, விசாகம், கார்த்திகை, மிருகசீர்ஷம், அவிட்டம் இவைகளில் குதிரை வாங்குதல், அவற்றைப் பழக்குதல், குதிரை ஏற்றம் முதலான அனைத்தும் செய்தால் சகல ஸௌக்யத்தையும், ஐச்வர்யத்தையும் பெறலாம்.

ஆண் குதிரைகளுக்கு அச்வினியும், பெண் குதிரைகளுக்கு சதயம் ஜன்ம நக்ஷத்திரங்களாகும். இந்த இரு நக்ஷத்திரங்களுக்கு அனுகூலமான நக்ஷத்திரங்களில் ஆண் / பெண் குதிரை சம்பந்தமான கார்யங்களைச் செய்யவேண்டும்.

## ஆடுகள் வாங்க

க்ருத்திகை முன்பாதியும், பூச நக்ஷத்திரமும் உத்தமம். ஏனெனில், அவைகள் அவற்றின் ஜன்மங்களாகும்.

யானை, குதிரை, பசுக்கள் வாங்கவும், கொட்டடி/லாயம்/ கொட்டில் கட்டவும்; அவற்றிற்கான ஆட்களை நியமிக்கவும், யானை/குதிரை ஏற்றம் செய்யவும், சுப லக்னமும், சுபாம்சங்களும் உத்தமம். இவ்வாறு செய்தால் யஜமானனுக்கு நன்மைகளும், யானை, குதிரை, பசுக்களின் விருத்தியும் ஏற்படும்.

## இருபத்தி எட்டாவது அத்யாயம்

இதுமுதல் நூதன தேவதா பிரதிஷ்டை / ஸ்தாபனம் சம்பந்தமாகச் சொல்லவிருக்கிறேன்.

தேவதா ஸ்தாபனத்தை உத்தராயணத்தில் செய்ய வேண்டும். மாசி மாதத்தைத் தவிர்க்கவேண்டும்.

வளர்பிறையில் - சுப நக்ஷத்திரத்தில் சந்திரன் பலமுடன் இருக்கும்பொழுது, சுக்ரனும், குருவும் நிர்மலமான ஆகாசத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்பொழுது (குரு - சுக்ர மௌட்யம் இருக்கலாகாது) யஜமானனுக்கு அனுகூலமான நக்ஷத்திரத்தில் வித்வான்களால் நூதன தேவதா ஸ்தாபனம் செய்யப்பட வேண்டும்.

ரோகிணி, புனர்பூசம், மிருகசீர்ஷம், ரேவதி, ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, ஸ்வாதி ஆகிய நக்ஷத்திரங்கள் தேவதா பிரதிஷ்டை விஷயத்தில் உத்தமமானவை.

திருவோணம், சித்திரை, அச்வினி, மூலம், அவிட்டம், அனுஷம் ஆகிய நக்ஷத்திரங்கள் மத்யமம்.

நவமீ திதி தவிர - மற்ற ஒற்றைப்பட்ட திதிகள், இரட்டித்த திதிகளில் தசமீ, ஷஷ்டி, த்விதீயை அகியவை சுபம்.

சுக்ரன், சந்திரன், குரு, புதன் இவர்களின் வார அம்சங்கள் லக்னம், திரேக்காணம், ஹோரை இவைகளில் தேவதா பிரதிஷ்டை செய்வது சுபம்.

ராசிகளில் ஸ்திர ராசிகள் உத்தமம். துர்கை போன்ற ஸ்த்ரீ தேவதைகளுக்கு உபய ராசிகள் நல்லவையாகும். சர ராசிகள் யாவும் விலக்கத்தக்கவை.

சந்திரன் உச்சத்தில் இருக்கும்பொழுது, தேவதா பிரதிஷ்டை செய்யப்பட்டால் அது யஜமானனுக்கு ஸௌக்யம் உண்டு (ஏற்படும்). சந்திரன் நீச ராசியில் இருக்கும்பொழுது இந்த தேவதா பிரதிஷ்டை நடந்தால் யஜமானனுக்கு தாரித்ரியம் (Poverty). மித்ர ராசியில் இருந்தால் ஸௌக்யம் - தனாதி வசதிகளை அளிப்பார். சந்திரன் சத்ரு ஸ்தானத்தில்இருந்தால் அதிகம் சத்ருக்கள் உண்டு. நிச்சயம்.

தேவதா பிரதிஷ்டை காலத்தில் லக்னத்தில் சூரியன், ராஹு, சந்திரன், சனி, (செவ்வாய்) ஆகியவர்கள் இருந்தால், அந்த தேவதா பிரதிஷ்டை நடக்கும் கிராமம், தேசம் இவற்றை விரைவிலேயே நாசம் செய்வர். லக்னத்தில் சுபர்கள் (சுப கிரஹங்கள்) இருப்பின் ஸகலவித ஸௌக்யங்களையும், தன விருத்தியையும் அளிப்பார்கள்.

தன ஸ்தானத்தில் பாபிகள் இருந்தால் தனநாசம்.

இரண்டாம் இடத்தில் சுபர்கள் சந்திரனுடன் கூடியிருப்பின் மிக அதிக தனங்களை அளிப்பர்.

மூன்றாம் இடத்தில் உள்ள எல்லா கிரஹங்களுமே மகிழ்ச்சியளிப்பர்.

நான்காமிடமான பந்து ஸ்தானத்தில் (The sign of relative) உள்ள பாபிகள் (Melefics) சுகநாசத்தைச் செய்வர். சந்திரனைத் தவிர மற்ற சுபர்கள் (Benefics) 4ல் இருந்தால் சுகத்தை விருத்தி செய்வர்.

5-ஆமிடத்தில் பாபிகள் இருந்தால் புத்ர நாசத்தைச் செய்கிறார்கள். 5-ல் இருக்கும் சுபர்கள், புத்ர, பாக்ய, சௌக்யம் தனாதி நன்மைகளைச் செய்வர்.

புத்ர ஸ்தானம் எனப்படும் 5-ல் சந்திரன் இருந்தால் ஸௌக்ய நாசத்தைச் செய்வார்.

சத்ரு ஸ்தானம் எனப்படும் 6-ல் அசுப கிரஹங்கள் இருந்தால் பகைவர்களை அழிப்பர்.

தேவதா பிரதிஷ்டையாகும் லக்னத்திற்கு, ஆறாம் இடமான சத்ரு ஸ்தானத்தில் குரு இருந்தால் பகைவர்களின் அபிவிருத்தி ஏற்படும்.

ஆறாம் இடத்தில் சந்திரனும் சுக்ரனும் இருந்தால் ஸ்தான பிரம்சம் (may tempt the 'yajaman' to relinquish his position) செய்வர்.

7-ஆமிடத்தில் சூரியன் இருந்தால் யஜமானனை நாசம் செய்வர். 7-ல் உள்ள சனி சுகக் குறைவையும், புதன் புத்ர நாசத்தையும், செவ்வாய் அக்னி பயத்தையும் செய்வர். 7-ல் சுக்ரன் இருந்தால் அந்த தேவதா பிரதிஷ்டை நடக்கும் இடத்தில் பைசாசங்கள் குடியிருக்கலாகும். (Venus in the 7-th will divert the temple into a haunt of devils).

7-ல் குருவும், சந்திரனும் இருந்தால் தனதான்யங்கள் மிகுந்திருக்கும்.

8-ஆமிடத்தில் எந்த ஒரு கிரஹமும் இருக்கலாகாது. இருப்பின் குலநாசம் ஏற்படும்.

9-ஆமிடத்தில் இருக்கும் சுபர்கள் தர்ம விருத்தியைச் செய்வர். சந்திரனுடன் சேர்ந்த பாப கிரஹங்கள் 9-ல் இருந்தால் ஸௌக்யம், தர்மம் இவற்றிற்குக் குறைவைச் செய்வர். 10-ல் இருக்கும் பாபிகள் ஸ்தான நாசத்தைச் செய்வர். சுபர்கள் சந்திரனுடன் சேர்ந்திருப்பின் ஸகல செல்வங்களையும், புத்ரர்கள், நண்பர்களின் அபிவிருத்தியையும் செய்வர்.

11-ல் இருக்கும் கிரஹங்கள் யாவுமே புத்ரன், ஆயுஸ், ஸௌக்யம் யாவற்றையும் அளிப்பர்.

*12-ல் கிரஹங்கள் இருந்தால் யஜமானனுக்கு தாரித்ர்யத்தை* (Poverty) *அளிப்பர்.*

*12-ம் இடத்தில் குருவும், புதனும் இருந்தால் தனவிருத்தியைச் செய்வர்* (will increase welth).

நக்ஷத்ரம், திதி, வருடம், அயனம் இவற்றின் முடிவிலும் வேதையான நக்ஷத்திரமுள்ள ராசியிலும் (லக்னத்திலும்) வியதீபாதம், கிரஹணம், சூன்யமாஸம், சூன்யதினம்*, சூன்ய ராசி, பரிவேஷம், துர்தினம் [மேகம் மூடிய - (சூரியனே தெரியாதபடி) நாள்], ஷடசீதி, முகம் ஆகியவற்றில் தேவதா ஸ்தாபனத்தை விலக்குதல் வேண்டும்.

## இருபத்தோன்பதாவது அத்யாயம்

### *யாத்ரா விதி*

முன் நாட்களில் வாஹன வசதிகளும், பாதை வசதிகளும் அருகியிருந்தன. இக்காலத்தில் சென்னை, டில்லி ஏன் அமெரிக்க நாடுகள் சென்று வருவதுகூட எளிதாயிருக்கிறது. ஆனால் முன் நாட்களில் கும்பகோணம் - திருச்சி போன்ற இடங்களிக்குச் சென்றுவருவதும் மிகக் கடினமாக இருந்தது. சென்றாலும் உடனே திரும்ப இயலாதிருந்தது. சரியான பாதை இல்லை. வாகன வசதி இல்லை. இரவில் பயணம் செய்ய இயலாதநிலை. பகலில் வெயில், உணவு, குடிநீர் பிரச்னை. எனவே, முன்காலத்தில் சுமார் 50-60 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும்கூட, இந்த பிரயாண அசௌகர்யங்கள் இருந்தன. சுருங்கச் சொல்லுவதாயின் முன்காலத்தில் 'காசி யாத்திரை' செல்லுகிறவர்கள் புறப்படுவதற்கு முன்பாக உயில் எழுதி வைத்துவிட்டுச் செல்லும் பழக்கம் இருந்தது என்றால் 'யாத்திரை' அக்காலத்தில் மிகவும் கடினமானதொன்றாக இருந்திருக்கிறது. எனவே, யாத்திரை புறப்படுகிறதற்கு முன்பாக ஜ்யோதிஷரிடம் சென்று யாத்ரை கிளம்புவதற்கான நல்லநாள், நேரம் முதலான விபரங்களைக் கேட்டறிவது

---

* இவை பற்றிய விளக்கம் பின்வரும் அத்தியாயம் 33-ல் கூறப்படுகிறது.

வழக்கம். இன்று விஞ்ஞானம் சந்திரமண்டல பிரயாணத்தைக் கூட எளிதாக்கிவிட்டது. இந்த நிலையிலும் - சிறு பிராயண விஷயத்தில் யாத்ரை விதிகளைப் பின்பற்றாவிட்டாலும், காசியாத்ரை - வெளிநாட்டுப் பயணம் முதலானவற்றை மேற்கொள்ளும்போது யாத்ரா விதிகள் பின்பற்றப்படுகின்றன என்பதால் அவை பற்றியறிவது அவசியம்.

இதற்குமேல் சகல கார்யஸித்தி யாத்ரா விதிகளைக் கூறுகிறேன். சூரியன் - மீனம், கடகம், விருச்சிக ராசிகளில் ஸஞ்சரிக்கும் பங்குனி, ஆடி, கார்த்திகை மாதங்களில் யாத்ரை செய்வது தவிர்க்கப்படவேண்டும். மற்ற மாதங்களில் செய்யலாம்.

சிம்மம், கடகம் இவற்றின் மத்தியில் தான் வசிக்கும் இடத்திலிருந்து பிரயாணப்படலாகாது. பிராயணம் செய்தால் நோயுற்று மன அமைதியின்றி ஏழு ஆண்டுகள் கஷ்டப்படலாகும்.

செவ்வாய், சுக்ரன், புதன் இவர்கள் வக்ர கதியில் ஸஞ்சரிக்கும் பொழுதும், அஸ்தமனம் அடைந்திருக்கும் பொழுதும் யாத்ரையை விலக்குபவனே அறிவாளி.

கோசாரம் அனுகூலமாக இருக்கும் காலத்தில் யாத்ரையை மேற்கொள்ளவேண்டும். சுக்லபக்ஷம் (வளர்பிறை) சுபம். கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை) கூடாது.

### யாத்ரைக்கான சுப நக்ஷத்திரங்கள்

ஹஸ்தம், பூசம், அச்வினி, அனுஷம், அவிட்டம், ரேவதி, திருவோணம், மிருகசீர்ஷம் ஆக எட்டு நக்ஷத்திரங்களும் உத்தமம். ரோகிணி, புனர்பூசம், மூலம், சதயம், சித்திரை, உத்தரம், உத்தரட்டாதி இவை மத்யமம்.

### அசுப நக்ஷத்திரங்கள்

பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, ஜன்ம நக்ஷத்திரம், கார்த்திகை, ஸ்வாதி, ஆயில்யம், விசாகம்,

திருவாதிரை ஆகிய நக்ஷத்திரங்கள் கூடாதவை என அறிஞர்களால் கூறப்பட்டுள்ளது.

கிருத்திகையில் 13 நாழிகைகள், பரணியில் 7, மகம், பூரம், பூரட்டாதிகளில் 16, ஸ்வாதீ, ஆயில்யம், விசாகம், திருவாதிரை, கேட்டை, ஜன்ம நக்ஷத்திரம் ஆகியவற்றில் 14 நாழிகைகள் பிரயாணத்தில் விலக்கத்தக்கவை.

த்விதீயை, திருதீயை, பஞ்சமீ, ஸப்தமீ, தசமீ, ஏகாதசி ஆகியவை பிராயணத்திற்கு உகந்தவை. ஷஷ்டி, அஷ்டமீ, சதுர்த்தி, நவமீ, சதுர்தசி, பிரதமை, துவாதசி, அமாவாஸை ஆகியவை கூடாதவை.

புதன், சுக்ரன், குரு இவர்களின் வாரம், கிழமைகள்) அம்சங்கள் சுபம். மற்றவர்களின் வார - அம்சங்கள் விலக்கப்பட்டவை.

ரிஷபம், சிம்மம், துலாம், கடகம், தனுஸ் இவை (லக்னங்கள்) மிகவும் உயர்ந்தவை. மற்றவை கூடாதவை.

திருவாதிரையில் யாத்ரை செய்தால் அதிக துக்கம். ஆயில்யத்தில் பசியால் வாடும் நிலை ஏற்படும். பூராடத்தில் உடலுக்குத் தீங்கு. ஸ்வாதி, விசாகத்தில் உடலில் விரணம் (sufferings from wounds). பரணி, மகம் ஆகியவற்றில் மரணம். கார்த்திகையில் அலைச்சல் ஏற்படும். பூரட்டாதியில் பலவித கஷ்டங்கள் ஏற்படும். கேட்டையில் கடும் ஜ்வரம். பூரத்தில் பிரயாணம் செய்கிறவன் திரும்பமாட்டான்.

வியதீபாதத்தில் பிரயாணம் செய்ய உடலுக்குக் கேடு. மாதப்பிறப்பு நாட்களில் யாத்ரை மேற்கொண்டால் அலைச்சல் மிகும். சூரிய - சந்திர கிரஹணத்தில் பந்தனம் (confinement).

யாத்திரை மேற்கொள்ளும்போது எதிர்காற்று வீசினால் துக்கம். பரிவேஷம் (சூரிய-சந்திரர்களைச் சுற்றி வட்டம் அமைந்திருக்கும் நாள்) சமயத்தில் மேற்கொண்டால் பசி,

தாகத்தால் பீடிக்கப்படலாகும். மேகம் மூடிய (சூரியன் ஒளிராத) நாளாக இருக்கும் தினத்தில் (முன்னதாகவே பிற நல்ல நாள் எனத் தீர்மானிக்கப்பட்ட நாளாக இருந்து எதிர்பாராமல் மேகம் கவிந்த நாளாக நேரிட்டுவிட்டால்) யாத்ரை செய்வது சரியல்ல. தாழ்வுநிலை மதிப்புக் குறையும் வகையில் இருக்க நேரிடும். மழை எதிர்பாராமல் ஏற்பட்டு யாத்திரைக்குக் கிளம்ப திரும்பி வருவது கடினம்.

### யாத்திரை திதி பலன்கள்

| திதிகள் | பலன் |
|---|---|
| பிரதமை | யாத்திரை செய்பவருக்குக் கிலேசம். |
| த்விதீயை | வெற்றி. |
| திருதீயை | செல்வம் ஏற்படும். |
| சதுர்த்தீ | மஹாதுக்கம். |
| பஞ்சமீ | செல்வ வசதி. |
| ஷஷ்டி | கார்யஹானி. |
| ஸப்தமீ | வெற்றி. |
| அஷ்டமீ | வியாதி பீடை. |
| நவம்யாம் | மரணம் |
| தசமீ | பயன் பெறுதல். |
| ஏகாதசீ | பயமில்லை. |
| துவாதசீ | கார்யஹானி. |
| திரயோதசீ | வெற்றி. |
| சதுர்தசி | கண்ணில் ரோகம். |
| அமாவாஸ்யை | தோல்வி. காரியம் கெட்டுவிடும். |
| பௌர்ணமீ | நாசம். |
| வளர்பிறை பிரதமை & சதுர்தசீ | தன் வீடு திரும்புவான். வீண் செலவும் ஏற்படும். |

| சுபம் | அசுபம் |
|---|---|
| த்விதீயை, திருதீயை | பிரதமை, சதுர்த்தி, ஷஷ்டி |
| பஞ்சமீ, ஸப்தமீ, தசமீ | அஷ்டமீ, நவமீ, துவாதசி |
| ஏகாதசி, திரயோதசி | சதுர்தசி, பௌர்ணமீ |
| (சுக்ல - கிருஷ்ணபக்ஷம்) | அமாவாஸை |

ஷஷ்டி திதியிலும், அஷ்டமீ, த்வாதசி ஆகிய திதிகளிலும் யாத்திரை தொடங்குகிறவன், பொருள் நஷ்டத்துடன் விரைவில் நாசம் அடைவான் என்று இவ்வாறு சில ஜ்யோதிஷ அறிஞர்கள் கூறுகின்றனர்.

### கிழமைகளில் ஏற்படும் பலன்கள்.

ஞாயிற்றுக்கிழமையில் யாத்ரையை மேற்கொண்டால் நாசம். திங்களில் சக்தி குறைவு. செவ்வாயில் ரோகம். புதன்கிழமையில் பயம். வியாழன் ஸர்வலாபம். வெள்ளியில் பொருள் லாபம். சனியில் தனநாசம், மரணம் இரண்டும்.

### லக்ன பலன்கள்.

| | |
|---|---|
| மேஷ லக்னத்தில் யாத்ரை செய்தால் | - மரணம்* |
| ரிஷப லக்னத்தில் யாத்ரை செய்தால் | - வெற்றி |
| மிதுனத்தில் யாத்ரை செய்தால் | - மரணம் |
| கடகத்தில் யாத்ரை செய்தால் | - பூமி லாபம் |
| ஸிம்மத்தில் யாத்ரை செய்தால் | - ஸௌக்யம் |
| கன்னியில் யாத்ரை செய்தால் | - ஜ்வரம் |
| துலாத்தில் யாத்ரை செய்தால் | - வெற்றி |

* காலாம்ருதம் எனும் நூலில் மேஷம் சுபம் எனக் கூறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| விருச்சிகத்தில் யாத்ரை செய்தால் | | - காயம்படும், புண் ஏற்படும் |
| தனுஸ்ஸில் யாத்ரை செய்தால் | | - சத்ரு ஜயம் |
| மகர லக்னத்தில் யாத்ரை செய்தால் | | - சிறைவாசம் |
| கும்ப லக்னத்தில் யாத்ரை செய்தால் | | - அடிபடலாகும் |
| மீன லக்னத்தில் யாத்ரை செய்தால் | | - திருடர் பயம் |
| ஜன்ம ராசியில் யாத்திரை தொடங்க | | - காரியஸித்தி |
| (ஜன்ம ராசிக்கு) | | |
| இரண்டாவது ராசியில் | ,, | - உறவினர் சேர்க்கை |
| மூன்றாவது ராசியில் | ,, | - வாஹன லாபம் |
| நான்காவது ராசியில் | ,, | - தடைகள் |
| ஐந்தாவது ராசியில் | ,, | - கிலேசம் |
| ஆறாவது ராசியில் | ,, | - பகைவர் நாசம் |
| ஏழாவது ராசியில் | ,, | - உடலுக்கும், வாஹனங்களுக்கும் கஷ்டம், பயம் |
| எட்டாவது ராசியில் | ,, | - மரணம், பந்துஜன நாசம், கலகம் |
| ஒன்பதாவது ராசியில் | ,, | - வ்யாதி |
| பத்தாவது ராசியில் | ,, | - யாத்ரிகருக்கு மரணமும், துக்கமும் |
| பதினொன்றாவது ராசியில் | ,, | - தனம், தான்யங்களின் விருத்தி ஆரோக்யம் |
| பன்னிரண்டாவது ராசியில் | ,, | - செல்வ நாசம், யாத்ரிகருக்குத் தோல்வி |

ஜன்ம லக்னத்தில் யாத்ரை மேற்கொள்ளக்கூடாது. கிளம்பினால் எளிதில் குணமாகாத நோய் ஏற்படும்.

புத்ர லக்னத்தில் (5-வது லக்னத்தில்) யாத்ரை செய்தால் புத்ரர்களுக்குத் தீமை, மரணம்.

ஏழாவது லக்னத்தில் யாத்ரை மேற்கொண்டால் முதலில் மனக்கஷ்டமும், முடிவில் மகிழ்ச்சியும் ஏற்படும்.

ஒன்பதாவது லக்னத்தில் பிரயாணத்தில் ஸௌகர்யங்கள் ஏற்படும்.

பத்தாவது லக்னத்தில் பிரயாணம் செய்தால் பொருள் வரவு வசதிகள் ஏற்படும்.

ஜன்ம லக்னத்திற்கு 2, 3, 4, 6, 8, 11, 12வது லக்னத்தில் யாத்திரையை மேற்கொண்டால் ஜன்ம லக்னத்திற்கு உரிய பலன் ஏற்படும்.

உர்த்வமுக ராசியில் (யாத்ரை கிளம்பும் லக்னம் ஊர்த்வமுக ராசியில் (A sign just vacated by the sun) யாத்ரிகரின் விருப்பங்கள் நிறைவேறும். யாத்ரா லக்னம் திர்யங்முக ராசியானால் (A sign to be next occupied by the sun) எதிர்பாராத தீயவிளைவுகள் ஏற்படும். யாத்ரா லக்னம் அதோமுக ராசியாகில் (A sign occupied by the sun) யாத்ரையில் பொருள் நஷ்டம் பொருள் இழப்பு ஏற்படும்.

மேஷம், விருஷபம், கடகம், தனுஸ், மகரம் ஆகியவை பிருஷ்டோதய ராசிகள் இவை லக்னமாக இருக்க யாத்திரை தொடங்கினால் பயம் ஏற்படும். உபயோதயமாகிய மீனத்தில் யாத்திரைத் தொடங்க மனக்கலக்கத்தால் நேர்வழி விடுத்துச் சுற்று வழியில் செல்லலாகும்.

ஆகையால் சீர்ஷோதய ராசிகளான மிதுனம், சிம்மம், துலாம், கன்னி, விருச்சிகம், கும்பம் ஆகிய லக்னங்களில் யாத்ரை மேற்கொள்ளவேண்டும். ஸகல காரியஸித்தி ஏற்படும்.

## சூலம்

கேட்டை, திருவோண நக்ஷத்திரங்கள் கிழக்கில் யாத்ரை மேற்கொள்ளுவதற்குச் சுபமல்ல. மகம், அச்வினி தெற்கில் சூலம், ரோகிணி, பூசம் மேற்கில் சூலம், ஹஸ்தம், உத்தரம் வடக்கில் சூலம்.

'கேட்டை' தென்கிழக்கில் பிரயாணம் செய்ய சூலமாகும். 'பூரட்டாதி' தென்மேற்கிலும், 'ரோகிணி' வடமேற்கிலும், 'உத்தரம்' வடகிழக்கிலும் சூலமாகும். யாத்திரையை மேற்கொள்ளும்பொழுது இந்த சூலங்களை அனுசரிப்பது அவசியம். சூலமுள்ள திக்குகளில் யாத்திரை மேற்கொள்ளலாகாது.

செவ்வாய்க்கிழமையில் தென்கிழக்கிலும், திங்கட் கிழமையில் தென்மேற்கிலும், சனிக்கிழமையில் வடமேற்கிலும் வாரசூலங்கள் ஆகும்.

மேஷத்தில் கிழக்கிலும், கடகத்தில் தெற்கிலும், துலாத்தில் மேற்கிலும், மகரத்தில் வடக்கிலும் பிரயாணம் செய்ய உத்தமம்.

ஒருவருடை ஜன்ம லக்னாதிபதியின் ராசி அவருடைய மித்ர ராசி, அவருடைய உச்ச ராசி யாத்திரை மேற்கொள்வதற்கு உத்தமம். அவருடைய சத்ரு-நீச ராசிகளில் (லக்னங்களில்) மேற்கொள்ளலாகாது.

சூரியனின் அம்சத்தில் யாத்ரை மேற்கொள்ள வாஹன நாசம். சந்திரனின் அம்சத்தில் மரணம். செவ்வாய் அம்சத்தில் நெருப்பு பயம். புதனின் அம்சத்தில் நண்பர்கள் ஏற்படுதல்.

குருவின் அம்சத்தில் பொருள் வரவு. சுக்ராம்சத்தில் சுகபோகம், சனியின் அம்சத்தில் செல்வம் (பொருள்) புத்ரர் களுக்குத் தீமை என்றவாறு அம்சங்களுக்கான பலன்களாகும்.

கிழக்கில் யானை வாஹனம், தெற்கில் ரதம் (இக்காலத்திய கார், பஸ் முதலானது, மேற்கில் குதிரை வாஹனம், வடக்கில் பல்லக்கு இவற்றின் மூலம் பிரயாணம் செய்ய நலம்.

யாத்ரைத் தொடங்கும் சமயத்தில் சந்திரனானவன், புதன்-குரு-சுக்ரன் இவர்களுடன் சேர்ந்திருப்பின் உறவினர்களுடன் விரோதம். சந்திரன், ராகுவுடன் கூடியிருப்பின் மனைவிக்குத்

தீமை. சூரியனுடன் சேர்ந்திருந்தால் வியாதி. சந்திரன், சனி- செவ்வாய் இருவருடன் சேர்ந்திருப்பின் எல்லாவிடத்திலும் ஏமாற்றம், கஷ்டம். சந்திரன், சூரியன்-கேதுக்களுடன் சேர்ந்திருந்தால் ஸகலகாரிய நாசம்.

### மிகவுயர்ந்த நேரம்

யாத்ரா லக்னத்தில் குருவோ, சுக்ரனோ பலமுடன் தனித்து இருக்க அந்த யாத்ரை மிகவும் லாபகரமாகவும், மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கும்.

### யோகினி

யோகினியின் நிலைபற்றி அறிந்துகொண்டு, யாத்ரையை மேற்கொள்வது உத்தமம். யாத்ரையைத் தொடங்குவதாக இருக்கும் நேரத்தில் - யோகினியின் நிலைபற்றி அறிந்த, அதற்கேற்றவாறு புறப்படுவது நல்லது. அவசியம்.

***சுக்ல-கிருஷ்ணபக்ஷங்களில்*** (வளர்பிறை, தேய்பிறைகளில்)
***யோகினியின் நிலை.***

| *சுக்லபக்ஷம்* | *கிருஷ்ணபக்ஷம்* | *யோகினியின் திசை* |
|---|---|---|
| பிரதமை, ஏகாதசி | ஷஷ்டி | கிழக்கு |
| திருதீயை, திரயோதசி | அஷ்டமீ | தென்கிழக்கு |
| பஞ்சமீ, பௌர்ணமீ | தசமீ | தெற்கு |
| சதுர்த்தி, சதுர்தசி | நவமீ | தென்மேற்கு |
| ஷஷ்டி | பிரதமை, ஏகாதசி | மேற்கு |
| ஸப்தமி | த்விதீயை, துவாதசி | வடக்கு |
| அஷ்டமீ | த்ருதீயை, திரயோதசி | வடகிழக்கு |
| நவமீ | சதுர்த்தி, சதுர்தசி | ஆகாயம் |
| தசமீ | பஞ்சமீ, அமாவாஸை | பூமி |

யாத்திரை ஆரம்பிக்கும்பொழுது யாமாதிபதி எந்த திக்கில் இருக்கிறாரோ அந்த திசையில் யாத்ரை சுபபலன் உண்டு. ஒரு பகல் பொழுதை 8 பாகமாக்க ஒவ்வொரு பாகமும் ஒரு யாமம் எனப்படும்.

சூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்ரன், சனி, சந்திரன், ராகு என்ற வரிசையில் கிரஹங்கள் ஒவ்வொரு யாமத்தில் (எட்டு யாமங்களிலும்) மீனம் தொடங்கி அப்பிரதக்ஷிணமாக (Anti clockwise) சஞ்சரிக்கிறார்கள். இரவிலும் அப்படியே. இந்த யாம வளையம் மீனத்தில் தொடங்குகிறது. யாமம் என்பது $1\frac{1}{2}$ மணி அல்லது $3\frac{3}{4}$ நாழிகை. அந்தந்த வாராதிபன் முதல் யாமத்தில் மீனத்திலும், இரண்டாவது யாமத்தில் கும்பத்திலும், மூன்றாவது யாமத்தில் மகரத்தை விடுத்து தனுஸிலும், நான்காவது யாமத்தில் விருச்சிகத்திலும் 5வது யாமம் துலாத்தை விடுத்து கன்னியிலும், 6வது யாமத்தில் சிம்மத்திலும், 7வது யாமத்தில் கடகத்தை விடுத்து மிதுனத்திலும், 8வது யாமத்தில் ரிஷபத்திலுமாக சஞ்சரிக்கிறான். ஒவ்வொரு கிழமையிலும், அந்தந்த வாராதிபதி மீனத்தில் மேற்கூறப்பட்ட கிரஹ வரிசைப்படி தொடங்கி இந்த யாத்ரா சக்ரத்தைச் சுழலச்

| | | | |
|---|---|---|---|
| 1 - வது<br>சூரியன் | | 2 - வது<br>ராகு | 3 - வது<br>சந்திரன் |
| 8 - வது<br>செவ்வாய் | **யாத்ரா சக்ரம்<br>ஞாயிறு<br>1-வது யாமம்** | | |
| | | | 4 - வது<br>சனி |
| 7- வது<br>குரு | 6 - வது<br>புதன் | | 5 - வது<br>சுக்ரன் |

செய்கிறார்கள். உதாரணமாக ஞாயிற்றுக்கிழமை முதல் யாமம் வாராதிபதி சூரியன் என்பதால் மீனத்தில் இருக்கிறார் மற்ற கிரஹங்கள் கூறப்பட்ட வரிசைப்படி யாத்ரா சக்ரத்தில் சர ராசியைத் தவிர்த்து, மற்ற ராசிகளில் இருக்கிறார்கள். இரண்டாம் யாமத்தில் சூரியன் கும்பத்திலும், செவ்வாய் தனுஸில், குரு விருச்சிகத்தில், புதன் கன்னியில், சுக்ரன் சிம்மத்தில், சனி மிதுனத்தில், சந்திரன் ரிஷபத்தில், ராகு மீனத்தில் இவ்வாறு மூன்றாம் யாமத்தில் சூரியன் தனுஸில், செவ்வாய் விருச்சிகத்தில் என்றவாறு.

***இன்னும் ஓர் உதாரணம் :*** மீனம்-ஈசான்யம் (வடகிழக்கு) ரிஷபம்-கிழக்கு, மிதுனம்-தென்கிழக்கு, சிம்மம்-தெற்கு, கன்னி-தென்மேற்கு, விருச்சிகம்-மேற்கு, தனுஸ்-வடமேற்கு, கும்பம்-வடக்கு என்பதாகத் திசைகளைக் கணக்கிட்டு யாத்ரை புறப்படும் யாமத்தின் அதிபதி எந்த திக்கில் இருக்கிறானோ அந்த திசையில் யாத்ரை செய்தால் வெற்றி உண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1<br>புதன் | | 2<br>குரு | 3<br>செவ்வாய் |
| 8<br>சுக்ரன் | புதன்கிழமை<br>1-வது யாமம் | | |
| | | | 4<br>சூரியன் |
| 7<br>சனி | 6<br>சந்திரன் | | 5<br>ராகு |

இந்த யாத்ரா சக்ரத்தில் முக்யமாகக் கவனிக்க வேண்டியவை.

*(1)* 8 கிரஹங்கள் 8 யாமங்களுக்கும் *(1½ மணி = யாமம்)* அதிபதிகள். *(2)* அவர்கள் அப்பிரதக்ஷிணமாக (backward) சஞ்சாரம் செய்வர். *(3)* ஆரம்பமாகும் இடம் மீனம். *(4)* சர ராசிகளில் கிரஹங்கள் இல்லை. இவ்வாறே இரவிலும் 8 யாமங்களுக்கும் கணக்கிடவும்.

ஜன்ம நக்ஷத்திரம் முதல் மூன்று நக்ஷத்திரங்கள் முகம். அதற்கு மேலுள்ள நான்கு நக்ஷத்திரங்கள் கண்கள். அதற்கடுத்த நான்கும் கழுத்து. அதற்கு மேலுள்ள ஆறு நக்ஷத்திரங்கள் கைகள். அடுத்துள்ள இரண்டு நக்ஷத்திரங்கள் விலாப்பகுதிகள். அடுத்துள்ள எட்டு நக்ஷத்திரங்கள் கால்கள். மேலே கூறப்பட்ட முகம் முதலான அங்கங்களாகிய நக்ஷத்திரங்களில் செவ்வாய் இருந்தால் அந்த அங்கத்திற்கு ஏதேனும் ஆயுதத்தால் தீமை ஏற்படும்.

பூரம், பூராடம், பூரட்டாதி, பரணி, கேட்டை, திருவாதிரை, ஆயில்யம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிரயாணம் செய்ய ஒரு யோஜனை தூரத்திற்கு (10 மைல்) மேல் ஆபத்து ஏற்படலாம் என்பதால் ஒரு யோஜனைக்குமேல் பிரயாணம் செய்யலாகாது.

### *திதி சூலம்*

பிரதமை, நவமி - கிழக்கு. த்விதீயை, தசமி - வடக்கு. த்ருதீயை, ஏகாதசி - அக்னிமூலை (தென்கிழக்கு). சதுர்த்தி, துவாதசி - தென்மேற்கு. பஞ்சமீ, திரயோதசி - தெற்கு. ஷஷ்டி, சதுர்தசீ - மேற்கு. ஸப்தமீ, பௌர்ணமீ - வடமேற்கு. அஷ்டமீ, அமாவாஸை - வடகிழக்கு. இந்த சூலங்களில் யாத்திரை செய்தால் தீமை உண்டாகும்.

### *வார சூலம்*

திங்கள், சனி = கிழக்கு, வியாழன் = தெற்கு, ஞாயிறு, வெள்ளி = மேற்கு, செவ்வாய், புதன் = வடக்கு. இந்தச் சூலங்களில் பிரயாணத்தைத் தவிர்க்கவும். பிரயாணம் செய்தால் தீமை உண்டாகும்.

இந்தச் சூலங்களில் திங்கள், சனியில் 8 நாழிகைகளும், வியாழக்கிழமையில் 22 நாழிகைகளும், ஞாயிறு, வெள்ளிக் கிழமைகளில் 15 நாழிகைகளும், செவ்வாய், புதனில் 12 நாழிகைகளும் தள்ளத்தக்கவை. மற்றவை சுபமே. மேஷம், சிம்மம், தனுஸ் = மேற்கு. ரிஷபம், கன்னி, மகரம் = வடக்கு. மிதுனம், துலாம், கும்பம் = கிழக்கு. கடகம், விருச்சிகம், மீனம் = தெற்கு. இவைகளில் சந்திரன் இருக்கும்பொழுது அந்தத் திசைகளில் யாத்ரை கூடாது. அதற்கு சந்திரகண்டம் என்று பெயர்.

கிழக்கில் யாத்திரை செய்ய பூசம், உத்தமம், மிருகசீர்ஷம் மத்யமம். தெற்கில் யாத்ரை செய்ய ஹஸ்தம் உத்தமம். சித்திரை மத்யமம். மேற்கில் யாத்ரை செய்ய திருவோணம் உத்தமம், அனுஷம் மத்யமம். வடக்கில் யாத்ரை செய்ய அவிட்டமும், அச்வினியும் உத்தமம். திருவோணம் மத்யமம்.

நந்தையில் - (பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி) கிழக்கிலும், பத்ரையில் - (த்விதீயை, ஸப்தமி, துவாதசியில்) தெற்கிலும், ஜயையில் (த்ருதீயை, அஷ்டமி, திரயோதசி) மேற்கிலும், பௌர்ணமியில் வடக்கிலும், அமாவாஸ்யை, ரிக்தை (சதுர்த்தி, நவமி, சதுர்தசி)யில் ஒரு திக்கிலும் பிரயாணம் செய்யலாகாது.

செவ்வாய்க்கிழமைகளில் கிழக்கு திசையிலும், திங்கள், சனிக்கிழமைகளில் தெற்கிலும், புதன், வியாழன்களில் மேற்கிலும், ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளில் வடக்கிலும் யாத்திரை செய்யின் காரியஸித்தி ஏற்படும்.

யாத்ரை செய்ய நிச்சயிக்கப்பட்ட லக்னத்தில் சூரியன் இருந்தால் கிழக்கில் பிரயாணம் கூடாது. 11, 12-ல் சுக்ரன் இருக்க

தென்கிழக்கிலும், 8, 9-ல் ராகு இருக்க தென்மேற்கிலும், 10-ல் செவ்வாய் இருக்கத் தெற்கிலும், 7-ல் புதன் இருக்க வடக்கிலும், 5, 6-ல் சந்திரன் இருக்க வடமேற்கிலும், 4-ல் புதன் இருக்க வடக்கிலும், 2-ல் குரு இருக்க, வடகிழக்கிலும் பிரயாணம் செய்யலாகாது. இதனைக் கருதாமல் பிரயாணம் செய்தால் தீமை ஏற்படும்.

வியாழன், திங்கட்கிழமைகளில் சூரிய உதயம் தொடங்கி 3¾ வீதம், முதல் 3¾ நாழிகை ஸாத்விகம் என்றும், இரண்டாவது 3¾ நாழிகை ராஜஸ வேளை என்றும், அடுத்த 3¾ நாழிகை தாமஸ வேளை என்றும் இவ்வாறு 60 நாழிகைகளையும் கணக்கிட வேண்டும்.

திங்கள், வியாழன் ஸாத்விகம் ஆரம்பம். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராஜஸம் ஆரம்பமாகும். ஞாயிறு, புதன், சனிக்கிழமைகளில் தாமஸவேளை ஆரம்பமாகும். சனிக்கிழமை மட்டும் ஒரு வேளைக்கு 4 நாழிகை எனக் கணக்கிடவும்.

ஸாத்விக வேளைகளில் மீனம், கடகம், கன்னி, தனுஸ் லக்னங்களிலும்; ராஜஸவேளையில் ரிஷபம், விருச்சிகம், துலாம், மேஷம் இவற்றிலும்; தாமஸவேளையில் மிதுனம், மகரம், கும்பம், சிம்மம் இவற்றிலும் யாத்ரை செய்யலாகாது. தீமை உண்டு. ஆகையால் இவ்வேளைகளில் யாத்திரையைத் தவிர்த்தல் வேண்டும்.

யாத்திரை செய்யும் (செய்ய இருக்கும் நாளில்) திதி, வாரம், நக்ஷத்திரம் இவற்றை வரிசைப்படி 2, 3, 4-களால் பெருக்கி அவற்றை முறையே 6, 7, 8-ஆல் வகுத்து மீதம் இருந்தால் யாத்திரை செய்ய உத்தமம். மீதியில்லாவிட்டால் யாத்திரை செய்யலாகாது. அவ்வாறு முதல் வரிசையை வகுக்கும்பொழுது, மீதி வராவிட்டால் பிரயாணம் செய்ய

வியாதி. நடுவில் மீதி வராவிட்டால் பிரயாணத்தில் பயம். கடைசி வரிசையில் மீதி வராவிட்டால் யாத்திரை செய்ய பீடை ஏற்படும். மூன்றிலுமே மீதமில்லையேல் மரணம்.

இதுவரை யாத்திரைக்கு உரிய பல விதிமுறைகள் சொல்லப்பட்ட போதிலும் உரிய திதி, வாரம், நக்ஷத்திரம், அம்சம் முதலானவை கிடைப்பது துர்லபம். (எளிதல்ல) என்பதால் விரும்பியவற்றை அளிக்கக்கூடிய யோகங்களைக் கூறவிருக்கிறேன்.

வேதமறிந்தோர், தேவதைகள், ஜ்யோதிஷம் அறிந்தவர்கள், உறவினர்கள் (பெரியோர்கள்) ஆசார்யர்கள் இவர்களைத் தம் சக்திக்கு ஏற்ப உபசரித்து சுபதினம் சுபதிதியில் பிரயாணம் செய்யவேண்டும்.

ஸூர்யமண்டல மத்தியில் பிரகாசிக்கும் சங்கு, சக்ரம், கதாயுதம் இவற்றைக் கையில் உடைய ஸ்ரீமந்நாராயணனை நமஸ்கரித்துவிட்டு யாத்திரை மேற்கொண்டால் ஸகல காரியஸித்தி ஏற்படும்.

ஸ்நானம் செய்து தூய வெண்ணிற ஆடை அணிந்து, சந்தனம், ஆபரணம் அணிந்து தன் மனைவி முதலானோர் அனுமதிபெற்று யாத்திரை மேற்கொண்டால் கார்யஸித்தி ஆகும்.

கோபம், லோபம் கூடியவனாயும், பிறரால் நிந்திக்கப் பட்டவனாயும் (பிறரின் நிந்தனையைச் சுமந்துகொண்டும்) பிரயாணம் செய்யலாகாது.

புறப்படும் சமயம் இடது மூக்கில் சுவாஸம் ஸுலபமாக ஸஞ்சரித்தால், இடது காலையும், வலது மூக்கில் சுவாசம் ஸுலபமாக ஸஞ்சரித்தால் வலதுகாலையும் முதலில் வைத்துப் புறப்படவேண்டும்.

மூச்சுக்காற்று இடது மூக்கில் ஸுலபமாக ஓடும்பொழுது கிழக்கு, வடக்கு திசைகளில் யாத்திரை செய்யலாகாது. அப்படி செய்தால் பகைவர் பயம் ஏற்படும். திரும்பி வருவதில் கஷ்டம் ஏற்படும்.

வலது மூக்கில் சுவாஸம் சீராக ஸுலபமாக ஓடிக்கொண்டு இருக்கும்பொழுது தெற்கு, மேற்குத் திசைகளில் பிரயாணம் செய்யலாகாது. திருடர் பயமும் (மரணாந்தமான) பல கஷ்டங்கள் ஏற்படும்.

யாத்திரை புறப்படும்பொழுது இடது மூக்கிலும், வீட்டினுள் பிரவேசிக்கும்பொழுது வலது மூக்கிலும் சுவாஸம் சீராக இருப்பது நல்லது. சுபம்.

வெகுதூரப் பிரயாணத்தில் சந்திரன் சுபனாக இருந்தால் இடையூறுகள் இன்றி காரியஸித்தி ஏற்படும்.

## பிரயாணத்திற்கு உகந்த நாட்கள்

பின்வரும் கிரஹநிலை அமைந்திருக்க யாத்திரை கிளம்பினால் யாத்திரை வெற்றிகரமாக ஆரோக்யம், செல்வாக்கு வளருவதாக நிறைவுறும்.

1. சந்திரன் 3, 6, 9,12-லும் குரு யாத்ரா லக்னத்திற்குக் கேந்திரத்திலும் இருப்பது.

2. அனுஷ நக்ஷத்திரத்தில் புறப்பட்டு நடுவில் கேட்டை முழுவதும் தங்கிய பிறகு மூலத்தில் யாத்திரையத் தொடருதல்.

3. குரு அல்லது சுக்ரன் கேந்திரத்தில் இருக்க, சந்திரன் லக்னத்திருக்க யாத்ரை தொடங்குதல்.

4. குரு லக்னத்தில் பலமுடன் இருக்க சந்திரன் 8-ஆமிடம் தவிர வேறு எங்கு இருப்பினும் - நவாம்சத்தில் 6-ல் இருக்க யாத்ரை தொடங்குதல்.

5. மிருகசீர்ஷத்தில் புறப்பட்டு இடையில் திருவாதிரை, புனர்பூசம் இரு நக்ஷத்திரங்களுள்ள நாட்கள் தங்கிவிட்டு, பூச நக்ஷத்திரத்தில் மறுபடி யாத்திரை தொடருதல்.

6. ஹஸ்த நக்ஷத்திரத்தில் புறப்பட்டு இடையில் சித்திரை, ஸ்வாதி இருநாட்கள் தங்கிவிட்டு, விசாக நக்ஷத்திரத்தில் யாத்ரை தொடருதல்.

7. சந்திரன் 7-லும், சுக்ரனும், புதனும் 4-ஆமிடத்தில் இருக்கும்பொழுது யாத்திரை தொடங்கினால் யாத்திரை எளிதாகவும், அமைதி அளிப்பதாகவும் இருக்கும். அம்மாதிரி வேளையில் வேறு எதையும் பற்றிச் சிந்திக்காமல் புறப்படலாம்.

8. சுக்ரன் லக்னத்திலும், புதன் இரண்டாமிடத்திலும், சூர்யன் மூன்றாமிடத்திலும் இருக்க யாத்திரை தொடங்கினால் பகைவரை வெற்றி காணலாம். தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பினையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

9. புதன் நான்காமிடத்திலும், குரு இரண்டாமிடத்திலோ, ஏழாமிடத்திலோ அல்லது திரிகோணத்திலோ இருக்கும் பொழுது யாத்திரை கிளம்பினால் எல்லா இடையூறுகளையும் தோஷங்களையும் ஸ்ரீராமன் அரக்கர்களை எல்லாம் அழித்ததுபோல் வெல்லலாம்.

10. குரு லக்னத்தில் இருக்கும்பொழுது, எட்டாமிடத்தில் பாபிகளிருந்தாலும் எல்லா தோஷங்களையும்

விலக்கிவிடுகிறார். யாத்திரையிலும் (பிரயாணத்திலும்) நன்மைகள் ஏற்படும்.

11. குரு, சுக்ரன், புதன் இவர்களில் ஒருவர் பலமுடன் இருந்து, கேந்திரத்தில் அல்லது த்ரிகோணத்தில் இருந்தால் யாத்திரையில் நன்மைகள் ஏற்படும். இந்த சுபயோகம் பற்றி ப்ரம்மதேவரால் கூறப்பட்டிருக்கிறது.

12. சுபகிரஹங்கள் லக்னத்திற்கு 11ஆமிடம், இரண்டாம் இடத்திலும், சூரியன் பத்தாமிடத்திலும் இருக்கும்பொழுது யாத்திரை புறப்பட்டால் வெற்றி, ஆரோக்யம், செல்வாக்கு, பொருள் விருத்தி ஏற்படும்.

13. லக்னத்தில் குருவும், பாபிகள் 3, 6, 11-லும், ஏழாமிடம் தவிர வேறிடத்தில் சுக்ரனும் இருக்கும் சமயத்தில் யாத்திரை கிளம்பினால், அது யாத்திரை செய்பவருக்கு எல்லா விருப்பங்களையும் தர வல்லது.

### பொதுவிதி

யாத்ரா லக்னத்திற்குக் கேந்திரம் சூன்யமாக இருக்கும் பொழுதும் அல்லது கேந்திரங்கள் சூனியங்களாக (கிரஹமற்றதாயும்) இருந்தால் புறப்படலாகாது.

கேந்திரத்தில் சுபாசுபர்கள் இருவருமே இருந்தால் மத்யம பலன்கள்.

### ஸ்த்ரீகளின் பிரயாண விஷயத்தில்

கடகம், கன்னி, கும்பம் இவைகளில் சூரியன் இருக்கும் காலத்திலும்; ஞாயிறு, புதன், வெள்ளிக்கிழமைகளிலும்;

பிரதமை, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதிகளிலும் இடது புறத்திலும், எதிரிலும் சுக்ரன் இருக்கும்பொழுது ஸ்த்ரீகள் பிராயணம் செய்யலாகாது. மற்ற காலங்களில் புருஷர்களுக்கு உரிய வேளைகளில் யாத்திரை (பிரயாணம்) தொடங்கலாம்.

ஒரே கிராமத்திலும், ஒரே நகரத்திலும், விவாஹம், யாகம் ஆகியவற்றிற்குச் செல்லும் விஷயத்திலும், பஞ்சம் அரசியல் புரட்சி நடக்கும்பொழுதும் 'எதிர் சுக்ரன்' எனும் தோஷமில்லை. தீமை ஏற்படாது. கவ்யூதி என்பது இரண்டு க்ரோச தூரமாகும். க்ரோசம் என்பது 1¼ மைல் ஆகும். ஆக 2½ மைலுக்குள் அல்லது உயர்ந்த அளவாக 12 யோஜனை தூரம் அதாவது 108 மைல்களுக்குள் பிரயாணம் செய்யும்பொழுதும் சுக்ரன் நிலைபற்றிப் பார்க்கவேண்டும்.

சுக்ரதோஷம் விலகுவதற்காக, சுக்ரனின் நிலை காரணமாக ஏற்படக்கூடிய தோஷங்கள் விலகுவதற்காக வெள்ளைக் குதிரை, வெள்ளைத்துணி, சுத்தமான முத்துக்கள், வெள்ளி ஆகியவற்றை அந்தணர்களுக்குத் தானம் செய்யவேண்டும். தானம் செய்துவிட்டுக் கவலையின்றிப் புறப்படலாம்.

104வது சுலோகத்தில் உள்ளவாறு தைத்யமந்த்ரீ, திவாதர்சீ, உசனா, பார்கவர், ச்வேதர், மண்டலீ, தூவ்யர், நீதிமான், நைகமா என்ற சுக்ரனின் நாமாக்களை ஜபித்தாலும் சுக்ர தோஷமில்லை.

சிறுவர் (குழந்தைகள் உள்பட) சிறுமியர், நோயுற்றவர் ஆகியவர்களைக் காப்பாற்றுவதற்காகப் புறப்படும் பொழுது, எதிர் சுக்ரன் என்னும் தோஷம் கிடையாது. பெண்கள் கணவன் வீடு செல்ல இருக்கும்பொழுது உடன் துணைக்கு யாரேனும் வந்தால் (தக்க உதவி கிடைத்தால்) சுக்ர தோஷம் பற்றி ஆலோசிக்க வேண்டாம். ஆனால் திருமணமானதும் முதன்

முதல் புருஷன் வீடு செல்ல இருக்கும்பொழுது சுக்ர விஷயம் பார்க்கப்படவேண்டும்.

காச்யப, வஸிஷ்ட, ப்ருகு, அத்ரி, ஆங்கிரஸ், பாரத்வாஜ, ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் பிறந்தவர்களுக்கு சுக்ரன் எதிரேயுள்ள தோஷம் கிடையாது.

சுக்ரன் உச்சத்திலோ, மித்ர க்ஷேத்திரத்திலோ, தன் சொந்த வீட்டிலோ இருப்பின் தோஷம் செய்யமாட்டார்.

தன் மனைவி கர்பவதியாக இருக்கும் சமயம், 6-வது, 8-வது மாதத்தில் புருஷன் பிரயாணம் செய்வது கூடாது. முக்யமாக ஆஷாட மாதத்தில் (ஆனி மாதம் அமாவாஸைக்கு மேல் 30 நாட்கள்) பிரயாணம் செய்யக்கூடாது.

வேறு காரியங்களின் நிர்பந்தத்தால் சுபதினத்தில் சுப வேளையில் பிரயாணம் மேற்கொள்ள முடியாவிடில் எந்த திசையில் பிரயாணம் செய்யவேண்டுமோ அந்தத் திசையில் நூறு வில்லடி தூரம் அல்லது அதில் பாதி தூரம், அதுவும் இயலாவிட்டால் பத்து வில்லடி தூரமாயினும் சென்று அவ்விடத்தில் குடை, ப்ரம்மஸூத்ரம், வஸ்த்ரம், தண்டம், மான்தோல், கமண்டலு (ஜலபாத்ரம்), ஜபமாலை, புத்தகம், முகம் பார்க்கும் கண்ணாடி, படுக்கை, ஆசனம் முதலியவையோ வேறு தன் மனதிற்கு இஷ்டமான பொருளையோ வைத்துவிட்டு வந்து, பிறகு ஏழு தினங்கள்வரை யாத்திரை மேற்கொள்ளலாம்.

ஏழுதினங்களுக்குள்ளாக மழை, கடுங்காற்று முதலிய தீய எதிர்பாராத விபத்துக்கள் நேரிட்டால் மறுபடி வேறு ஒரு நல்ல நாளில் முன்கூறப்பட்டவாறு வைக்கவேண்டும்.

*சுபசகுனம்*

திருமணமாகாத பெண், பசு, ரத்னங்கள், மலர், தயிர், யானை, குதிரை, அந்தணர்கள், கொடி, எரியும் அக்னி, பூர்ணகும்பம், காளை, தாமரை, சந்தனம், தானியங்கள், நெல் பொறி, அன்னம், பிணம், வேசி, வெள்ளை மாலை, சாமரம், ஆயுதங்கள், அக்ஷதை, எள்ளு, சலவைத்துணி, குழந்தையுடன் கூடிய யுவதி, கன்றுடன் கூடிய பசு, சங்கு வாத்யம் முதலானவற்றின் ஒலி, மாமிசத்துண்டு, நெய், பால் இவற்றைப் புறப்படும்பொழுது எதிரில் பார்த்தால் பிரயாணி சுகத்தை அடைவான்.

போய்வா, வாழ்க, நன்றாக (வளமோடு) இரு, செல்வாயாக, விடுவி, அனுப்பு, எழுந்திரு, புறப்படு முதலான ஒலி வருமானால் சுபமே.

*அசுபசகுனங்கள்*

மோர், எண்ணெய்த் தேய்த்துக் கொண்டவன், தலை அவிழ்ந்திருப்பவன், சடை முடியுள்ளவன், மூக்கு அறுந்தவன், (சன்னியாசி), ஊர் சுற்றித் திரிபவன் (அலையும் இயல்பினன்), குயவர், சிவந்த மலர், நனைந்த துணி, பன்றி, உப்பு, (உப்பு வியாபாரம் செய்பவன், உப்பு வாங்கி வருபவர்), தடங்கள் (கால் தடுக்குதல்) துணி கிழிவது, கீழே விழுதல், அழுகை, பாம்பு, முயல் இவற்றை எதிரில் கண்டால் யாத்திரையை (பிரயாணத்தை) மேற்கொள்ளலாகாது.

வா, நில் (இரு), எங்கு செல்கிறாய், அலக்ஷ்யமாகப் போகிறாயே, அழுகை, கலஹ ஒலி இவற்றைக் கேட்பினும் யாத்ரையை மேற்கொள்ளலாகாது.

யாத்திரை செய்யும்பொழுது பூனை, பாம்புகளைக் கண்டால் ஆறு மாதம்வரை பிரயாணப்படலாகாது.

ஆந்தை முதலான பறவைகளைக் காண நேரிட்டால் மூன்று நாட்களும், தும்மலைக் கேட்டால் ஒருநாளும், முயலைக் கண்டால் ஒருபொழுதுமே யாத்ரை மேற்கொள்ளலாகாது.

ஒரு அந்தணனைக் காணில் தீமை ஏற்படும். இரு அந்தணர்களைக் கண்டால் கார்யஸித்திகள் ஏற்படும். மூவரைக் காணில் காரியக்கேடு. நால்வரைக் கண்டால் காரியஸித்தி. பலரைக் கண்டாலும் காரியஸித்தி. பிற இனத்தவரைக் காணில் முன்கூறியதற்கு மாறாக பலன் நடக்கும். (ஒருவரைக் காணில் சுபம். இருவரையும் மற்றும் அதிக நபர்களையோ காணில் தீமையாகையால் யாத்திரையைத் தொடரலாகாது. யாத்ரா காலத்தில் தும்முவது (Sneezing) நல்லதல்ல. பசுவின் தும்மல் ரத்தக்காயம் ஏற்படுத்தும். ஜீவித காலம் வரையில் பீடையைச் செய்யும். எருமையின் தும்மல் மிகவும் தீமையளிக்கும்.

பிரயாண காலத்தில் அபசப்தங்களைக் (கேட்கக்கூடாத அழும்குரல் போன்றவற்றை)க் கேட்க நேரிட்டால் சற்று நேரம் தாமதித்து இருந்து, ஆறு பிராணாயாமங்களைச் செய்த பின்னர் புறப்படலாம். மறுபடியும் அம்மாதிரி அபசப்தங்களைக் கேட்டால் சற்று நின்று அமர்ந்து பதினாறு பிராணாயாமங் களைச் செய்தபிறகு யாத்திரையைத் தொடரலாம். மூன்றாம் முறையும் அதேபோன்ற ஒலியைக்கேட்க நேரிட்டால் பிரயாணத்தை நிறுத்திவிடவேண்டும். இந்த தோஷங்கள் ஒரு 'குரோச' தூரத்திற்குமேல் கிடையாது.

பிரயாண காலத்தில் வேதமோதும் மரபினர் இடதுபுறமாகச் சென்றால் நினைத்த காரியம் காலதாமதமாகி ஸித்தியாகும். பிரயாண காலத்தில் ஆட்சிசெய்கிறவர் (க்ஷத்திரியர்) இடதுபுறமாகச் சென்றால் நினைத்த காரியம்

சீக்கிரத்தில் ஸித்தியாகும். அவ்வாறு வைசியர்கள் சென்றாலும் காரியம் உடனே ஸித்திக்கும். பிற மரபினர் சென்றாலும் இடையூறு இல்லாமல் நினைத்த காரியம் ஸித்தியாகும்.

பிரயாணம் புறப்படும் சமயத்தில் வழியில் நாய், புல் அல்லது (காய்ந்த) மரத்தில் - கட்டைமீது நீர்விடுமானால் யாத்திரை காலத்தில் பொருள் நஷ்டமும் பெரும்பயமும் ஏற்படும்.

யாத்திரை செய்துவிட்டுத் திரும்புங்கால் புறப்பட்ட மாதத்திற்கு ஒன்பதாவது மாதத்தில் வீட்டில் பிரவேசிக்கலாகாது. அதேபோல் ஒன்பதாவது நாளிலும் வீட்டில் பிரவேசிக்கலாகாது.

திரும்பும்போது வீட்டில் பிரவேசிக்கும் காலம் மேஷ லக்னமானால் மறுபடியும் யாத்திரை செய்ய நேரிடும்.

ரிஷப லக்னத்தில் பிரவேசித்தால் பலவகை சுகபோக அனுபவமேற்படும். மிதுனத்தில் பிரவேசம் செய்பவன் ஐச்வரியம் அடைவான். கடகத்தில் பிரவேசம் செய்யின் பொருள் நாசம் ஏற்படும். சிம்மத்தில் பிரவேசித்தால் வெகுகாலம் சுகம் பெற்றவனாக இருப்பான். கன்னியில் பல ஸ்த்ரீகளுடன் சுகம். துலாத்தில் பிரவேசம் செய்தால் பல நோய்களும் ஏற்படும். விருச்சிகத்தில் மிகுந்த வியாதி. விருச்சிகத்தில் சுபர்கள் பலவித லாபங்கள். தனுர் லக்னத்தில் பிரவேசிக்க பல்வகை தான்யங்களைப் பெறுவான்.

மகர லக்னத்தில் பிரவேசித்தால் வீட்டிலுள்ள பொருள்கள் நாசமாகும். கும்ப லக்னத்தில் பிரவேசித்தால் மிகுந்த செல்வத்தைப் பெறுவான். மீன லக்னத்தில் பிரவேசித்தால் வெகுகாலம் சுகம் பெற்று விளங்குவான்.

கேட்டை, மகம், சித்திரை, கார்த்திகை, ரேவதி, பூரம், பூராடம், பூரட்டாதி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, திருவோணம், சதயம், பரணி, விசாகம், ரோகிணி ஆகியவை கோ (பசு) யாத்திரைகளில் உத்தமமாகும். சிலர் ரோகிணியை விலக்குகிறார்கள். புனர்பூசத்தில் பிரவேசித்தால் பாத முறிவு, சித்திரை நக்ஷத்திரத்தில் கண்களுக்குத் தீமையும், சுவாதியில் வியாதியும் ஏற்படும் எனக்கூறுவர்.

புதன், வெள்ளிக்கிழமையுடன் கூடிய சதுர்தசி, பௌர்ணமி, அமாவாஸ்யை ஆகிய இந்த திதி வாரங்களுடன் கூடிய ரோகிணி, உத்தரம், சித்திரை, உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி ஆகிய நக்ஷத்திரங்களில் பசுக்களுடன் யாத்ரை செய்தாலும், பசுத்தொழுவம் அமைத்தலும் கூடாது. இதனைமீறி பசுந்தொழுவம் அமைக்க முற்பிறவியின் பலனை அனுசரித்து பசுக்கள் நாசமாகும்.

ஜலயாத்திரை விஷயத்திலும் முன்பு கூறியுள்ளவாறு நிமித்தங்கள், அவற்றின் பலன்கள் ஆகியவற்றை அறியவும்.

லக்னத்தில் 11-ல் சூரியன், 4-ல் சந்திரன் இருக்க யாத்திரையைத் தொடங்கிய அரசன், மான் கூட்டத்தை சிங்கம் அழிப்பதுபோல் பகைவர்களை எளிதில் அழிப்பான்.

மீனத்தில் சுக்ரன் இருக்கும்பொழுது மீன லக்னத்திலும், சந்திரன் ரிஷப லக்னத்தில் இருக்கும்பொழுது கடக லக்னத்திலும் சத்ரு தேசத்தைக் குறித்து யாத்ரை செய்தால் கிருஷ்ணன், பூதனையை அழித்ததுபோல சத்ருக்களை அழிப்பான். இவ்வாறு ஸ்ரீநரஸிம்மமூர்த்தியின் பக்தனாகிய ந்ருஸிம்ஹஸூரியினால் பல நூல்களைப் பலமுறைப் பரிசீலனை செய்து, இந்த யாத்திரை அத்தியாயம் விளக்கப்பட்டது.

## முப்பதாவது அத்யாயம்

### *(ஜ்வரம்) வியாதி ஆரம்பிக்கும் நக்ஷத்திர பலன்கள் (சுபாசுப பலன்கள்)*

| *நக்ஷத்திரம்* | *பலன்* |
|---|---|
| அச்வினி | - 9 நாளில் குணம் |
| பரணி | - 5 நாளில் குணம் |
| கார்த்திகை | - 7 நாளில் குணம் |
| ரோகிணி | - 21 நாளில் குணம் |
| மிருகசீர்ஷம் | - 5 அல்லது 9 நாளில் குணம் |
| திருவாதிரை | - 5 அல்லது 45 நாளில் குணம் |
| புனர்பூசம் | - 7 இரவுகளில் குணம் |
| பூசம் | - 8 இரவுகளில் குணம் |
| ஆயில்யம் | - 8 நாளில் மரணம் அல்லது நீடித்த காலத்தில் மரணம் |
| மகம் | - 10 நாள் அல்லது அடுத்த மகத்தில் மரணம் |
| பூரம் | - 20 நாளில் குணம் |
| உத்தரம் | - 9 நாளில் குணம் |
| ஹஸ்தம் | - 7 நாளில் குணம் |
| சித்திரை | - 8 இரவுகளில் குணம் |
| ஸ்வாதி | - 10 இரவு அல்லது 45 நாளில் குணம் |
| விசாகம் | - 25 நாளில் குணம் |
| அனுஷம் | - 10 நாளில் குணம் |
| கேட்டை | - 12 நாளில் குணம் |
| மூலம் | - 10 இரவுகளில் குணம் |
| பூராடம் | - 8 இரவுகளில் குணம் |
| உத்தராடம் | - 1 மாதத்தில் குணம் |
| திருவோணம் | - 8 இரவுகளில் குணம் |
| அவிட்டம் | - 10 இரவுகளில் குணம் |
| சதயம் | - 6 அல்லது 12 பகல்களில் குணம் |
| பூரட்டாதி | - 6 அல்லது 12 பகல்களில் குணம் |
| உத்தரட்டாதி | - 15 நாட்களில் குணம் |
| ரேவதி | - 8 பகல்களில் குணம் |

(1) சதுர்த்தி கூடிய ஞாயிற்றுக்கிழமை, (2) நவமியுடன் கூடிய செவ்வாய்க்கிழமை, (3) சதுர்த்தியுடன் கூடிய சனிக்கிழமை; (1) திருவாதிரை, ஆயில்யம், மகம்; (2) ஸ்வாதி, கேட்டை, பரணி; (3) பூரம், பூரபட்டாதி ஆகிய நக்ஷத்திரங்கள் கூடிய அந்நாளில் நோயுற்றால் பிழைப்பது கடினம்.

(சதுர்த்தியுடன் கூடிய ஞாயிற்றுக்கிழமையில் திருவாதிரை, ஆயில்யம், மகம் நக்ஷத்திரங்களில் ஒன்று சேர்ந்தாலும், அந்நாளில் நோய் ஆரம்பமானால் பிழைப்பது கடினம். இவ்விதமே மற்ற இரு நாளிலும் காண்க.)

சதுர்த்தி, நவமி, சதுர்தசி, ஷஷ்டி, அஷ்டமி, அமாவாசை, துவாதசி ஆகிய நாட்களில் வியாதி ஏற்பட்டால் மரணம். சகுனி முதலான ஸ்திர கரணங்களிலும், விஷ்டி கரணத்திலும் வியாதி தோன்றினால் நாசம் ஏற்படும்.

ஜன்ம நக்ஷத்திரத்திலும், 19, 7, 5, 3, 10-வது நக்ஷத்திரங்களில் வியாதி ஏற்பட்டால் துக்கமும், மரணமும் ஏற்படும்.

வியாதியால் நலிந்தவர்களுக்கு துஷ்ட சந்திராஷ்டம தினங்களிலும், துக்க யோகத்திலும், 22-வது நக்ஷத்திரத்தின் 88-வது பாதத்திலும், அசுப வாரத்திலும், அசுப கோசாரத்திலும், விஷநாடி (தியாஜ்யம்) முதலியவை ஏற்பட்ட காலத்திலும், ஸந்த்யா நேரத்திலும், மரணயோகத்துடன் கூடிய அசுப யோகத்திலும் மரணம் நேரிடும்.

## முப்பத்து ஒன்றாவது அத்யாயம்

இவ்விடத்தில் நோய் தீருவதற்காக ஔஷத்யம் செய்யும் காலத்தைக் கூறுகிறேன்.

அச்வினி, ரோஹிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி,

அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களில் வைத்தியம் செய்ய நல்லது.

ஹஸ்தம், புனர்பூசம், அச்வினி, சித்திரைகளுடன் கூடிய திங்கள், வெள்ளி, புதன், வியாழக்கிழமைகளில் சந்திரன், சுக்ரன், புதன், குரு இவர்களின் அம்சத்திலும், உதயத்திலும், சர ராசியிலும், சராம்சத்திலும் ஜ்வரங்களுக்கு வைத்யம் செய்ய விரைவில் நீங்கும்.

ஞாயிறு, சதுர்த்தி, நவமி, சதுர்தசிகளுடன் கூடிய திருவாதிரை, பரணி, விசாகம், அனுஷங்களில் ஸந்நிபாத ஜ்வரத்திற்கு வைத்யம் செய்ய உத்தமம்.

நீடித்த ரோகம் உள்ளவர்களுக்கு உக்ர யோகங்களில் வைத்யம் செய்வது நல்லது.

### உக்ர யோகங்கள்

த்ருதீயை அல்லது அஷ்டமியுடன் கூடிய ரோகிணியும்,
சதுர்த்தி அல்லது அஷ்டமியுடன் கூடிய உத்தரமும்,
பஞ்சமியுடன் கூடிய திருவோணமும்,
ஷஷ்டியுடன் கூடிய மிருகசீர்ஷமும்,
ஸப்தமியுடன் கூடிய ரேவதியும்,
நவமியுடன் கூடிய கிருத்திகையும்,
தசமியுடன் கூடிய பூசமும்,
த்ருதீயை அல்லது துவாதசியுடன் கூடிய அனுஷமும்,
ஏகாதசியுடன் கூடிய கிருத்திகை அல்லது மகமும்,
தசமியுடன் கூடிய ரோஹிணியும்,
திரயோதசியுடன் கூடிய உத்தரமும் உக்ர யோகங்களாகும்.

இந்த யோகங்களில் ரோகங்களுக்கு வைத்யம் செய்ய நல்லது.

### ரகசிய வியாதிகள் குணமாக

க்ஷிப்ரம், உக்ரம், சரம் இவைகளுடன் சேர்ந்த அமாவாசையில் குஹ்ய ப்ரதேசத்தில் ஏற்பட்ட நோய்களுக்கு வைத்யம் செய்ய நல்லது.

### வாத சம்மந்தமான நோய்களுக்கு

திருவோணம், ஆயில்யம், அச்வினி, திருதீயை, அஷ்டமீ, திரயோதசி இவைகளுடன் சேர்ந்த வியாழக்கிழமையில் வாதத்திற்கு வைத்யம் செய்ய நல்லது.

### பித்த சம்பந்தமான நோய்களுக்கு

பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, ஸ்வாதி, மூலம், பூசம் இவைகளுடன் கூடிய வியாழக்கிழமையில் சர லக்னத்தில் பித்தத்திற்கு வைத்யம் செய்ய நல்லது.

### வாதம், சிலேஷ்மம் சம்பந்தமான நோய்களுக்கு

துவிதீயை, ஷஷ்டி, துவாதசி, புனர்பூசம், ரேவதி, ஸ்வாதிகளுடன் கூடிய வெள்ளிக்கிழமையில் சர லக்னத்தில் பித்தத்திற்கு வைத்யம் செய்யவேண்டும்.

செவ்வாய்க்கிழமை தினத்தில் பரணி, கார்த்திகை, திருவாதிரை வந்து சர லக்னத்தில் வாத சிலேஷ்மங்களுக்கு வைத்யம் செய்ய நலம் (பித்தத்திற்கு அல்ல).

### பிரமேஹ வியாதிக்கு

சதுர்த்தி, நவமி, சதுர்தசி, சரம் - உக்ரம் இவைகளுடன் கூடிய புதன்கிழமையில் 18 வகை பிரமேஹ ரோஹங்களுக்கு வைத்யம் செய்ய நலம்.

### குஷ்ட ரோகத்திற்கு

பாபிகளின் கிழமை, திதி, நக்ஷத்திரம், அம்சங்களில் பாப ராசியான லக்னத்தில் எட்டாமிடத்தில் பாபிகள் இருக்கையில் குஷ்ட ரோகத்திற்கு வைத்யம் செய்ய நலம் எனச் சொல்லப்படுகிறது.

## மஹோதர வியாதிக்கு

ஆயில்யம், திருவாதிரை, அனுஷம், மிருகசீர்ஷம், விசாகம், கார்த்திகை, பரணீ இவற்றுடன் கூடிய செவ்வாய்க்கிழமை தினத்தில் மஹோதரம் முதலான நோய்களுக்கு வைத்யம் செய்ய உத்தமம்.

## க்ஷய ரோகத்திற்கு

வக்ரியான கிரஹத்தின் பார்வை பெற்ற விசாகம், க்ருத்திகையில் ஷஷ்டியுடன் கூடாத திதியுடன் கூடியிருப்பின் அந்நாளில் க்ஷய ரோகத்திற்கு வைத்தியம் செய்ய நலம்.

## குஷ்டம், குல்மக்ஷய ரோஹங்களுக்கு

குஷ்டம், க்ஷயம், குல்ம ரோகங்களுக்கும், அபஸ்மார ரோகங்களுக்கும் உபய ராசிகள் உத்தமம். சர லக்னமாகில் சூர்ய-சந்திரர் இருக்க உத்தமம். ஸ்த்திர லக்னத்தில் வைத்யம் செய்யலாகாது.

சுபமான திதி, சுபயோகம், சுபாம்சத்துடன் கூடிய சுபதினத்தில் சுபரின் பார்வை பெற்ற ராசி ***ரஸாயனம்*** என்று சொல்லப்படுகிறது. சூரியன், செவ்வாய், சனி இவர்கள் லக்னத்திலோ அல்லது கேந்திரத்திலோ இருக்கையில் வைத்யம் செய்தால் ஸகல நோய்களும் குணமாகும். ஸகல சுபயோகங்களிலும் வைத்யம் செய்ய சுபம் உண்டு.

சரம் - ஸ்திரம் - உபயம் இவற்றில் சரம் உத்தமம். உபயம் நடுத்தரமானது. ஸ்திரம் அதமம்.

சத்ரு ஸ்தானம், களத்தர ஸ்தானம், அஷ்டம ஸ்தானம் ஆகியவற்றில் எந்த கிரஹம் இருந்தாலும் நாசம் உண்டு.

சதுர்த்தி, நவமி, சதுர்தசி; திருவாதிரை, கேட்டை, ஆயில்யம், மூலம் ஆகிய திதி - நக்ஷத்திரங்களுடன் கூடிய சனி, செவ்வாய் இருவருள், செவ்வாய் பலமுள்ளவனாகவும், 8-ம் இடத்தில் ஒருவரும் இல்லாதிருக்கும் சமயம் மேஷ, கடக, கன்னி, துலா லக்னத்தில் க்ஷாரர் - அக்னி ஆயுத சிகிச்சை செய்யலாம்.

நோயிலிருந்து விடுபட்டவர் தனிலைக்குக் குளிக்க (தலைக்கு ஜலம்விட) விசாகம், திருவோணம், அச்வினி, பரணி, கார்த்திகை, பூசம், மிருகசீர்ஷம், திருவாதிரை, ஹஸ்தம், சித்திரை, பூரம், பூராடம், பூரட்டாதி, மூலம் இவைகளில் சர லக்னம் நோய் குணமான பிறகு தலைக்கு ஜலம் விட்டு குளிக்க நல்லது.

ஜன்ம - அனுஜன்ம - த்ரிஜன்மங்களில் 22-வது (வைநாசிக) நக்ஷத்திரத்தில் 3, 5, 7-வது நக்ஷத்திரத்திலும், சந்திராஷ்டமத்திலும், நோயிலிருந்து விடுபட்ட பிறகு ஸ்நானம் செய்வது கூடாது. செவ்வாய், குரு, புதன் இவைகளின் வாரம், வர்கோதயங்கள் சுபம்.

அடிக்கடி நோய்வந்து குணமாகுமாகில் சூரியனின் வார அம்சங்கள் உத்தமம். சனி வார அம்சங்கள் மத்யமம்.

அஷ்டமீ, அமாவாஸ்யை, சதுர்த்தி, நவமி, சதுர்தசி நாட்களில் நோயுற்று குணமான பிறகு ஸ்நானம் செய்யலாகாது.

கேந்திர, த்ரிகோணங்களில் சுபர்களும்; 3, 6, 11-ம் இடங்களில் அசுபர்களும் இருக்க உத்தமம்.

## எண்ணெய் தேய்த்து முழுகுதல்

இந்த சந்தர்பத்தில் எண்ணெய் தேய்த்து முழுகும் சிறந்த விதிமுறைகளைக் கூறவிருக்கிறேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும்

| கிழமைகள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| ஞாயிறு | ஹ்ருதயத்தில் தாபம் | |
| திங்கள் | காந்தி, [illegible] | |
| செவ்வாய் | அபம்ருத்யு | புத்ரவிருத்தி |
| புதன் | செல்வம் வளரும் | |
| வியாழன் | ஏழ்மை (தரித்திரம்) | |
| வெள்ளி | ஆபத்து | ஸௌபாக்ய விருத்தி |
| சனி | தீர்க்காயுஸ் | |

மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறு பலன்களை அறிந்து, எந்த [illegible] எண்ணெய் ஸ்நானத்தை அனுஷ்டிக்க [illegible] [illegible] [illegible] களில் எண்ணெய் தேய்த்து முழுகுவதால் ஸந்ததி, ஆயுஸ், உடல் பலம் ஆகியவை பெருகும்.

தசமியன்று எண்ணெய் தேய்த்து முழுகுவது மிகவும் அவசியம், தவிர்க்கலாகாது. அவ்வாறு தசமியன்றைக்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ளாமல் தலைக்கு முழுகினால் ஆயுள், புத்தி, கீர்த்தி ஆகியவை நாசமாகும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த விதிமுறைகளை அறியாமல் (அறியாமை காரணமாக) பிரதமை, ஷஷ்டி, அமாவாஸ்யை, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய நாட்களில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தாலும் (அறியாமல் செய்தாலும்) மேலே கூறப்பட்டுள்ள ஆயுள், புத்தி, கீர்த்தி, உடல் வலிமை ஆகிய நான்கும் நாசமாகும்.

அவசியம் நேரிடும்போது விலக்கப்பட்ட கிழமை, திதி, நக்ஷத்திரங்களிலும் எண்ணெய்யில் சிறிதளவு நெய் அல்லது நீர் சேர்த்து தேய்த்து முழுகலாம், பிழையாகாது.

கேட்டை, உத்தரம், திருவோணம், திருவாதிரை, ஜன்ம - அனுஜன்ம - த்ரிஜன்ம நக்ஷத்திர நாட்கள், மாதப்பிறப்பு ஆகிய நாட்களில் எண்ணெய் தேய்த்துக்கொண்டால் செல்வமும், ஆயுளும் குறையும்.

சுவாதியுடன் கூடிய வியாழக்கிழமையில் திருதீயை, பஞ்சமீ சேர்ந்து இருக்க எண்ணெய் தேய்த்து முழுகுவதால் ஆரோக்யம், செல்வம், பலம் கூடும்.

எண்ணெய் தேய்த்து முழுகும் விஷயத்தில் திதி, வாரம் (கிழமை), நக்ஷத்திரம், கரணம் இவைகளில் கிழமையே யாவற்றிலும் பலம் வாய்ந்தது. திதிக்கு 1 குணம் (மடங்கு பலம்) என்றால் நக்ஷத்திரத்திற்கு நான்கு குணம், கரணத்திற்கு ஆறுகுணம். வாரத்திற்கு (கிழமைக்கு) எட்டு குணம்.

பெண்கள் எண்ணெய் தேய்த்து தலைமுழுகும் விஷயத்தில் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் மிகுந்த ஸௌபாக்ய விருத்தியளிப்பவை என்பதால் அந்நாட்களில் அவர்கள் எண்ணெய் தேய்த்து முழுகுதல் நலம்.

## முப்பத்திரண்டாவது அத்யாயம்

### *கொடுக்கவேண்டிய கடன் தீர்த்தல்*

இந்த சந்தர்பத்தில் வாங்கிய கடனைத் தீர்க்கும் விதிமுறையைக் கூறவிருக்கிறேன்.

அனுஷம், அச்வினி நக்ஷத்திரமுள்ள நாட்களில் லக்னத்தில் சந்திரன் இருக்கும் காலத்திற்கு “மைத்ர முகூர்த்தம்”

எனப்படும். அதுசமயம் கடன் பகுதியில் சிறிது கொடுத்தால் கொடுக்கவேண்டிய கடன்தொகை எவ்வளவு அதிகமாக இருப்பினும் அக்கடன் முழுவதும் தீர்ந்துவிடும்.

செவ்வாய், ஞாயிறு, சனிக்கிழமைகளில் முறையே நவமி, சதுர்தசி, சதுர்த்தி திதிகள் சேர்ந்து வந்து அந்த நாளில் குளிகன் உதயமாகும் சமயத்தில் கொடுக்கவேண்டிய கடன் தொகையில் சிறிதளவே கொடுத்தாலும் மிக விரைவில் கடனிலிருந்து விடுபடலாம். அந்த நல்ல நேரம் சத்ரு ஜயத்தையும் அளிப்பதாகும்.

சதுர்த்தி, நவமி, சதுர்தசிகளுடன் சேர்ந்த ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமைகளில் விஷ்டி கரணத்தில் குளிகன் சேர்ந்திருக்கும்பொழுது கொடுக்கவேண்டிய கடனில் சிறு பகுதி கொடுத்தாலும் விரைவில் முழுக்கடனும் தீர்ந்துவிடும்.

அனுகூலமான நக்ஷத்திரத்தில் எட்டாம் இடத்தில் பாபிகள் இருக்கும்பொழுது விஷநாடி (தியாஜ்யம்) உதிக்கும் பொழுது கொடுக்கவேண்டிய கடனுக்கு சிறிது கொடுத்தாலும் முழுக்கடனும் தீர்ந்துவிடும்.

சனிக்கிழமை, பிரதோஷ காலத்தில், சர லக்னத்தில் சொற்பக் கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தாலும் மீதியுள்ள கடன்தொகை முழுவதும் தீர்க்கப்பட்டுவிடும்.

லக்னத்தில் ராகு இருக்கும் சமயத்தில், வியதீபாத யோகமும் கூடியபொழுது, சூரிய-சந்திர கிரஹணமும் ஏற்பட்டு, கிரஹணம் விலகும் சமயமாக இருப்பின் அதுசமயம் வாங்கிய கடனைக் கொடுக்கவேண்டியதற்காக ஏதேனும் ஒரு சிறுபகுதி கொடுத்தாலும் முழுக்கடனும் தீர்ந்துவிடும்.

## முப்பத்தி மூன்றாவது அத்யாயம்

இதற்குமேல் சுபகார்யங்களில் விலக்கத்தக்க தோஷங்களைக் கூறிவிருக்கிறேன்.

ஜன்ம, அனுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திரத்திலிருந்து ஒன்பது நக்ஷத்திரங்களையும் எண்ணும்போது முறையே ஒவ்வொன்றிலும் ஜன்ம, ஸம்பத், விபத், க்ஷேமம், ப்ரத்யரம், ஸாதகம், வதம், மைத்ரம், பரமமைத்ரம் எனப்பெயர்.

(ஜன்ம நக்ஷத்திரம் சுபகாரியத்திற்கு விலக்கு ஆகையால்) ஜன்ம, அனுஜன்ம, த்ரிஜன்மங்களில் சுபகாரியங்களைச் செய்தால் உடலுக்குத்தீங்கு. இரண்டாவது நக்ஷத்திரத்தில் செய்தால் மிகுந்த செல்வம் பெருகும்.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு மூன்றாவது நக்ஷத்திரத்தில் சுப காரியங்களை மேற்கொள்ளலாகாது. தீமைகளைப் பயக்கும். நான்காவது நக்ஷத்திரத்தில் மேற்கொள்ளப்படும் சுபகாரியங்கள் மேன்மேலும் க்ஷேம லாபத்தையும், ஆரோக்யத்தையும் அளிக்கும். ஐந்தாவது நக்ஷத்திரம் கார்யங்களைத் தடைசெய்ய வல்லது என்பதால் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு ஐந்தாவது நக்ஷத்திரம் "ப்ரத்யரம்" எனப்பட்டது சுபமல்ல.

ஆறாவது நக்ஷத்திரம் கடினமானதாயினும் காரியங்களை வெற்றிபெறச் செய்வதால் ஸாதகம் எனப்பட்டது. எனவே, ஆறாவது நக்ஷத்திரத்தில் சுபகார்யங்களை நடத்தலாம்.

ஏழாவது நக்ஷத்திரம் காரியத்தை நாசமாக்கும் என்பதால் அதற்கு "வதம்" என்று பெயர். சுபமல்ல; அசுபமும்கூட. எட்டாவது நக்ஷத்திரம் தொடங்கப்படும் சுப காரியத்தில் நண்பன்போல் அன்புடன் உதவி, வெற்றி, மகிழ்ச்சி தரவல்லது என்பதால் "மைத்ரம்" எனப்பட்டது. சுபம்.

ஒன்பதாவது பரமமைத்ரம். அதில் செய்யப்படும் எந்தச் சுபகாரியங்களும் எளிதில் முடிக்கலாம் என்பதால் சுபம்.

பத்தாவது நக்ஷத்திரம், ஜன்ம நக்ஷத்திரத்தில் பாதி பலன் தரவல்லது. பத்தொன்பதாவது நக்ஷத்திரத்திலும் அதில் பாதி பலன் ஏற்படும்.

முதல் பர்யாயத்தில் மூன்று, ஐந்து, ஏழாவது நக்ஷத்திரம் விலக்கத்தக்கது. இரண்டாவது பர்யாயத்தில் 3, 5, 7 நக்ஷத்திரங்களில் சில பாதங்கள் விலக்கத்தக்கவை. மூன்றாவது பர்யாயத்தில் எல்லாமே சுபம். (இது பொதுவான கருத்து.)

இரண்டாம் பர்யாயத்தில் விபத்து தாரை 3வது நக்ஷத்திரம். அதில் முதல் பாதமும், ப்ரத்யரத்தில் (5வது நக்ஷத்திரம்), நான்காவது பாதமும், வதத்தில் (7வது நக்ஷத்திரம்) மூன்றாவது பாதமும் விலக்கத்தக்கது. பிற பாதங்கள் சுபமே.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு இருபத்திரண்டாவது நக்ஷத்திரம் "வைநாசிகம்" எனப்படும். அது நாசத்தைச் செய்வது என்பதால் "வைநாசிகம்" எனப்படுகிறது.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு மூன்றாவது பர்யாயத்தில் எண்பத்தி எட்டாவது பாதம் "வைநாசிக"மாகும். எனவே அந்த நக்ஷத்திரமே (88-வது பாதமாக வருகிற நக்ஷத்திரமே) விலக்கத்தக்கது. அந்த நக்ஷத்திரம் தவிர பிற நக்ஷத்திரங்கள் யாவும் (மூன்றாவது பர்யாயத்தில்) சுபமே.

***சந்திராஷ்டமம் :*** ஜன்ம ராசிக்கு எட்டாவது ராசியில் சந்திரன் ஸஞ்சரிக்கும் காலம் "சந்திராஷ்டமம்" எனப்படும். அக்காலத்தில் சுபகாரியங்கள் விலக்கத்தக்கவை. தீமையைச் செய்யும் என்பதால் சந்திராஷ்டம தினங்கள் விலக்கத்தக்கவை.

ஜன்ம நக்ஷத்திரத்திற்கு முன் நக்ஷத்திரம் இருபத்தி ஏழாவது நக்ஷத்திரமாகும். 27-வது நக்ஷத்திரத்தில் (ஜன்ம நக்ஷத்திரத்திற்கு இருபத்தி ஏழாவது நக்ஷத்திரத்தில்) சுப காரியங்களை விலக்குதல் வேண்டும்.

சிராத்தம் (சுமங்கலி ப்ரார்த்தனையுள்பட) விவாஹம், க்ஷௌரம் (முடி வெட்டுதல்), பிரயாணம், உபநயனம் இவைகள் 27-வது நக்ஷத்திரத்தில் செய்யப்படலாகாது. அது மிகுந்த தீமையை விளைவிப்பதாகும்.

கேட்டை, பூரம், பூராடம், பூரட்டாதி, பரணி, திருவாதிரை, ஆயில்யம், கார்த்திகை, விசாகம், மகம், ஜன்மானுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திரங்கள் சுபகாரியங்களைச் செய்வதில் விலக்குதற்குரியன.

ரிக்தைகள், அஷ்டமீ, சுக்லபக்ஷத்தில் (வளர்பிறையில்) ஆரம்பத்திலுள்ள ஐந்து திதிகளும், கிருஷ்ணபக்ஷத்தில் (தேய்பிறையில்) கடைசியில் உள்ள ஐந்து திதிகளும் அசுபங்கள். கிருஷ்ணபக்ஷத்தில் (தேய்பிறையில்) நடுவிலுள்ள ஐந்து நாட்கள் (திதிகள்) மத்யமம். த்வாதசி, பௌர்ணமீ, ஷஷ்டீ இவைகளும் விலக்கத்தக்கவை. பாபிகளின் வாரங்களும் (பகல் நேரம் மட்டும்), அம்சங்களும் கூடாது. பாப (அசுப) கிரஹங்கள் செவ்வாய், சூரியன், சனி லக்னத்திற்கு 3, 6, 11-ல் இருப்பினும் அவர்களின் வாரங்கள் நல்லவையல்ல. செவ்வாய், சனி, இவர்களின் ராசிகள் பொதுவாக சுபமில்லாதவை.

### அசுப யோகங்கள்

வியாகாதம், பரிகம், வஜ்ரம், வியதீபாதம், வைதிருதி, கண்டம், அதிகண்டம், சூலம், விஷ்கம்பம் ஆகியவை அசுப யோகங்களாம்.

### அசுப கரணங்கள்

விஷ்டி, சதுஷ்பாதம், நாகம், கிம்ஸ்துக்னம், சகுனம் ஆகிய ஐந்து கரணங்களும் சுபகாரியங்களுக்கு விலக்கத்தக்கவை. "தாருண" (க்ரூர) கர்மாக்கள் செய்ய உகந்தவை. ('க்ரூர கர்மாக்கள்' என்பவை பிறரைக் கருதியோ, பிறர் செய்த தீவினைகளை விலக்குவதற்காகவோ செய்யப்படும் வழிபாடுகள், மந்த்ர - ஜப - ஹோம காரியங்களாகும்.)

### தினமிருத்யு

அவிட்டம், ஹஸ்த நக்ஷத்திரங்களின் முதல் பாதம்; விசாகம், திருவாதிரைகளின் 2-வது பாதம்; உத்திரட்டாதி, ஆயில்யங்களின் 3-வது பாதம்; பரணி, மூலங்களின் 4-வது பாதம் பகலில் நேரிடுமானால், அக்காலம் தினமிருத்யு காலங்கள். அந்தக் காலத்தில் சுபகாரியங்கள் விலக்கத்தக்கவை.

### தினரோகம்

ஆயில்யம், உத்திரட்டாதிகளின் முதல் பாதம்; பரணி, மூலங்களின் 2-வது பாதம்; உத்தரம், திருவோணங்களின் 3-வது பாதம்; ஸ்வாதி, மிருகசீர்ஷங்களின் நான்காவது பாதமும் தின ரோகங்கள் ஆகும். சுபகர்மாக்களை இந்தக் காலங்களில் விலக்க வேண்டும்.

### ஆசீவிஷம்

அமாவாஸ்யை முடியும் நக்ஷத்திரத்திற்கு 2, 6, 9, 11, 13, 18, 25-வது நக்ஷத்திரங்கள் ஆசீவிஷமாகும். இவை எந்த அபவாதங்களாலும் மாறுபடுவதில்லை. ஆதலால் இந்த நக்ஷத்திரங்களில் சுபகாரியங்களைக் கட்டாயம் விலக்க வேண்டும்.

பெரும்பாலான நூல்களில் 27-வது நக்ஷத்திரமே சேர்க்கப்பட்டுள்ளது. 25-வது நக்ஷத்திரமல்ல. எனவே, மூலத்தில் सप्तविंशतिभ என்றே இருக்கவேண்டும் என்று ஆகிறது. கிரந்த லிபியிலான ஒரு மிகப் பழமையான நூலில் पञ्चविंशतिभ என்று இருப்பதால் 25-வது நக்ஷத்ரம் என்று ஆகிறது.

ஏகார்களை (சக்ரம்) இது சுபகாரியங்களைக் கெடுக்கும் யோகமாகும். மேல் கீழாக ஒரு கோடும், குறுக்காக பதிமூன்று கோடுகளும் போட்டால் பேரீச்சை இலை போன்றதொரு சக்ரம் (Diagram) அமையும்.

| யோகம் | நக்ஷத்ரம் | யோகம் | நக்ஷத்ரம் |
|---|---|---|---|
| 1. விஷ்கம்பம் | அச்வினி | 2. வியதீபாதம் | ஆயில்யம் |
| 3. சூலம் | மிருகசீர்ஷம் | 4. பரிகம் | மகம் |
| 5. கண்டம் | மூலம் | 6. அதிகண்டம் | அனுஷம் |
| 7. வஜ்ரம் | பூசம் | 8. வியாகாதம் | புனர்பூசம் |
| 9. வைத்ருதி | சித்திரை | | |

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள யோகங்களுக்கு அவற்றின் எதிரில் குறிப்பிட்டுள்ளவை உரிய நக்ஷத்திரங் களாகும்.

எந்த யோகத்தில் ஒரு சுபகாரியம் மேற்கொள்ள வேண்டுமோ அந்த யோகத்திற்கான நக்ஷத்திரத்தைத் தலைப்பில் எழுதிக்கொள்ளவும். அப்போது ஒரே ரேகையில் உள்ள நக்ஷத்திரங்களில் சூரிய - சந்திரர்கள் இருந்தால் அது ஏகார்களை. உதாரணமாக பரிக யோகத்தில் ஒரு தொழில் தொடங்க இருப்பதாகக் கொண்டால் அதற்கு உரிய மக நக்ஷத்திரத்தை மேல் பகுதியில் எழுதி அதனைத் தொடர்ந்து படத்தில் உள்ளதுபோல் வரிசையாக பூரம் முதலாக 26 நக்ஷத்திரங்களை எழுதவும். தொழில் தொடங்குவதாக உள்ள நாளில் சூரியன் அச்வினி நக்ஷத்திரத்திலும், சந்திரன் மூலத்திலும் இருப்பதாக வைத்துக்கொண்டால் அச்வினியும் மூலமும் ஒரே நேர்கோட்டில் வருகின்றன என்பதால் "ஏகாரகளை யோகம்" அமைகிறது. சூரியன் இருக்கும் நக்ஷத்திரமும், சந்திரன் இருக்கும் நக்ஷத்திரமும் வேறு வேறு கோட்டில் அமைந்தால் "ஏகார்களை யோகம்" இல்லை. பகலில் இந்த ஏகார்களை மேலே கூறப்பட்டவாறு அமையுமானால் தொடங்கப்படும் தொழில், தொடங்கப்படும் சுபகாரியங்கள் நல்ல பலனை அளிக்காது. பாதகமான பலனே ஏற்படும். இந்த துஷ்டயோகம் பகலில் மட்டுமேயாகும்.

### ஷடசீதி முகம்

இதுவும் ஒரு பாதகமான யோகமாகும். இது சர - ஸ்திர - உரய ராசிகளில் சூரியனின் சஞ்சாரத்தால் (நிலையை) அமையும். சர ராசிகளில் சூரியனின் 7-வது அம்சமும், ஸ்திர ராசிகளில் 5-வது அம்சமும், உபய ராசிகளில் 9-வது அம்சமும் **ஷடசீதி** முகம் எனப்படும். இந்த யோகம் வந்தால் 60 நாழிகைகள் சுப கார்யங்களில் விலக்கத்தக்க காலமாகும்.

### குருட்டு நக்ஷத்திரங்கள்

பூரட்டாதி முதல் அன்றைய பிரச்னகால நக்ஷத்திரம் வரையிலான நக்ஷத்திர பாதங்களை விட்டுவிடவும். மீதியுள்ள பாதங்கள் 27-ஆல் வகுக்கவும். மீதியுள்ளவைகளில் 1 முதல் 6 நக்ஷத்திரங்கள் குருட்டு நக்ஷத்திரங்களாகும். மீதியுள்ளதில் 7 முதல் 15 நக்ஷத்திரங்கள் ஒருகண் இல்லாதவை. 16-வது முதல் 27-வரை இரு கண்களுள்ள நக்ஷத்திரங்கள் (இரு கண்கள் உள்ளவை).

சூரியனிருக்கும் நக்ஷத்திரம் முதல் நான்கு நக்ஷத்திரங்கள் குருடு. பின் நான்கு நக்ஷத்திரங்கள் ஒரு கண் உள்ளவை. பின் பன்னிரண்டு நக்ஷத்திரங்கள் இரண்டு கண் உள்ளவை.

### குருட்டு திதிகள்

கிருஷ்ணபக்ஷ (தேய்பிறை) ஏகாதசி திதி முதல் இது கணக்கிடப்படுகிறது. அது முதல் ஒன்பது குருடு. அதற்கு அடுத்து மூன்று ஒரு கண். அதற்கு அடுத்த ஆறு கண்கள் உள்ளவை. கடைசி மூன்று ஒரு கண் உள்ளவை.

### குருட்டு ராசிகள்

மேஷம், ரிஷபம், ஸிம்மம் இவை பகலில் குருடு. மிதுனம், கடகம், கன்னி இரவில் குருடு. குருடாயிருக்கும் ராசிகள் காரியத்தை நாசம் செய்யும். ஒரு கண் உள்ளவையும்

சுலபமல்ல. இரு கண்களும் உள்ள ராசிகளில் சுபகாரியங்களைச் செய்ய நல்லது. ஒரு கண் உள்ள ராசிகளும் பலமுடன் இருப்பின் அவற்றில் சுபகாரியங்களைச் செய்யலாம்.

துலாம், விருச்சிகம் - முற்பகலில் செவிடு. தனுஸ், மகரம் - பிற்பகலில் செவிடு. கன்னியும், கடகமும் - நண்பகலில் செவிடு. கும்பமும், மீனமும் - காலை, மாலை, சந்தியா காலங்களில் (பொழுது இணையும் நேரம் சந்தியாகாலம்) முடம், குருடு - காரியத்தைக் கெடுக்கும். செவிடு - பொருள் நஷ்டம் ஏற்படுத்தும். முடம் ஆயுளைக் குறைக்கும். ஆகையால் அவை விலக்கத்தக்கவை.

## சகடயோகம்

இது ஒரு அசுப யோகமாகும். சந்திரன் குருவுக்குஆறு, எட்டு, பன்னிரெண்டாம் இடங்களில் இருந்தால் அது சகடயோகம் எனப்படும். இந்த யோகம் சகல சுபகார்யங்களுக்கும் ஏற்றதல்ல.

## காத்ரி யோகம்

இதுவும் ஒரு தீய யோகமாகும். இரு பாப கிரஹங்கள் வக்ர கதியில் லக்னத்திற்கு இரண்டு, பன்னிரண்டில் இருப்பின் அது காத்ரி யோகமாகும். தீமை விளைவிப்பது.

## சூன்ய யோகங்கள்

ஒவ்வொரு மாதத்திலும் சில திதிகளும், நக்ஷத்திரங்களும் இந்த அசுபயோகம் அமைவதற்கு ஏதுவாகின்றன. அந்த மாதத்தில் அந்த நக்ஷத்திரங்களும், இந்த அசுபயோகம் அமைவதற்கு ஏதுவாகின்றன. அந்த மாதத்தில் அந்த நக்ஷத்திர திதிகளில் சுபாரம்பம் செய்யவோ, முக்ய கார்யங்களைச் செய்யவோ கூடாது.

| மாதம் | திதிகள் | நக்ஷத்திரம் | லக்னம் |
|---|---|---|---|
| சைத்ரம் | அஷ்ட, ஏகாத | ரோகிணி, அச்வினி | மேஷம் |
| வைசாகம் | த்வாதசி | சித்தி, ஸ்வாதி, உத்தராட | மீனம் |
| ஜ்யேஷ்டம் | திரயோதசி | புனர்பூசம் | ரிஷபம் |
| ஆஷாடம் | ஷஷ்டி | பூரம், அவிட்டம் | மிதுனம் |
| சிராவண | பௌர்ணமி | பூராடம் | மேஷம் |
| பாத்ரபத | ஸப்தமீ | ரேவதி, சதயம் | கன்னி |
| ஆச்வயுஜ | நவமீ | பூரட்டாதி | விருச்சிக |
| கார்த்திக் | பஞ்சமீ | மகம், பூசம் மிருகசீர்ஷ, கார்த்திகை | துலாம் |
| மார்க்கசிரஸ் | துவி | விசா, அனு, உத்திரட் | தனுஸ் |
| புஷ்யம் | பிரதமை | ஹஸ்தம், திருவா, ஆயில்யம் | கடகம் |
| மாகம் | சதுர்த்தி, தசமி | திருவோணம், மூலம் | மகரம் |
| பால்குணம் | சதுர்த்தி | கேட்டை, பரணி | சிம்மம் |

## சூன்ய திதிகள்

சில திதிகள் காரணமாக ராசிகள் சூன்யயோகம் அடைகின்றன. விபரம் அட்டவணையில் சூன்யமான திதி, வாரம், நக்ஷத்திரம் இவற்றில் சுபகாரியங்கள் செய்யலாகாது.

| திதிகள் | ராசிகள் |
|---|---|
| பிரதமை | துலா - மகர ராசிகள் |
| த்விதீயை | தனுஸ் - மீன ராசிகள் |
| த்ருதீயை | மகர - சிம்ம ராசிகள் |
| சதுர்த்தி | மேஷ - ரிஷப ராசிகள் |
| பஞ்சமீ | கன்னி - மிதுன ராசிகள் |
| ஷஷ்டி | மேஷ - ஸிம்ம ராசிகள் |
| ஸப்தமி | தனுஸ் - கடக ராசிகள் |
| அஷ்டமி | மிதுன - கன்னி ராசிகள் |
| நவமி | விருச்சிக - சிம்ம ராசிகள் |
| தசமி | விருச்சிக - சிம்ம ராசிகள் |
| ஏகாதசி | தனுஸ் - மீன ராசிகள் |
| துவாதசி | துலா - மகர ராசிகள் |
| திரயோதசி | ரிஷப - சிம்ம ராசிகள் |

### சூலங்கள் - நக்ஷத்திர சூலங்கள்

கார்த்திகை முதல் 7 நக்ஷத்திரங்கள் கிழக்கில் சூலம். மகம் முதல் 7 நக்ஷத்திரங்கள் தெற்கில் சூலம். அனுஷம் முதல் 7 நக்ஷத்திரங்கள் (அபிஜித் நக்ஷத்ரம் சேர்த்து) மேற்கில் சூலம். அவிட்டம் முதல் 7 நக்ஷத்திரங்கள் வடக்கில் சூலம்.

### மஹாசூலம்

சூரிய - சந்திர கிரஹண காலத்தில் சூரியன் அல்லது சந்திரன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு எதிரில் உள்ள (15) வது நக்ஷத்திரம் மஹாசூலம் எனப்படும். மேலே கூறப்பட்ட சூலமும், மஹாசூலமும் மிகவும் அசுபமானவை.

### கிரஹசூலம்

கிரஹண தினத்தில் சந்திரன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு முன் ஏழு தினங்களும், பின் ஏழு தினங்களும் கிரஹசூலம் எனப்படும். சுபகார்யங்களுக்கு ஏற்றதல்ல.

ஒரு பாப கிரஹம் உள்ள நக்ஷத்திரமும், அதற்குமுன் - பின் நக்ஷத்திரங்களும் - பாப கிரஹம் விட்ட நக்ஷத்திரமும், பாப கிரஹம் சேரப்போகும் நக்ஷத்திரமும் சுபகாரியங்களுக்கு உகந்தவையல்ல.

பௌர்ணமியே வராத மாஸம் மலமாஸம் என்றும், இரண்டு பௌர்ணமிகள் வரும் மாஸம் விஷமாஸம் என்றும் சொல்லப்படுகிறது. இவை சுபகாரியங்களுக்கு ஏற்றதல்ல.

## ஸங்கிரமண யோகம்

(சூரியன் ஒரு ராசியை விடுத்து இன்னொரு ராசியை அடைவது) இல்லாத மாதத்திற்கு ஸம்ஸர்ப்பணம் என்றும், இரண்டு ஸங்கிரமணங்கள் ஏற்படும் மாதத்திற்கு அம்ஹஸ்பதி என்றும் பெயர். இவைகளும் விலக்கத்தக்கவையே.

## ஸ்தூல யோகம்

சூரியன் இருக்கும் நக்ஷத்திரம் முதல் மூலம் வரை எவ்வளவு நக்ஷத்திரங்களோ அவ்வளவு நக்ஷத்திரங்கள் ஸ்தூல நக்ஷத்திரங்கள்.

## கண்டகம்

செவ்வாய் இருக்கும் நக்ஷத்திரம் முதல் மூலம் வரையில் உள்ள எண்ணிக்கை எவ்வளவோ, அவ்வளவு மூலம் முதல் எண்ணப்படும் நக்ஷத்திரங்கள் கண்டகம் எனப்படும்.

## கண்டக ஸ்தூலம்

சூரியன் இருக்கும் நக்ஷத்திரம் முதல் மூலம் வரை எண்ணிய துகையுடன், செவ்வாய் இருக்கும் நக்ஷத்திரம் முதல் மூலம் வரை எண்ணிய துகையைக் கூட்டி அவ்வளவு எண் மூலம் முதலாகவுள்ள நக்ஷத்திரங்கள் கண்டக ஸ்தூலமாகும். இதற்கு எத்தனை அபவாதங்கள் வந்தாலும் சுபகிரஹ ஸம்பந்தம் வந்தாலும் அவற்றின் தீமை குறைகிறதில்லை.

### ஜ்வலிதம்

செவ்வாய் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 5-7-14-25-16வது நக்ஷத்திரங்கள் ஜ்வலிதம் எனப்படும். இவைகளும் தீயவையே.

### த்வஜ தண்டம்

சூரியன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 5-7-15-21 ஆவது நக்ஷத்திரங்களும், செவ்வாய் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 7, 16, 25, 14-வது நக்ஷத்திரங்களும், புதன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 8, 18, 24-வது நக்ஷத்திரங்களும், குரு நிற்கும் நக்ஷத்திரத்திற்கு 9-வது நக்ஷத்திரமும் த்வஜ தண்டம் எனப்படும்.

சுக்ரன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 10வதும், சனிக்கு 6, 11, 20வதும், ராகுவுக்கு 5, 11, 13வதும் சுபகாரியங்களுக்கு உகந்தவையல்ல.

லக்னத்திற்கு 5-ல் சனியும், 6-ல் சந்திரனும் குருவும், 7-ல் சுக்ரனும், 8-ல் பாபிகள், சந்திரன், குரு இவர்களும், 9-ல் செவ்வாயும், 10-ல் புதனும், 12-ல் சூரியனும் இருத்தல் கூடாது.

மாதப்பிறப்பிற்கு (ஸங்க்ரமணத்திற்கு) முன் - பின் 30 நாழிகைகளும், ஐப்பசி மாதப்பிறப்பில் முன் 60 நாழிகைகளும்; மகரம், மேஷம், கடகம் ஆகிய ஸங்கிரமணங்களில் முன் - பின் 3 தினங்களும் கூடாதவை.

பகல் பொழுதை (அஹஸை) எட்டு பாகமாக்கினால் முதல் பாகத்திற்கும், எட்டாம் பாகத்திற்கும் அந்தந்த வாராதிபனும், மற்ற பாகங்களுக்கு வரிசையாக மற்ற ஆறு வாராதிபதிகளும் அதிபதிகள். இவற்றுள் சனியின் பாகத்திற்கு **குளிகன்** என்று பெயர். அந்த நேரம் சுபகார்யங்களுக்கு உகந்ததல்ல.

## *அர்த்தப்ரஹறரன் யமகண்டன் - காலன்*

பகலை எட்டு பாதியாமங்களாக்கி, ஞாயிறு தினத்தில் நான்காவதும், திங்களில் மூன்றாவதும், செவ்வாயில் இரண்டாவதும், புதனில் முதலாவதும், வியாழனில் ஏழாவதும், வெள்ளியில் ஆறாவதும், சனியில் ஐந்தாவதும் ஆகிய பாதியாமங்களுக்கு அர்த்தப்ரஹாரங்கள் எனப்பெயர்.

இவ்விதமே ஞாயிறு முதல் சனி வரையில் உள்ள கிழமைகளில் முறையாக 5, 4, 3, 2, 1, 7, 6-வது பாதி யாமங்களுக்கு ***யமகண்டன்*** என்று பெயர். இவ்வாறே ஞாயிறு முதலான கிழமைகளில் 1, 7, 6, 5, 4, 3, 2-வது பாதியாமங்களுக்கு ***காலன்*** என்று பெயர். இம்மூன்றும் சுபகர்மாக்களுக்கு உகந்தவையல்ல.

## *ஹோரை*

ஒரு தினத்தில் 2½ நாழிகை வீதம் பிரித்தால் ஒவ்வொரு 2½ நாழிகைக்கும் ***காலஹோரை*** என்று பெயர்.

ஒவ்வொரு நாளும் முதல் காலஹோரையை அந்த வார அதிபனும், பிற்பட்ட ஹோரைகளை கிரமமாக 6-வது வார அதிபனும் ஆட்சி புரிகிறார்கள். இந்த வரிசைக்கிரமம் சூரியன், சுக்ரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய் என்பதாக இருக்கும். இவர்கள் வரிசையாக ஹோராநாதர்கள் ஆவர்.

## *ஹோராநாதர்கள் அளிக்கும் பலன்கள்*

சூரியன் மரணத்தையும், சுக்ரன் விவாஹத்தையும், புதன் பிரஸவம், சந்திரன் சுகம், சனி விலங்கு, குரு பொருள் வரவு, செவ்வாய் சண்டை இவற்றையும் செய்வர்.

## அட்டவணை - A

பகலில் குளிகன், யமகண்டன் முதலானோரின் காலங்கள்

| நாள் | குளிகன் | யமகண்டம் | அர்தப்ரஹரம் | காலன் |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 3-00 - 4-30 | 12-00 - 1-30 | 10-30 - 12-00 | 6-00 - 7-30 |
| திங்கள் | 1-30 - 3-00 | 10-30 - 12-00 | 9-00 - 10-30 | 3-00 - 7-30 |
| செவ்வாய் | 12-00 - 1-30 | 9-00 - 10-30 | 7-30 - 9-00 | 1-30 - 3-00 |
| புதன் | 10-30 - 12-00 | 7-30 - 9-00 | 6-00 - 7-30 | 12-00 - 1-30 |
| வியாழன் | 9-00 - 10-30 | 6-00 - 7-30 | 3-00 - 4-30 | 10-30 - 12-00 |
| வெள்ளி | 7-30 - 9-00 | 3-00 - 4-30 | 1-30 - 3-00 | 9-00 - 10-30 |
| சனி | 6-00 - 7-30 | 1-30 - 3-00 | 12-00 - 1-30 | 7-30 - 9-00 |

## அட்டவணை - B

இரவில் குளிகன், யமகண்டன் முதலானோரின் காலங்கள்

| நாள் | குளிகன் | யமகண்டம் | அர்தப்ரஹரம் | காலன் |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 9-00 - 10-30 | 6-00 - 7-30 | 3-00 - 4-30 | 10-30 - 12-00 |
| திங்கள் | 7-30 - 9-00 | 3-00 - 4-30 | 1-30 - 3-00 | 9-00 - 10-30 |
| செவ்வாய் | 6-00 - 7-30 | 1-30 - 3-00 | 12-00 - 1-30 | 7-30 - 9-00 |
| புதன் | 3-00 - 4-30 | 12-00 - 1-30 | 10-30 - 12-30 | 6-00 - 7-30 |
| வியாழன் | 1-30 - 3-00 | 10-30 - 12-00 | 9-00 - 10-30 | 3-00 - 4-00 |
| வெள்ளி | 12-30 - 1-00 | 9-00 - 10-30 | 7-30 - 9-00 | 1-30 - 3-00 |
| சனி | 10-30 - 12-30 | 7-30 - 9-00 | 6-00 - 7-30 | 12-30 - 1-30 |

## கிரஹ ஹோரைகள்

| கிழமைகள் | | 6-7 | 7-8 | 8-9 | 9-10 | 10-11 | 11-12 | 12-1 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 5-6 | ராகுகாலம் (பகலில் மட்டும்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | பகல் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | 4-30 to 6-00 |
| திங்கள் | | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | 7-30 to 9-00 |
| செவ்வாய் | | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | 3-00 to 4-30 |
| புதன் | | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | 12-00 to 1-30 |
| வியாழன் | | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | 1-30 to 3-00 |
| வெள்ளி | | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | 10-30 to 12-00 |
| சனி | | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | 9-00 to 10-30 |
| ஞாயிறு | இரவு | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | |
| திங்கள் | | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | |
| செவ்வாய் | | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | |
| புதன் | | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | |
| வியாழன் | | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | |
| வெள்ளி | | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | |
| சனி | | புத | சந் | சனி | குரு | செ | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | செ | |

### ***ஷட்வர்கங்கள்***

திரேக்காணம், ஹோரரா, த்ரிம்சாம்சம், நவாம்சம், த்வாதசாம்சம், க்ஷேத்ரம் ஆகிய இவை ஆறும் ஷட்வர்கமாகும்.

### ***திரேக்காணம்***

ஒரு ராசியை மூன்று பாகமாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகமும் திரேக்காணம் எனப்பெயர்.

### ***சர ராசியாகில்***

முதல் திரேக்காணத்திற்கு அந்த ராசியின் அதிபதியே அதிபன். இரண்டாவது திரேக்காணத்திற்கு அந்த ராசிக்கு ஐந்தாவது ராசிநாதன் அதிபன். மூன்றாவது திரேக்காணத்திற்கு அந்த ராசிக்கு ஒன்பதாவது ராசிநாதன் அதிபன்.

### ***ஸ்திர ராசியாகில்***

1-வது திரேக்காணத்திற்கு அது தொடங்கி 9-வது ராசியின் அதிபதி - அதிபன். இரண்டாவது திரேக்காணத்திற்கு அந்த ராசிநாதனே அதிபன். 3-வது திரேக்காணத்திற்கு அதிலிருந்து 5-வது ராசிநாதன் அதிபன்.

### ***உபயராசியாகில்***

1-வது திரேக்காணத்திற்கு அதுமுதல் 5-வது ராசியின் அதிபதியே அதிபன். 2-வது திரேக்காணத்திற்கு அதிலிருந்து 9-வது ராசியின் அதிபதியே அதிபன். 3-வது திரேக்காணத்திற்கு அந்த ராசியின் அதிபதியே அதிபன்.

### ***ஹோரரா***

ஒரு ராசியை இரண்டு பாகமாக்கினால் அதன் ஒவ்வொரு பாகத்திற்கும் ஹோரரை என்று பெயர். ஒற்றைப்பட்ட ராசிகள் விஷயத்தில் ஒவ்வொரு முதல் அரைப் பாகத்திற்கும் சூரியன்

அதிபதி. இரண்டாவது பகுதிக்குச் சந்திரன் அதிபன். இரட்டித்த ராசிகள் விஷயத்தில் இதற்கு நேர்மாறாக முதல் பகுதிக்குச் சந்திரன் அதிபதி. இரண்டாம் பகுதிக்கு சூரியன் அதிபதி.

### த்ரிம்சாம்சங்கள்

ஒரு ராசியை முப்பது பாகங்களாக்கினால் அதன் ஒவ்வொரு பாகத்திற்கும் த்ரிம்சாம்சம் எனப்படும். சூரியர் - சந்திரர் (ராகு-கேது) தவிர மற்றவர்கள் அதிபர்கள். அதிலும் ஒற்றைப்பட்ட ராசியாயின் முதல் ஐந்து அம்சங்களுக்குச் செவ்வாயும், அதற்கு அடுத்த 5 அம்சங்களுக்குச் சனியும், அதற்கடுத்த 8 அம்சங்களுக்கு குருவும், அதற்கடுத்த 7 அம்சங்களுக்கு புதனும், அடுத்துள்ள கடைசி 5 அம்சங்களுக்கு சுக்ரனும் அதிபதிகள். இரட்டித்த ராசியானால் முதல் 5 அம்சங்களுக்கு சுக்ரனும், அடுத்த 7 அம்சங்களுக்கு புதனும், அடுத்த 8 அம்சங்களுக்கு குருவும், அடுத்துள்ள 5 அம்சங்களுக்குச் சனியும், கடைசி 5 அம்சங்களுக்கு செவ்வாயும் அதிபதிகள்.

### நவாம்சம்

ஒரு ராசியை ஒன்பது சம பாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகமும் நவாம்சம் எனப்படும்.

மேஷம், சிம்மம், தனுஸ் ராசிகளின் நவாம்சங்கள் மேஷம் முதலாகவும்; ரிஷபம், கன்னி, மகர ராசிகளின் நவாம்சங்கள் மகரம் முதலாகவும்; மிதுனம், துலாம், கும்பம் இவற்றின் நவாம்சங்கள், துலாம் முதலாகவும்; கடகம், விருச்சிகம், மீனம் இவற்றின் நவாம்சங்கள் கடகம் முதலாகவும் எண்ணப்படும்

ஒவ்வொரு ராசியும் நக்ஷத்ர பாதங்களைக் கொண்டதாக இருப்பதால் ஒவ்வொரு நவாம்சமும் ஒவ்வொரு நக்ஷத்திர பாதத்ததைக் குறிப்பிடுவதாக இருக்கும். எந்த நவாம்சம் எந்த ராசியில் அமைகிறதோ, அந்த ராசியதிபனே அந்த நவாம்சாதிபதியாவார்.

## த்வாதசாம்சம்

ஒரு ராசியைப் 12 பாகங்களாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகமும் த்வாதசாம்சம் எனப்படும். லக்னம் முதலான ராசிகளின் அதிபதிகளே 12 ஆம்சங்களுக்கும் அதிபர்கள் ஆவார். செவ்வாய், சுக்ரன், புதன், சந்திரன், சூரியன், புதன் சுக்ரன், செவ்வாய், குரு, சனி, மந்தன், குரு ஆகிய இவர்கள் அதிபர்களாவார்.

## சுபகிரஹங்கள்

குரு, சுக்ரன், சுக்லபக்ஷ (வளர்பிறை) சந்திரன், பாபிகளுடன் சேராத புதன். மற்ற கிரஹங்கள் அசுப பாப கிரஹங்கள் ஆகும்.

குருவோ, சுக்ரனோ நீசமாக இருக்கும்பொழுதும், சத்ரு கிருஹத்திலோ, அஸ்தமனமாகவோ, பாலத்வம், விருத்தத்வமுடனோ இருக்கும்பொழுதும், விவாஹம் (திருமணம்), உபநயனம் முதலான சுபகர்மாக்கள் செய்யலாகாது. குருவும், சுக்ரனும் வக்ர கதியிலிருக்கும் பொழுதும் அல்லது ஒருவருக்கொருவர் 7-வது வீட்டில் இருக்கும்பொழுதும் அவர்கள் அஸ்தமய தோஷமுடன் இருக்குங்கால் அளிக்கும் தீயபலன்களைக் காட்டிலும் மிக மோசமான தீயபலன்களை அளிப்பர்.

பின்வரும் நேரங்கள் அசுபமானவையாதலால், அந்தக் காலத்தில் எந்தச் சுபகாரியங்களையும் மேற்கொள்ளக் கூடாது. அவையாவன.

(1) குரு - சுக்ரர்கள் இருக்கும் நக்ஷத்திரத்தின் கடைசி இரண்டு நாழிகைகள்.

(2) மாத முடிவில் மூன்று நாட்கள், ஒரு வருடத்தின் முடிவில் கடைசி பக்ஷம் (15 நாட்கள்), குருவின் வார்தக்யத்தில் (மறைவதற்கு முன்) 15 நாட்கள், சுக்ரனின் வார்தக்யத்தில் (மறைவதற்கு முன்) 10 நாட்கள், சுக்ரன் உதயமாகி 10 நாட்கள், குரு உதயமாகி 8 நாட்கள், சந்திரன் முதுமை பெற்ற (தேய்பிறை நவமி முதல் அமாவாசை முடிய சுக்லபக்ஷம் பிரதமை) நாட்கள் ஆகியவை.

மேலே குறிப்பிட்ட தோஷமுள்ள காலங்களில் விவாஹம் செய்தால் மணவாழ்க்கை மகிழ்ச்சி தருவதாக இருக்காது. யாத்திரை செய்தால் பாதுகாப்பு இருக்காது. சௌளம் செய்தபின் கண்களுக்கு நாசம் ஏற்படும். தேவாதா பிரதிஷ்டை செய்தால் உலகிற்கு பயம் ஏற்படும். உபநயனம் செய்த மாணவனுக்கு ஆபத்தும், திருமணம் செய்தால் மணமகனுக்கு விபத்தும் ஏற்படும். பட்டாபிஷேகம் செய்துகொண்ட அரசனுக்குச் சத்ருக்களால் பீடையும் ஏற்படும்.

## கரணங்கள்

ஒவ்வொரு திதியின் பாதி பாகத்துடன் சுற்றும் இயல்புள்ள இவை (சர கரணங்கள்) சுக்ல பக்ஷம் பிரதமை திதியின் பின்பாதியிலிருந்து ஆரம்பித்து பவம் முதல் விஷ்டி முடிய 7 கரணங்களாகும். ஒரு திதியின் ஒரு பாதிக்கு ஒரு கரணம் வீதம் அமைகின்றன. அவை வரிசையாக பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரஜம், வணிஜம், விஷ்டி என்பனவாம்.

இவை சுக்ல (வளர்பிறை) பிரதமையின் பின்பாகம் முதற்கொண்டு தொடங்கி கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை) சதுர்தசியின் முன்பாதி வரையில் 8 தடவைகள் சுற்றி வருகின்றன.

இவ்வாறு சுற்றும்பொழுதும் சுக்ல சதுர்த்தியின் பின்பாதி அஷ்டமி முன்பாதி, கிருஷ்ணபக்ஷம் திருதியை பின்பாதி, ஸப்தமி முன்பாதி, தசமி பின்பாதி, சதுர்தசியின் முன்பாதி இவற்றில் விஷ்டி என்ற கரணம் வருகிறது. பிறகு கிருஷ்ண சதுர்தசியின் பின்பாதி, அமாவாஸ்யையின் இரண்டு பாதிகள், சுக்லபக்ஷ பிரதமையின் முன்பாதி ஆகியவற்றில் வரிசையாக சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிம்ஸ்துக்னம் என்ற நான்கு கரணங்கள் வருகின்றன. இவை ஸ்திர கரணங்களாகும். இந்த ஸ்திர கரணங்களிலும், விஷ்டி கரணத்திலும் சுபகார்யங்கள் செய்யலாகாது. க்ரூர கர்மங்கள், சத்ருநாசம் முதலான தீயகர்மங்களைச் செய்தால் பயனளிக்கும்.

***பக்ஷச்சித்திரை***

சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்தசி ஆகிய திதிகள் பக்ஷச்சித்திரை எனப்படும்

***நந்தா***

பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி ஆகிய மூன்று திதிகள் நந்தை எனப்படும்.

***பத்ரா***

த்விதீயை, ஸப்தமீ, துவாதசி இவற்றிற்கு பத்ரா எனப்படும்.

***ஜயா***

த்ருதீயை, அஷ்டமீ, திரயோதசி இவற்றிற்கு ஜயா என்று பெயர்.

***ரிக்தை***

சதுர்த்தி, நவமி, சதுர்தசி இவற்றிற்கு ரிக்தை என்று பெயர்.

### பூர்ணா

பஞ்சமீ, தசமீ, பௌர்ணமீ, அமாவாசை.

பக்ஷச்சித்திரையிலும், ரிக்தையிலும் சுபகர்மாக்களை விலக்கதல் வேண்டும்.

### ஊர்த்வமுக நக்ஷத்திரங்கள்

பூரம், உத்தரம், உத்தராடம், உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், சதயம், ரோகிணி, திருவாதிரை ஆகிய ஒன்பது நக்ஷத்திரங்களும் உர்த்வமுக நக்ஷத்திரங்களாகும்.

### திர்யங்முக நக்ஷத்திரங்கள்

அச்வினி, மிருகசீர்ஷம், ரேவதி, புனர்வசு, ஸ்வாதி, ஹஸ்தம், சித்திரை, கேட்டை, அனுஷம் ஆகிய ஒன்பதும் திர்யங்முக நக்ஷத்திரங்களாகும்.

### அதோமுக நக்ஷத்திரங்கள்

மேலே கூறப்பட்டவை தவிர பிற நக்ஷத்திரங்கள் பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி இவை அதோமுக நக்ஷத்திரங்களாகும். விலக்கத் தக்கவை.

### ஊர்த்வ / அதோமுக / திர்யங்முக ராசிகள்

சூரியன் இருந்து விடுத்த ராசி ஊர்த்வமுக ராசி என்றும், சூரியன் இருக்கிற ராசி அதோமுக ராசி எனவும், சூரியன் பிரவேசிக்கப்போகிற ராசி திர்யங்முக ராசி என்றும் பெயர்.

### சீர்ஷோதய ராசிகள்

மிதுனம், விருச்சிகம், சிம்மம், கன்னி, கும்பம், துலாம் இவை சீர்ஷோதய ராசிகள்.

### ப்ருஷ்டோதய ராசிகள்

மேஷம், ரிஷபம், தனுஸ், மகரம், கடகம் ஆகியவை ப்ருஷ்டோதயமாகும்.

### உபயோதய ராசிகள்

மீனம் ஒரே சமயம் சீர்ஷோதயமாகவும், ப்ருஷ்டோதய மாகவும் உள்ளது. ப்ருஷ்டோதயங்களில் சுபகார்யங்கள் செய்யக்கூடாது.

மூன்று நக்ஷத்திரங்கள் - மூன்று திதிகள் கூடிய தினங்களும் சுபகார்யங்களுக்கு உகந்ததல்ல. இது அபவாதத்தால் மாறக்கூடியதல்ல.

தேவாத பிரதிஷ்டையும், உத்ஸவமும் (திருவிழா) நடக்கும் காலத்தில் அந்தக் கிராமத்தில் சுபகார்யங்கள் எதுவும் செய்வது கூடாது. ஒரு வீட்டில் ஒரு சுபகார்யத்தைத்தான் செய்யவேண்டும். ஒரே வீட்டில் பல சுபகார்யங்களைச் செய்பவன் நாசத்தை அடைவான்.

### ம்ருத்யு நக்ஷத்திரம்

சூரியன் இருந்து விலகிய நக்ஷத்திரமும், சூரியன் இருக்கும் நக்ஷத்திரமும், இருக்கப்போகும் நக்ஷத்திரமும் "ம்ருதம்" (lifeless) எனப்படும். அதுமுதல் 7 நக்ஷத்திரங்கள் அர்தஜீவன் உள்ளவை (halfalive) அவற்றிற்கு அடுத்தது ம்ருதம். அதற்கு அடுத்துள்ள 8 நக்ஷத்திரங்கள் பூர்ண ஜீவன் உள்ளவை. அவற்றிற்கு அடுத்துள்ளது ம்ருதம். அதற்கு அடுத்துள்ள 7 அர்த (பாதி) ஜீவன் (கால் ஜீவன்) உள்ளது என்பர். ம்ருத நக்ஷத்திரத்தில் சுபகார்யங்களை விலக்கவேண்டும்.

### பரிவேஷம்

சூரியன் - சந்திரனைச் சுற்றி வட்டம் காணப்பட்டால் அது பரிவேஷம் என்று பெயர். இதுவுள்ள காலத்தில் சுபங்களை விலக்கவேண்டும்.

## நக்ஷத்திர த்யாஜ்யம்

ஒவ்வொரு நக்ஷத்திர காலத்திலும் குறிப்பிட்ட நான்கு நாழிகைகள் விலக்கத்தக்க நேரமாகும்.

கார்த்திகை முதலாகவுள்ள நக்ஷத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாழிகைகள் தியாஜ்யமாகும்.

| நக்ஷத்திரம் | நாழிகை | நக்ஷத்திரம் | நாழிகை | நக்ஷத்திரம் | நாழிகை |
|---|---|---|---|---|---|
| கார்த்திகை | 30 | உத்தரம் | 18 | உத்தராடம் | 20 |
| ரோஹிணி | 40 | ஹஸ்தம் | 22 | திருவோணம் | 10 |
| மிருகசீர்ஷம் | 14 | சித்திரை | 20 | அவிட்டம் | 10 |
| திருவாதிரை | 21 | சுவாதி | 14 | சதயம் | 18 |
| புனர்பூசம் | 30 | விசாகம் | 14 | பூரட்டாதி | 16 |
| பூசம் | 20 | அனுஷம் | 10 | உத்தரட்டாதி | 24 |
| ஆயில்யம் | 32 | கேட்டை | 14 | ரேவதி | 30 |
| மகம் | 30 | மூலம் | 20 | அச்வினி | 50 |
| பூரம் | 20 | பூராடம் | 24 | பரணி | 24 |

## வார த்யாஜ்யம்

ஞாயிறு முதல் முறையாக 30, 42, 41, 31, 02, 22, 20 நாழிகைகளுக்குமேல் நான்கு நாழிகைகள் விஷ காலமாகும்.

## திதி த்யாஜ்யம்

சுக்லபக்ஷத்தில் (வளர்பிறையில்) பிரதமை முதல் முறையே 24, 12, 55, 05, 54, 05, 34, 10, 21, 07, 29, 06, 13, 21, 35 நாழிகைகளுக்குமேல் நான்கு நாழிகைகள் விஷகாலமாகும். இக்காலத்தில் சுபங்கள் விலக்கத்தக்கது.

## *நவாம்ச த்யாஜ்யம்*

மேஷம், ரிஷபம், கன்னி, தனுஸ் இவற்றில் முதல் அம்சமும்; மிதுனம், சிம்மம், துலாம், கும்பங்களில் ஐந்தாவது அம்சமும்; கடகம், விருச்சிகம், மகரம், மீனங்களில் ஒன்பதாவது அம்சமும் விஷமாகும். முதல் அம்ச த்யாஜ்யத்திற்கு **புஜங்கம்** என்றும், ஐந்தாவது அம்ச த்யாஜ்யத்திற்கு ***க்ருத்ரம்*** என்றும், ஒன்பதாவது அம்ச த்யாஜ்யத்திற்கு ***வராஹம்*** என்றும் பெயராகும்.

## *ஹோரா த்யாஜ்யம்*

புதன், சனி ஹோரைகளில் ஆரம்ப காலமும், சந்திர, சுக்ர ஹோரைகளில் மத்ய காலமும், செவ்வாய், சூரியன், குரு ஹோரைகளில் கடைசி பாகமும் விஷ காலமாகும்.

விலக்கத்தக்க விஷகாலமான தியாஜ்யத்தின் நான்கு நாழிகைகளில் முதல் நாழிகையில் காரியம் தொடங்கப் பட்டால் கார்ய நாசம். இரண்டாவது நாழிகையில் கர்த்தா (யஜமானன்) நாசம். மூன்றாவது நாழிகையில் ஸர்வநாசம். நான்காவது நாழிகையில் குலநாசம். இந்த நான்கு நாழிகைகளும் விஷம் என்னும் பெயருள்ளவையாதலின் சுபகாரியங்களை விலக்குதல் வேண்டும்.

## *அதிமாஸம்*

ஸௌரமானப்படி (பிரதி) ஒவ்வொரு இரண்டு ஆண்டுகள் 8 மாதங்கள், 16 நாட்கள், 3 நாழிகைகள், 55 விநாடிகள் கடந்த பின்புதான் ஒரு மாதம் (சாந்திரமானப்படி) அதிகமாகும். இந்தப்படி ஏற்படும் அதிமாஸத்தில் சுபகாரியங்கள் எதுவும் செய்யப்படலாகாது.

### ஸமாஹதம்

குரு இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 7-வது, 9-வது நக்ஷத்திரமும், சுக்ரன் இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 10-வது, 15-வது நக்ஷத்திரமும், சனி இருக்கும் நக்ஷத்திரத்திற்கு 10, 11, 20, 6-வது நக்ஷத்திரங்களும் ஸம்ஹதம் (ஸமாஹதம்) எனப்படும். இந்த நக்ஷத்திரங்களில் சுபகார்யங்களை விலக்குதல் வேண்டும்.

இனி, நாரதரால் கூறப்பட்ட 21 மஹாதோஷங்கள் கூறப்படுகின்றன.

திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம் இவற்றில் சுத்தி இல்லாமலிருப்பது; லக்னமும், ஸப்தமும் தோஷமுள்ளதாய் இருப்பது; சூரிய ஸங்கிரமணம், பாபிகளின் ஷட்வர்கம், சுக்ரன் 6-ல் இருப்பது, செவ்வாய் 8-ல் இருப்பது, கண்டாந்தம், கர்த்தரி 6-8-12ல் சந்திரன் இருப்பது, கிரஹத்துடன் கூடிய நக்ஷத்ரம், தம்பதிகளுடைய ஜன்ம லக்னத்திற்கு எட்டாவது ராசியாக உள்ளது லக்னமாவது தியாஜ்யம் உள்ள ராசி துர்முஹூர்த்தம் (அபக்ருதயங்களைச் செய்வதற்குரிய முஹூர்த்தம்) வாரதோஷம், ஏகார்களை, கிரஹணம், உத்பாத நக்ஷத்திரம், பாபிகள் வேதையுடன் கூடிய நக்ஷத்ரம், பாபிகளின் நவாம்சம், மஹாபாதம் (வியதீபாதம்) வைதிருதி ஆகிய 21 தோஷங்களில் விவாஹாதி சுபகார்யங்களை நடத்தினால் நாசம் ஏற்படும்.

சூரியன் திருவாதிரையில் பிரவேசித்த பிறகு பத்து தினங்கள் சுபகாரியங்களுக்கு உகந்தவையல்ல.

சயன ஏகாதசி முதல் உத்தான ஏகாதசி வரையில், ஜ்யேஷ்ட சுக்ல ஏகாதசி முதல் ஆச்வயுஜ சுக்ல ஏகாதசி வரையில் உள்ள நாட்களில் சுபகார்யங்கள் செய்யலாகாது. மண்புழுதி, பனி, மழை, காற்று இவை அகாலத்தில் (உரிய காலமில்லாத காலத்தில்) ஏற்படுமானால் அப்பொழுதும் வெயில் காணாத நாளிலும், சூரிய - சந்திரர்களைச் சுற்றி வட்டம் உள்ள காலத்திலும் சுபகாரியங்களைச் செய்யலாகாது.

ஹோமம், ஜபம், வேத அத்யயனம், எண்ணெய் தேய்த்து முழுகுதல், சந்தனம் அணிவது (பூசிக்கொள்வது) ஆகியவற்றை பிரதோஷ காலத்தில் விலக்குதல் வேண்டும்.

எல்லாவிதமான தோஷங்களையும் முழுவதுமாக அறிந்துகொள்வது ஒருவராலும் இயலாது. ஆனாலும் என்னால் அறியப்பட்ட தோஷங்கள் எவையோ அவை எழுதப்பட்டன.

## முப்பத்தி நான்காவது அத்யாயம்

## *எல்லா தோஷங்களுக்கும் அபவாதங்கள்*
## (Nutralization of ADVERSE YOGAS)

சந்திரன் 9 அல்லது 10-ஆமிடத்தில் இருந்து அவனை சுபகிரஹங்கள் பார்த்தால் ஜன்மானு ஜன்ம த்ரிஜன்மங்கள் விபத்-ப்ரத்யரம்-வதம் ஆகிய தாரைகள் முதலானவற்றால் ஏற்படும் தோஷங்கள் விலகும்.

குரு அல்லது சூரியன் அல்லது சுக்ரன் 3, 6, 10, 11-களில் இருந்து 1-3-4-5-6-7-9-10-11களில் சந்திரன் இருந்தால் முன்கூறப்பட்ட தோஷங்கள் விலகும்.

சந்திரன் மித்ர ராசியிலோ, ஜன்ம நக்ஷத்திரத்திலோ , ஜன்ம லக்னத்திலோ இருப்பின் நல்லது.

சூரியனுக்கு உபசயத்தில் சந்திரனோ, சந்திரனுக்கு உபசயத்தில் சூரியனோ இருந்து குரு-சுக்ரன்-புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் பகையுணர்வைக் குறைக்கும்.

27-வது நக்ஷத்திரத்தில் க்ஷௌரம் (Shaving), விவாஹம், சிரார்த்தம், யாத்திரை, கிருஹாரம்பம் முதலானவற்றைத் தவிர பிற சுபகாரியங்களைச் செய்யலாம்.

அணிகலன்கள் அணிவது, குதிரை ஏற்றம், கதிர் அறுத்தல், தானியங்கள் சேமித்தல், தேவதா பிரதிஷ்டை, வைத்யம், புதியது உண்பது, பந்து ஜனங்களுடன் உண்பது, ஸீமந்தம், விஷ்ணு பூஜை, கிருஹப்ரவேசம், விவசாயம், விதை விதைத்தல், விரத ஸ்நானம் இவைகளை 27-வது நக்ஷத்திரத்தில் செய்யலாம்.

27-வது நக்ஷத்திரத்தில் பின் பாகம் விலக்கத்தக்கது. கடைசி பாதமும், கடைசி அம்சமும் விசேஷமாகக் கூடாதவை. 27-வது நக்ஷத்திரத்தின் ராசி, ஜன்ம ராசி அதிபதிக்கு ஸ்வக்ஷேத்திரமாகவோ, மித்ர ராசியாகவோ இருந்தால் சுபகார்யங்கள் செய்ய உத்தமம். சத்ரு ராசியாகவோ, நீச ராசியாகவோ இருந்தால் சுபகார்யங்கள் நடத்தலாகாது. 27-வது நக்ஷத்ர ராசியும், ஜன்ம ராசியும் ஒரே ராசியாக இருந்தால் விவாஹம் (திருமணம்), உபநயனம் முதலான சுபகார்யங்கள் செய்யலாம்.

ஜன்ம ராசி அதிபதியும், எட்டாம் இடத்திற்கு அதிபதியும் மித்ரராக இருந்தால் சந்திராஷ்டமத்தால் ஏற்படும் தோஷம் விலகும் (சந்திராஷ்டம தோஷம் அதிகம் அவர்களைப் பாதிக்கிறதில்லை).

## லக்னத்தில் குளிகன் இருக்கும்பொழுது செய்யவேண்டிய சில கார்யங்கள்

தானியங்களைச் சேமித்தல், எண்ணெய் தேய்த்துக் குளித்தல், தானியக்கதிர் அறுவடை, வாங்குதல் - விற்பது, விக்ரஹங்களுக்குக் கண் திறப்பது, சிரார்த்தம், புதிய

அணிகலன்கள் அணிதல், கடன் தீர்த்தல், அக்னி ஆதானம் செய்தல், கிருஹப்ரவேசம், வாசனாதி திரவியங்கள் உபயோகித்தல், மருந்து சேவித்தல், யானை - குதிரையேற்றம், மந்தர உபதேசம் பெறுதல், முடிசூட்டுதல், ஆபிசார கர்மா செய்தல் (Worship of fire in Black Magic) உயர்ந்த பொருட்களைத் தானம் செய்தல், வேதாரம்பம் இவற்றை லக்னத்தில் குளிகன் இருக்கும்பொழுது செய்வது சுபம்.

இரவு வேளையில் வாராதிபதி சுபஸம்பந்தம் பெற்றவனாயிருப்பின் வார ப்ரயுக்தமான தோஷங்கள் கிடையாது. இரவிலும் **ஹோரா** பலன்கள் உண்டு. சந்தேகமில்லை.

குருவோ, சுக்ரனோ கேந்திரத்தில் இருந்தால் விஷ்டி தோஷமும், ஷஷ்டி, அஷ்டமீ திதிகளின் தோஷமும் குளிகன் லக்னத்தில் இருக்கிறதால் ஏற்படும் தோஷமும், கிருஷ்ணபக்ஷ முடிவால் ஏற்படும் தோஷமும் விலகும்.

சுக்ரன் லக்னத்தில் அல்லது கேந்த்ரத்தில் இருந்து அல்லது வர்கோத்தமம் பெற்று பலமுடன் இருந்தால் கிருஷ்ணபக்ஷ முடிவால் நேரிடக்கூடிய தோஷமும் விலகும். குருவோ, சுக்ரனோ லக்னத்தில் இருந்தாலும், லக்னத்தைப் பார்த்தாலும், திதி, வாரம், நக்ஷத்ரம், ராசி முதலியனவற்றின் தோஷம் நீங்கும். இது நிச்சயம். குருவோ, சுக்ரனோ பலமுடன் லக்னத்தில் இருக்க ஷடசீதிமுகம், சகடம், அசனி முதலான தோஷங்கள் விலகும்.

குருவோ, சுக்ரனோ, புதனோ, கேந்திர - த்ரிகோணங்களில் இருந்தால் திருமாலை நினைத்தால் பாபங்கள் யாவும் விலகுவது போன்று ஸகல தோஷங்களும் விலகும்.

குரு அல்லது சுக்ரன் அல்லது புதன் கேந்திரத்தில் (அந்த கேந்திரம் அவர்களின் ஸ்வக்ஷேத்ரமாக இருக்கலாகாது) இருந்தால் ஒரு சிங்கம் பல யானைகளை (யானைக் கூட்டத்தை அழிப்பதுபோல ஸகல தோஷங்களையும் விலக்குவர்.

குரு கேந்திரத்தில் இருந்தால் வருஷம், அயனம், ருது, மாதம், பக்ஷம் இவற்றால் உண்டாகும் தோஷங்களையும், கெட்ட லக்னம், கெட்ட முஹூர்த்தம், கெட்ட நிமித்தம் இவற்றால் உண்டாகும் தோஷங்களை விலக்குவர். இதேபோன்று, குரு கேந்திரத்தில் இருந்தால் துஸ்ஸ்தானத்தில் இருக்கும் கிரஹங்களாலும், பாப கிரஹங்களாலும் ஏற்படக் கூடிய சகல தோஷங்களும் விலகும்.

குரு, புதன் இவர்களுள் யாரேனும் ஒருவர் லக்னத்தில் இருந்தால், இலவம்பஞ்சைத் தீ எரிப்பதுபோல் ஸகல தோஷங்களையும் விலக்கிவிடுவர்.

லக்னம், த்ரிகோணம், கேந்திரத்தில் உள்ள குரு, பூர்ண பலத்துடன் இருந்தால் அவர் லக்ஷம் தோஷங்களையும் விலக்கிவிடுவார். லக்னத்திலேயே இருந்தால் ஸகல தோஷங்களையும் விலக்கிவிடுவார்.

ஜ்யேஷ்டமாஸாதிபதி (ஸௌம்ய) சுபகிரஹங்களோடு கூடியிருந்தாலும், சுபகிரஹங்களால் பார்க்கப்பட்டாலும், அந்த மாதத்தில் மூத்த மகனாகப் பிறந்தவனின் தொடர்புள்ள எல்லா சுபகார்யங்களையும் செய்யலாம்.

ஆனி மாதத்தில் மிதுன ராசியிலுள்ள சூரியன், குரு, சுக்ரர்களால் பார்க்கப்பட்டால், அம்மாதத்தில் மூத்த மகன் கருதிச் செய்யப்படும் சுபகாரிய விஷயத்தில் ஜ்யேஷ்ட மாஸம் என்னும் தோஷம் இல்லை.

குரு, சுக்ரன் இருவருக்குள் ஒருவர் அஸ்தமனமாகி மற்றவர் தன் வீட்டில் அல்லது உச்ச வீடு, மித்ரன் வீடு இவற்றில் இருந்தால் குரு / சுக்ர அஸ்தமனதோஷம் (மௌட்ய தோஷம்) இல்லை.

குரு லக்னத்தில் பலமுடன் இருக்க, பாப கிரஹங்கள் 3, 6, 11-ல் இருப்பாரேயாகில், சுக்ரன் அஸ்தமனமாகியிருப்பினும் அவருக்கு மௌட்ய (அஸ்தமன) தோஷம் இல்லை. குரு / சுக்ரன் இருவரில் ஒருவர் அஸ்தமனமாகி மற்றவர் பலமுடன் இருப்பின் தோஷமேதும் இல்லை.

இருவருமே அஸ்தமனமாகிவிடின் இதற்கு அபவாதமோ, விதிவிலக்கோ இல்லை. தோஷம் தோஷமே.

## முப்பத்தைந்தாவது அத்யாயம்

எல்லா சுபகார்யங்களையும் செய்வதற்கு உதவியாக ஒவ்வொரு கிழமையுடன் சேரும் நக்ஷத்திரங்களுக்கு சுபாசுபத் தன்மைபற்றிக் கூறப்படுகிறது.

### ஞாயிறு - ஸித்தயோகம்

உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், ரேவதி, திருவோணம், மூலம் சேருமானால் ஸித்தயோகம். சுபம்.

***சுப மத்யமம் :*** (நடுத்தரமான சுபம்) ரோகிணி, மிருகசீர்ஷம், சதயம், சுவாதி, சித்திரை, புனர்பூசம், பரணி, திருவாதிரை, ஆயில்யம், கிருத்திகை, அவிட்டம், பூரம், பூராடம், பூரட்டாதி இவை ஞாயிற்றுக்கிழமையுடன் சேருமானால் மத்யமமான சுபம் எனலாம்.

### ஞாயிறு - நாசயோகம்

அச்வினி, மகம், விசாகம், அனுஷம், கேட்டை இவை ஞாயிற்றுக்கிழமையுடன் வந்தால் நாசயோகம். அசுபம்.

### திங்கள் - அமிருதயோகம்

ரோகிணி, மிருகசீர்ஷம், ஸ்வாதி, திருவோணம், புனர்பூசம் வருமானால் அமிருதயோகமாகும். சுபம்.

### சோபன யோகம்

அச்வினி, பரணி, கார்த்திகை, திருவாதிரை, பூசம், ஆயில்யம், மகம், பூரம், பூரட்டாதி, அவிட்டம், சதயம், ஹஸ்தம், ரேவதி, அனுஷம், கேட்டை, மூலம் இவை திங்கட்கிழமையில் வந்தால் சோபனயோகம். உத்தமம்.

### நாசயோகம்

உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, விசாம், சித்திரை, பூராடம் இவை திங்கட்கிழமையில் வந்தால் அது நாசயோகமாகும்.

### செவ்வாய் - சித்தயோகம்

அச்வினி, உத்தரம், உத்தரட்டாதி, ரேவதி இவை செவ்வாய்க்கிழமையில் வந்தால் சித்தயோகம்.

### அம்ருதயோகம்

புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், மிருகசீர்ஷம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி இவை செவ்வாய்க்கிழமையில் வந்தால் மிகவும் சுபம்.

### சுப மத்யமம்

(நடுத்தரமான சுபம்) கேட்டை, மூலம், பூராடம், ரோகிணி, திருவோணம், பரணி, கார்த்திகை இவை செவ்வாயில் வந்தால் மத்யம சுபம்.

### நாசயோகம்

அவிட்டம், சதயம், பூரட்டாதி, திருவோதிரை, உத்தராடம், விசாகம் இவை செவ்வாய்க்கிழமையில் வந்தால் நாசயோகம். அசுபம்.

## புதன்கிழமை - சித்தயோகம்

அனுஷம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், பூரம், பூராடம், பூரட்டாதி இவை புதன்கிழமையுடன் சேர்ந்தால் சித்தயோகம் சுபத்தை அளிக்கும்.

## அமிருதயோகம்

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், திருவோணம் இவை புதன்கிழமையில் வந்தால் அமிருதயோகம். சுபம்.

## சுபயோகம்

ரோஹிணி, சதயம், கேட்டை, உத்தரட்டாதி இவை புதனோடு சேர்ந்தால் சுபத்தையளிக்கும் சுபயோகங்கள்.

## நாசயோகம்

அவிட்டம், மூலம், பரணி, ரேவதி, அச்வினி இவை புதனோடு சேர்ந்துவந்தால் நாசயோகமாகும்.

## வியாழக்கிழமை - அமிருதயோகம்

அச்வினி, புனர்பூசம், பூசம், ஸ்வாதி, மகம் இவை குரு வாரத்துடன் (வியாழக்கிழமையுடன்) சேர்ந்து வந்தால் அமிருதயோகமாகும்.

## சுபயோகம்

பரணி, ஆயில்யம், விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் இவை வியாழக்கிழமையுடன் சேர்ந்தால் சுபயோகம் ஆகும்.

## சுப மத்யம யோகம்

ஹஸ்தம், சித்திரை, பூரட்டாதி, உத்திரட்டாதி இவை மத்யமயோகம்.

## தக்த (fatal) யோகம்

கிருத்திகை, ரோஹிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, உத்தரம், சதயம் இவை வியாழனுடன் சேர்ந்துவந்தால் அது தக்த யோகம் என்று கூறப்படும்.

## வெள்ளிக்கிழமை - அமிருதயோகம்

ரேவதி, அச்வினி, பரணி, பூரம், மூலம் இவை வெள்ளிக்கிழமையுடன் வந்தால் அமிருதயோகமாகும்.

## சித்தயோகம்

அனுஷம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, உத்தரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி இவை வெள்ளிக்கிழமையுடன் வரின் அது சித்தயோகம்.

## ஸ்ரீயோகம்

மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பரணி, கார்த்திகை இவை வெள்ளிக்கிழமையுடன் கூடினால் அது ஸ்ரீயோகம் ஆகும்.

## நாச யோகம்

பூசம், ஆயில்யம், மகம், விசாகம், கேட்டை, ரோகிணி இவை வெள்ளிக்கிழமையுடன் கூடினால் ஸகல மங்களங்களையும் அழிக்கும் நாசயோகம் ஆகும்.

## சனிக்கிழமை - அமிருதயோகம்

கார்த்திகை, ரோகிணி, ஸ்வாதி, சதயம் இவை சனிக்கிழமையுடன் கூடிவந்தால் அமிருதயோகமாகும்.

## சுபயோகம்

அச்வினி, பரணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, பூசம், மகம், விசாகம், அனுஷம், கேட்டை, மூலம் இவை சனிக்

கிழமையுடன் கூடினால் சுபயோகமாம். உத்தரம், அவிட்டம், திருவோணம், பூரட்டாதி, உத்தரட்டாதி இவை சனிக் கிழமையுடன் கூடினால் இவையும் சகல நலன்களையும் தரும் சுபயோகம்.

### மிருத்யுயோகம்

புனர்பூசம், ஆயில்யம், ரேவதி, ஹஸ்தம், உத்தராடம், பூராடம், பூரம், சித்திரை இவை சனிக்கிழமையில் வந்தால் அது மிருத்யுயோகம் எனப்படும்.

**ஞாயிறு** : பூசம், ஹஸ்தம், மூலம் இவற்றுடன் ஞாயிற்றுக்கிழமை கூடினால் எல்லா சுபகார்யங்களிலும் நன்மை தரும் அமிருதயோகம் ஆகும்.

**திங்கள்** : ஸ்வாதி, திருவோணம், மிருகசீர்ஷம் இவை திங்கட்கிழமையுடன் கூடினால் எல்லா சுபகாரியங்களிலும் நன்மையளிக்கக் கூடிய ஸுதா (அமிருத)யோகமாகும்.

**செவ்வாய்** : பூரட்டாதி, அச்வினி, ரோஹிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி இவைகளுடன் செவ்வாய் கூடினால் அமிருதயோகமாகும்.

**புதன்கிழமை** : அச்வினி, அனுஷம், பூரம், பூராடம், பூரட்டாதி இவை புதன்கிழமையுடன் பஞ்சமீ, ஸப்தமீயுடனும் கூடினால் அமிருதயோகமாகும்.

**வியாழக்கிழமை** : பூராடம், புனர்பூசம், ரேவதி, திரயோதசியுடன் கூடியதாக வியாக்கிழமை அமைந்தால் அம்ருதயோகமாகும்.

**வெள்ளிக்கிழமை** : உத்தரம், சுவாதி, சதயம் இவற்றுள் ஒன்றுடன் பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி சேர்ந்ததாக வெள்ளிக்கிழமை அமைந்தால் அது அமிர்தயோகமாகும்.

**சனிக்கிழமை :** ரோகிணி, சுவாதி அல்லது அவிட்டம் இதனுடன் த்விதீயை, ஸப்தமி அல்லது துவாதசி கூடிய சனிக்கிழமை அமைந்தால் அது அமிர்தயோகமாகும்.

இந்த யோகங்களில் திருமணம் நடைபெற்றால் அந்த தம்பதிக்கு நன்மை பயக்கும் என்பதுடன் பல சந்ததிகளையும் தரும். மேலும் ஏதேனும் ஒருநாள் சுப, அமிர்த, சித்த, ஸ்ரீ, சோபன யோகமுடன் அமைந்தால் எல்லா சுபகாரியங்களையும் அந்த நாளில் செய்யலாம். யாத்திரை மேற்கொண்டால் லாபகரமாக அமையும். உபநயனம் நடைபெற்றால் அம்மாணவன் பல கலைகள் கற்றவனாவான். கல்வி கற்கத் தொடங்கினால் கல்வியறிவில் சிறந்து விளங்குவதோடு விரைந்த கல்வியறிவு, முன்னேற்றம் ஏற்படும். விவசாய வேலை தொடங்கினால் நல்ல விளைச்சல் இருக்கும்.

## சில பலம் வாய்ந்த யோகங்கள்

ஞாயிறுடன் ரேவதி, உத்தரம், பரணி, மூலம், திருவோணம் அல்லது உத்தராடம் கூடினால் அந்த யோகம் சிவபெருமான் ஹாலாஹல விஷத்தை விழுங்கியதுபோல் பல தோஷங்களை விழுங்கும்.

திங்களுடன் ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், ஸ்வாதி அல்லது திருவோணம் கூடினால் அந்த யோகம் கருடன் சர்ப்பங்களை அழிப்பதுபோல் சகல தோஷங்களையும் அழிக்கும். செவ்வாயுடன் அச்வினி, ரோஹிணி, உத்தரம், ஹஸ்தம், அனுஷம், உத்தரட்டாதி கூடினால் அந்த யோகம் எல்லா தோஷங்களையும் நீக்கிவிடும்.

புதன்கிழமை : கார்த்திகை, உத்தரம், உத்தராடம், மிருகசீர்ஷம், அனுஷம், பூரம், பூராடம் அல்லது பூரட்டாதி கூடினால் அந்த யோகம் ஸ்ரீராமன் எல்லா அரக்கர்களையும் அழித்ததுபோல் எல்லா தோஷங்களையும் அழிக்கும்.

வியாழக்கிழமை : அச்வினி, புனர்பூசம், பூசம் மகம் அல்லது சுவாதியுடன் வியாழக்கிழமை கூடினால் அந்த யோகம் தோஷங்களாகிய இலவம்பஞ்சிற்கு சக்திவாய்ந்த காற்றாக இருக்கும்.

வெள்ளிக்கிழமை : அச்வினி, பரணி, மூலம், ரேவதி இதில் ஏதேனும் ஒன்றுடன் வெள்ளிக்கிழமை கூடினால் அந்த யோகம் சூரியன் இருளை அகற்றுவதுபோல் எல்லா தோஷங்களையும் அகற்றும்.

சனிக்கிழமை : கிருத்திகை, ரோஹிணி, ஸ்வாதி அல்லது சதய நக்ஷத்திரங்களுடன் சனிக்கிழமை கூடினால் அந்த யோகம் அல்லி மலர்களை சூரியன் அழிப்பதுபோல் அழிக்கும்.

மேலே சொல்லப்பட்ட யோகங்களில் ரிக்தையின்றி மற்ற எல்லா திதிகளும் சுபமே. இந்த யோகங்களில் எல்லா சுபகாரியங்களையும் செய்விக்கலாம்.

ஞாயிறு : சித்தயோகம், ஞாயிற்றுக்கிழமை பிரதமை, சதுர்த்தி, ஷஷ்டி, சப்தமீ அல்லது துவாதசியுடன் சேர்ந்து பூசம், ஹஸ்தம், உத்தரம், உத்தராடம், மூலம், திருவோணம் அல்லது உத்திரட்டாதி நக்ஷத்திரத்துடன் கூடிவந்தால் அது சித்தயோகம் ஆகும்.

ஞாயிறு : நாசயோகம் (Fatal) ஞாயிற்றுக்கிழமை - திருதீயை, சதுர்த்தி, அஷ்டமீ, நவமீ, திரயோதசி அல்லது சதுர்தசியுடன் கூடிய பரணி, மிருகசசீர்ஷம், ஆயில்யம், விசாகம், அனுஷம், கேட்டை அல்லது அவிட்ட நக்ஷத்திரமும் கூடிவந்தால் அது நாசயோகம்.

ஞாயிறு : விஷயோகம். ஞாயிறு பஞ்சமியுடன் கூடி கிருத்திகை நக்ஷத்திரமும் சேர்ந்தால் அது விஷயோகமாகும்.

திங்கள் : சித்தயோகம். திங்கட்கிழமை துவிதீயை, ஸப்தமீ அல்லது துவாதசியுடன் கூடி ஸ்வாதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், சித்திரை, திருவோணம், சதயம், அவிட்டம், பூரட்டாதியுடன் கூடிவந்தால் அது சித்தயோகம்.

திங்கள் : விநாசயோகம். திங்கட்கிழமை ஸப்தமி, ஷஷ்டி அல்லது ஏகாதசுயுடன் கூடி கிருத்திகை, பரணி, மகம், அனுஷம், பூராடம், உத்தராடம், உத்தரட்டாதியுடன் வந்தால் அது விவாசயோகமாகும்.

செவ்வாய் : சித்தயோகம். செவ்வாய்க்கிழமை நந்தை அல்லது பத்ரையுடன் கூடி மிருகசீர்ஷம், அச்வினி, சித்திரை, அனுஷம், மூலம், உத்தரம், அவிட்டம் அல்லது பூரட்டாதியுடன் கூடிவந்தால் அது சித்தயோகம் ஆகும்.

விநாசயோகம்: செவ்வாய்க்கிழமை-பிரதமை, துவிதீயை, ஸப்தமீ, அஷ்டமீ, தசமீ அல்லது பௌர்ணமியுடன் கூடிய திருவாதிரை, புனர்பூசம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம் அல்லது கேட்டையோடு சேர்ந்து வந்தால் அது விநாசயோகமாகும்.

புதன் : சித்தயோகம். புதன்கிழமையில் பத்ரை - ஜயை எனும் திதிகளுடன் ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, உத்தரம், உத்தராடம், அனுஷம் கூடிவந்தால் சித்தயோகம்.

விநாசயோகம் : புதன்கிழமைகளில் த்விதீயை, திருதீயை, அஷ்டமீ, நவமீ திதிகளும்; அச்வினி, பரணி, பூசம், ஆயில்யம், மகம், மூலம், அவிட்டம், பூரட்டாதி நக்ஷத்திரங்களும் சேர்ந்து வந்தால் விநாசயோகமாகும்.

வியாழக்கிழமை : சித்தயோகம். வியாழக்கிழமையில் சதுர்த்தி, பஞ்சமீ, ஸப்தமி, நவமி, திரயோதசி அல்லது சதுர்தசியும்; மகம், பூரம், புனர்பூசம், ஸ்வாதி, பூரட்டாதி, ரேவதி அல்லது அச்வினி நக்ஷத்திரங்கல் கூடிவந்தால் சித்தயோகம் ஆகும். சுபத்தையே அளிக்கும்.

விநாசயோகம் : வியாழக்கிழமையில் அஷ்டமீ, ஷஷ்டி, நவமீ, த்வாதசி அல்லது திரயோதசியும்; கிருத்திகை, ரோஹிணி, மிருசீர்ஷம், திருவாதிரை, உத்தரம், அனுஷம், விசாகம், சதய நக்ஷத்திரங்கள் கூடிவந்தால் அது விநாசயோகம்.

வெள்ளிக்கிழமை : சித்தயோகம். வெள்ளிக்கிழமையில் அச்வினி, பரணி, திருவாதிரை, உத்தரம், சித்திரை, சுவாதி, பூராடம், ரேவதி சேர்ந்து, நந்தா - பத்ரா திதிகளும் சேருமானால் அது சித்தயோகமாகும்.

விநாசயோகம் : கேட்டை, புனர்பூசம், திருவோணம், விசாகம், அவிட்டம், மகம், அனுஷம், ரோகிணி சேர்ந்த வெள்ளிக்கிழமையில், ஷஷ்டி, அஷ்டமீ, த்விதீயை, திரிதீயை, தசமி, ஏகாதசி சேர்ந்தால் அது விநாசயோகமாகும்.

சனிக்கிழமை : சித்தயோகம். விசாகம், ஸ்வாதி, அனுஷம், ரோகிணி, அவிட்டம் சேர்ந்த சனிக்கிழமையில் பத்ரை, ரிக்தை திதிகளும் கூடிவந்தால் சித்தயோகமாகும்.

விநாசயோகம் : திருதீயை, ஸப்தமீ, நவமீ, ஏகாதசி கூடிய சனிக்கிழமையில் பரணி, புனர்பூசம், பூரம், பூராடம், ஹஸ்தம், பூசம், திருவோணம், உத்தரம், உத்தராடம் கூடினால் அது விநாசயோகமாகும்.

## பொதுவிதி

ஞாயிற்றுக்கிழமையில் அச்வினியும், திங்களில் சித்திரையும், செவ்வாயில் உத்தராடமும், புதனில் அவிட்டமும், வியாழனில் உத்தரமும், வெள்ளியில் கேட்டையும், சனிக்கிழமையில் ரேவதியும் கூடிவந்தால் அந்த நாட்கள் அசுபமானவை. அந்த நாட்களில் விவாஹம் செய்தால் ஸ்த்ரீ விதவையாவாள். யாத்திரை மேற்கொண்டால் மரணம். வித்யாரம்பம் செய்ய ஊமையாவான். விவசாயம் செய்யின் விளைச்சல் வீணாகும்.

### அசுபயோகம்

அனுஷத்தோடு கூடிய த்விதீயை, உத்தரம், உத்தராடம்; உத்திரட்டாதியோடு கூடிய திருதீயை, ஹஸ்தம், மகத்துடன் கூடின பஞ்சமீ; சித்திரை - சுவாதியுடன் கூடிய திரயோதசி; ரோகிணியுடன் கூடிய அஷ்டமீ இவற்றில் சுபகார்யம் செய்தால் ஆறு மாதங்களில் தீமை உண்டாகும்.

### அசுபயோகம் (வேறு)

ஞாயிறு, கார்த்திகை, பஞ்சமீ; திங்கள், சித்திரை, துவிதீயை; செவ்வாய், ரோகிணி, பௌர்ணமி; புதன், பரணி, ஸப்தமி; வியாழன், அனுஷம், திரயோதசி; வெள்ளி, திருவோணம், ஷஷ்டி; சனிக்கிழமை, ரேவதி, அஷ்டமீ கூடினால் அது விஷயோகமாகும்.

### ம்ருத்யு யோகம் (கிழமை - நக்ஷத்திரம்)

ஞாயிறுடன் விசாகம், திங்களுடன் பூராடம், செவ்வாயுடன் அவிட்டம், புதனுடன் திருவாதிரை, வியாழனுடன் மிருகசீர்ஷம், வெள்ளியுடன் ஸ்வாதி - ரோகிணி, சனிக்கிழமையுடன் திருவோணம் கூடினால் அது மிருத்யு யோகமாகும்.

### தக்தயோகம் (கிழமை - திதி)

இது வேறுவகை துஷ்டயோகமாகும்.

ஞாயிறு - துவாதசி, அமாவாஸை; திங்கள் - ஏகாதசி; செவ்வாய் - பஞ்சமீ; புதன் - த்விதீயை; வியாழன் - ஷஷ்டி; வெள்ளி - அஷ்டமீ; சனி - நவமி இவை சேர்ந்து வந்தால் அது தக்தயோகமாகும்.

## *நாசயோகம் (கிழமை - நக்ஷத்திரம்)*

ஞாயிறு-விசாகம்; திங்கள்-கார்த்திகை; செவ்வாய்-மிருகசீர்ஷம், புதன்-அவிட்டம்; வியாழன்-உத்தரம்; வெள்ளி-பூசம்; சனி-ரேவதி கூடினால் இது நாசயோகமாகும்.

## *விஷயோகம் (கிழமை - திதி)*

ஞாயிறு-நவமீ; திங்கள்-ஷஷ்டி; செவ்வாய்-த்விதீயை; புதன்-ஸப்தமீ; வியாழன்-அஷ்டமீ; வெள்ளி-நவமீ கூடினால் அது விஷயோகமாகும்.

வெள்ளிக்கிழமை நந்தை, புதன்கிழமை பத்ரை, செவ்வாய்க்கிழமை ஜயை, சனிக்கிழமை ரிக்தை, வியாழக்கிழமை பூர்ணா திதிகளும் கூடினாலும்; ஞாயிற்றுக் கிழமையுடன் ஹஸ்தமும், திங்களுடன் மிருகசீராஷமும், செவ்வாயுடன் அச்வினியும், புதனுடன் அனுஷமும், வியாழக் கிழமையுடன் பூசமும், வெள்ளிக்கிழமையுடன் ரேவதியும், சனிக்கிழமையுடன் ரோஹிணியும் கூடினாலும் அவை சித்தயோகங்களாகும்.

ஞாயிறு முதலான ஒவ்வொரு கிழமையின் தோஷத்தையும் மூலம் முதல் நான்கு நான்கு நக்ஷத்திரங்கள் போக்கும். இவ்வாறு விசாகம் முதல் முறையே நான்கு நான்கு நக்ஷத்திரங்கள் தோஷத்தைச் செய்கின்றன. இவ்விஷயத்தில் அபிஜித் நக்ஷத்திரத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பல நூல்களை நன்கு பார்வையிட்டு அவற்றில் உள்ளவையே என்னால் எழுதப்பட்டன. இவ்விஷயத்தில் "கூறியது கூறல்" தோஷம் இருக்குமோ எனும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.